**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**தலவாக்கலை**
**இலங்கை**

ISSN : 1012 - 3954



ஆண்டறிக்கை 2011 – இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம், தலவாக்கலை, இலங்கை.

# ஆண்டறிக்கை 2011




**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**தலவாக்கலை**

# ஆண்டறிக்கை
# 2011

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**தலவாக்கலை**

# ஆண்டறிக்கை 2011

ISSN 1012- 3954

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

| | | |
|---|---|---|
| பிரசுரிப்பு | : | இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் |
| பக்க வடிவமைப்பு | : | V.S சிதாகரன் |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | PAN புண்யசிரி & பிரசாதி ஜெகநாதன் |
| நிழற்படங்கள் | : | K.G.R நிரோசன் & J.T தேவதாசன் |
| தமிழ் மொழிப் பெயர்ப்பு | : | R. பாஸ்கரதேவன் G.D சின்னையா |
| அச்சுப் பதிப்பு | : | UNIVERSAL PRINTERS - HATTON |

**அட்டைப் படம்**




**தேயிலை மூலவுயிர்முதலுருவின் வளர்சிதை வினைமாற்ற பொருட்களை புறவுருப்படுத்தல்**

உருவவியல் அடிப்படையில் வேறுபாட்டினைக் கொண்டிருக்கும் இலங்கையின் தேயிலை மூலவுயிர்முதலுருவின் வளர்சிதை வினைமாற்ற பொருட்களின் பல்வகைத் தன்மையினை ஆராயும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் | 04 |
| தொலை நோக்கு, குறிக்கோள் | 04 |
| நிறுவன கட்டமைப்பு | 05 |
| மேலான்மைக் குழு | 06 |
| ஆலோசனைக் குழுக்கள் | 08 |
| தலைவரின் அறிக்கை | 12 |
| பணிப்பாளரின் மதிப்புரை | 18 |
| பணியாளர்கள் | 35 |
| ஆராய்ச்சி தொடர்பான சிறப்புச் செய்திகள் | 46 |
| பயிர் மேம்பாடு | 46 |
| நில உற்பத்தி மேம்பாடு | 52 |
| பயிர் முகாமைத்துவம் | 64 |
| பயிர் பாதுகாப்பு | 66 |
| காலநிலை மாற்றத்தின் தாக்க மதிப்பீடு | 72 |
| வெளிக்கள செயற்பாடுகளை இயந்திரமயமாக்கல் | 76 |
| தேயிலை உலர்த்துதலுக்கான மாற்று சக்தி மூலங்கள் | 80 |
| தேயிலை பதனிடும் தொழில் நுட்பம் | 82 |
| தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை மேம்படுத்தல் | 84 |
| பெறுமதிசேர் தேயிலை உற்பத்திகள் | 86 |
| சமூக பொருளியல் | 88 |
| பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் | 92 |
| பிராந்திய நிலையங்கள் | 108 |
| விருதுகள், பிரசுரங்கள், விசேட கற்கை நிகழ்ச்சிகள் | 130 |
| TRI தோட்டங்கள் | 138 |
| சென் கூம்ஸ் | 138 |
| சென் ஜோக்கிம் | 142 |
| நிர்வாகம், நிதி | 146 |
| முக்கிய செயற்பாடுகள் | 146 |
| மனிதவள அபிவிருத்தி, தகமை வளர்த்தல் | 146 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் பராமரிப்பும் | 152 |
| நிதிச் செயற்பாடுகள் | 156 |
| தலைமை கணக்காய்வாளரின் அறிக்கை | 161 |

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் 1925ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம் இலங்கை சட்டசபையின் ஆணைக்கமைய, தேயிலை தொழிற்துறையை தொழில்முறை ஆராய்ச்சிகளினால் வளப்படுத்துவதற்காக நிறுவப்பட்டது. இலங்கை பயிர்வளர்ப்போர் சங்கத்தின் ஒரு கரமாக ஆரம்பிக்கப்பட்ட தேயிலை ஆராய்ச்சி நிலையம் படிப்படியான நிலை மாற்றங்களைத்த தொடர்ந்த தற்போது இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபையின் கீழ் இயங்குகின்றது.

### தொலை நோக்கு

உலக சந்தையில், போட்டி விலையின் அடிப்படையில் இலங்கை தேயிலையை அதி விருப்பத்திற்குறிய தேயிலையாக மாற்றுவதற்காக தேயிலை ஆராய்ச்சியில் அதி உன்னத நிலையை அடைதல், மற்றும் தேயிலை தொழிற்துறைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

### குறிக்கோள்

பெரும் இலாபத்தை ஈட்டும் வகையில் இலங்கை தேயிலையின் உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக பங்குதாரர்களுக்கு பொருத்தமான விஞ்ஞான அறிவையும் தொழில்நுட்பத்தையும் உருவாக்குதல் மற்றும் பரிமாறுதல்.





# நிறுவன கட்டமைப்பு



தலைவர், தேயிலை ஆராய்ச்சி சபை
உள்ளக கணக்காய்வு பிரிவு
ஆராய்ச்சிக்கான ஆலோசணைக்குழு
தோட்ட ஆலோசணை சேவைக்கான ஆலோசணைக்குழு
கணக்காய்வு முகாமைத்துவக்குழு
பணிப்பாளர்
மேலதிக பணிப்பாளர்
பிரதி பணிப்பாளர்,ஆராய்ச்சி (உற்பத்தி)
பயிராக்கவியல் பிரிவு
தாவர இனவிருத்திப் பிரிவு
மண் தாவர போசணை பிரிவு
பூச்சியியற் புழுவியற் பிரிவு
தாவர நோயியற் பிரிவு
தகவல் தொழில்நுட்ப பிரிவு
பிரதி பணிப்பாளர், ஆராய்ச்சி (தொழில்நுட்பம்)
பதனிடும் தொழில்நுட்ப பிரிவு
உயிர் இரசாயனவியற் பிரிவு
பிரதி பணிப்பாளர் (விரிவாக்கல்)
ஆலோசணை விரிவாக்கல் பிரிவு
பிராந்திய நிலையங்கள்
பிரதி பணிப்பாளர், (நிர்வாகம்)
விசேட செயற்பாடுகள்
நிதியியல் பிரிவு
TRI தோட்டங்கள்
விவசாய பொருளியற் பிரிவு
உயிர் புள்ளிவிபரவியற் பிரிவு
பிரசுரிப்பு அலகு
நூலகம்

# மேலாண்மைக் குழு
## இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை

1993ம் ஆண்டின் தேயிலை ஆராய்ச்சி சபை சட்ட இல 52 இன் கீழ் இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை 1993ம் ஆண்டு நவம்பர் 12 ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இச் சட்டம் 2007ம் ஆண்டு திருத்தப்பட்டு 2006 இன் துணை சட்டம் இல 43 உருவாக்கப்பட்டு அமைச்சரவை அங்கிகாரம் பெற்றது.

தேயிலை பயிரிடுதல், தேயிலை உற்பத்தி ஆகியவற்றை ஊக்குவித்தல், பலப்படுத்தல் உதவுதல், ஆகியன தேயிலை ஆராய்ச்சி சபையின் பணிகளாகும்.

### தேயிலை ஆராய்ச்சி சபையின் முக்கிய பணிகள்

- நோய் பீடைகளை கட்டுப்படுத்தல், தேயிலையின் தரத்தை மேம்படுத்தல் தேயிலையிலிருந்து பெறப்படும் பொருட்களை பல்வகைமைப்படுத்தல் உள்ளிட்ட தேயிலை பயிரிடப்படுதல், தேயிலை உற்பத்தி என்பவற்றை பாதிக்கும் சகல காரணிகள் பிரச்சினைகள் சம்மந்தமானதான விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வுகளை ஊக்குவித்தல், மேற்கொள்ளுதல், உதவி வழங்குதல் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை பிரசுரித்தல்.
- இலங்கை தேயிலைக் கைத்தொழில் பொருளாதார ரீதியில் நிலைத்திருக்கும் தன்மையினையும் எதிர்கால் பொருளாதார போக்கினை அறிவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவுதல், ஊக்குவித்தல்.
- உள்நாட்டு, வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தலும் பேணுதல்.
- தனது பணிகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து கற்கை நெறிகள், கருத்தரங்குகள் என்பவற்றை நடத்துதல்.



**முன் வரிசை :** திரு N பத்மசிறி காரியவசம், கலாநிதி I.S.B அபேசிங்க, கலாநிதி S.S.B.D.G ஜயவர்தன, திரு P.L.U திசாநாயக்க, திரு J.M.B.J பண்டார.
**பின் வரிசை :** கலாநிதி (திருமதி) M.T.K குணசேகர (செயளாலர்), கலாநிதி D.S.A சமரவீர, திரு அஜித் அபயசேகர, திரு பிரசன்ன பனார்ந்து, கலாநிதி D.V சீவரட்னம், திரு L.P ஜயசிங்க.

# தேயிலை ஆராய்ச்சி சபை உறுப்பினர்கள்

கலாநிதி S S B D G ஜயவர்தன
தலைவர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை

கலாநிதி I S B அபேசிங்க
பணிப்பாளர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

திரு பிரசன்ன பனார்ந்து
தலைவர், நிறுவன விற்பனைகள்
பான் ஆசியா வங்கி கூட்டுத்தாபனம்

திரு P L U திசானாயக்க
மேலதிக செயலாளர்
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

கலாநிதி D V சீவரட்ணம்
பிரதான நிறைவேற்று அதிகாரி,
வட்டவளை பெருந்தோட்ட நிறுவனம்

திரு L P ஜயசிங்க
பிரதிநிதி - இலங்கை தனியார் தேயிலை தொழிற்சாலை
உரிமையாளர் அமைப்பு

திரு அஜித் அபயசேகர
பிரதிப் பணிப்பாளர்
தேசிய நிதி திட்டமிடல் திணைக்களம்

திரு N பத்மசிறி காரியவசம்
தலைவர், தேயிலை பற்றுநில அபிவிருத்தி அதிகாரசபை

காலாநிதி D S A சமரவீர
தலைவர் செயற்பாடுகள்
தேயிலை சிறு பற்றுநில தொழிற்சாலை உரிமையாளர் கம்பனி

திரு J M B J பண்டார
தலைவர் இலங்கை தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி
அதிகாரசபைக்கான சம்மேளனம் (மீள் நியமனம் 03.11.2010)

கலாநிதி (திருமதி) M T K குணசேகர, செயலாளர்
தேயிலை ஆராய்ச்சி சபை

# ஆலோசனைக் குழுக்கள்

## ஆராய்ச்சிக்கான ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

கலாநிதி D S A சமரவீர (தலைவர், ஆலோசனைக் குழு)
தலைவர் செயற்பாடுகள்
தேயிலை சிறு பற்று நில தொழிற்சாலை உரிமையாளர்கள் பொதுக் கம்பனி

கலாநிதி S S B D G ஜயவர்தன
தலைவர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை

கலாநிதி I S B அபேசிங்க
பணிப்பாளர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

கலாநிதி D V சீவரட்ணம்
பிரதான நிறைவேற்று அதிகாரி
வட்டவளை பெருந்தோட்ட நிறுவனம்

கலாநிதி P சிவபாலன்
முன்னால் பணிப்பாளர்
தேயிலை ஆராய்ச்சி நிலையம்

பேராசிரியர் W A J M டி கொஸ்தா
பயிர் விஞ்ஞான பிரிவு, விவசாய பீடம்
பேராதனை பல்கலைக்கழகம்

பேராசிரியர் H P M குணசேன
தலைவர், தென்னை ஆராய்ச்சி நிலையம்

திரு N B H பிலபிட்டிய
உரிமையாளர், புதிய விதானகந்த தேயிலை தொழிற்சாலை, கலவானை

திரு M B சிரீல்
பிரதி பொது முகாமையாளர் (அபிவிருத்தி)
தேயிலை சிறு பற்று நில அதிகார சபை

திரு S K L ஒபேசேகர
பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி
பலாங்கொடை, மடுல்சீமை பெருந்தோட்ட தனியார் கம்பனி

திரு L P ஜயசிங்க
பிரதிநிதி, இலங்கை தனியார் தொழிற்சாலைகள் நிறுவனம்

திரு பிரட் R அமரசிங்க (ஜீன் 2011 இலிருந்து)
போர்ப்பஸ் & வோக்கர் டீ புரோக்கர்ஸ் (தனி) லிமிடட்

திரு P M சமரசிங்க
பொது முகாமையாளர் (உற்பத்தி)
அக்ரோ டெக்னிகா லிமிடட்

திரு G D V பெரேரா
பணிப்பாளர்
லங்கெம் தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட தனியார் லிமிடட்

திரு L J பீரீஸ்
நிறைவேற்று பணிப்பாளர்
ஹேலிஸ் என்ஜினியரிங் (தனி) நிறுவனம்

செயலாளர்
கலாநிதி L S K ஹெட்டியாராச்சி
பிரதிப் பணிப்பாளர் ஆராய்ச்சி (உற்பத்தி)

# தோட்ட ஆலோசனை சேவைக்கான ஆலோசனைக் குழு

கலாநிதி D V சீவரட்ணம்
ஆலோசனைக் குழுவின் தலைவர்
பிரதான நிறைவேற்று அதிகாரி, வட்டவளை பெருந்தோட்ட நிறுவனம்

கலாநிதி S S B D G ஜயவர்தன
தலைவர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை

கலாநிதி I S B அபேசிங்க
பணிப்பாளர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

கலாநிதி L S K ஹெட்டியாராய்ச்சி
பிரதிப் பணிப்பாளர், ஆராய்ச்சி (உற்பத்தி) இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

கலாநிதி D S A சமரவீர
தலைவர் செயற்பாடுகள், தேயிலை சிறுபற்று நில தொழிற்சாலை உரிமையாளர்

பேராசிரியர் W A D P வணிகசுந்தர
தலைவர், விவசாய விரிவாக்கல் பிரிவு
பேராதனை பல்கலைக்கழகம், பேராதனை

திரு K G B ஒபேசேகர
பொது முகாமையாளர்
தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

திரு R K நத்தானியல்
முன்னால் தலைவர், ஆலோசனை விரிவாக்கல் பிரிவு,
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

திரு தயான் மடவளை
பிரதான நிறைவேற்று அதிகாரி, ஹப்புகஸ்தென்ன பெருந்தொட்ட கம்பனி

திரு S வீரசிங்க
முன்னால் பணிப்பாளர் (விரிவாக்கல்), விவசாய திணைக்களம்

திரு T.A.G. டி மெல்
பொது முகாமையாளர், பலாங்கொடை பெருந்தோட்ட கம்பனி

செயலாளர்
கலாநிதி V S சிதாகரன்
சிரேஸ்ட்ட ஆலோசனை உத்தியோகத்தர், ஆலோசனை விரிவாக்கல் பிரிவு
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## கணக்காய்வு முகாமைத்துவ குழு

திரு அஜித் அபேசேகர

குழுவின் தலைவர்

பணிப்பாளர், நிதி திட்டமிடல் திணைக்களம்

திரு J M B J பண்டார

தலைவர் இலங்கை தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி சங்கத்தின் சம்மேளனம்

திரு P L U திசானாயக்க

மேலதிக செயலாளர்

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

செயலாளர் (ஆகஸ்ட் 2011 வரை)

திரு. R. காரியவசம்

உள்ளக கணக்காளர்

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

திரு K. J. C. J. ரொட்ரிகோ (ஆகஸ்ட் 2011 இல் இருந்து)

பிரதிப் பணிபாளர் (நிர்வாகம்) இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

# தேயிலை ஆராய்ச்சி சபை தலைவரின் அறிக்கை

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் 2011ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையையும், நிதி கணக்காய்வு அறிக்கையையும் தேயிலை ஆராய்ச்சி சபை சார்பாக சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

2011 ம் ஆண்டில் தேசிய தேயிலை உற்பத்தி 328.37 மில்லியன் கிகி ஆகும். இது 2010ம் ஆண்டில் பதியப்பட்ட அதிகூடிய உற்பத்தியான 329 மில்லியன் கி.கி ஐ விட சிறிதளவு குறைவானது. சிறு தேயிலை உற்பத்தி துறையினரால் 230 மில்லியன் கிகி தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இது மொத்த உற்பத்தியில் 70% ஆகும். மிகுதி 98.47 மில்லியன் கி.கி தேயிலையை 20 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளினால் நிருவகிக்கப்படும் ஏறத்தாள 307 தோட்டங்கள், ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையினால் (JEDB) நிருவகிக்கப்படும் ஏனைய தோட்டங்கள், இலங்கை அரச கூட்டுறவு பெருந்தோட்டங்கள் (SLSPC) மற்றும் எல்கடுவ பெருந்தோட்டங்கள் ஆகியன கூட்டாக உற்பத்தி செய்தன. 2011ம் ஆண்டு கூட்டுறவுத் துறை மற்றும் சிறு உற்பத்தியாளர் துறை ஆகியவற்றின் கணிக்கப்பட்ட சராசரி தேயிலை விளைச்சல் (உற்பத்தி) 1280 கிகி/ஹெ/வ தயாரிக்கப்பட்ட தேயிலை 1970 கிகி/ஹெ/வ ஆகும். இது கென்யா, இந்தியா போன்ற போட்டி நாடுகளை விட எமது உற்பத்தி அளவு குறைவாக இருப்பதை தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது. எமது தேயிலை நிலத்தின் குறைந்த உற்பத்தி திறன் தேயிலை தொழிற்துறைக்கும் தே.ஆ.நி விஞ்ஞானிகளுக்கும் தொடர்ந்தும் சவாலாகக் காணப்படுகின்றது. ஏனெனில் உற்பத்தி செலவின் முக்கிய காரணிகளான தொழிலாளர் சக்தி, பசளை ஆகியவற்றின் செலவுகள் உள்நாட்டு மற்றும் உலக சமூக பொருளாதார பரிமாணங்களில் தங்கியிருப்பதன் காரணமாக தொழிற்துறை முகாமையாளர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் காணப்படுகின்றது. தேயிலை தொழிற்துறைக்கு மிகவும் சவால்கள் நிறைந்த ஆண்டாக 2011ம் ஆண்டு விளங்குகின்றது. அதி உயர் சம்பள அதிகரிப்பு ஏனைய உள்ளீடுகளின் அதிகரித்த விலை என்பன காரணமாக உற்பத்தி செலவு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணம் ஆகும்.



**கலாநிதி** S S B D G **ஜயவர்தன**
*B Sc Agric, (Ceylon)*
*M Sc (Kyoto, Japan)*
*Ph D (Kyoto, Japan)*

தேயிலை ஆராய்ச்சி சபை தனது தொடர்பாடல் வழிமுறைகளினால் உற்பத்தி துறை, பொருந்தோட்ட துறை, தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் ஆகிய பங்காளர்களுடன் உற்பத்தி செலவினை குறைத்தல், உரபாவனையின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் தேயிலை தயாரிப்பில் சக்தியின் பயன்பாட்டினை குறைத்தல் ஆகிய பல்வேறு பிரச்சினைகள் சம்மந்தமாக கருத்தரங்குகள், கூட்டங்கள், கலந்துறையாடல்கள் என்பவற்றினூடாக பல்வேறுபட்ட சவால்களுக்கு பதில் அளித்தது. தேயிலை அராய்ச்சி சபை, தனியார் துறை மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பொருத்தமான இயந்திரங்களை விருத்தி செய்வதன் மூலம் பொறிமுறை அறுவடையின் முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துமாறு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தை பணித்தது.

தேசிய தேயிலை உற்பத்தியில் சிறு தேயிலை பற்று நில துறையின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினையும் மேலும் உர மானியத்தின் முக்கியத்துவதினையும் கருத்திற் கொண்டு, பொருத்தமான உரக் கலவைகளை மதிப்பிடும் இசைவாக்க ஆய்வுகளிலும் பரிந்துறை செய்யப்பட்டுள்ள தெயிலை வர்க்கங்களின் ஆரோக்கியமான நடுகைப் பதார்த்தங்களின் பாவனை பற்றிய ஆய்வுகளிலும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது.

வெளி விஞ்ஞானிகளின் பங்களிப்புடன் நடைபெறும் தேயிலை ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சி பிரிவுகளின் மீளாய்வு (வெளி) நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை தேயிலை ஆராய்ச்சி சபை கவனமாக அவதானித்து வருகின்றது. மேலும் தேவை சார்ந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனையும் ஆராய்ச்சியின் முடிவுகள் தேயிலை தொழிற்துறையின் தேவைகளை பூர்த்தி செய்வதையும் உறுதிப்படுத்துவதற்காக ஆராய்ச்சிப் பிரிவுகளின் செயற்பாடுகளை கிரமமாக மதிப்பிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும் ஆராய்ச்சிக்கான ஆலோசனைக்குழு, தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்டு பரிந்துறை செய்யப்பட்டு

தொழில்நுட்பங்களை பங்குதாரர்கள் ஏற்றுக்கொள்ளும் அளவினை மதிப்பிடும் சிறந்த வழிமுறையாக தொடர்ந்தும் விளங்குகின்றது. இதே போன்று காலாண்டுக்கு ஒரு முறை கூடும் தோட்ட ஆலோசனை சேவைகள் சேவைகளுக்கான ஆலோசனைக்குழு ஆலோசனை, விரிவாக்கல் நிகழ்ச்சிகள் பங்குதாரர்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதினைக் கண்காணித்து வருகின்றது. இக்குழு சென் கூம்ஸ் மற்றும் சென் ஜோக்கிம் தோட்டங்களின் செயற்பாடுகளைக் கிரமமாக கண்காணித்து. இத்தோட்டங்கள் இலாபமீட்டும் வகையிலும் வினைத்திறனுடனும் நிருவகிக்கப்படுவதனை உறுதி செய்கின்றது.

தொழில் பரிமாற்ற செயன்முறைகளை மீளாய்வு செய்வதால் பயிற்சி மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சிகளை இனங்காணல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு தே.ஆ.நி சிறு தேயிலை பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை இணைப்புக் கூட்டம் நடாத்தப்பட்டது. பிராந்திய விஞ்ஞான குழு நிகழ்ச்சிகள் வழமையான முறையில் பல்வேறு பிராந்தியங்களில் நடாத்தப்பட்டது. இதன் போது குறிப்பிட்ட பிராந்தியம் சார்ந்த பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்பட்டது. இப்பிராந்திய குழுக் கூட்ட நிகழ்ச்சிகள் பெருந்தோட்ட முகாமையாளர்கள் தேயிலை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகளுடன் தொடர்புக் கொள்ளும் ஒரு வாய்பாக அமைந்தன. 69 தனியார் தோட்டங்கள் மற்றும் 38,184 சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு விரிவாக்கல் சேவைகளை வழங்கும் முகமாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மத்துகம ஆலோசனை விரிவாக்கல் மையம் பயிர் சிகிச்சை நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்தது. இதில் முக்கியமாக தாவர இனவிருத்தி, நாற்றுமேடை முகாமைத்துவம் என்பவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. இப்பிரதேசத்தில் சிறு தேயிலை உற்பத்தி துறை கிராமிய பொருளாதார வாழ்வாதார உந்து சக்தியாக விளங்குகிகன்றது. களுத்துறை பிரதேச செயளாளர் மற்றும் பிரதேச செயலகம் ஆகியன இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய முன் நின்று உழைத்தமை வரவேற்கத்தக்கது.

2011ம் ஆண்டில் தே.ஆ.நி தலவாக்கலையில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி விரிவாக்கல் (E&E) மேடைகளின் கருப்பொருளாவன “நடைமுறை உலக கற்கையின் தேவைகளை நிறைவேற்றுவதில் இலங்கை தேயிலை தொழிற்துறை எதிர்நோக்கும் சவால்கள்” மற்றும் பொருத்தமான சில முகாமைத்துவத்தின் மூலம் உற்பத்தி வீழ்ச்சியினை எதிர் கொள்ளல்” ஆகும். தே.ஆ. நிலையத்தினால் நடாத்தப்படும் ஆராய்ச்சி விரிவாக்கல் மேடைகள் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் பெருந்தோட்ட துறை சிரேஷ்ட்ட முகாமையாளர்கள், இலங்கை தனியார்தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை (TSHDA), இலங்கை தேயிலை சபை மற்றும் தேயிலை சிறு பற்றுநில சம்மேளனம் ஆகிய பங்குதாரர்களுக்கு இடையே தொடர்ந்தும் மிகவும் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சியாக அமைந்து வருகின்றது. சிங்கள மொழியில் நடாத்தப்படும் ஆராய்ச்சி விரிவாக்கல் மேடைகள் 2011 ம் ஆண்டில் இரு முறை இரத்தினபுரியில் நடாத்தப்பட்டன. சிறு தேயிலை தோட்ட

துறையின் பிரச்சினைகளான இலாபமீட்டல், மண்ணின் தாங்கல் திறன் பற்றிய அறிவு மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் பயிர் பல்வகைமைப் படுத்தல் ஆகியவற்றுக்கு உரிய நேரத்தில் தொழில்நுட்ப தேவைகளை வழங்குதல் இந்நிகழ்ச்சிகளின் நோக்கமாகும்.

கிரமமாக நடாத்தப்படும் ஆராய்ச்சி, விரிவாக்கல் மேடை (E&E) பிராந்திய தொழில்நுட்ப விரிவாக்கல் மேடை (RTEF) மற்றும்பயிர் சிகிச்சை நிகழ்ச்சிகள் சிறு தோட்ட துறையினரின் தொழில்நுட்ப தகவல்களின் தேவைகளை தொடர்ந்தும் சிறப்பாக பூர்த்தி செய்து வருகின்றன. மேலும் விவசாயிகள், விரிவாக்கல் ஊழியர்களுக்கு தே.ஆ.நி விஞ்ஞானிகளுடன் தொடர்புக் கொள்ளும் சுமுகமான சூழலை உருவாக்குகின்றன.

இரத்தினபுரி தாழ் நாட்டு நிலையம் சிறு தேயிலை பற்று நில உரிமையாளர்களுக்கு TSHDA உடன் இணைந்து பல்வேறு ஊடாடு வழிமுறைகளின் ஊடாக தொழில்நுட்ப தகவல்களை வழங்குவதில் தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றது. அதே வேளை பெருந்தோட்ட துறையினருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க வருகின்றது. தெனியாய, காலி, ஊவா பிராந்திய சிறு தேயிலை பற்று நில உரிமையாளர்களின் விரிவாக்கல் தேவைகளை அவ் அவ் பிரதேசங்களில் அமைந்துள்ள ஆலோசனை விரிவாக்கல் நிலையங்கள் வினைத்திறனுள்ள ஊடாடு செயன்முறைகளின் மூலம் பூர்த்தி செய்து வருகின்றன. ஹந்தானை மத்திய நாட்டு நிலையம் தாவர இனவிருத்தி, தவர பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளில் தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகிப்பதுடன் RPC, SLSPC, JEDM மற்றும் மத்திய நாட்டு சிறு தேயிலை பற்றுநில துறையினருக்கு தொழில்நுட்ப தகவல்களை வழங்கி வருகின்றது. மத்திய நாட்டு பிராந்திய நிலையம் தே. ஆ. நி தாய் தாவர திட்டம் தவறணை அத்தாட்சிப்படுத்தல் நிகழ்ச்சி ஆகியவற்றினை ஒருங்கிணைத்தலின் மூலம் தாவர இனவிருத்தியாளர்களினால் விருத்தி செய்யப்படுகின்ற புதிய தேயிலை வர்க்கங்களை பரப்புவதில் அளப்பரிய பங்கினை வகிக்கின்றது.

2011 ம் ஆண்டில் ஆலோசனை விரிவாக்கல் பிரிவானது. பெருந்தோட்ட துறை சார்ந்த சிரேஷ்ட்ட முகாமையாளர்களுக்காக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகளில் பெருந் தோட்ட முகாமையாளர்களுக்கு தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக்களை வழங்கும் புதிய முன்னெடுப்புகளில் ஈடுபட்டது. தமது வெற்றிப் படிமுறைகளை பகிர்ந்து கொள்ளுவதன் மூலம் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மையினை அதிகரிப்பதில் இச் செயல்திட்டம் வினைத்திறன் வாய்ந்தது என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் இவ்யுக்தியானது விஞ்ஞானிகளுக்கு பின்னூட்டலை வழங்குவதாகவும் அமைந்தது.

ஆலோசனை விரிவாக்கல் பிரிவு பெருந்தோட்ட துறை தோட்டங்களுக்கு தொடர்ந்து ஆலோசனை விஜயங்களை மேற்கொண்டு வருகின்றது. சிறு தேயிலை பற்று நில உரிமையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்தும் பெருந்தோட்ட துறை தோட்டங்களின் குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கவணிப்பதும் இவ்விஜயங்களின் நோக்கங்களாகும். 2011 ம் ஆண்டில் இப்பிரிவு 516 பயிற்சி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், வெளிக்கள நிகழ்ச்சிகள் என்பவற்றை ஏனைய ஆராய்ச்சி பிரிவுகளுடன் இணைந்து நடாத்தியது. இந்நிகழ்ச்சிகள் தேயிலை பயிர் செய்கையில் ஈடுபடுவோரின் பிரச்சினைகளை வெளிக்கள மட்டத்தில் வெளிப்படுத்தின.

பொருத்தமான தவறணை முகாமைத்துவத்தின் ஊடாக ஆரோக்கியமான நடுகைப் பதார்த்தங்களை உற்பத்தி செய்யும் தெழில்நுட்பங்களை ஊக்குவிப்பதற்காக அரச தனியார் துறையின் கூட்டாண்மையை பலப்படுத்தும் ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளில் ஆலோசனை விரிவாக்கற் பிரிவு பிரதான பங்கினை வகித்தது.

2011ம் ஆண்டின் ஏப்பிரல் மாதத்தில் தேயிலை ஆராய்ச்சி சபை 2005 தொடக்கம் 2008ம் ஆண்டு வரையான கணக்காய்வாளார் நாயகத்தின் அறிக்கைகளை பரிட்சிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கான ஆணைக்குழுவின் முன் தோன்றியது. இதன் போது நிலையத்தின் சிறப்பான நிதி முகாமை செயல் திட்டம் சிறந்த ஆளுமை என்பன உறுதி செய்யப்பட்டது.

தேயிலை ஆராய்ச்சி சபை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாகம், நிதி முகாமைத்துவத்தை தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றது. அரசாங்க அறிவுறுத்தல்கள் மற்றும் அறிக்கைகள் சரியான முறையில் பின்பற்றப்படுவதனை இந்நடவடிக்கை உறுதி செய்கின்றது.

சபை கணக்காய்வு குழு அறிக்கையை கிரமமாக கண்காணித்து கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை நன்கு ஆராய்ந்து இக்குழுவின் பரிந்துறைகளை அமுல்படுத்துமாறு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தைப் பணித்தது.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு கிரமமாக ஆலோசனைகள், மீளாய்வுக் கூட்டங்கள் அமைச்சரவை பணிப்புரைகள் என்பவற்றின் ஊடாக தேயிலை ஆராய்ச்சி சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினை கூட்டுத்திட்டத்தின் குறிக்கோள்கள், நோக்கங்களை அடையும் வகையிலும் அரச பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடையும் வகையிலும் வழிநடத்தியது.

நான் இச்சந்தர்ப்பத்தில் தே.ஆ.நிலைய விஞ்ஞானிகளின் துணை நிர்வாக ஊழியர்களின் இலக்குகளை நோக்கிய அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவைகளை மெச்சி பாராட்டுகின்றேன். கௌரவ அமைச்சர் செயலாளர் அமைச்சின் ஊழியர்கள் ஆகியோரின் பணிப்புரைகள் வழிநடத்தல்கள் ஊக்குவிப்புக்கள் போற்றத்தக்கன.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக தேயிலை ஆராய்ச்சி சபை உறுப்பினர்கள் தலைவருக்கு வழங்கிய வழிகாட்டல்கள், பங்களிப்புகள் மற்றும் அர்ப்பணிப்புக்களை பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

**கலாநிதி** SSBDG **ஜயவர்தன**
தலைவர்
தேயிலை ஆராய்ச்சி சபை

# பணிப்பாளரின் மீளாய்வு அறிக்கை

## பொதுவானவை

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் புதுப்பிக்கப்பட்ட இணையத்தளம் மாண்புமிகு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் ஜீலை 2011 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சினால் 15 நவம்பர் ஆரம்பித்து வைக்கப்பட்ட 1.1 மில்லியன் மரங்களை நடுவதற்கான 'தேசத்துக்கு நிழல்' தேசிய மர நடுகை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மர நடுகை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி மேன்மைதகு ஜனாதிபதி அவர்களின் 65வது பிறந்த தினத்தையும், ஜனாதிபதியின் இரண்டாவது தவணை பதவிக் காலத்தையும் கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

மே 11, 12ம் திகதிகளில் முறையே பிரித் மற்றும் தானம் கொடுக்கும் வைபவங்கள் சம்புத்தாவ ஜயந்தி வைபவத்தை நினைவு கூறுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபையின் தொழில்நுட்ப செயற்பாட்டு ஆய்வுசாலை இரு நிறுவனங்களுக்கிடையே நவம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய தே.ஆ.நி இடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை தரநிர்ணய நிருவனத்தினால் நியமிக்கப்பட்ட தேயிலைக்கான தேசிய தொழில்நுட்ப குழு ஒரு நிதி உதவி திட்டத்தினை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு பரிந்துறை செய்தது. SLSI SLTB பொருட்களின் அத்தாட்சிப்படுத்துகையை ஊக்குவித்தல், அமைப்புமுறை அத்தாட்சிப்படுத்துகையை அறிமுகம் செய்தல், தகைமை வளர்த்தல்/பயிற்சி அளித்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்காக இப்பரிந்துரை செய்யப்பட்டது.

## ஆராய்ச்சி, ஆலோசனை விரிவாக்கல் நடவடிக்கைகள்

புதிய கூட்டுறவு திட்டத்தினை (2013-2017) உருவாக்கும் நோக்கில் தற்போது நடைமுறையில் உள்ள 2008-2012 ஆன கூட்டுத்திட்டம் விரிவான மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

## ஆராய்ச்சி செயற்பாடுகளின் சிறப்பம்சங்கள்



**கலாநிதி I S B அபேசிங்க**
*B Sc (Peradeniya, Sri Lanka)*
*Ph D (Sheffield, UK)*

### TRI 5000 தொடர் – வெளிவரவிருக்கும் அடுத்த தொடருக்குரிய தேயிலை வர்க்கங்கள்

TRI 5000 தொடருக்குரிய வர்க்கங்களை மதிப்பிடும் பயிர் செய்கையாளர்களின் ஒத்துழைப்புடன் நடைபெறும் 19 இசைவாக்கப் பரிசோதனைகள் தொடரப்படுகின்றன. நான்கு புதிய பரீட்சார்த்த ஆய்வுகள் பல்வேறு விவசாய காலநிலை வலயங்களைச் சேர்ந்த கூட்டுறவுத்துறை தோட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. WU 2 மற்றும் IU3C விவசாய காலநிலை வலயங்களில் நடைபெறும் இரு பரீட்சார்த்த ஆய்வுகளில் முதற் சுற்று மதிப்பீடுகள் நிறைவடைந்துள்ளன. WU 29 பிராந்தியத்தில் 5 புதிய வர்க்கங்கள் TRI 2025 மற்றும் DT 1 கட்டுப்பாட்டு தேயிலை வர்க்கங்களை விட அதிகரித்த விளைச்சலைக் கொடுத்தன. அதிக விளைச்சலைத் தரும் இவ்வர்க்கங்களுள் ஒன்று DT 1 இன் தயாரித்த தேயிலையின் தரத்திற்கு ஒப்பான தரத்தினைக் கொண்டிருந்தது.

### TRI 3000, TRI 4000 தொடருக்குரிய வர்க்கங்களைப் பற்றிய தேயிலை வளர்போரின் புலப்பாடு

அண்மையில் வெளியிடப்பட்ட புதிய தொடருக்குரிய வர்க்கங்களின் செயற்பாடு பற்றிய பயிராளர்களின் புலப்பாட்டினை மதிப்பிடும், நாடளாவிய மதிப்பீடு ஆலோசனை விரிவாக்கல் பிரிவு மற்றும் TSHDA உடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. தெனியாய மற்றும் ஊவா பிரதேச (பண்டாரவளை, பதுளை, பசறை) தேயிலை பயிரிடுவோர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். TRI 3000, TRI 4000 தொடர் தேயிலை வர்க்கங்களின் செயற்பாட்டில் தேயிலை வளர்ப்போர் நன்மதிப்பினை (77%, 100% முறையே மேற்கூறப்பட்ட பிரதேசங்களில்) வெளிப்படுத்தினர். மேலும், அவர்கள் புதிய வர்க்கங்களை தொடர்ந்து பயிரிடும் ஆர்வத்தினை வெளிப்படுத்தினர். இம்மதிப்பீடு கண்டி பிரதேசத்தில் தொடரப்படுகின்றது.

**தேயிலை மூலவுயிர் முதலுருவினை உயிர் இரசாயன வகைப்படுத்தலும் வளர்சிதை வினைமாற்ற பொருட்களை புறவுருப்படுத்தலும்.**

முப்பத்து ஐந்து சேர்மானங்களின் பச்சை, கருப்பு தேயிலையின் உயிர் இரசாயன பண்பளவுகளின் பகுப்பாய்வு, உயிர் இரசாயன பல்வகைமையின் அடிப்படையில் இச்சேர்மானங்களை வகைப்படுத்தும் சாத்தியக்கூறினைக் காட்டியது. சேர்மானங்களுக்கிடையில் கெபின் அளவில் பரந்த வேறுபாடு காணப்பட்டது. இவ்வியல்பு எதிர்கால இனவிருத்தி நிகழ்ச்சிகளில் பயனுள்ளதாக அமையும். இலங்கை தேயிலை மூலவுயிர் முதலுருவின் வளர்சிதை வினைமாற்ற பொருட்களை புறவுருப்படுத்தும் ஒரு புதிய திட்டம் தேசிய ஆராய்ச்சி அமைப்பின் பண உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேயிலை  இன விருத்தி மற்றும் பயிர் மேம்பாட்டு நிகழ்ச்சிகளில் தேயிலை மூலவுயிர் முதலுருவினை விவேகமாக பயன்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**மேம்படுத்தப்பட்ட விதைகள் – குறைந்த வளமுடைய தேயிலை நிலங்களுக்கான மாற்று நடுகைப் பதார்த்தம்**

குறைந்த வளமுடைய நிலங்களுக்கு பொருத்தமான மாற்று நடுகை பதார்த்தங்களுக்கான ஆர்வம் தேயிலை பயிரிடுவோரிடையே புத்துயிர் பெற்றதைத் தொடர்ந்து மேம்படுத்தப்பட்ட விதைகளுக்கான கேள்வி அதிகரித்து காணப்படுகின்றது. உச்ச பழம் கொடுக்கும் காலங்களில் விதை சேகரிப்பினை எளிதாக்கும் நோக்கில், பயிரிடுவோரை வர்த்தக விதை தோட்டங்களுடன் இணைக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**இயந்திர அறுவடைக்கு இணங்கத்தக்க தேயிலை தண்டுக்கிளையின் இயல்புகளைத் தெரிதல்**

இயந்திர அறுவடைக்கு பொருத்தப்பாட்டினை அறிவதற்காக பல்வேறு தேயிலை வர்க்கங்களில் தண்டுக்கிளையின் இயல்புகள் ஆராயப்பட்டன. குறுகிய கணுவிடை தூரம், அகன்ற இலைக் கோணம் ஆகியன விளைச்சல் வீழ்ச்சியுடன் நேரடி தொடர்பினைக் கொண்டிருந்தன.  அதேவேளை தண்டுக்கிளைகளின் அடர்த்தி எதிர் தொடர்பினைக் காட்டியது. இலையின் நீளம் இயந்திர அறுவடையின் போது பழுதடைந்த கொழுந்து மற்றும் காம்புகளின் எண்ணிக்கையுடன் நேர் தொடர்பினைக் காட்டியது. அதேவேளை, முற்றிலைகளின் அளவு இலையின் வளைவுடன் எதிர் தொடர்பினைக் கொண்டிருந்தது.

**பிரதான பீடைகளுக்கு எதிரான தேயிலை சேர்மானங்கள், வர்க்கங்கள் மற்றும் விதைத் தொகுதிகளைத் தெரிதல்.**

தாவர இனவிருத்தியில் ஈடுபடுவோரினால் தாழ், மத்திய, மற்றும் உயர் நிலப் பிரதேசங்களுக்காக இனங்காணப்பட்ட சாத்தியமான சேர்மானங்கள், வர்க்கங்கள் மற்றும் விதைத் தொகுதிகள் பிரதான பீடைகளுக்கு எதிராக தெரிவு செய்யப்படுகின்றன. ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் 82 தேயிலை சேர்மானங்கள், வர்க்கங்கள் மற்றும் விதைத் தாவரங்கள் பிரடிலென்கஸ் லூசி,

ரெடபிலஸ் சிமிலிஸ், குண்டுத் துளைப்பி மற்றும் தாழ் நாட்டு உயிர் மரக் கறையான் ஆகிய பீடைகளுக்கு எதிர்ப்புத்திறன்/தாங்கும் திறன் ஆகியவற்றக்காக வேறுபட்ட இடங்களில் நியம செயன்முறைகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டன.

**நீர் முகாமைத்துவ உத்திகளை விருத்தி செய்தல்**

சொட்டு/தெளிப்பு நீர்ப்பாசன வெளிக்கள பரிசேதனைகள் 2011 இல் நிறைவடைந்தன. முக்கிய முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**சொட்டு நீர்ப்பாசனம்.**

வேறுபட்ட தேயிலை வர்க்கங்களான TRI 2023 மற்றும் TRI 3025 ஆகியவற்றில் சொட்டு நீர்பாசனத்துக்கான பிரதிபலிப்புக்கள் மதிப்பிடப்பட்டன. சொட்டு நீர்ப்பாசனம் வறட்சிக் காலப்பகுதியில் 2.6-2.8 மடங்கு தேயிலை விளைச்சலை அதிகரித்தது. மழை நீரில் தங்கியிருந்த தேயிலை செடிகளுடன் ஒப்பிடுகையில் 20% வருடாந்த விளைச்சல் அதிகரிப்பு காணப்பட்டது. TRI 3025 உடன் ஒப்பிடுகையில் TRI 2023 அதிக விளைச்சலைக் காட்டியது. இது சொட்டு நீர்பாசனத்திற்கு தேயிலை வர்க்கங்களின் வேறுபட்ட பிரதிபலிப்பினைக் காட்டுகின்றது. மேலும், சொட்டு நீர்பாசனத்தின் மூலம் தண்டுப் புற்று நோய் நிகழ்வு >80% ஆக குறைவடைந்தது. அதிக விளைச்சலைத் தரும் தேயிலை வர்க்கங்களுக்கு சொட்டு நீர்பாசனம் சாத்தியமானது என்பதனை முடிவுகள் குறிப்பிட்டன.

**சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம்**

TRI 2023 தெளிப்பு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட போது சொட்டு நீர்ப்பாசனத்துடன் ஒப்பிடுகையில் 6% விளைச்சல் அதிகரிப்பினை காட்டியது. சொட்டு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட செடிகளை விட தெளிப்பு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட செடிகள் குறைந்த இலை வெப்பநிலையை பேணி வந்தன. இத்தன்மை வறண்ட மாதங்களில் அதிகரித்த தொழிற்பாட்டு நடவடிக்கைகளை எளிதாக்கியது.

**கவ்வாத்து சுற்றின் போது இரசாயன தன்மைகளையும் தரத்தினையும் மதிப்பிடுதல்.**

DT 1 மற்றும் TRI 2025 ஆகிய இரு வர்க்கங்களை பயன்படுத்தி, கவ்வாத்து சுற்றின் வேறுபட்ட நிலைகளில் உயிர் இரசாயன இயல்புகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆராயப்பட்டன. கொழுந்து மற்றும் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்துடன் தொடர்புடைய சிறப்பியல்புகள் கவ்வாத்து சுற்றின் மூன்றாவது ஆண்டில் அதிகமாக காணப்பட்டன. கவ்வாத்து வெட்டலில் ஏற்படும் அளவு கடந்த தாமதம் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தைப் பாதிப்பதை முடிவுகள் வெளிப்படுத்தின.

**உற்பத்தி, தரத்தினை அதிகரிப்பதற்கும் மற்றும் உயிர், உயிரற்ற காரணிகளின் தங்கங்களைக் குறைப்பதற்கும் ஒட்டுதல் நுட்பங்களைப் பயன்படுத்தல்**

ஒரு தாவரத்தில் அதிக விளைச்சல், தரம், வறட்சியைத் தாங்கும் தன்மை, நோய்ப்பீடைகளுக்கான எதிர்ப்புத்தன்மை ஆகியவற்றினை ஒன்றினைக்கக் கூடிய ஒட்டுக்கிளை அடிக்கட்டை சேர்க்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஓட்டுக்கிளையாக TRI 777 மற்றும் TRI 4049 பயன்படுத்தப்பட்ட இணைப்புகள் உயர் விளைச்சளைக் காட்டின. TRI 4046 / TRI 4006, TRI 3072 / TRI 4006, TRI 3072 / TRI 4053, TRI 4046 / TRI 3072 மற்றும் TRI 4006 / TRI 3072 இணைப்புகள் கட்டுப்பாட்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த விளைச்சலைக் கொடுத்தன.

**இடத்திற்கு தனித்துவமான வளமாக்கி சிபாரிசுகளை உருவாக்குதல்.**

இலங்கையில் தேயிலை வளர்க்கப்படும் அனைத்துப் பிரதேசங்களையும் பிரதிநிதித்தவப்படுத்தும் வகையில் நியமப்படுத்தப்பட்ட 20 மண் மாதிரி தொடர்கள் போசணை தாங்கற் திறனுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன. இம்மண் மாதிரிகளில் மக்னீசிய இயக்கவியல் வேறுபட்டிருப்பதனை முடிவுகள் காட்டின. இத்தகவல்கள் தற்போதைய மக்னீசிய வளமாக்கி சிபாரிசுகளை செம்மைப்படுத்துவதற்கு உதவியாக அமையும்.

பல்வேறு தேயிலை வளர்க்கப்படும் பிரதேசங்களின் மண் மாதிரிகள் அமில-கார (pH) தாங்கற் திறனுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன. தேயிலை வளர்க்கப்படும் பிரதேசங்களின் மண் வகைகள் அவற்றின் அமில-கார தாங்கற் திறனின் அடிப்படையில் 3 பிரதான தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டன. இத்தகவல்கள் தேயிலை வளர்க்கப்படும் பிரதேசங்களுக்கான சுண்ணாம்பு தேவையினை செம்மையாக்குவதில் உதவியாக அமையும்.

**தேயிலைக்கான உயிர் – சேதன வளமாக்கிகளை உருவாக்குதல்**

தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் ரைசோபற்றீரியாக்கள் (PGPR) தேயிலை வேர் மாதிரிகளிலிருந்து நைதரசன் பாதிக்கும் பற்றீரியாக்கள், வேர்சூழ் மண்டல மண் மாதிரிகளிலிருந்து பொசுபேற்றுக்களை கரைக்கும் தன்மையுடைய பற்றீரியாக்கள் ஆகியன பிரித்தெடுக்கப்பட்டன. பிரயோக தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக இப் பற்றீரியாக்களை நாற்றுமேடை நிலைமைகளின் கீழ் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**தேயிலையில் புற்று நோயை ஏற்படுத்தும் பங்கசுகளின் மூலக்கூற்று அறுதியீடு**

மக்ரோபோமா தீகோலாவினால் ஏற்படுத்தப்படும் தண்டு மற்றும் கிளை புற்று நோய் ஒரு பாரிய பிரச்சினையாகும். மூலக்கூற்று அறுதியீட்டு கற்கைகள் பியுசாரியம் இனங்களும் இந்நோயுடன் தொடர்புபட்டிருப்பதனை வெளிப்படுத்தின. இப்பிரித்தெடுப்புக்கள் பியுசாரியம் சொலனையுடன் ஒத்திருப்பதனை முடிவுகள் உறுதிப்படுத்தின.

**கொப்புள வெளிறல் நோயின் தீவிரத்தன்மையை அளக்கும் ஒரு வழிகாட்டி**
கொப்புள வெளிறல் நோயின் தீவிரத்தன்மையை மிகச் சரியாகவும், வினைத்திறனுடனும் அளவிடும் ஒரு வழிகாட்டி விருத்தி செய்யப்பட்டு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டியானது கொப்புள வெளிறல் பற்றிய கற்கைகள், இனவிருத்தி நிகழ்ச்சிகளில் நோய்க்கு எதிர்ப்புத்திறனுள்ள தேயிலை வர்க்கங்களைத் தெரிதல், நோயினால் ஏற்படும் பொருளாதார பாதிப்பினை மதிப்பிடல், நோய்க்கட்டுப்பாட்டு முறைகளின் சாதக தன்மையை தீர்மானித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு பயனுள்ளதாக அமையும்.

**தேயிலை தொழிற்துறையின் உற்பத்தித் திறன், இலாபத் தன்மை ஆகியவற்றில் உலக காலநிலை மாற்றத்தின் தாக்க மதிப்பீடு**
இலங்கையின் பல்வேறு நிலமட்ட வலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களில் காலநிலை மாற்றத்தினால் தேயிலை உற்பத்தியில் ஏற்படும் தாக்கங்களை எதிர்வு கூறும் நோக்கில், செபீலீட் டைனமிக் குளோபல் வெஜிடேசன் மாதிரியில் சிறிது மாற்றங்களை ஏற்படுத்தி ஒரு புதிய மாதிரி உருவாக்கப்பட்டுள்ளது.

**தேயிலையின் வளர்ச்சி, உற்பத்தித் திறனில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தினைக் கணிப்பிடுதல்**
தேயிலை வளர்க்கப்படும் பிரதேசங்களின் நீண்டகால போக்கு, தோரணை, மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்துக் கொள்ளும் நோக்கில் 30 வருடங்களுக்குரிய மாதாந்த தரவுகளின் பகுப்பாய்வு நிறைவு பெற்றது. பல்வேறு தே.ஆ.நி விவசாய வானிலை அவதான நிலையங்களில் பேணப்பட்டு வந்த நாளாந்த மழைவீழ்ச்சி தரவுகளைப் பயன்படுத்தி கடந்த நாற்பது ஆண்டுகளில் ஏற்பட்ட வரட்சியின் போக்கினை அறியும் புதிய கற்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தாழ்நில கருப்புத் தேயிலை பதனிடுதலில் ரோல் பிரேக்கர் சல்லடைகளை இடை மாற்றம் செய்வதன் மூலம் மிகை தரநிலை சதவீதம் மற்றும் விலையினை மேம்படுத்தல்**
மிகை தரநிலை சதவீதம் மற்றும் சராசரி நிகர விற்பனை ஆகியவற்றினை அதிகரிப்பதற்காக ரோலிங் நிலையின் போது பயன்படுத்தக்கூடிய பொருத்தமான இல 3 மற்றும் இல 4 சல்லடை சேர்க்கைகளைக் கண்டறிவதற்காக கற்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 1வது ரோலிங்கின் முடிவில் உடனடியாக இல 4 சல்லடையை தேயிலை தூள்களைப் பிரித்தெடுப்பதற்காக பயன்படுத்துதல் மற்றும் அதனைத் தொடர்ந்து ரோலிங் நிலைகளில் இல 3 மற்றும் இல 4 சல்லடை சேர்க்கையை தூள்களை வேறுபடுத்துவதற்காக பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் முதன்மை தரநிலை சதவீதம் மற்றும் முதன்மை தரநிலைகளின் விலை ஆகியவற்றை அதிகரிக்க முடியும் என்பது வெளிப்படுத்தப்பட்டது.

**தாழ் நாட்டு ஈரவலய தேயிலை சிறு பற்று நில உரிமையாளர்களின் உற்பத்தி செலவினை (COP) தீர்மானிக்கும் காரணிகள் (இரத்தினபுரி மாவட்டம்)**

தேயிலை சிறு பற்று நில உரிமையாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், உற்பத்தி செலவினை தீர்மானிக்கும் காரணிகள் ஆகியவற்றை கண்டறிதல் மற்றும் உற்பத்தி செலவினை கணிப்பிடுதல் ஆகிய நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாய்வு, உற்பத்தி செலவு/கிகி பல்வேறு பற்று நில உரிமையாளர் வகுப்புகளுக்கிடையே வேறுபடுகின்றது என்பதனைக் காட்டியது. மிகக் குறைந்த உற்பத்தி செலவு 0.75 1.5 ஏக்கர் பற்று நில உரிமையாளர்களிடம் பெறப்பட்டது. இது ஏனைய வகுப்பினரிடமிருந்து குறிப்பிடத்தக்க அளவில் வேறுபட்டுக் காணப்பட்டது. உற்பத்தி செலவில் அதி கூடிய பங்கினை வேலையாட்களுக்கான செலவு வகித்தது. இது மொத்த உற்பத்தி செலவில் 72% ஆகும். புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான குறைந்த அறிவு, நிதி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் பற்றிய அறிவின்மை, அதிக விலை தளம்பல் மற்றும் பச்சை கொழுந்தின் குறைந்த விலை ஆகியன தேயிலை சிறு பற்று நில உரிமையாளர்கள் முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினைகள் ஆகும்.

**தேயிலை தோட்டங்களில் அவுட்குரோவர் முறைமைக்கான மாதிரியை விருத்தி செய்தல்.**

மாதிரியை உருவாக்குவதற்காக, எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியின் செலகம தோட்டத்தில் அவுட்குரோவர் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டது. அவுட்குரோவர் நிலங்களில் 2010 ஆம் ஆண்டிலும் பார்க்க 2011 ம் ஆண்டில் சராசரி உற்பத்தி அதிகரித்து காணப்படுவதனை ஆரம்ப பகுப்பாய்வு முடிவுகள் வெளிப்படுத்தின.

**தயாரிக்கப்பட்ட தேயிலையில் காணப்படக்கூடிய பீடைநாசினிகளின் அதிகூடிய மிகுதியின் அளவுகள் தொடர்பான பிரச்சினைகள்**

ஐரோப்பிய யூனியன் மற்றும் ஜப்பானினால் தீர்மானிக்கப்பட்ட அதிகூடிய மிகுதியின் அளவுகளை மீளாய்வு தொடர்பாக ரூ 7.3 மில்லியனை பீடைநாசினிகளின் மிகுதியின் பகுப்பாய்வுக்காக கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு வழங்கியது.

தேர்வு செய்யப்பட்ட பீடைநாசினிகளின் மிகுதிகளை பகுப்பாய்வு செய்வதற்காக ஒரு பன்மிகுதி முறை விருத்தி செய்யப்பட்டது. கொனசோல் (பிட்டர்டனோல், ஹெக்சாகொனசோல், புரபி கொனசோல், டெபுகொனசோல்) பங்கசு நாசினிகளுக்காக விருத்தி செய்யப்பட்ட பன்மிகுதி முறையில் டயசியோன் இணைத்துக்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நான்கு வகையான கொனசோல் பங்கசு நாசினிகள் மற்றும் டயசியோனுக்காக விருத்தி செய்யப்பட்ட பன்மிகுதி முறையின் உள்ளடக்கங்களை அதிகரிப்பதற்காக ஒரு புதிய பீடைநாசினிகளின் தொகுதி மீட்பு ஆய்வுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஒக்சிபுளேரர்பென்

பிப்ரனில் (அதிகூடிய மிகுதியின் அளவு 0.005 மி.கி/கிகி) மற்றும் பைரகுளொஸ்ரொபின் ( 0.05 மி.கி/கிகி) ஆகியன நான்கு வகை கொனசோல்கள் மற்றும் டயசியோனுடன் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

ஜெல் ஊடுருவல் குரோமடொகிராபி (GPC) மற்றும் வாயு குரோமடொகிராபி இலத்திரன் அயனாக்கற் திணிவு நிறமாலையியல் (GC-EIMS) ஆகியவற்றினை பயன்படுத்தி பிட்டர்டனொல், புரபிகொனசோல், ஹெக்சாகொனசோல், மற்றும் டெபுகொனசோல் ஆகிய பங்கசு நாசினிகளின் பல்வகை மிகுதிகளை அளவீடு செய்யும் பகுப்பாய்வு முறையொன்று விருத்தி செய்யப்பட்டது.

புதிய தலைமுறை பங்கசு நாசினியான பைரகுளொஸ்ரொபின் மிகுதியின் குறைந்து செல்லும் அளவுக்கான ஈர காலப்பகுதிக்கான பரிசோதனை, ஏழு நாட்களின் பின் பெறக்கூடிய மிகுதியின் அளவு, ஐரோப்பிய யூனியன் நிர்ணயித்த அதிகூடிய எச்சத்தின் அளவிலும் பார்க்க அதிகமாக இருப்பதனைக் காட்டியது. இது மீளாய்வுக்கான விண்ணப்பம் சமர்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டுகின்றது.

### ஆய்வுகூடங்களுக்கு இடையிலான பரிசோதனை நிகழ்ச்சிகள்

பகுப்பாய்வு பண்பளவுகளின் வல்லமையினை பேணுவதற்கு ஆய்கூடங்களுக்கு இடையிலான பரிசோதனை நிகழ்ச்சிகள் அத்தியாவசியமாகும். சர்வதேச மற்றும் தேசிய முகவர்களினால் நடாத்தப்படும் இவ்வகையான நிகழ்ச்சிகளில் தே.ஆ.நி தொடர்ந்தும் பங்குபற்றி வருகின்றது. நிகழ்ச்சிகள் பின்வருவன

சர்வதேச தரநிர்ணய நிறுவனம் (ISO) :- ISO வழிகாட்டல்களுக்கு அமைய HPLC முறையில் L- தியனின் இன் இரண்டாம் சுற்று அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. தரவுகள் ISO விற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பரிசோதனை ஆய்கூடங்களுக்கான அமைப்பு (SLATL) ; ISO 3720 பண்பளவுகளுக்கான ஆய்கூடங்களுக்கு இடையிலான பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### பயிற்சிகளும் தொழில்நுட்பங்களை பரப்புதலும்
### பங்குதாரர்களுக்கான அவைகள்

தே.ஆ.நி விஞ்ஞானிகளுக்கும் பங்குதாரர்களுக்கும் இடையிலான இடைத்தொடர்பினை மேம்படுத்தும் நோக்கில், பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் தேயிலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புகளின் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், அனைத்து சிரேஷ்ட முகாமையாளர்களுக்கான இரு கருத்தரங்குகள் ஏப்ரல் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் நடாத்தப்பட்டன. ஏப்ரல் மாதம் நடைபெற்ற கருத்தரங்கில் கருத்தாய்வு முடிவுகள் “ கூட்டுறவுத் துறை

தேயிலை பெருந்தோட்டங்களின் விவசாய புறவுரு'' எனும் ஆவணமாக வெளியிடப்பட்டது.

**பயிர் சிகிச்சைகள்**

தே.ஆ.நி மத்துகம பிராந்திய நிலையத்தில் பயிர் சிகிச்சை நிகழ்ச்சி ஒன்று டிசெம்பர் 2011 இல் இடம்பெற்றது. 'நீடித்திருக்கும் ஒரு தேயிலை பயிர் நிலத்திற்கு ஒரு ஆரோக்கியமான தேயிலை செடி' என்பது இந்நிகழ்ச்சியின் கருப்பொருளாகும். ஆரோக்கியம் மற்றும் தரமான நாற்றுமேடை தாவரங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப வழி வகைகளைப் பரப்புவது இந்நிகழ்ச்சியின் பிரதான நோக்கமாகும்.

**வளமாக்கிகளுக்கான இசைவாக்க பரிசோதனைகள்**

தே.ஆ.நி ஆல் பரிந்துரை செய்யப்பட்ட உரக் கலவைகள் மற்றும் சிறு பற்று நில உரிமையாளர்களினால் விரும்பப்படும் உரக் கலவைகள் ஆகியவற்றுக்கான இசைவாக்க பரிசோதனைகள் நிறுவப்பட்டன. தே.ஆ.நி இன் உர பரிந்துரைகளைப் பற்றிய சிறு பற்று நில உரிமையாளர்களின் கருத்துக்களைப் பெறுவது இதன் நோக்கமாகும். ஆலோசனை விரிவாக்கற் பிரிவும், TSHDA உம் இணைந்து கிரமமான மேற்பார்வையிடல், தரவுகளை சேகரித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

**கூட்டுறவுத்துறைக்கான பரா விரிவாக்கல் அணுகுமுறை (PEA)**

கூட்டுறவு தேயிலை தோட்ட மேற்பார்வையாளர்கள், தொழிலாளர்கள் இடையே காணப்படும் விவசாய அறிவு மற்றும் பின்பற்றுதலில் உள்ள இடைவெளி ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக, வட்டவளை பெருந்தோட்ட கம்பனியுடன் இணைந்து பரா விரிவாக்கல் அணுகுமுறை எனும் முன்னோடி நிகழ்ச்சி 2011 ம் ஆண்டில் தொடரப்பட்டது. இப்பயிற்சி நிகழ்ச்சியில் தொழில்நுட்ப விடயங்கள் மட்டுமல்லாது பரா பயிற்சியாளர்களின் கருத்துப் பரிமாற்ற திறனை விருத்தி செய்தல், மற்றும் தொழிலாளர் உற்பத்தித் திறனுடன் தொடர்புபட்ட ஆரோக்கியம், போசாக்கு ஆகிய விடயங்களும் கற்பிக்கப்பட்டன. ஆறு நிகழ்ச்சிகள் முடிவடைந்துள்ளன. முப்பது பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

**இணைய (சைபர்) விரிவாக்கல் நடவடிக்கைகள்**

கூட்டுறவு துறை மற்றும் தேயிலை சிறு பற்று நில துறை சார்ந்த தேயிலை பயிரிடுபவர்களுக்கு சாதகமான அனைத்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி பெறக்கூடிய வகையில் பொருத்தமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்கும் 'இணைய விரிவாக்கல்' ஆரம்பிக்கப்பட்டது. தொழில்நுட்ப உருவாக்கத்திற்கும் தொழில்நுட்ப தழுவலுக்கும் இடையிலான தகவல் பறிமாற்றத்தில் ஏற்படும் தாமதத்தைக் குறைப்பதன் மூலம் தேயிலை வளர்போரிடம் காணப்படும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புவதே இந்நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும்.

**வர்த்தக நாற்றுமேடை சோதனைகள்**

TSHDA வின் அழைப்பின் பேரில் 137 வர்த்தக நாற்றுமேடைகள் சோதிக்கப்பட்டன. இதன் போது 55-60% நாற்றுமேடை தாவரங்கள், நடுகை பையின் அளவு, இலைகளின் எண்ணிக்கை, தாவரத்தின் உயரம் ஆகியவற்றின் அடிப்படையில் பரிந்துரை செய்வதற்கு உகந்ததாகக் காணப்பட்டன.

**பயிரிடப்படாத நிலங்களுக்கான ஆய்வு**

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் அனைத்து தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்ட நில பயன்பாடு தொடர்பான ஆய்வில் ஆலோசனைப் பிரிவு உத்தியோகத்தர்களும் உயிர்பாக பங்குபற்றினர்.

**ADB தாய் தாவர திட்டம்**

TRI 3000 மற்றும் TRI 4000 தொடருக்குரிய வர்க்கங்களின் 7.8 மில்லியன் வெட்டுத் துண்டுகள் கூட்டுறவு துறை தோட்டங்களுக்கும் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்டன. ஊவா பிராந்தியத்தில், TRI 4053, TRI 4052, TRI 4042, TRI 3019 போன்ற வர்க்கங்களுக்கு அதிக கேள்வி நிலவியது. தாழ் நில பிரதேசத்தில் அதிகம் விரும்பப்பட்ட வர்க்கம் TRI 4049, மத்திய நிலத்தில் TRI 4006 மற்றும் TRI 4046 ஆகியன அதிகமாக விரும்பப்பட்டன. உயர் நில பிரதேசங்களில் TRI 4071, TRI 4052 மற்றும் TRI 3019 ஆகியன அதிகமாக விரும்பப்பட்டன.

**வெளியீடுகள், உரிமைகள், விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்**

ஏழு ஆராய்ச்சி கட்டுரைகள் மீளாய்வு செய்யப்பட்ட சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டன. வழமையான தே.ஆ.நி வெளியீடுகளான SLJTS, TRI அப்டேட் மற்றும் தேதத்து ஆகியவற்றுடன் மூன்று ஆலோசனை சுற்றறிக்கைகள் (PA 2, PM 4 மற்றும் PM 5) மற்றும் ''வரட்சியின் பின் தேயிலை நிலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்'', ''மண் வளத்தையும் தேயிலை நிலங்களின் உற்பத்தி திறனையும் மேம்படுத்தவதற்காக கவ்வாத்து வாதுகளைப் புதைத்தல்'' எனும் இரு புதிய வழிகாட்டல்களும் வெளியிடப்பட்டன.

கலாநிதி I.S.B அபேசிங்க, கலாநிதி நிமால் புண்யசிரி ஆகியோருக்கு 25 ஆகஸ்ட் 2011, BMICH இல் தேசிய விருது வழங்கும் விழாவில் சிறந்த விவசாய ஆராய்ச்சிக்கான முதற் பரிசு வழங்கப்பட்டது.

கலாநிதி K.M மெவன் அவர்களுக்கு மிகச் சிறந்த இயற்கை விஞ்ஞான பின்பட்டப்படிப்பு ஆராய்ச்சிக்கான 'ஹிரான் திலகரட்ன ஆராய்ச்சி விருது' பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் 21 பெப்ரவரி 2011 இல் வழங்கப்பட்டது.

திரு J.D கொட்டாவ ஆராய்ச்சி, விவசாய பட்டப்படிப்பு நிறுவனத்தின் 23$^{வது}$ வருடாந்த மாநாட்டில் சமர்ப்பித்த ''இலங்கை தேயிலை மூலவுயிர் மூதலுருவின்

தரத்தினை எதிர்வு கூறுவதற்காக கருப்புத் தேயிலையின் தெரிவு செய்யப்பட்ட உயிர் இரசாயன உள்ளடக்கங்களின் பகுப்பாய்வு" எனும் கட்டுரைக்காக சிறந்த மாணவர் முன்னிலைப்படுத்தலுக்கான விருதும், அந்நிகழ்ச்சியின் சிறந்த முன்னிலைப்படுத்தலுக்கான விருதும் வழங்கப்பட்டது.

கலாநிதி P.A.N புண்யசிரிக்கு ரூ 9.3 மில்லியன் தேசிய ஆராய்ச்சி குழுவின் நிதி உதவி "இலங்கை தேயிலை மூலவுயிர் மூதலுருவின் வளர்சிதை வினைமாற்ற பொருட்களை புறவுருப்படுத்தல்" திட்டத்திற்கு வழங்கப்பட்டது. இது தே.ஆ.நி உயிர் இரசாயன பிரிவு, தாவர இனவிருத்தி பிரிவு மற்றும் பேராதனை பல்கலைக்கழகம் இணைந்து செயற்படுத்தும் ஆராய்ச்சி திட்டமாகும்.

இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைகளுக்கான குழு பின்வரும் மூன்று ஆராய்ச்சி திட்ட அறிக்கைகளையும் தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக தெரிவு செய்துள்ளது.

- காலநிலை மாற்ற நிலைமைகளின் கீழ் இலங்கை தேயிலை நெமற்றோடு குடித்தொகையின் உருவவியல் மற்றும் மூலக்கூற்று பண்பாய்வு.
- மிகச் சிறந்த தரமுடைய கருப்புத் தேயிலை உற்பத்திக்கான மூலவுயிர் மூதலுருவை தெரிதலுக்காக உயிர் இரசாயன மற்றும் மூலக்கூற்று குறிகளை இணைத்து பயன்படுத்தும் ஆரம்ப தேர்வு கோட்பாடுகளை விருத்தி செய்தல்.
- இனங்களுக்கு இடையே இனக்கலப்பு மற்றும் முளைய மீட்டலின் மூலம் நோய் எதிர்ப்புத் திறனுடைய தேயிலை வர்க்கங்களை விருத்தி செய்தல்.

**புதிய வெளியீடுகளும் ஆக்கவுரிமைகளும்**

- இலங்கை தேயிலை விஞ்ஞான சஞ்சிகை பதிப்பு 74 பகுதி 2
- ஆலோசனை சுற்றறிக்கை இல PA2
- ஆலோசனை சுற்றறிக்கை இல PM 4- நெமற்றோடுகளிடமிருந்து இளந் தேயிலையை பாதுகாத்தல்.
- ஆலோசனை சுற்றறிக்கை இல PM 5- நெமற்றோடு பகுப்பாய்வுக்காக மாதிரி எடுத்தல்.
- வழிமுறைகள் இல : 01/11- வறட்சியின் பின் தேயிலை நிலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் (சிங்களம்/ஆங்கிலம்)
- வழிமுறைகள் இல : 01/11- மண் வளத்தையும் தேயிலை நிலங்களின் உற்பத்தி திறனையும் மேம்படுத்துவதற்காக கவ்வாத்து வாதுகளைப் புதைத்தல்.
- TRI அப்டேட் : பதிப்பு 13, இல 2
- தே தத்து : பதிப்பு 7, பகுதி 1

- தே தத்து : பதிப்பு 8, பகுதி 1
- ஆண்டறிக்கை 2010 - ஆங்கிலம்
- ஆண்டறிக்கை 2010 - சிங்களம்
- ஆண்டறிக்கை 2010 - தமிழ்

**இணைந்த செயற்பாடுகள் / ஏனைய நிறுவனங்களுடனான தொடர்புகள்**

நெஸ்லே தெற்காசிய பிராந்திய ஆராய்ச்சி அபிவிருத்திக்கான தலைவர், இவ்விரு நிறுவனங்களும் இணைந்து மேற்கொள்ளக் கூடிய ஆராய்ச்சி செயற்பாடுகளின் சாத்திய தன்மையினை கலந்துரையாடுவதற்காக தே.ஆ.நி க்கு விஜயம் செய்தார்.

இலங்கை நநோ தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் 'மெதுவாக விடுவிக்கப்படும் பசளைகளின் மூலம் மண்ணின் போசனையை மேம்படுத்தல்' எனும் திட்டம் தொடரப்பட்டது.

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்க்கையும் என்ற பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்கு தே.ஆ.நி விஞ்ஞானிகள் தமது பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்கினர்

அடிப்படை கற்கைகளுக்கான நிறுவனத்துடன் இணைத்து மேற்கொள்ளப்படும் உயிர் படலமிடப்பட்ட உயிர் பசளை பாவணைக்கான திட்டம் தொடரப்பட்டது. நாற்று மேடை மற்றும் இளம் தேயிலைகளில் உயிர் படலமிடப்பட்ட உயிர் பசளை பாவணைக்கான வெளிக்கள இசைவாக்க பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேசிய வளங்களின் முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகளுடன் காலநிலை மாற்றம் மற்றும் வானிலை எதிர்வு கூறல் தொடர்பான இணைத்த ஆராய்ச்சி திட்டங்களுக்கான கலந்துரையாடல் 8 ஜீலை 2011 இடம்பெற்றது. இதன் போது 3 திட்டங்கள் அடையாளங் காணப்பட்டன.

1) தேயிலைப் பயிடப்படும் அணைத்து விவசாய காலநிலை பிரதேசங்களிலும் கடந்த தசாப்த காலமாக இடம்பெற்ற காலநிலை மாற்றத்தின் போக்கினை நிர்ணயித்தல் மற்றும் 2025-2050 ஆம் ஆண்டுகளுக்கான திட்டமிடல்.

2) காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு உள்ளாகக் கூடிய பிரதேசங்களை அடையாளங் காணல் மற்றும் வரைபடமாக்கல்.

3) பருவத்துக்குரிய வானிலை எதிர்வு கூறல் 1வது மற்றும் 3வது திட்டங்களை முதலாவது அவத்தையில் மேற்கொள்ள தீர்மாணிக்கப்பட்டது.

திரு.ஹி. குவான்சின், ஹன்சு மாநகர அரசின் பிரதி மேயரின் தலைமையிலான சீன தூதுக்குழு 20 ஏப்ரல் 2011 இல் தே.ஆ.நி ற்கு விஜயம் மேற்கொண்டது. இணைத்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் சாத்தியக்கூறுகளைப் பற்றி இதன் போது கலந்துரையாடப்பட்டது.

அனைத்து பயிர் ஆராய்ச்சி நிறுவனங்களின் தலைவர்களையும் பணிப்பாளர்களையும் உள்ளடக்கிய பணிப்பாளர்களின் மன்றம் 4வது பெருந்தோட்ட பயிர் ஆராய்ச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன் நடைபெற்றது.

**பங்குபற்றிய முக்கிய கூட்டங்கள் / மாநாடுகள்**

கலாநிதி S S B D G ஜயவர்தன, தலைவர், தே.ஆ.ச கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரின் தலைமையில் 02-04 ஜனவரி வரை இந்தோனேசியாவிற்கு விஜயம் செய்த குழுவினருடன் இணைத்துக் கொண்டார். இலங்கையின் எண்ணைப் பனை துறையினை விருத்தி செய்வதற்காக இந்தோனேசிய விவசாய அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது இவ்விஜயத்தின் நோக்கமாகும்.

கலாநிதி S S B D G ஜயவர்தன, தலைவர், தே.ஆ.ச கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருடன் ஜப்பானிய அரசாங்கம் மற்றும் வர்த்தக அமைப்புக்களுடன் அபிவிருத்தி திட்டங்களை அடையாளம் காணல் மற்றும் தேயிலையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் ஜப்பான் சென்ற தூதுக்குழுவின் உறுப்பினராக பங்காற்றினார்.

கலாநிதி I S B அபேசிங்க, பணிப்பாளர், தே.ஆ.நி சிலகரி இந்தியாவில் 09-15 மார்ச்சு வரை நடைபெற்ற தேசிய தேயிலை மாநாட்டில் சிறப்புரையாற்றினர்.

கலாநிதி S S B D G ஜயவர்தன, தலைவர், தே.ஆ.நி கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருடன் ஜீன் 21 முதல் 27 வரை ஜெர்மனி சென்ற தூதுக்குழுவின் உறுப்பினராக பங்காற்றினார். ஜெர்மனிய தேயிலை அமைப்பு மற்றும் குழுவுடன் தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகளை விருத்தி செய்யும் திட்டங்களை இணங்காணல் மற்றும் தயாரிக்கப்பட்ட தேயிலையில் காணப்படக்கூடிய அதிகூடிய மிகுதிகளின் அளவு (MRL) ஆகியன சம்பந்தமாக கலந்துரையாடுவது இப்பயணத்தின் நோக்கங்களாகும்.

கலாநிதி S S B D G ஜயவர்தன, தலைவர், தே.ஆ.நி மற்றும் கலாநிதி K M மொஹட்டி, தலைவர் பூச்சியியல் பிரிவு ஆகியோர் 18-22 ஜுலை வரை கென்யாவில் நடைபெற்ற 19வது FAO / IGG கூட்டம் மற்றும் 1வது ஆபிரிக்க தேயிலை மாநாடு ஆகியவற்றில் பங்குபற்றினார்.

கலாநிதி I S B அபேசிங்க, பணிப்பாளர், தே.ஆ.நி டொக்லாய் பரிசோதனை நிலையம், அசாம், இந்தியாவில் 21-25 நவம்பர் வரை நடைபெற்ற உலக தேயிலை காங்கிரசில் பங்குபற்றினார்.

கலாநிதி (திருமதி) M T K குணசேகர, தலைவர் தாவர இனவிருத்தி பிரிவு,

ஒக்டோபர் 25-29 வரை தாய்பே, சீனாவில் நடைபெற்ற விவசாய உயிர் தொழிநுட்பம், உயிர் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான நிபுணத்துவ ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக அழைக்கப்பட்டார்.

கலாநிதி (திருமதி) M T K குணசேகர, தலைவர் தாவர இனவிருத்தி பிரிவு, கலாநிதி G P குணரட்ன தலைவர், மண் தாவர போசணை பிரிவு, திரு B A D சமன்சிரி, தலைவர், ஆலோசனை விரிவாக்கல் பிரிவு, கலாநிதி M A விஜேரட்ன, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், பயிராக்கற் பிரிவு ஆகியோர் UPASI மற்றும் தென் இந்திய தேயிலை பெருந்தோட்டங்களுக்கு விஜயம் செய்தனர். இவர்கள் 16-25 நவம்பர் வரை டொக்லாய் பரிசோதனை நிலையம் ஏற்பாடு செய்த உலக தேயிலை காங்கிரசிலும் பங்குபற்றினர்.

K M மொஹட்டி, தலைவர் பூச்சியியல் பிரிவு 21-25 நவம்பர், பாலி, இந்தோனேசியாவில் நடைபெற்ற பார்டிஸ் ஒப் மொன்ரியல் புரட்டோகோல் கருத்தரங்குகளில் பங்குபற்றினார்.

கலாநிதி K G பிரேமதிலக, தலைவர் பயிராக்கற் பிரிவு 14-21 டிசெம்பர் சீனாவில் நடைபெற்ற 6வது அலிலோபதிக்கான உலக காங்கிரசில் பங்குபற்றினார்.

LRMC லியனகே, DMGS தனயம்வத்த, WMS விஜயதுங்க, GP குணரத்ன, AN ஜயகொடி ஆகியோர் "தேயிலை பயிரிடப்படும் மண் வகைகளை pH தாங்கற்திறனில் அடிப்படையில் வகைப்படுத்தல்" எனும் ஆராய்ச்சி கட்டுரையை 10-13 ஒக்டோபர் சினமன் ஹோட்டல், கொழும்பில் நடைபெற்ற மண் விஞ்ஞான சங்கங்களின் கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய சம்மேளத்தின் 10வது சர்வதேச மாநாட்டில் சமர்பித்தனர்.

G P குணரத்ன, L R M C லியனகே, A N ஜயகொடி, W M S விஜயதுங்க, S M திசாநாயக்க, "இலங்கை தேயிலை பெருந்தோட்டங்களில் பொற்றாசியம் கிடைக்கும் தன்மையில் அமைவிட நிலைமைகளின் தாக்கம்" எனும் ஆராய்ச்சி கட்டுரையை 27-28 ஒக்டோபர் கண்டியில் சர்வதேச பொற்றாசு நிறுவனம் ஏற்பாடு செய்த நீடித்த விளைச்சல் மற்றும் அதன் தரத்தில் பொற்றாசியத்தின் பங்கு எனும் சர்வதேச மாநாட்டில் சமர்பித்தனர்.

**நிதி நிர்வாகம்**

நிலையத்தின் ஆட்தேர்வு திட்டம் (SOR) 2011 செப்டெம்பர் 16ம் திகதி அங்கீகரிக்கப்பட்டது. இது முகாமைத்துவ சேவைகள் பிரிவின் (MSD) சுற்றறிக்கைகள் 30 மற்றும் 30 (1) இன் வழிகாட்டல்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டது.

2005-2008 வரையிலான தே.ஆ.நி செயற்பாடுகள் மற்றும் கணக்காய்வு

விசாரணைகள் என்பன ஏப்பிரல் 8. 2011 இல் பொது முயற்சியாண்மைகளுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு (கோப்) வில் கலந்துரையாடப்பட்டது.

**மனித வளங்கள்**

30 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பற்ற சேவையினை வழங்கிய செல்வி. ஜெயந்தி ஜெயசுந்தர, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், திரு KD தகநாயக்க, சிரேஷ்ட ஆலோசனை உத்தியோகத்தர்/பொறுப்பதிகாரி தே.ஆ.நி கொட்டாவ நிலையம் மற்றும் திரு K G பியசேன பொது தொடர்பாடல் உத்தியோகத்தர் ஆகியோர் தே.ஆ.நி சேவையிலிருந்து ஓய்வு பெற்றனர். இரண்டு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் நான்கு பரிசோதனை உத்தியோகத்தர்கள் 2011 இல் சேவையிலிருந்து விலகினர்.

திரு K J C ரொட்ரிகோ பிரதி பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியினை 1.2.2011 முதல் ஏற்றுக் கொண்டார்.

கலாநிதி W S பொத்தேஜு, கலாநிதி G P குணரட்ன ஆகியோர் முறையே பதனிடும் தொழில்நுட்ப பிரிவு, மண் தாவர போசணை பிரிவு ஆகியவற்றின் தலைவராக 01.08.2011 முதல் நியமிக்கப்பட்டனர். திரு R M R R L ரனராஜா 02.05.2011 முதல் பொறியியலாளராக பதவியேற்றார். திரு T S S K தென்னகோன் சென் கூம்ஸ் தோட்ட அதிகாரியாக 15.08.2011 முதல் நியமிக்கப்பட்டார். திரு D L A L தசநாயக்க மற்றும் செல்வி H R M P அபேரட்ன ஆகியோர் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களாக 01.08.2011 முதல் நியமனம் பெற்றனர்.

மேலும் 17 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள். 4 எழுதுவினைஞர்கள், 6 சாரதிகள் மற்றும் 26 பொது தொழிலாளர்கள் 2011 இல் நியமிக்கப்பட்டனர்.

K M மெவன், ஆராய்ச்சி உத்தியோகத்தர், உயிர் இராசாயனப் பிரிவு ''மூலக்கூற்று உயிரியல் மற்றும் மரபனு தொழில்நுட்பம்'' இல் கொழும்பு பல்கலைகழகத்தில் PhD பட்டப்பின் படிப்பினை ஒக்டோபர் மாதம் பூர்த்தி செய்தார்.

K K ரனவீர, பரிசோதனை உத்தியோகத்தர், தாவர இனவிருத்தி பிரிவு தனது பயிர் விஞ்ஞான M Phil பட்டப்பின் படிப்பினை விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனம், பேராதனை பல்கலைகழகத்தில் பூர்த்தி செய்தார்.

K G J P மகிந்தபால, ஆலோசனை உத்தியோகத்தர், தனது பிரயோக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவனம், பேராதனையில் பூர்த்தி செய்தார்.

போட்டியற்ற ஊதியம், சிறந்த பின் பட்டப்படிப்பு பயிற்சிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள், போதிய பதவி உயர்வு வாய்ப்புகள் இல்லாமை போன்ற காரணிகளினால் தேர்ச்சி பெற்ற ஊழியர்களை கவருவதும் அவர்களை தே.ஆ.நி இல் தக்க வைப்பதும் சிரமமாக உள்ளது. கூட்டுறவு திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கும் மிக வினைத்திறனுடன் தேயிலை தொழில்துறைக்கு சேவையாற்றுவதற்கும் முன்னுரிமை அடிப்படையில் இப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியது அவசியம்.

2011 இல் திரைச்சேரி ரூ 233.91, 82.2 மில்லியன் முறையே நடைமுறை, மூலதன செலவுகளுக்காக வழங்கியது. இது கடந்த ஆண்டிலும் பார்க்க சிறிது கூடியது/குறைந்தது. மூலதன, நடைமுறை செலவுகள் கீழே தரப்பட்டுள்ளது.






**தே.ஆ.நி தோட்டங்களின் செயற்பாடுகள்**

**சென் கூம்ஸ் தோட்டம்**

கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் திரு மகிந்த சமரசிங்க 22 ஏப்பிரல் 2011 அன்று தேயிலை தொழிற்சாலைக்கு விஜயம் செய்தார். சென் கூம்ஸ் தோட்டம் ரூ 2.2 மில்லியன் இலாபம் ஈட்டியது.

**மீள் நடுகை**

மறுசீரமைக்கப்பட்ட 2 ஹெக்டயர் நிலத்தில் புதிய தே.ஆ.நி தேயிலை வர்க்கங்கள் பயிரிடப்பட்டுள்ளன. மேலும் 2 ஹெக்டயர் நிலத்தில் பழைய விதைத் தேயிலைகள் அகற்றப்பட்டு மறுசீரமைக்கப்படுகின்றது.

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் தாய் தாவர திட்டம்**

TRI 3000 மற்றும் TRI 4000 தொடருக்குரிய 798, 278 வெட்டுத் துண்டுகள் தேயிலை சிறு பற்று நில உரிமையாளர்களுக்கும், கூட்டுறவு துறையினருக்கும் விநியோகிக்கப்பட்டன. இத்திட்டத்தின் இலாபம் ரூ 901,852.63 ஆகும்.

**சென் ஜோக்கிம் தோட்டம்**

சென் ஜோக்கிம் தோட்ட தொழிற்சாலை 2011-2014 க்கான SLSI-SLTB உற்பத்தி சான்றிதலைப் பெறும் தகுதியைப் பெற்றது.

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் தாய் தாவர திட்டம்**

TRI 3000 மற்றும் TRI 4000 தொடருக்குரிய மொத்தம் 287, 445 வெட்டுத் துண்டுகள் தேயிலை சிறு பற்று நில உரிமையாளர்களுக்கும், கூட்டுறவு துறையினருக்கும் விநியோகிக்கப்பட்டன.

எனது கடமைகளை சரிவர செய்வதற்காக தொடர்ந்தும் உதவிகள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய தலைவர், மேலாண்மைக் குழு, ஆராய்ச்சிக்கான ஆலோசனை குழுக்கள், தோட்ட ஆலோசனைப் பிரிவு, மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ பிரிவு ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக தொடர்ந்தும் தமது பங்களிப்பினை வழங்கி வரும் தேயிலை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.



**கலாநிதி I S B அபேசிங்க**
பணிப்பாளர்
இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

# உத்தியோகத்தர்கள்

## பணிப்பாளர் குழாம்

### பணிப்பாளர்

I.S.B. அபேசிங்க,

B.Sc (பேராதனை, இலங்கை) Ph.D (ஷெபீல்ட், ஐக்கிய இராச்சியம்)

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி

### பிரதி பணிப்பாளர்கள்

L.S.K ஹெட்டியாராய்ச்சி,

B.Sc (பேராதனை, இலங்கை) Ph.D (அபர்டீன, ஐக்கிய இராச்சியம்)
பிரதி பணிப்பாளர் ஆராய்ச்சி (உற்பத்தி)

K.J.C.J. ரொட்ரிகோ,
பிரதி பணிப்பாளர் (நிர்வாகம்)

### பணிப்பாளர் காரியாலயம்

M.S ஜெயசிங்கம், பணிப்பாளரின் செயலாளர்

தேவிகா ரத்னாயக்க, தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்)

R.J ராயப்பன், எழுதுவினைஞர்

P. செல்வராஜ், பொது தொழிலாளர் (1.10.2011 தொடக்கம்)

## விவசாய பொறியியட் பிரிவு

### பதில் தலைவர்

H.W சியாமளி,

B.Sc விவசாயம் (பேராதனை), M.Sc (பேராதனை) Ph.D (CSKHPKV, இந்தியா)

### ஆராய்ச்சி உத்தியோகத்தர்

H.R.M.P அபேரத்ன,

B.Sc (பேராதனை) (1.8.2011ல் இருந்து), ஆராய்ச்சி உத்தியோகத்தர்

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்

K.W.N நதீசானி, B.Sc (பேராதனை)

A.V.K.S பெரேரா HNDT (நைதவலை) (1.8.2011ல் இருந்து)

## பயிராக்கவியற் பிரிவு

### தலைவர்

K.G பிரேமதிலக,

B.Sc விவசாயம் (றுகுணு, இலங்கை)

M.Phill (பேராதனை, இலங்கை)

Ph.D (ரெடிங். UK)

**சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்**

M.A விஜேரத்ன,
B.Sc விவசாயம் (றுகுணு, இலங்கை) Ph.D (லண்டன் UK)

M.S.D.L டி சில்வா,
B.Sc (பேராதனை) M.Phill (பேராதனை)
Ph.D (ஜேம்ஸ்குக் அவுஸ்திரேலியா)

**ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்**

N.P.S.N பண்டார,
B.Sc விவசாயம் (பேராதனை, இலங்கை) கற்கை விடுமுறையில்

S.R.W பத்திரனகே,
B.Sc விவசாயம் (றுகுணு, இலங்கை) (தாழ் பிரதேச நிலையம்)

T.L விஜேரட்ன, B.Sc விவசாயம் (பேராதனை), M.Sc (பேராதனை)

D.M.S நவரத்ன, B.Sc (பேராதனை), M.Phill (பேராதனை)

**பரிசோதனை உத்தியோகத்தர்கள்**

H.S.N பீரீஸ், B.Sc (பேராதனை, இலங்கை)
M.Phill (பேராதனை, இலங்கை) (தாழ் பிரதேச நிலையம்)

A.G கமகே, B.Sc (பேராதனை, இலங்கை) (தாழ் பிரதேச நிலையம்)

M.G.S லியனகே, B.Sc (பேராதனை, இலங்கை)

L.A.S.P ஜயசிங்க, B.Sc (வயம்ப, இலங்கை),
M.Sc பயிர் விஞ்ஞானம் (பேராதனை, இலங்கை)

M.M.N தமயந்தி, B.Sc விவசாயம் (பேராதனை),
M.Phill பயிர் விஞ்ஞானம் (பேராதனை, இலங்கை)

D.W விதான, விவசாய டிப்ளோமா (தாழ் பிரதேச நிலையம்)

U.P அபேசேகர, விவசாய டிப்ளோமா

A.P.D.A ஜெயசேகர, (மத்திய பிரதேச நிலையம்)

S.N விஜேசேகர, (மத்திய பிரதேச நிலையம்)

V. சிதாகரன்

E.W.T.P பிரேமதுங்க, (தாழ் பிரதேச நிலையம்)

**தொழில்நுட்ப உதவியாளர்**

W.A.A ஹசிதா ஷாமக (1.8.2011 முதல்)

**பொது தொழிலாளி**

N. சிவசுப்ரமணியம் (1.10.2011 முதல்)

## உயிர் இரசாயனவியற் பிரிவு

**பதில் பொறுப்பதிகாரி**

J. ஜயசுந்தர, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஜுன் 2011 வரை)

K.M மெவன், B.Sc (விவசாயம்) Ph.D (கொழும்பு), ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஜுலை 2011 வரை)

**சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஒப்பந்த அடிப்படையில்)**

P.A.N புண்ணியசிறி, இரசாயவியற் பட்டதாரி (இலங்கை இரசாயன நிலையம்), Ph.D (பேராதனை)

**ஆராய்ச்சி உத்தியோகத்தர்**

G.A.A.R பெரேரா, B.Sc விவசாயம் (பேராதனை) M.Sc (ஜயவர்தனபுர)

**பரிசோதனை உத்தியோகத்தர்கள்**

G.H தொட்டவட்டகே, B.Sc (பேராதனை) M.Sc (பேராதனை)

P.K.W முத்துகுமாரன (14.092011 வரை), B.Sc (றுகுணு)

P.G.C பிரியந்த (01.07.2011 வரை)

**தொழில்நுட்ப உதவியாளர்**

H.M.S.B ஹீன்கந்த

**தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்**

R.M.E.M.K ரன்தெய, விவசாய டிப்ளோமா (1.8.2011 முதல்)

E.N.U எதிரிசிங்க, விவசாய டிப்ளோமா (1.8.2011 முதல்)

**பயிற்றப்பட்ட தொழில் நுட்பவியளாலர்**

M.W சில்வா

**பொது தொழிலாளி**

G. பெரியசாமி (1.10.2011 முதல்)

**பூச்சியற் புழுவியற் பிரிவு**

தலைவர்

K.M மோஹறட்டி, B.Sc (பேராதனை) Ph.D (ரெடிங் UK) C Biol (இலங்கை)

**ஆராய்ச்சி உதவியாளர்**

R.M.D பலேமுள்ள (17.01.2011 வரை), B.Sc (பேராதனை) M.Sc (PGIA)

**பரிசோதனை உத்தியோகத்தர்கள்**

D.D லியனகே, B.Sc (களனி)

N. நவரத்ன

R.A.P.D சேனாநாயக்க, B.SC (பேராதனை) M.Sc (PGIS, இலங்கை)

D.S அமரசேன, B.SC (பேராதனை) M.Sc (PGIS, இலங்கை)

P.V.A.R அபேசேகர

R .பெரேரா

P.S.N வித்தான

A.K பிரேமதுங்க

P.K ஜெயவிக்ரம

U.D ஹேரத்

M.M ஜெயதிலக்க (30.6.2011 வரை)

C.D சேரம்

**தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்**

E.P விஜேவர்தன (1.8.2011 முதல்)

B.M.N.J பஸ்நாயக்க (1.8.2011 முதல்)

**பொது தொழிலாளி**

S. ஹெட்டியாராய்ச்சி (1.10.2011 முதல்)

V. சபாரட்னம் (1.10.2011 முதல்)

## தாவர இனவிருத்திப் பிரிவு

**தலைவர்**

M.T.K குணசேகர, B.Sc விவசாயம் (றுகுணு) Ph.D (சதம்டன் UK)

**சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்**

M.A.P ரணதுங்க, B.Sc (பேராதனை) M.Sc (TNAU, இந்தியா)

**ஆராய்ச்சி உதவியாளர்கள்**

H.A.C.K ஆரியரத்ண,
B.Sc (பேராதனை) M.Sc (பேராதனை)
M.Phill (கொழும்பு)

J.H.N பியசுந்தர, B.SC (OUSL) M.Phill (பேராதனை)
(தாழ் பிரதேச நிலையம்)

R. பாஸ்கரதேவன், B.Sc (சென்னை, இந்தியா), M.Sc (கொழும்பு)

**பரிசோதனை உத்தியோகத்தர்கள்**

P.T உபாலி (தாழ் பிரதேச பிராந்திய நிலையம்)

T.M சரத்சந்திர, B.Sc (உயிரியல்) (மத்திய பிரதேச பிராந்திய நிலையம்)

K.K ரணவீர, B.Sc விவசாயம் (றுகுணு)

J.T கொட்டாவ ஆராய்ச்சி, B.Sc (OUSL)

A.K முதலிகே, டிப்ளோமா (விவசாயம்) (தாழ் பிரதேச பிராந்திய நிலையம்)

**தொழில்நுட்ப உதவியாளர்கள்**

M.G.N குமார, HNDT (விவசாயம்) (1.8.2011 முதல்)

D.V.R தெனியபகல, விவசாய டிப்ளோமா (1.8.2011 முதல்)

## தாவர நோயியற் பிரிவு

**சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்**

K.L.W. வசந்தகுமார,
B.Sc (விவசாயம் (றுகுணு) M.Sc (பேராதனை),
Ph.D (பங்களூர்) ஒப்பந்த அடிப்படையில் ஜனவரி 2011 வரை

N.H.L. பிரதீபா,
B.Sc (றுகுணு) M.Sc (GBPUAT, இந்தியா) (கற்கை விடுமுறையில்)

G.D சின்னையா,
B.Sc (EUSL) Ph.D (பேராதனை) ஒப்பந்த அடிப்படையில் 1.4.2011 முதல்

## மண் தாவர போசணைப் பிரிவு

**தலைவர்**

G.P குணரத்ண,
B.Sc (பேராதனை), M.Phill (பேராதனை), Ph.D (PGIA)

**சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்**

Prof A.N ஜெயக்கொடி,
B.Sc விவசாயம் (ஜேர்மன், M.Sc (ஜேர்மன்) Ph.D ஜேர்மன்)
(ஒப்பந்த அடிப்படையில்)

**ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்**

L.R.M.C லியனகே, B.Sc விவசாயம் (பேராதனை)
W.M.S விஜேதுங்க, B.Sc விவசாயம் (பேராதனை) M.Sc (PGIA)

**பரிசோதனை உத்தியோகத்தர்கள்**

P.L.K தென்னக்கோன், B.Sc விவசாயம் (பேராதனை) M.Sc (இந்தியா)
W.T.B.D பிரியந்த, B.Sc (ஜெயவர்தனபுர)
S.M திசாநாயக்க
J.R.Y அபேவர்தன
D.M.B.M திசாநாயக்க, Grad Chem (இலங்கை இரசாயண நிலையம்)
O.G.K.A குணவர்தண, விவசாய டிப்ளோமா
W.M.J.C பண்டார, B.Sc (OUSL, இலங்கை)

**தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்**

R.A.I.W.K ரனதுங்க, விவசாய டிப்ளோமா (1.8.2011 முதல்)
K.A.S.A ரூபசிங்க, விவசாய டிப்ளோமா (1.8.2011 முதல்)
K.S திலகசிரி, விவசாய டிப்ளோமா (1.8.2011 முதல்)

**பொது தொழிலாளர்**

D. சில்வஸ்டர் (1.10.2011 முதல்)
V. ராதாகிருஷ்ணன் (1.10.2011 முதல்)

## உற்பத்தி தொழில்நுட்பம்

**தலைவர்**

W.S பொதேஜு,
B.Sc (கொழும்பு) M.Phill (பேராதனை) Ph.D (பேராதனை)

**இரசாயன பொறியயிலாளர்**

K. இரவிந்திரன்,
B.Sc பொறியியல் (மொறட்டுவை) M.Eng (AIT, தாய்லாந்து)

**இயந்திர பொறியியலாளர்**

S. கோணேஸ்வரமூர்த்தி,
B.Sc பொறியியல்

**சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்**

G.L.C கலகெட்டியாவ, B.Sc (களனி)

**பரிசோதனை உத்தியோகத்தர்கள்**

S.H பியந்தி வடுகே, NDT (இரசாயனப் பொறியியல்)

L. ஜெயசிங்க

W.M.U.A.B மாரப்பன, B.Sc (ஜெயவர்தனபுர)

A. சமிந்த

S.P தயானந்த, B.Sc (பேராதனை)

M.S வீரவர்தன, B.Sc (பேராதனை)

K.b.M சிறிபாலிகா, B.Sc (பேராதனை)

**பொறியியற் பட்டறை**

A. நந்தசிறி, பிரதம திருத்துனர்

L. வீரசூரிய, திருத்துனர்

M.C கேபரியல், பொது திருத்துனர்

**பொது தொழிலாளர்**

R. இலங்கோவன் (1.10.2011 முதல்)

S. செல்வதுறை (1.10.2011 முதல்)

## உயிர்புள்ளிவிபரவியற் பிரிவு

**சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்**

Y.U.S பீரிஸ், B.Sc விவசாயம் (பேராதனை)
M.Phil பிரயோக புள்ளிவிபரவியல் (பேராதனை),

**தொழில்நுட்ப உதவியாளர்**

H.K.K தேசப்பிரிய, AMBSC டிப்ளோமா (NET),

## ஆலோசனை விரிவாக்கல் பிரிவு

**பதில் தலைவர் (14.3.2011 வரை)**

V.S சிதாகரன், B.Sc (பேராதனை), M.Sc (பேராதனை),
ஆராய்ச்சி அபிவிருத்தி டிப்ளோமா, நெதர்லாந்து,
பெருந்தோட்ட முகாமைத்துவ டிப்ளோமா (இந்தியா),
Ph.D (TNAU, இந்தியா)தலைவர் (14.3.2011 வரை)

**தலைவர்**

B.A.D சமன்சிறி, B.Sc விவசாயம் (பேராதனை)
M.Phill (பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகம்)

**சிரேஸ்ட ஆலோசனை உத்தியோகத்தர்**

J.C.K இராஜசிங்க, B.Sc (பேராதனை), M.Sc (பேராதனை)

V.S சிதாகரன் B.Sc விவசாயம், M.Sc (பேராதெனிய), Ph.D (TNAU, இந்தியா)

**ஆலோசனை உத்தியோகத்தர்கள்**

K.G.J.P மகிந்தபால B.Sc விவசாயம் (பேராதெனிய, இலங்கை), M.Sc (பேராதெனிய, இலங்கை), பதில் பொறுப்பதிகாரி, காலி விரிவாக்கல் நிலையம்

S.P ரத்னாயக்க B.Sc விவசாயம் (றுகுணு, இலங்கை), M.BA (WHUT, சீனா), பதில் பொறுப்பதிகாரி, தெனியாய விரிவாக்கல் நிலையம்

T.G.N மகிந்த B.Sc விவசாயம் (பேராதெனிய, இலங்கை), M.Sc (பேராதெனிய, இலங்கை), பதில் பொறுப்பதிகாரி, மத்துகம விரிவாக்கல் நிலையம்

**விரிவாக்கல் உத்தியோகத்தர்கள்**

H.J.M.T சில்வா (மத்திய பிராந்திய நிலையம்), B.Sc விவசாயம் (பேராதனை)

H. ஜெயவீர, பதில் பொறுப்பதிகாரி, மத்துகம விரிவாக்கல் நிலையம்

K.R.W.P கஹந்தவ, B.Sc விவசாயம் (பேராதனை), M.Sc (பேராதனை), பொறுப்பதிகாரி (ஊவா விரிவாக்கல் நிலையம்)

M.A.H நிசாந்தினி, B.Sc விவசாயம் (பேராதனை)

A.L.R.U குமார, B.Sc விவசாயம் (பேராதனை)

C.J லியனாராய்ச்சி, B.Sc (வயம்ப), M.Sc (பேராதனை), தாழ் நாட்டு பிராந்திய நிலையம்

P.K.R.C முனசிங்க, B.Sc விவசாயம் (பேராதனை), தெனியாய விரிவாக்கல் நிலையம்

**தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்**

D.K.D திசாநாயக்க (ஊவா விரிவாக்கல் நிலையம்)

I.P.S.D விக்ரமசூரிய (1.1.2011)

N.S ஏக்கநாயக்க

## பிரசுரிப்பு அலகு

**பிரசுரிப்பு உத்தியோகத்தர்**

K.P.H லியனகே, B.Sc (OUSL)

G.W.M.S.N குணசேகர, விவசாய டிப்ளோமா, தொழில்நுட்ப உத்தியோகத்தர் (1.8.2011 முதல்)

A.P.V கல்யாணி, தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) (பெப்ரவரி 2011 வரை)
I.W.M நிகால் குமார, தட்டெழுத்தாளர், (பெப்ரவரி 2011 முதல்)
K.G.R நிரோசன், புகைப்படபிடிப்பாளர்
J.T தேவதாசன், புகைப்படபிடிப்பாளர்
A. கிருஸ்ணமேனன், பொது தொழிலாளர் (1.10.2011 முதல்)

## நூலகம்

S.K அமுனுகம, நூலக விஞ்ஞான டிப்ளேமா, நூலக உதவியாளர்
S. பரமேஸ்வரி, பொது தொழிலாளர் (1.10.2011 முதல்)

## தகவல் தொழில்நுட்ப அலகு

| | |
|---|---|
| U.D அழகியவடு, | பரிசோதனை உத்தியோகத்தர் |

### நிர்வாக பிரிவு

| | |
|---|---|
| W.P.A.N ஜெயசிங்க, | பிரதான எழுதுவினைஞர் |
| (Ms). S சண்முகநாதன், | தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) |
| K.R.M பிரியந்த, | எழுதுவினைஞர் தட்டெழுத்தாளர் |
| W.M.G.R ஜெயசிங்க, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| W.M.S.R வனசிங்க, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| R.M.D.K ரத்னாயக்க, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| C. ஜெயராம், | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| I.W.M நிகால் குமார, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| S. தர்மலிங்கம், | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| R. மகேந்திரன், | விடுதி காப்பாளர் (தலவாக்கலை) |
| R.M.K டயஸ், | விடுதி காப்பாளர் |
| R.M.P.D ரத்னாயக்க, | விடுதி காப்பாளர் (கொழும்பு) |
| V. சந்திரசேகரன், | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |
| N. புஸ்பராஜ், | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |

### களஞ்சிய அறை

| | |
|---|---|
| K.T.U குலதுங்க, | களஞ்சியசாலை உதவியாளர் |
| H.P.W குணசேகர, | களஞ்சியசாலை உதவியாளர் |
| K.M.S.K கொடிதுவக்கு, | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |

### கொள்முதல் அலகு

| | |
|---|---|
| P. திலகரட்ண, | கொள்முதல் உத்தியோகத்தர் |
| P.D.S சில்வா, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |

**உள்ளக கணக்கியற் பிரிவு**

| | |
|---|---|
| R. காரியவசம், | உள்ளக கணக்காளர் |
| P.S விக்ரமசிங்க, | உள்ளக கணக்கு உத்தியோகத்தர் |
| N.C ஜெயவீர, | உள்ளக கணக்கு எழுதுவினைஞர் |

**பொறியியற் பிரிவு**

| | |
|---|---|
| R.M.R.R லலித் ரனராஜா, | பொறியியலாளர் (2.5.2011 முதல்) |
| C.J.B.A அபேயகோன், | தொழில் மேற்பார்வையாளர் |
| J.C கமகே, | நீர் சுத்திகரிப்பு நிலைய உதவியாளர் |
| W.C.K பெர்ணான்டே, | இயந்திரதாரி |
| W.R.P.D. சில்வா, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| P.T பெரேரா, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| U.D.W ரட்ணசிறி, | நீர் சுத்திகரிப்பு நிலைய உதவியாளர் |
| K.W.A தர்மதாச, | உதவி இயந்திரதாரி |
| J.M ஜோதிபால, | மேசன் |
| R. ஜெயராஜ், தர்சன் | (1.10.2011 முதல்) |
| லோகநாதன், பொது | தொழிலாளர் (1.10.2011 முதல்) |
| H.M விஜயசேகர, | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |
| S. பாலகிருஷ்ணன், | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |
| பாலு, | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |

**தொலைபேசி பரிவர்தனை நிலையம்**

| | |
|---|---|
| K.M செனவீரத்ன பண்டா, | தொலைபேசி இணைப்பாளர் |
| P.K.N தமயந்தி, | தொலைபேசி இணைப்பாளர்/வரவேற்பாளர் |
| P. வைத்தியலிங்கம் பிள்ளை, | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |

**மின்சாரப் பிரிவு**

| | |
|---|---|
| U.A விக்ரமசிங்க, | மின் இணைப்பு அதிகாரி |
| R.W ரெங்கசாமி, | மின் இணைப்பாளர் |
| J.M.R.K பண்டார, | மின் இணைப்பாளர் |
| K. ஜெயரட்ணம், | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |
| L.R ராஜலிங்கம், | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |
| J. அந்தோனி, | பொது தொழிலாளர் (1.10.2011 முதல் |

**மோட்டார் வாகன திருத்துமிடம்**

| | |
|---|---|
| G.G.E.H கமகே, | பிரதான மோட்டார் வாகன திருத்துனர் |
| W.G விஜேரத்ன, | வாகன திருத்துனர் |
| K. ராஜரட்னம், | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |

**போக்குவரத்து பிரிவு**

| | |
|---|---|
| M.L.H பெரேரா, | போக்குவரத்து உத்தியோகத்தர் |
| S.H சந்திரசேன, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| S. பாஸ்தியன், | சாரதி தரம் 1 |
| K.P.V பியசேன, | சாரதி தரம் 1 |
| P.A.S.L லக்ஸ்மன், | சாரதி தரம் 1 |
| T. செங்கமலை, | சாரதி தரம் 1 |
| L. முருகேசு, | சாரதி தரம் 1 |
| M. களியப்பெருமாள், | சாரதி தரம் 1 |
| W.G செனவிரத்ன, | சாரதி தரம் 1 |
| R.M.N பிரேமதிலக, | சாரதி தரம் 1 |
| ரஞ்சன் குணசேகர, | சாரதி தரம் 1 |
| காமினி டி சில்வா, | சாரதி தரம் 1 |
| W.S.G.W பெரேரா, | சாரதி தரம் 1 |
| M. மருதமுத்து, | சாரதி தரம் 1 |
| K.P.V.U.N குணசேன, | சாரதி தரம் 1 |
| G.G.M ரணசிங்க, | சாரதி தரம் 11 |
| M.B.S பிரியசாந்த, | சாரதி தரம் 11 |
| W.M.S.J வீரசிங்க, | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |

**கணக்கியல் பிரிவு**

| | |
|---|---|
| R. திசாநாயக்க, | AAT இலங்கை அசோசியேட், பதில் சிரேஷ்ட கணக்கியலாளர் |
| M.V மோகன், | CIMA (லண்டன்) Interim, AAT இலங்கை அசோசியேட் கணக்காளர் |
| S.G புஞ்சிபண்டா, | சிரேஷ்ட கணக்காளர் உத்தியோகத்தர் |
| V. பகலகே, | கணக்கியல் எழுதுவினைஞர் |
| B.K.S ஹேரத், | கணக்கியல் எழுதுவினைஞர் |
| சமன் ஹெவசிலியம், | கணக்கியல் எழுதுவினைஞர் |
| A.A.A.P அமரதுங்க, | கணக்கியல் எழுதுவினைஞர் |
| W.A நிசாந்த, | AAT- Part 1 & 2, தரவுப் பதிப்பாளர் |
| H.B தல்ஹாகொட, | கணக்கியல் எழுதுவினைஞர்/காசாளர் |
| M.G வீரதிலக, | காசாளர் |
| I.G.N.C ஜயவீர, | AAT (இலங்கை) இறுதி உள்ளக கணக்காய்வு எழுதுவினைஞர் |
| I. ஜெயவிக்ரம, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| H.N தர்மபால, | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர் |
| K.A.D சுதத் பிரதீப், | கணக்கியல் எழுதுவினைஞர் |
| T.S.S குமார, | கணக்கியல் எழுதுவினைஞர் (மே 2011 முதல்) |
| V.E குமார ICASL, | கணக்கியல் எழுதுவினைஞர் (மே 2011 முதல்) |
| G.S ராஜீ, | பொது தொழிலாளர் (1.10.2011 முதல்) |

# ஆராய்ச்சி தொடர்பான சிறப்புச் செய்திகள்

## பயிர் மேம்பாடு

**நுண் இனப்பொருக்க நடவடிக்கைகளுக்கான செலவு குறைந்த இழைய வளர்ப்பு செயன்முறையை விருத்தி செய்தல்**

ஏகார் ஊடகத்திற்கும் மாற்றீடாக பயன்படுத்ததக்க கூடிய இழைய வளர்ப்பு கூறுகளின் விளைவு ஆராயும் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. திண்ம ஏகார் ஊடகத்துடன் (8 கி. லீ) ஒப்படப்பட்ட 10 பதார்த்தங்களில், சவ்வரிசியை உள்ளடக்கிய ஊடகத்தில் நுண்கிளைகளின் பெருக்கல் வீதம் குறிப்பிடத்தக்களவு அதிகமாக காணப்பட்டது. இவ் செலவு குறைந்த இழைய வளர்ப்பு செயன்முறையானது தேயிலை நுண் அனப்பொருக்கமுறையின் நடைமுறை சாதகத்தன்மையை அதிகரிக்கின்றது. இவ்வினப்பெருக்க முறை பாரம்பரிய இனப்பெருக்க நிகழ்ச்சிகளை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



**தேயிலை மூலக்கூற்று வகைப்படுத்தலில் DNA குறியீடுகளின் பயன்பாடு**

தேயிலை பெரும்பாலும் புற விருத்திக்குறிய பல்லாண்டு தாவரமாகும். பாரம்பரிய அணுகுமுறைகளில் மரபுரீதியான பதார்த்தங்களை பயன்படுத்தல்பாதுகாத்தல் மற்றும் தேயிலையின் மரபுரீதியான மேம்படுத்தல் என்பவற்றில் கட்டப்பாடுகள் காணப்படுகின்றன. வினைத்திறன் அதிகரிப்பற்காக தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்றினைந்த DNA குறியீட்டு நுட்பங்களை தற்போதை பாரம்பரிய இனவிருத்தி நிகழ்ச்சிகளில் பின்வரும் இரு பிரதான பிரிவுகளின் கீழ் ஒன்றினைந்துள்ளது. அதாவது பிரதான கீழ் ஒன்றினைந்துள்ளது. அதாவது மரபுரீதியான பல்வகைமை மற்றும் பாதுகாப்பு கற்கைகள் (தேயிலையின் மரபு ரீதியான வளங்களின் மரபுரீதியான பல்வகைமையை வர்க்க மேம்பாட்டிற்காக பாதுகாத்தலும் பயன்படுத்தலும்) மற்றும் மரபு வரிப்படமாக்கலும், குறியீட்டு உதவியுடனான தேயிலை அனவிருத்தியும் (இணைப்பு DNA குறியீடுகளை இனங் காணலும் முந்திய தெரிவுகளில் பயன்படுத்தலும் (குறியீட்டு உதவியுடனான தெரிவு MAS) மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காக அதிகளவு தகவல்களைத் தரக்கூடிய மைக்ரோ செட்டலைட் குறியீடுகள் (SSR) மேம்படுத்தப்பட்ட தேயிலை வர்க்கங்களை வகைப்படுத்தலில் உபயோகிக்கப்படுகின்றன. தேயிலையின் மரபலகு தடாகத்தை பரந்துபடுத்துவதற்காக பழைய வித்து தேயிலைகளிலிருந்து (OST) பெறப்பட்ட தனியன்களும் மதிப்பிடப்பட்டன. தேயிலை வர்க்கங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளின் பயன்படுத்தக் கூடிய சில பலதரப்பட்ட OST சேர்மானங்கள் இனங்காணப்பட்டன.



**புதிய தேயிலை வர்க்கங்களை விருத்தி செய்தல்**

கலப்பு இனப்பெருக்க முறையானது இன வேறுபாட்டினை உருவாக்குவதற்கும், புதிய தேயிலை வர்க்கங்களை விருத்தி செய்வதற்கும் ஒரு சிறந்த வழிமுறை ஆகும். 2003-2005 காலப்பகுதியில் தலவாக்கலை, இரத்தினபுரி ஆகிய இரு இடங்களில் கட்டுப்பாட்ட கலப்பு இனப்பெருக்க நிகழ்ச்சிகளில் இருந்து தோர்ந்தெடுக்கப்பட்ட 50 சேர்மானங்களை மதிப்பிடும் இசைவாக்க பரிசோதனைகள் இரண்டு ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டன. முன்னைய இனவிருத்தி நிகழ்ச்சிகளில் பாவிக்கப்படாத பலதரப்பட்ட பெற்றோர் தாவர பதார்த்தங்களைப் பயன்படுத்தி இக் கலப்புகள் உருவாக்கப்பட்டன. 2012ம் ஆண்டில் ஹந்தானை, பசறையில் இதே சேர்மானங்கள் பிரதிப் படுத்தலுக்காக வளர்க்கப்பட்டு வருகின்றன.

2001 2004ம் ஆண்டு காலப்பகுதியில் பீட்ரு, லபுக்கலை, லிடெஸ்டேல், பெயர்லோன் ஆகிய தோட்டங்களில் புதிய தேயிலை வர்க்கங்களை உருவாக்குவதற்காக சிறந்த நாட்டு இனங்களை தெரிவு செய்யும் தோட்ட வர்க்கங்களை தேர்தெடுக்கும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 20... மதிப்பிடடும் ஒரு புதிய அவத்தை 1 பரிசோதனை தலவாக்கலையில் ஆரம்பிக்கப்பட்டது.

**TRI 5000 தொடர் – வெளி வரவிருக்கும் அடுத்த தொடருக்குறிய தேயிலை வர்க்கங்கள்**

TRI 5000 தொடருக்குரிய வர்க்கங்களை மதிப்பிடும் பயிர் செய்கையாளர்களின் ஒத்துழைப்புடன் நடைபெறும் 19 இசைவாக்கப் பரிசோதனைகள' தொடரப்படுகின்றன. நான்கு புதிய பரீட்சாத்த ஆய்வுகள் பல்வேறு விவசாய காலநிலை வலையங்களைச் சேர்ந்த கூட்டுறவுத்துறை தோட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. WU2 மற்றும் IU3C விவசாய காலநிலை வலயங்களில் இரு பரீட்சார்த்த ஆய்வுகளில் முதற் சுற்று மதிப்பீடுகள் நிறைவடைந்துள்ளன. WU2a பிராந்தியத்தில் 5 புதிய வர்க்கங்கள் TRI 2025 மற்றும் DT1 கட்டுப்பாட்டு தேயிலை வர்க்கங்களை விட அதிகரித்த விளைச்சலைக் கொடுத்தன. இவ் அதிக விளைச்சலைத் தரும் வர்க்கங்களுள் ஒன்று DT1 இன் தயாரித்த தேயிலையின் தரத்திற்கு ஒப்பான தரத்தினைக் கொண்டிருந்தது. இது புதிய தேயிலை வர்க்கங்களில் அதிக விளைச்சலுடன் உயர் தரமும் ஒன்றினைக்கப்பட்டிருப்பதன் சாதக தன்மையை உறுதி செய்கின்றது. IU3C விவசாய காலநிலை வலயத்தில் 9 பரிட்சிக்கப்பட்ட சேர்மானங்களில் விளைச்சல் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரம் குண்டு துளைப்பிக்கு எதிர்ப்புதிறன் என்பன மதிப்பிடப்பட்டு வருகின்றன.

பாரம்பரிய இனவிருத்தி நிகழ்ச்சியுடன் மூலக்கூற்று அணுகுமுறைகளை இணைக்கும் நோக்கத்துடன் மூலக்கூற்று ஆய்வுகளுக்கான பரிசோதனைச் சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வசதிகளைப் பயன்படுத்தி சில தேர்ந்தெடுக்கப்பட்ட 2004, 2005, 2006 க்குறிய கலப்பினங்களில் சந்ததிக்குறிய ஆய்வுகளில் மூலக் கூற்று உதவியுடன் கட்டுப்படுத்தப்பட்ட கலப்பினப்பிறக்க நிகழ்ச்சிகள் பயன்படுத்தப்பட்டன. இலங்கையில் மூலக்கூற்று குறியீடுகளின் உதவியுடன் கலப்பின சந்ததிகளை மதிபீடும் முதற் சந்தர்ப்பம் இதுவாகும். உத்தேச கலப்பினங்களின் இனரீதியான வேறுபாடுகளை அறிந்து கொள்வதற்கும் இனக்கலப்பு உயிர்களை இனப்பெருக்க நிகழ்ச்சியிள் முதல் நிலைமைகளிலேயே இனங்கண்டு கொள்வதற்கும் RAPD காட்டிகள் உகந்தன என்பதளை முடிவுகள் சுட்டிக் காட்டின.

**தேயிலை மூலவுயிர் முதலுருவினை உயிர் இரசாயன வகைப்படுத்தலும் வளர் சிதை வினைமாற்ற பொருட்களை புறவுருப்படுத்தலும்.**

உயிர் இரசாயன காட்டிகளைப் பயன்படுத்தி மூலவுயிர் முதலுருவினை வகைப்படுத்தும் திட்டம் சிறப்பான முன்னேற்றத்தைக் காட்டியது. 35 சேர்மானங்களின் பச்சை, கருப்பு தேயிலையின் உயிர் இரசாயன பண்பளவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு உயிர் இரசாயன பல்வகைமையின் அடிப்படையில் இச்சேர்மானங்கள் வகைப்படுத்தப்பட்டன. சேர்மானங்களுக்கிடையே கெபின் அளவில் பரந்த வேறுபாடு காணப்பட்டது. இவ்வியல்பு எதிர்கால இனவிருத்தி நிகழ்ச்சிகளில் பயனுள்ளதாக அமையும். இலங்கை தேயிலை மூலவுயிர் முதலுருவின் வளர்சிதை வினைமாற்ற பொருட்களை புறவுருப்படுத்தும் ஒரு புதிய திட்டம் தேசிய ஆராய்ச்சி அமைப்பின் பண உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேயிலை அனவிருத்தி மற்றும் பயிர் மேம்பாட்டு நிகழ்ச்சிகளின் தேயிலை மூலவுயிர் முதலுருவினை விவேகமான பயன்படுத்தப்படுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பகுப்பாய்வு ஆற்றல் நவீன உயர் செய்வீதமுடைய கருவியின் உதவியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. நிலையற்ற உயிர் இரசாயன சேர்வைகளை தக்க வைத்துக் கொள்வதற்காக மாதிரிகளை உறை நிலையில் உலர்த்தும் செயன்முறை வெற்றி கரமாக நியமப் படுத்தப்பட்டு வளர்சிதை வினைமாற்ற பொருட்களை புறவுருப்படுத்தும் நடவடிக்கை தொடரப்படுகின்றது. இக்கற்கையின் ஒரு அங்கமாகிய பட்டப்படிப்பின் படிப்பு பயிற்சி (1 mphil, 1 PhD) பல்துறைகளிலும் தேர்ச்சி பெற்ற (உயிர் விஞ்ஞானம், தாவர இனவிருத்தி) மனித வளங்களை உருவாக்கும் இது இந்நிறுவனத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை பலப்படுத்துவதுடன் பண்திறன்களை இசைவு படுத்துவதாகவும் அமையும்.

**மேம்படுத்தப்பட்ட விதைகள் – குறைந்த வளமுடைய தேயிலை நிலங்களுக்கான மாற்று நடுகைப் பதார்தம்**

குறைந்த வளமுடைய நிலைமைகளுக்கு பொருத்தமான மாற்று நடுகைப் பதார்த்தங்களுக்கான ஆர்வம் தேயிலை பயிரிடுவோரிடையே புத்துயிர் பெற்றதைத்த தொடர்ந்து மேம்படுத்தப்பட்ட விதைகளுக்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுகின்றது. உச்ச பழம் கொடுக்கும் காலங்களில் விதை சேகரிப்பினை எளிதாக்கும் நோக்கில் பயிரிடுவோரை வர்த்தக விதை தோட்டங்களுடன் இணைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஸ்தாபிக்கப்பட்ட ஆறு இசைவாக்க பரிசோதனைகள் மேம்படுத்தப்பட்ட விதைத் தாவரங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

**TRI 3000, TRI, 4000 தொடருக்குறிய வர்க்கங்களை பற்றிய தேயிலை வளர்ப்போரின் புலப்பாடு**

அண்மையில் வெளியிடப்பட்ட புதிய தொடருக்குறிய வர்க்கங்களின் செயற்பாடு பற்றிய பயிராளர்களின் புலப்பாட்டினை மதிப்பிடும் நாடளாவிய மதிப்பீடு ஆலோசனை விரிவாக்கல் பிரிவு மற்றும் TSHDA உடன் அணைந்து மேற்கொள்ளப்பட்டது. தேனியாய மற்றும் ஊவா பிரதெச (பண்டாரவளை, பதுளை, பசறை) தேயிலை வளர்ப்போர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். TRI 3000 மற்றும் TRI 4000 தொடர்

தேயிலை வர்க்கங்களின் செயற்பாட்டில் தேயிலை வளர்ப்போர் நன்மதிப்பினை (77%, 100% முறையே மேற்கூறப்பட்ட பிரதேசங்களில்) வெளிப்படுத்தினர். மேலும் அவர்கள் புதிய வர்க்கங்களை தொடர்ந்து பயிரிடும் ஆர்வத்தினை வெளிப்படுத்தினர். இம் மதிப்பீடு கண்டி பிரதேசத்தில் தொடரப்படுகின்றது.

**தயாரிக்கப்பட்ட கருப்புத் தேயிலையின் தரத்தினை எதிர்வு கூறும் பண்பளவுகளை தேயிலை இலைகளில் தீர்மாணித்தல்.**

பச்சைத் தேயிலை இலைகளின் பண்பளவுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கருப்புத் தேயிலையின் தரத்தினை எதிர்வுகூறும் நடவடிக்கையானது இனவிருத்தியில் ஈடுபடுவோர் தரத்திற்கான இயல்புகளை உடைய வர்க்கங்களை வினைத்திறனாக தெரிவு செய்வதற்கு வழிவகுக்கின்றது. தற்போது தேயிலை இலைகள் பதப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி செய்யப்பாடு மூலம் தேயிலையின் தரம் தீர்மானிக்கப்படுகின்றது. தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்திற்கும் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்திற்கும் உருவவியல், இரசாயன இயல்புகளுக்கும் (பச்சை இலை மற்றும் தயாரிக்கப்பட்ட தேயிலை) இடையிலான தொடர்பினை அறிவதற்கான கற்கைகள் 12 தேர்ந்தெடுக்கப்பட்ட வர்க்கங்களைப் பயன்படுத்தி நடாத்தப்படுகின்றன. ஈர காலப் பகுதிக்கான ஆய்வுகள் முடிவடைந்துள்ளன. பச்சை தேயிலை இலைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகள் கருப்புத் தேயிலை ஒகனோலெப்டிக் பண்பளவுகள் புள்ளி விபரவியல் பகுப்பாய்விற்கு தயார் நிலையில் உள்ளன. இப்பரிசோதனை உலர் காலப் பகுதியிலும் தொடரப்படுகின்றது.

**வெள்ளை தேயிலை, வெள்ளி அரும்பு உற்பத்திக்குப் பொருத்தமான தேயிலை வர்க்கங்களை மதிப்பிடுதல்**

பொதுவாக அதிகளவில் அத்தோசயனினையும், இலை மயிர்களையும் கொண்ட TRI 2043 வர்க்கத்தினை அரும்பு மட்டுமே வெள்ளி அரும்பு உற்பத்திக்குப் பயனபடுத்தப்பட்டு வந்தது. ஆகவே வெள்ளை தேயிலை வெள்ளி அரும்பு உற்பத்திக்கு உகந்த வர்க்கங்களை மதிப்பிடுதலும் இணங் காணலும் அத்தியவசியமாகும். ISO வெள்ளைத் தேயிலைக்கான நியமங்களை தீர்மானிப்பதில் ஈடுபட்டுள்ளது. தேயிலை ஆராய்ச்சி நிலையம் ISO உடன் இணைந்து முதற் தடவையாக இலங்கையின் வெள்ளை தேயிலையை விருத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. வெள்ளி அரும்பு ஒரு ஒப்பற்ற தனியான தேயிலை வகையாக கருதப்பட வேண்டும் என்ற நோக்கை இலங்கை தேயிலைக் கைத்தொழிற் துறை கொண்டுள்ளது. மேற்கூறப்பட்ட பணிகளை இலகுவாக்குவதற்காகவும் வெள்ளை தேயிலை வெள்ளி அரும்பு உற்பத்திக்கு பொருத்தமான ஏனைய வர்க்கங்களை இணங்காண்பதற்காகவும் வெள்ளை தேயிலை/ வேள்ளி அரும்பு ஆகியவற்றின் உயிர் இரசாயன பண்புரு வருணனை ஆரம்பிகக்ப்பட்டுள்ளது. TRI 2043 க்கு மேலதிகமாக TRI 777 வெள்ளை தேயிலை உற்பத்திக்கு பயன்படுத்தலாம் என்பதனை முடிவுகள் காட்டின. பரிசோதனைக்கு உட்படத்தப்பட்ட எனைய வர்க்கங்களாவன TRI 2025, TRI DT1.

**இயந்திர அறுவடைக்கு இணங்கத்தக்க தேயிலை தண்டுக்கிளையின் இயல்புகளைத் தெரிதல்**

இயந்தி அறுவடைக்காக தேயிலை வர்க்கங்களை தெரிவு செய்வதில் தண்டக் கிளையின் இயல்புகளை அறிந்திருத்தல் அவசியமாகும் ஆகவே 8 தேயிலை வர்க்கங்களில் (TRI 2023,2027,3025,3055, 4014, 4042, 4049, 4016) தண்டுக்கிளை சார்ந்த 8 இயல்புகள் விளைச்சல், கணுவிடை தூரம், இலை துணியின் தன்மை இலையின் அளவு, இலையின் கோணம், தண்டுக்கிளையின் அடர்த்தி, இலைமயிர்களின் அளவு மற்றும் வங்கிக் கொழுந்து மதிப்பிடப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட வர்க்கங்களின் இயந்திரத்தை பயன்படுத்தியும் வழமையான முறையில் கைகளாலும் கொழுந்தெடுக்கப்பட்டது. TRI 4061 மற்றும் TRI 3025 இல் சதவீத விளைச்சல் வீழ்ச்சி TRI 2023, TRI 2027 ை விட குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகக் காணப்பட்டது. குறுகிய கணுவடை தூரம், பரந்த இலைக் கோணம் ஆகியன விளைச்சல் வீழ்ச்சியுடன் நேரடி தொடர்பினைக் கொண்டிருந்தன. அதே வேலை கொழுந்தின் தண்டுக்கிளையின் அடர்த்தி மறை தொடர்பினைக் காட்டியது. இலையின் நீளம் இயந்திர அறுடையின் போது பழுதடைந்த கொழுந்து மற்றும் காம்புகளின் அளவுடன் நேர்த் தொடர்பிகைக் காட்டியது. முற்றிலைகளின் அளவு இலையின் வளைவுடன் எதிர் தொடர்பினைக் கொண்டிருந்தது.

**வறட்சியை தாங்கும் திறனுடைய தேயிலை வர்க்கங்களை தொரிதலுக்கான கோட்பாடுகளை இனங்காணல்**

வறட்சி தொடர்பான ஆய்வுகளுக்கான கண்ணாடிக் கூட பரிசோதனைகளின் மூலம் விருத்தி செய்யப்பட்ட செயன்முறையை உறுதி செய்வதற்கான வெளிக்கள பரிசாத்த ஆய்வுகள் சென் ஜோக்கிம் தோட்டம், இரத்தினபுரி இல் நிறுவப்பட்டன.

TRI 2025, DG 39, TRI 4049, TRI 2023 மற்றும் TRI 4046 ஆகிய 5 வர்க்கங்களின் வறட்சியைத் தாங்கும் திறனுக்காக இரத்தினபுரியில் பரிட்சிக்கப்பட்டன. அதே வேளை TRI 2023, TRI 2027, DG7, C79 மற்றும் TRI 2025 ஆகியன ஹந்தானையில் பரிட்சிக்கப்பட்டன. வெளிக்கள ஆய்வு முடிவுகள் கண்ணாடிக் கூட பரிசோதனை முடிவுகள் கண்ணாடிக் கூட பரிசோதனை முடிவுரைகளை உறுதி செய்தன. ஆகவே விருத்தி செய்யப்பட்ட இந்த செயன்முறை எதிர்கால இனவிருத்தி நிகழ்ச்சிகளில் வறட்சியை எதிர்கால இனவிருத்தி நிகழ்ச்சிகளில் வறட்சியை தாங்கும் வர்க்கங்களை தெரிவு செய்வதற்காக வெற்றிகரமாக பயன்படுத்தலாம்.

**பிரதான தேயிலை பீடைகளுக்கு எதிர்ப்புதிறனுள்ள சேர்மானங்கள், வர்க்கங்கள் மற்றும் வித்துத் தொகுதிகளை தெரிதல்**

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பீடைகளுக்கு எதிர்ப்புத்திறனுடைய அல்லது தாங்கும் திறனுடைய வர்க்கங்களை தெரிவு செய்தல் ஒன்றினைக்கப்பட்ட பீடை முகாமைத்துவத்தின் ஒரு பிரதான அம்சம் ஆகும். இது பீடை நாசினி பாவனை உட்பட்ட ஏனைய கட்டுப்பாட்டு முறைகளின் பயன்பாட்டினைக் குறைப்பதுடன் இலாபகரமானதும் சூழலுக்கு இசைவான பயிர் முகாமைநடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றது. 82 சேர்மானங்கள், வர்க்கங்கள் மற்றும் வித்து தேயிலை தாவரங்கள் பிரடிலென்கஸ், லூசி, ரெடபெலஸ் சிமிலிஸ், குண்டுத் துளைப்பி, தாழ் நாட்டு உயிர் மரக் கரையான் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு, தாய்கும் திறனுக்காக பல்வேறு இடங்களில் நியம செயன்முறைகளின் மூலம் பரிட்சிக்கப்பட்டன.

# நில உற்பத்தி மேம்பாடு

**மீள்நடுகைக்கு முன்னரான மண் மறுசீரமைப்புக்கான காலத்தைக் குறைத்தல்/தவிர்ப்பதற்காக பொருளாதார ரீதியில் வளமான திட்டம் ஒன்றினை உருவாக்குதல்.**

தேயிலை மீள்நடுகை செய்வதற்கு முன் மண் மறுசீரமைப்பு அத்தியாவசியமானதாக இருப்பினும் சில கூட்டுறவு கம்பனிகள் மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்கள் நேரடி மீள்நடுகை செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மறுசீரமைப்புக்கான காலப்பகுதி உற்பத்தியற்ற அல்லது 18-24 மாதங்கள் வருமானம் அற்ற காலப்பகுதி எனும் கருத்தினைக் கொண்டுள்ளனர். ஆகவே, மறுசீரமைப்பு செய்வதை தவிர்த்தல்/மறுசீரமைப்புக்கான காலப்பகுதியை குறைப்பதற்காக மாற்று நடைமுறைகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். மேற்குறிப்பிட்ட நோக்கத்துக்காக 2011 நடுப்பகுதியில் பின்வரும் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**தேயிலைச் செடிகளை பிடுங்குவதற்கு முன் அவற்றுடன் புற்கள் மற்றும் அவரைத் தாவர இனங்களை ஒன்றாக வளர்த்தல்.**

(T1) கிளிரிசீடியா மற்றும் மானா, (T2) பிளமின்ஜியா மற்றும் மானா ஆகியன 2011 நடுப்பகுதியில் தேயிலை செடிகளுக்கிடையே நடப்பட்டன. இந்த பயிர் நிலமானது பழைய தேயிலை செடிகள் அகற்றப்பட்டு 2013 நடுப்பகுதியில் மீள்நடுகை செய்யப்படவிருக்கின்றது. (T3) 2013 நடுப்பகுதியில் தேயிலை அகற்றப்பட்ட உடன் நேரடி மீள்நடுகை செய்தல் (T4) 2011 இல் தேயிலை அகற்றப்பட்டு மண் மறுசீரமைப்பின் பின்னர் 2013 இல் மீள்நடுகை செய்தல். (T5) கட்டுப்பாட்டு பரிசோதனையாக 2011 நடுப்பகுதியில் தேயிலை அகற்றப்பட்ட உடன் நேரடி மீள்நடுகை செய்தல். இப்பரிசோதனை மண் மறுசீரமைப்புக்கான காலத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் நியூ பீக்கொக் தோட்டத்தில் நடைபெறுகின்றது.

**நியூ பீக்கொக் தோட்டம், கம்பளை மற்றும் ஹவுப்பே தோட்டம், கஹவத்தை ஆகிய இடங்களில் உயிர் படலமிடப்பட்ட உயிர் பசளை பாவனையின் மூலம் மண்ணின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் மண் சீரமைப்புக்கான காலத்தைக் குறைத்தல்.**

உயிர் படலமிடப்பட்ட உயிர் பசளையை (BFBF) உபயோகித்து இரு பரிசோதனைகள் ஜீன் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. (T1) 2011







நடுப்பகுதியில் BFBF + T200 வளமாக்கி சேர்வையின் அரைபங்குடன் மண் மறுசீரமைப்பு அற்ற நேரடி மீள்நடுகை (T2) மானா புற்களினால் 24 மாதகால மண் மறுசீரமைப்பினை தொடர்ந்து 2013 இல் மீள் நடுகை செய்தல். (T3) மானா புற்களினால் ஒரு வருட கால (2012-2013) மண் மறுசீரமைப்பு + BFBF + T200, U 625 இன் அரைப்பங்கு (T4) மானா புற்களினால் ஒரு வருட மண் மறுசீரமைப்பு (2012-2013) + BFBF மற்றும் U 625 (T5) 2013 நேரடி மீள்நடுகை + BFBF பாவனை மட்டும் (T6) 2013 இல் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அளவில் T200 பாவனையுடன் நேரடி மீள்நடுகை பரிசோதனைக்கு முன்னரான மண் பகுப்பாய்வுகள் முடிவடைந்துள்ளன. மண்ணின் pH 3.39 ஆகவும் காபனின் அளவு 1.04%, மொத்த N 0.17%, K 194 ppm ஆகவும் நியூ பீக்கொக் தோட்டத்தில் காணப்பட்டது. மண் pH 5.04, C 2.5% மொத்த N 0.22%, K 181 ppm ஆக காணப்பட்டது. ஒரு முறை மானா வெட்டப்பட்டுள்ளது. பரிசோதனை தொடரப்படுகின்றது.

அதேவேளை ஹவுப்பே தோட்ட இரு வெட்டுதல்களில் எலுமிச்சைப்புல் (6.91 மெ.தொ/ஹெ), மானா (4.76 மெ.தொ/ஹெ), கௌத்தமாலா (8.63 மெ.தொ/ஹெ) உடன் ஒப்பிடுகையில் அதிவுயர் உலர் திணிவு (24.55 மெ.தொ/ஹெ) கலப்பு நெப்பியரில் பெறப்பட்டது.

**மறுசீரமைப்புக்கான காலத்தை குறைக்கும் நோக்கில் உயர் உயிர்த்திணிவுடைய புதிய புல் இனங்களை வளர்த்தல். சென் ஜோக்கியம் தோட்டம் இரத்தினபுரி, ஹவுப்பே தோட்டம், கஹவத்தை மற்றும் தே.ஆ.நி கொட்டாவ நிலையம்.**

அதிக உயிர்த்திணிவை உடைய இரு புதிய புல் இனங்களாகிய கலப்பு நெபியர் (வர்க்கம் CO -3) மற்றும் கிழக்கு இந்திய எலுமிச்சைப்புல் (சிம்போபோகன் பிலெகுசஸ்) ஆகியன அவற்றின் வளர்ச்சி செயற்பாடுகளை ஒப்பிடுவதற்காக கௌதமாலா, மானா ஆகியவற்றுடன் வளர்க்கப்பட்டன. புற்களை நடுகை செய்வதற்கு முன்னர் மண் பரிசோதனைகள் இடம்பெற்றன. இரத்தினபுரி பரீட்சார்த்த சோதனையில் அதிவுயர் உலர் நிறை கலப்பு நெபியர் CO- 3 முன்று முறை வெட்டுதலில் (30.6 மெ.தொ/ஹெ) பெறப்பட்டது. எலுமிச்சைப்புல், மானா, கௌதமாலா ஆகியவற்றின் உலர் நிறைகள் முறையே 12.1 மெ.தொ/ஹெ, 5.5 மெ.தொ/ஹெ, 16.6 மெ.தொ/ஹெ ஆகும். பரிசோதனைக்கு முன் மேற்கொள்ளப்பட்ட மண் பரிசோதனைகளுடன் ஒப்பிடுகையில் CO- 3 மற்றும் எலுமிச்சை புற்களினால் மொத்த N அளவு (N%) 0.17%, மற்றும் 0.02% ஆல் மற்றும் பொற்றாசியத்தின் அளவு 57 ppm மற்றும் 70.9 ppm ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. இருப்பினும் காபன் சதவீதம் மானா, கௌதமாலாவுடன் ஒப்பிடுகையில் 0.1% அதிகரிப்பையே காட்டியது. பரிசோதனைகள் தொடரப்படுகின்றன.

**மண் தரக் குறியீடு (SQI) ஐ உறுதிப்படுத்தல்.**

தேயிலை நிலங்களில் மண்ணின் இரசாயன, பௌதீக மற்றும் உயிரியல் தன்மைகளை மதிப்பீடு செய்வதற்காக, முதன் முறையாக உருவாக்கப்பட்ட மண் தரக் குறியீடு உறுதிப்படுத்தப்பட்டது. இது எதிர்காலத்தில் மண் மேம்படுத்தலுக்கான பரிந்துரைகளை வழங்குவதில் உதவியாக அமையும். மீள் நடுகை செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களில் மண் மாதிரிகளின் சேகரிப்பு நியூ பீக்கொக், ஸ்டெலென்பேர்க் தோட்டங்கள், பசறை விரிவாக்கல் நிலையம், இரத்தினபுரி தொலொஸ்வள, வட்டபொத்த ஆகிய தோட்டங்களில் மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மண் பகுப்பாய்வுகள் தொடரப்படுகின்றன.

**நீர் முகாமைத்துவ உத்திகளை விருத்தி செய்தல்**

மண்ணின் நீர் தன்மையினை பேணுவதற்காக மழை நீர் சேகரிப்பு மற்றும் நுண் நீர்ப்பாசன முறைகளின் பிரயோக நுட்பங்களை விருத்தி செய்தல், தேயிலை தொழிற்துறையில் மண்ணின் ஈரத்தன்னையை முகாமை செய்வதற்கு அத்தியாவசியமாகும். சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனங்களுக்கான பரிசோதனைகள் 3 கவ்வாத்து சுற்றுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தாழ் நாட்டு நிலைமைகளில் மேற்கொள்ளப்பட்டு 2011 ல் நிறைவடைந்தன. முக்கிய முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### சொட்டு நீர்ப்பாசனம்

வேறுபட்ட தேயிலை வர்க்கங்களான TRI 2023 மற்றும் TRI 3025 ஆகியவற்றில் சொட்டு நீர்ப்பாசனத்துக்கான பிரதிபலிப்புக்கள் மதிப்பிடப்பட்டன. சொட்டு நீர்ப்பாசனம் வறட்சிக் காலப்பகுதியில் 2.6-2.8 மடங்கு தேயிலை விளைச்சலை அதிகரித்தது. மழை நீரில் தங்கியிருந்த தேயிலை செடிகளுடன் ஒப்பிடுகையில் 20% வருடாந்த விளைச்சல் அதிகரிப்பு காணப்பட்டது. TRI 3025 உடன் ஒப்பிடுகையில் TRI 2023 அதிக விளைச்சலைக் காட்டியது. இது சொட்டு நீர்ப்பாசனத்திற்கு தேயிலை வர்க்கங்களின் வேறுபட்ட பிரதிபலிப்பினைக் காட்டுகின்றது. மேலும் சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலம் தண்டுப் புற்று நோய் நிகழ்வு >80% ஆக குறைவடைந்தது. அதிக விளைச்சலைத் தரும் தேயிலை வர்க்கங்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் சாத்தியமானது என்பதனை முடிவுகள் குறிப்பிட்டன.

### சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம்

TRI 2023 தெளிப்பு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட போது சொட்டு நீர்ப்பாசனத்துடன் ஒப்பிடுகையில் 6% விளைச்சல் அதிகரிப்பினைக் காட்டியது. சொட்டு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட செடிகளை விட தெளிப்பு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட செடிகள் குறைந்த இலை வெப்பநிலையை பேணி வந்தன. இத் தன்மை வறண்ட மாதங்களில் அதிகரித்த தொழிற்பாட்டு நடவடிக்கைகளை எளிதாக்கியது.

### நிழல் முகாமைத்துவ நுட்பங்களை விருத்தி செய்தல்

#### நிழல் மரங்களாக வளர்க்கக் கூடிய தாவர இனங்களின் வளர்ச்சி செயற்பாடுகளை மதிப்பிடுதல்.

மாற்று நிழல் மரங்களாக வளர்க்கப்பட கூடிய மர இனங்களை கண்டறிவதற்கான ஆய்வில் 8 மர இனங்கள் பொருத்தமானவையாக அடையாளம் காணப்பட்டன. இவ் எட்டு இனங்களுள் டெரிஸ் மைக்ரோபைலா மற்றும் கெசியா நொடோசா ஆகியவற்றின் விதைகள் சேகரிக்கப்பட்டு இரத்தினபுரி சென் ஜோக்கியம் தோட்டத்தில் நாற்றுமேடைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த மண் வள முகாமைத்துவ நடவடிக்கைகள்

#### இடத்திற்கு தனித்துவமான வளமாக்கி சிபாரிசுகளை உருவாக்குதல்

இடத்திற்கு தனித்துவமான வளமாக்கி சிபாரிசுகளின் நோக்கமாவது, நிலத்தின் விளைச்சல் மற்றும் அதற்கேற்ற நைதரசன் வளமாக்கிகளின் தேவை ஆகியவற்றை கருத்திற் கொண்டு மண் பரிசோதனைகளின் மூலம் மிகத் துல்லியமாக தேவையான வளமாக்கி அளவுகளை வழங்குவது ஆகும். இந்நடவடிக்கையானது தாவரத்திற்கு சமனான போசணைப் பதார்த்தங்களை வழங்குவது மட்டுமல்லாது வளமாக்கிகளுக்கான செலவையும் குறைக்கும். இடத்திற்கு தனித்துவமான வளமாக்கி சிபாரிசுகளில் தேயிலை நிலங்களில்

முறையான மண் வள முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறித்த போசணைப் பதார்த்தங்களை பரிசோதிப்பது அத்தியாவசியமாகும். இடத்திற்கு தனித்துவமான வளமாக்கி சிபாரிசுகள் தே.ஆ.நி ஆல் முதன் முறையாக 2006 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கைக்கான வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.
இக்கற்கையில், இலங்கையில் தேயிலை வளர்க்கப்படும் அணைத்து பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மண் தொடர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு போசணைத் தாங்குதிறன் (போசணை செறிவு மாற்றத்திற்கான எதிர்ப்புத்திறன்) பரிசோதிக்கப்பட்டது. இவ்வியல்பு மக்னீசிய போசணையை வகைப்படுத்தும் கருவியாக பயன்படுத்தப்பட்டது. பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மண் தொடர்களில் மக்னீசிய இயக்கவியலில் வேறுபாடுகள் காணப்பட்டன. இலங்கையில் தேயிலை வளர்க்கப்படும் நிலங்களுக்கான மக்னீசிய வளமாக்கி சிபாரிசுகளை செம்மைப்படுத்துவதற்கு இது பயனுள்ளதாக அமையும்

**நைதரசன் மற்றும் பொட்டாசிய வளமாக்கிகளுக்கு தேயிலை செடிகள் காட்டும் பிரதிபலிப்புகள்**

வேறுபட்ட நைதரசன் (120, 360, 600 கிகி ஹெ$^{-1}$, ஆ$^{-1}$), பொட்டாசியம் (0, 80, 120 கிகி ஹெ$^{-1}$, ஆ$^{-1}$) விகிதங்கள் மண்/தாவர போசணை தன்மையில் ஏற்படுத்தும் தாக்கங்களை அறிந்துக் கொள்வதற்காக இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நைதரசனின் விகித அதிகரிப்பிற்கு ஏற்ப தேயிலை விளைச்சலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. முதலாவது முதிர் இலையின் நைதரசன் அளவு நைதரசனின் விகித அதிகரிப்பிற்கு ஏற்ப குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துக் காணப்பட்டது. பொதுவாக, அதிகரித்த நைதரசன் பாவணை மேற்பரப்பு, அடி மண்ணில் குறிப்பிடத்தக்க அளவில் அமிலத் தன்மையை அதிகரித்தது. அதிகரித்த பொட்டாசிய விகிதங்கள், முதலாவது முதிர் இலையின் பொட்டாசிய செறிவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்திய போதிலும் விளைச்சலில் அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை. இருப்பினும் அதிகரித்த பொட்டாசிய பாவணை மண்ணின் பொட்டாசிய அளவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியது.

**உக்கற் பசளையுடன் அசேதன நைதரசன் பிரயோகம்**

உக்கற் பசளையின் வேறுபட்ட அளவுகளுடன் (0, 10, 20, 30 தொ ஹெ$^{-1}$, ஆ$^{-1}$) மூன்று வேறுபட்ட விகிதங்களில் நைதரசன் பாவணை (200, 400, 600 தொ ஹெ$^{-1}$, ஆ$^{-1}$) மண்/தாவர போசணை மற்றும் விளைச்சலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை அறிவது இக்கற்கையின் நோக்கமாகும். யூரியா வடிவில் வழங்கப்பட்ட அதிகரித்த நைதரசன் அளவு குறிப்பிடத்தக்க விளைச்சல் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. உக்கற் பசளையின் அதிகரிப்பிற்கு ஏற்ப விளைச்சலில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை. ஆனால் நைதரசன் மட்டும் பிரயோகிக்கப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில், உக்கற் பசளையுடன் பிரயோகிக்கப்பட்ட நைதரசன், சராசரி விளைச்சலில் அதிகரிப்பினைக் காட்டியது. உக்கற் பசளையின் அதிகரிப்பிற்கு ஏற்ப மண் சேதன காபனின் அளவு, மண்ணின் போசணை தக்கவைக்கும் திறன்,

தாவரத்திற்கு கிடைக்கக் கூடிய மக்னீசியம் மற்றும் கல்சியம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவில் அதிகரிப்பு காணப்பட்டது.

**யூரியா மற்றும் சல்பேற்று ஒப் அமோனியா கலவையை வேறுபட்ட விகிதங்களில் பிரயோகித்தல்.**

தாவர வளர்ச்சி, மண்/தாவர போசணை மற்றும் விளைச்சலில் வேறுபட்ட அளவுகளில் நைதரசன் (யூரியா) சல்பேற்று ஒப் அமோனியா (240, 360 தொ ஹெ$^{-1}$, ஆ$^{-1}$) மற்றும் அவற்றின் விகிதங்கள் (யூரியா: சல்பேற்று ஒப் அமோனியா = 100:0, 75:25, 50:50, 25:75 மற்றும் 0:100) ஏற்படுத்தும் தாக்கங்களை அறிவது இக்கற்கையின் நோக்கமாகும்.

பெரும்பாலான பரிசோதனைகளில் அதிகரித்த அளவு மற்றும் வேறுபட்ட யூரியா: சல்பேற்று ஒப் அமோனியா விகிதங்கள் விளைச்சலில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை ஏற்படுத்தவில்லை. யூரியா/சல்பேற்று ஒப் அமோனியா கலவையில் சல்பேற்று ஒப் அமோனியா கூறின் அதிகரிப்பு மற்றும் அதிகரித்த நைதரசன் அளவு பயன்படுத்தக்கூடிய மண் சல்பர் (கந்தகம்) செறிவினை மேற்பரப்பு, அடி மண்ணில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை ஏற்படுத்தியது. 100% நைதரசனை சல்பேற்று ஒப் அமோனியாவாக பெறும் துண்டங்களின் மண்ணின் pH % நைதரசனை யூரியாவாகப் பெறும் துண்டங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் குறைவாகக் காணப்பட்டது.

**இலங்கையில் தேயிலை வளர்க்கப்படும் மண் வகைகளின் நுண் போசணை அளவுகளை மதிப்பிடுதல்.**

பயனுள்ள மற்றும் பொருளாதார ரீதியில் இலாபமடைய நுண் போசணை தயாரிப்புக்களை, தேயிலை வளர்க்கப்படும் மண் வகைகளின் நுண் போசணை பதார்த்த அளவுகளுக்கேற்ற வகையில் அறிமுகப்படுத்துவது இக்கற்கையின் நோக்கமாகும். மத்திய நாடு (கண்டி, மாத்தளை, குருநாகலை, கேகாலை மாவட்டங்கள்) தாழ் நாடு (காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி மாவட்டம்) மற்றும் ஊவா (பதுளை, பண்டாரவளை மாவட்டங்கள்) பிராந்தியங்களில் மண் தொடர்கள் அடையாளங் காணப்பட்டதன் பின்னர் நுண் போசணையை மதிப்பிடுவதற்காக மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. பல்வேறுபட்ட தேயிலை வளர்க்கப்படும் பிரதேசங்களில் போரோனின் அளவினை மதிப்பிடுவதற்காக இம்மண் மாதிரிகள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தக்கூடிய போரோனின் உள்ளடக்கத்தை தீர்மானிப்பதற்காக மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களின் போரோனின் அளவுகளில் வேறுபாடுகள் காணப்படுவதை முடிவுகள் வெளிப்படுத்தின.

**தேயிலைக்கு பொருத்தமான உயிர் – சேதன கனியுப்பு அல்லது கூட்டுப் பசளை தயாரிப்புகளை உருவாக்கும் வழிமுறைகளை விருத்தி செய்தல்**

தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் ரைசேபபற்றீரியாக்கள் தாவர வளர்ச்சியையும் விளைச்சளையும் அதிகரிக்கும் ஆற்றல் உடையன. இவை பயனுள்ள சுயாதீனமான அல்லது வேர்சூழ் மண்டலத்தில் ஒன்றிய வாழ்விட்டத்தில் ஈடுபடுவன ஆகும். மத்திய நாட்டின் அனைத்து விவசாய சூழலியல் வலயங்களிலும் உள்ள தேயிலை வளர்க்கப்படும் தோட்டங்களில் இருந்து வேர்சூழ் மண்டல மாதிரிகளை சேகரிக்கும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது. சேகரிக்கப்பட்ட வேர் மாதிரிகளில் இருந்து நைதரசன் பாதிக்கும் பற்றீரியாக்களை பிரித்தெடுக்கும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது. பொசுபேற்றுக்களை கரைக்கும் இயல்புடைய பற்றீரியாக்களும் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பற்றீரியாக்களை பயனுள்ள இயல்புகளின் அடிப்படையில் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் நாற்று மேடை நிலைமைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**இலங்கையில் தேயிலை வளர்க்கப்படும் மண் வகைகளின்pஉ தாங்குதிறனை மதிப்பிடல்**

தேயிலை வளர்க்கப்படும் பல்வேறு பிரதேசங்களில் மண் தொடர்கள் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றின் அமில-கார (pH) தாங்கு திறனுக்காக (pH மாற்றத்திற்கான எதிர்ப்புத்திறன்) மதிப்பிடப்பட்டன. தேயிலை வளர்க்கப்படும் பிரதேசங்களின் மண் வகைகள் அவற்றின் அமில-கார தாங்கற் திறனின் அடிப்படையில் 3 பிரதான தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டன. இத்தகவல்கள் தேயிலை வளர்க்கப்படும் பிரதேசங்களுக்கான சுண்ணாம்பு தேவையினை செம்மையாக்குவதில் உதவியாக அமையும். டொலமைற்றின் செயற்திறன் மற்றும் தூய்மை, வினைத்திறனுடன் நடுநிலையாக்கத்தில் ஈடுபடும் காலம், காலநிலைக் காரணிகள், தாவர உட்கொள்ளுதல் காரணமாக உருவாகும் அமிலத் தன்மை மற்றும் கார-நேர் அயன்கள், நைதரசன் பசளைகள் கழுவிச் செல்லப்படுதல் ஆகிய காரணிகளைக் கருத்திற் கொண்டு டொலமைட் சிபாரிசுகளை மேற்கொள்வதற்கான சூத்திரத்தை நிறுவும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**வேறுபட்ட அளவுகளில் டொலமைட் பிரயோகித்தல்**

விளைச்சல் மற்றும் தாவர போசணையில் வேறுபட்ட அளவுகளில் டொலமைட் பிரயோகம் (0, 1000, 2000, 3000, 4000 கிகி ஹெ$^{-1}$ சுற்று$^{-1}$) ஏற்படுத்தும் தாக்கத்தை அறிவதற்காக இப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. அதிகரித்த அளவுகளில் டொலமைட்டை பிரயோகிப்பதனால் குறிப்பிடத்தக்களவு மாற்றம் விளைச்சலில் ஏற்படவில்லை. ஆயினும், அதிகரித்த டொலமைட் பிரயோகம் மண்ணின் pH , பயன்படுத்தக்கூடிய மக்னீசியம் மற்றும் கல்சியம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை ஏற்படுத்தியது.

**தேயிலை தொழிற்துறையில் GIS இன் பயன்பாடு**

தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களில் வேறுபட்ட நில அமைப்புகளுக்கு ஏற்ப மண் போசணையில் ஏற்படும் இடம், காலம் சார்ந்த வேறுபாடுகளை இனங்காண்பது இக்கற்கையின் நோக்கமாகும். கொட்டாவ விரிவாக்கல் நிலையத்தில் மண் இரசாயன இயல்புகளில் காணப்படும் இடஞ்சார்ந்த வேறுபாடுகள் மதிப்பிடப்பட்டு GIS இன் உதவியுடன் வரைபடமாக்கப்பட்டன. மண்ணின் pH , சேதன காபன் மற்றும் போசணைப் பதார்த்தங்களில் இடஞ்சார்ந்த வேறுபாடு காணப்படுவது இதிலிருந்து அவதானிக்கப்பட்டது.

**தேயிலை நாற்று மேடைகளில் உயிர் படல தொழில்நுட்பத்தினை மதிப்பிடல்**

நாற்றுமேடை தாவரங்களில் உயிர் படல தொழில்நுட்பத்தின் பிரயோகத்தினை அறிவதற்காக கிளிரிசீடியா, அரக்கிஸ் பின்டோ, தேயிலை வேர்சூழ் மண்டலம் ஆகியவற்றிலிருந்து பிரித்தொடுக்கப்பட்ட பங்கசுக்கள் ஆகியவற்றினை பயன்படுத்தி பொருத்தமான இனேக்குலர் தயாரிக்கப்பட்டன. தொடர் பரிசோதனைகளின் பின் பிரித்தொடுக்கப்பட்ட பங்கசுக்கள் ஆகியவற்றினை பயன்படுத்தி பொருத்தமான இனேக்குலர் தயாரிக்கப்பட்டன. தொடர் பரிசோதனைகளின் பின் T65 வளமாக்கி சேர்வையின் அளவை அரைப்பங்காக குறைக்க முடியும் என்பது தெளிவாகிறது. அனைத்து தே.ஆ.நி பிராந்திய நிலையங்களிலும் 5000 நாற்றுமேடை தாவரங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தொடர் பரிசோதனைகளிலிருந்து இது மேலும் உறுதிசெய்யப்பட்டது. உயிர் படலமிடப்பட்ட உயிர் பசளை ஆய்வுகளுக்கு அடிமண் பொருத்தமானது என அறியப்பட்டது. கோனகலை தோட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பற்றீரியாக்களைப் பயன்படுத்தி ஊவா நாற்றுமேடைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மிகவும் வெற்றியளித்தன.

**உயிர் படலமிடப்பட்ட உயிர் பசளை (BFBF) பாவனையின் மூலம் மண்ணின் போசணை மற்றும் தேயிலை விளைச்சலை மேம்படுத்தல்**

தேர்ந்தெடுக்கப்பட்ட இனக்குலாவை உடைய BFBF சிபாரிசு செய்யப்பட்டுள்ள தேயிலை வளமாக்கி சேர்வைகளின் அரைப்பங்குடன் பரிசோதிக்கப்பட்டது.

கொட்டாவ, இரத்தினபுரி பிராந்திய நிலையங்கள் மற்றும் மாத்தளை எல்கடுவ தோட்டம் ஆகிய இடங்களில் 1ம், 2ம் வருட தேயிலைகளில், BFBF தேர்ந்தெடுக்கப்பட்ட இனக்குலாவுடன் சிபாரிசு செய்யப்பட்டுள்ள வளமாக்கி சேர்வைகளின் அரைப்பங்குடன் வெளிக்கள நிலைமைகளின் கீழ் பரிசோதிக்கப்பட்டது.

வெளிக்கள பரிசோதனைகளில், சிபாரிசு செய்யப்பட்டுள்ள வளமாக்கி சேர்வைகளின் அரைப்பங்குடன் BFBF பாவிக்கப்பட்ட துண்டங்களின் விளைச்சல் மற்றும் மண் பண்பளவுகள் சிபாரிசு செய்யப்பட்ட முழு அளவு வளமாக்கி சேர்வைகள் பாவிக்கப்பட்ட துண்டங்களுடன் ஒப்பிடத்தக்கன. BFBF

பரிகரிப்புக்களாவன F3B (அரகிஸ் பின்டோவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பற்றீரியாக்கள் + பசிலஸ் மெகாதீரியம் + தேயிலை வேர்சூழ் மண்டலத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பற்றீரியாக்கள், பங்கசுகளின் கலவை) F3A (கிளிரிசீடியாவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பற்றீரியாக்கள் + கழிவுத் தேயிலையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பற்றீரியாக்கள் + பசிலஸ் மெகாதீரியம் + தேயிலை வேர்சூழ் மண்டலத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பங்கசுகள் ஆகியவற்றின் கலவை) மற்றும் FR (கழிவுத் தேயிலையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பற்றீரியாக்கள் + மானா வேரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பற்றீரியாக்கள் + பசிலஸ் மெகாதீரியம்)

தாழ் நாட்டு வெளிக்கள பரிசோதனைகளில் (இரத்தினபுரி, கொட்டாவ) அரைப்பங்கு T200 வளமாக்கியுடன் BFBF பாவிக்கப்பட்ட துண்டங்களின் விளைச்சல் T200 முழு அளவில் பயன்படுத்தப்பட்ட துண்டங்களுடன் ஒப்பிடக்கூடியதாகக் காணப்பட்டது.

மத்திய நாட்டு (எல்கடுவ) வெளிக்கள பரிசோதனைகளில் T200 மட்டும் முழு அளவில் பயன்படுத்தப்பட்ட துண்டங்களின் விளைச்சல் அரைபங்கு T200 மற்றும் BFBF பாவிக்கப்பட்ட துண்டங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்டத்தக்களவு குறைவாகக் காணப்பட்டது.

சேதன காபன், பயன்படுத்தப்படக்கூடிய பொசுபரஸ், பொட்டாசியம், மண்ணின் நுண்ணங்கி தொழிற்பாடு போன்ற மண்ணின் இயல்புகள் BFBF பாவிக்கப்பட்ட துண்டங்களில் மேம்பட்டு காணப்பட்டன. ஆகவே, அரைப்பங்கு சிபாரிசு செய்யப்பட்ட பசளைகளுடன் BFBF பாவனை போசணை பதார்த்த பயன்படுத்தும் திறனை அதிகரிப்பதன் மூலம் விளைச்சல் மற்றும் மண்ணின் இயல்புகளை மேம்படுத்தியுள்ளது என்ற முடிவுக்கு வரலாம்.

முதிர் தேயிலைகளில், F3A BFBF பரிகரிப்பு குறைந்த ஆவியுயிர்ப்பையும், குண்டுத் துளைப்பி தாக்கத்தையும் காட்டியது. BFBF பரிகரிப்பு துண்டங்களில் காணப்பட்ட குறைந்த குண்டுத் துளைப்பியின் தாக்கம் சம்பந்தமாக மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

**உயிர் படல தொழில்நுட்பத்தின் மூலம் சேதன தேயிலை வளர்ப்பில் மண் போசணை மேம்பாட்டினை மதிப்பிடுதல். (ஹல்துமுள்ள தோட்டம்)**

சேதன முறையில் தேயிலை வளர்க்கப்படும் வெளிக்களம் ஒன்றில் BFBF பாவிக்கப்பட்ட தேயிலைகளின் செயற்பாடுகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ள உக்கற் பசளை பாவனையுடன் ஒப்பிடப்பட்டது. மண் நுண்ணங்கிகளின் உயிர் திணிவு காபன் (115ல் இருந்து 227 மை. கி/கி) மண்ணின் காபன் (1.64 இல் இருந்து 1.67%) மற்றும் மண்ணின் பொட்டாசியம் (165 ppm ல் இருந்து 170 ppm) ஆகியவற்றில் அதிகரிப்பு காணப்பட்டது. உக்கற் பசளை பாவனையுடன் ஒப்பிடுகையில் (953 கி.கி/ஹெ தயாரித்த தேயிலை) BFBF பரிகரிப்பில் விளைச்சல் அதிகமாகக் (1120 கி.கி/ஹெ தயாரித்த தேயிலை) காணப்பட்டது.

**குறைந்தளவு வளமாக்கிகளுடன் சேதன சேர்வைகளின் பயன்பாட்டினை மதிப்பிடுதல்**

சிபாரிசு செய்யப்பட்ட அளவில் U 709 வளமாக்கியை மட்டும் பயன்படுத்துவதிலும் பார்க்க, சிபாரிசு செய்யப்பட்ட அளவின் ¾ பங்குடன் சேதன பதார்த்தங்களாக மானா, தைத்தோனியா, முருங்கை, கழிவுத் தேயிலை (மேற்பரப்பு பாவணை, கலத்தல்) மற்றும் கவ்வாத்து குப்பைகளை புதைத்தல் ஆகிய நடவடிக்கைகளில் மண்ணின் இயல்புகள் மேம்படுத்தப்படுவது அறியப்பட்டது. ஆகவே, சிபாரிசு செய்யப்பட்ட வளமாக்கியை மட்டும் பயன்படுத்துவதை விட ¾ பங்கு வளமாக்கியுடன் சேதன பதார்த்தங்களாக தைத்தோனியா, முருங்கை, கழிவுத் தேயிலை (மேற்பரப்பு பாவணை) கவ்வாத்து வாதுகளைப் புதைத்தல் ஆகியன தேயிலையில் மேற்கொள்ளப்படலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

**கவ்வாத்து சுற்றில் தேயிலை குலவகை முதிர்ச்சியடைதலின் அடிப்படையில் தொகுக்கப்படும் பொருட்களை வகைப்படுத்தல் :- இரசாயன இயல்புகள், தரம், விளைச்சல் ஆகியவற்றை மதிப்பிடுதல்.**

இரு தேயிலை குலவகைகளில் (DT 1 மற்றும் TRI 2025) கவ்வாத்து சுற்றின் வெவ்வேறு ஆண்டுகளில் இரசாயன இயல்புகள், தரம், மற்றும் விளைச்சல் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் மதிப்பிடப்பட்டன. இப்பரிசோதனை உலர், ஈர காலப்பகுதிகளில் சென் கூம்ஸ் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. தேயிலை தளிரின் மொத்த அமினோவமிலம் போன்ற இரசாயன இயல்புகள் கவ்வாத்து வெட்டலின் பின் ஒரு வருடத்தில் குறைவடைந்தன. ஆனால், பச்சையங்களின் அளவு மற்றும் நார் பொருட்களின் அளவு அதிகரித்தன. கவ்வாத்து வெட்டலின் பின் 3[வது] ஆண்டு வரை மொத்த பொலிபீனோல், பொலிபீனோல் ஒக்சிடேஸ் செயற்பாடுகள் அதிகரித்து அதன் பின் குறைவடைந்தன. DT 1 மற்றும் TRI 2025 குலவகைகளில் தேயிலையின் தரம் (நிறம், TF/TR விகிதம், பிரகாசம்) உலர் மற்றும் ஈர காலப்பகுதிகளுக்கிடையில் மற்றும் கவ்வாத்து வெட்டலை தொடர்ந்து வரும் ஆண்டுகளில் வேறுபட்டது. கவ்வாத்தின் பின் வயது அதிகரிப்புடன் TF/TR விகிதம் மற்றும் நிறம் அதிகரித்தன. ஆனால் தயாரித்த தேயிலையின் பிரகாசம் வயதுடன் குறைவடைந்தது. DT 1 இலும் பார்க்க TRI 2025 இல் TF/TR விகிதம் உயர்ந்து காணப்பட்டது. இது இவ்விரு குலவகைகளிலும் உலர் காலப்பகுதியை விட ஈரக்காலப்பகுதியில் குறிப்பிட்டத்தக்களவு குறைந்துக் காணப்பட்டது. நிறம், பிரகாசத்தன்மை ஆகியன TRI 2025 ஐ விட DT 1 இல் குறிப்பிட்டத்தக்களவு அதிகமாக காணப்பட்டன. இவை உலர் காலப்பகுதியை விட ஈரக்காலப்பகுதியில் அதிகரித்துக் காணப்பட்டன. கவ்வாத்து சுற்றின் வயது அதிகரிப்பதுடன் தியருபிஜின் இன் அளவும் அதிகரித்தது. மேலும் இது TRI 2025 இல் குறைவடைந்தது. ஆனால் DT 1 இல் உலர் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஈரக்காலப்பகுதியில் அதிகரித்தது. பொதுவாக கவ்வாத்து வெட்டின் 1[ம்] ஆண்டு தொடக்கம் 3[ம்] ஆண்டுவரை முதிர் தேயிலையின் தரம் அதிகரித்து அதன் பின்னர் குறைவடைகின்றது.

**உயர் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பதியமுறையில் இனப்பெருக்கப்பட்ட முதிர் தேயிலைகளில் கவ்வாத்து சுற்றின் பிற்பகுதியில் ஏற்படும் விளைச்சல் வீழ்ச்சிக்கான தொழிற்பாட்டியல் அடிப்படைகளை கண்டறிதல்.**

பொதுவாக தேயிலையின் விளைச்சல் கவ்வாத்து சுற்றின் பிற்பகுதியில் குறைவடைகின்றது. கவ்வாத்து சுற்றின் 4வது ஆண்டு காலப்பகுதியில் ஏற்படும் விளைச்சல் வீழ்ச்சி, தண்டுக்கிளை வேருக்காக தனித்துவமாக தொகுக்கப்பட்ட பொருட்களின் ஒதுக்கத்தினால் ஏற்படுவதில்லை. இவ்வாறான குறைவிற்கு அறுவடை குறியீடு (HI) ஒன்றின் குறைவு நேரடியாக தொடர்புப்பட்டுள்ளது. கவ்வாத்து சுற்றின் 2 1/2 வருடத்தில் தொகுக்கும் திறன் குறைவடைவது அவதானிக்கப்பட்டது. பொதுவாக அனைத்து தொழிற்பாட்டியல் செயற்பாடுகளிலும் குறைவடையும் போக்கு காணப்பட்டது. சுற்றின் 4வது ஆண்டு காலப்பகுதியில் ஏற்படும் வேரின் மாப்பொருள் அதிகரிப்பு இதற்கு சான்றாக அமைகின்றது.

**ஒட்டுதலில் ஒட்டுக்கிளை, அடிக்கட்டை சேர்க்கையின் பொருத்தப்பாட்டினை அறிதல்**

உயர் விளைச்சல், உயர் தரம், வறட்சியை தாங்கும் தன்மை, நோய்ப்பீடைகளுக்கு எதிர்ப்புத்திறன் ஆகியவற்றை கருத்திற் கொண்டு ஒட்டுதலுக்காக சிறந்த ஒட்டுக்கிளை அடிக்கட்டை சேர்க்கைகளைக் கண்டறிவது இக்கற்கையின் நோக்கமாகும்.

**உயர் தரம், உயர் விளைச்சலுக்காக ஒட்டுதல்**

உயர் தரத்தை உடைய வர்க்கம் ஒட்டுக்கிளையாகவும் வறட்சியை தாங்கும் திறனுடைய வர்க்கம் அடிக்கட்டையாகவும் கொண்ட சேர்க்கைகள் ஒட்டுதலுக்காக தெரிவு செய்யப்பட்டு ஒட்டுக்கிளைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வர்க்கத்தின் தனி கணுவினை உடைய துண்டங்கள் வெளிக்கள பரிசோதனைக்காக சென் கூம்ஸ் தோட்டத்தில் நடப்பட்டுள்ளன. தாவரங்கள் 2வது கவ்வாத்து சுற்றின் 1வது ஆண்டில் உள்ளன.

TRI 777 மற்றும் TRI 4079 ஐ ஒட்டுக்கிளையாக உடைய சேர்க்கைகள் அதிக விளைச்சளைப் பதிவு செய்தன. பரிசோதிக்கப்பட்ட சேர்க்கைகளுள் TRI 2025 இல் TRI 4079 இணைப்பு உயர் விளைச்சலைக் கொடுத்தது. தரத்திற்கான பண்பியல்புகளுக்கான ஆய்வுகள் இச்சேர்க்கையின் TF, TR, பிரகாசம் மொத்த நிறம் ஆகியன கட்டுப்பாடு TRI 777 மற்றும் TRI 4079 உடன் ஒத்ததாக காணப்பட்டன.

**சென் ஜேம்ஸ் தோட்டம் தலவாக்கலையில் உயர் விளைச்சலுடன் நோய்ப்பீடை எதிர்ப்புத்திறனுக்காக ஒட்டுதல்.**

கொப்புள வெளிறலுக்கான எதிர்ப்புத்திறன், குண்டுத்துளைப்பிக்கான எதிர்ப்புத்திறன், உயர் விளைச்சல் ஆகிவற்றைக் கொண்ட பல்வேறுபட்ட ஒட்டுக்கிளைகள் தனித்தனியே தேர்ந்தெடுக்கப்பட்டன. அடிக்கட்டைகளின் இயல்புகள் அதிக வேரினை உற்பத்தி செய்யும் திறன், வறட்சியை தாங்கும் திறன் மற்றும் பிரட்டிலென்கஸ் லூசி நெமற்றோடுக்கான எதிர்ப்புத்திறன் ஆகியனவாகும். பல்வேறு சேர்க்கைகளை உடைய தாவரங்கள் முதலாவது கவ்வாத்து சுற்றின் 5வது வருடத்தில் உள்ளன.

TRI 4006 இல் TRI 4046 சேர்க்கை மட்டுமே கட்டுப்பாட்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிக விளைச்சலைக் கொடுத்தது. ஆனால் சேர்க்கைகள் TRI 4006 இல் TRI 3072, TRI 4053 இல் TRI3072, TRI 3072 இல் TRI 4046, TRI 3072 இல் TRI 4006 ஆகியன தமது கட்டுப்பாட்டுடன் ஒப்பீட்டளவில் உயர் விளைச்சலைக் கொடுத்தன.

**ஊவா பிராந்தியத்திற்கு பொருத்தமான உயர் விளைச்சல், வறட்சியைத் தாங்கும் திறன் ஆகியவற்றை இணைப்பதற்காக ஒட்டுதல்.**

உயர் விளைச்சலைத் தரும் வர்க்கங்களை வறட்சியைத் தாங்கும் திறனுடைய வர்க்கங்களுடன் ஒட்டுவதன் மூலம் ஊவா பிராந்தியத்தில் வறட்சியினால் ஏற்படும் விளைச்சல் வீழ்ச்சியினை சமாளிப்பதே இக்கற்கையின் நோக்கமாகும். சேர்க்கைகள் DN இல் TRI 3018, DN இல் TRI 3019, DN இல் TRI 4042, DN இல் TRI 4046, மற்றும் DN இல் TRI 4052 ஆகியன பரிசோதிக்கப்பட்டன. ஒட்டுக்கிளையாக தெரிவு செய்யப்பட்ட வர்க்கங்கள் தனித்தனியே கட்டுப்பாடாகவும் வளர்க்கப்பட்டன. வெளிக்கள தாவரங்களில் வளர்ச்சி மற்றும் தொழிற்பாட்டியலுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு வருடத்தின் பின் மையவாக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**பழைய விதைத்தாவரங்களை நாற்றுமேடையில் ஒட்டுவதன் மூலம் புத்துயிர்ப்பு அளித்தல்.**

அதிக வளர்ச்சியடைந்த நாற்றுமேடை விதைத்தாவரங்களுக்கு புத்துயிர்ப்பு அளிப்பதற்காக வேறுபட்ட ஒட்டுக்கிளை, அடிக்கட்டை சேர்க்கைகள் பரிசோதிக்கப்பட்டன. பல்வேறு விதைத் தோட்டங்களுக்குரிய ரைகம 4006, பீன் 2023 ரெக்ஸ்லே S/06 ஆகியன அடிக்கட்டைகளாக TRI 2043, TRI 4006, TRI 4055, TRI 3015 ஒட்டுக்கிளைகளுடன் ஒட்டப்பட்டன. நாற்றுமேடை காலத்தைத் தொடர்ந்து, தாவரங்கள் வெளிக்களங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இரத்தினபுரி பிராந்திய நிலையத்தில் செயல்முறை விளக்க துண்டங்களாக இவை பேணப்பட்டு வருகின்றன.

## தேயிலையில் களை முகாமைத்துவம்

**கிளைபோசேட் இனைப்பயன்படுத்தி தாண்டன் புல், அலவாங்குப் புல் ஆகிய பிரச்சினைக்குரிய களைகளை கட்டுப்படுத்துவதற்கு சிரமமாக உள்ள காரணிகளை ஆராய்தல்.**

களைகளை கட்டுப்படுத்துவதற்கு சிரமமாக உள்ள, களைகளின் முதிர்ச்சி, கிளைபோசேட்இன் பாவணை அளவு, கிளைபோசேட் இற்கு களைகளினால் காண்பிக்கப்படும் எதிர்ப்புத்திறன் விருத்தி ஆகிய காரணிகளை ஆராய்வதற்காக சென்கூம்ஸ் தோட்டம், தலவாக்கலையில் வெளிக்கள, பச்சை வீட்டு பரிசோதனைகள் தொடர்ந்து நடாத்தப்பட்டன. சென்கூம்ஸ் தோட்டத்தில் காணப்பட்ட தாண்டன் புல்லினை 5 மிலீ/லீ பயன்படுத்தி மிக இளம் நிலையிலும் (1-5 செ.மி உயரம்) முற்றாக கட்டுப்படுத்த கூடியதாக இருந்த போதும், இளம் நிலையில் (6-12 செ.மி உயரம்) குறைந்தளவு கட்டுப்படுத்தலையும் முதிர் நிலையில் (6-18 செ.மி உயரம்) எதனையும் கட்டுப்படுத்தாத நிலைமையினையும் அவதானிக்க முடிந்தது. அலவாங்குப் புல்லில் 8-10 இலை பருவத்தில் (10-12 செ.மி உயரம்) முற்றாக கட்டுப்படுத்தப்பட்டதுடன் 2-4 இலை பருவத்தில் பகுதியாக கட்டுப்படுத்தப்பட்டது. உயர் அளவுப் பாவனையானது 5 மிலீ/லீ குறைந்த அளவுப் பாவணையை (3 மிலீ/லீ) விட சிறப்பாகக் கட்டுப்படுத்தியமையை காணக்கூடியதாக இருந்தது.
கிளைபோசேட்யினைக் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக உபயோகிக்கப்படாத ஹல்டமுல்ல தோட்டத்தில் எளிதில் தொற்றலடையும் தன்மையுள்ள தாண்டன் புல்லில் இருந்து பெறப்பட்ட சராசரி கட்புல பாதிப்பு அறிகுறி அளவுகள் 25 வருடங்களுக்கு மேலாக கிளைபோசேட்டுடன் ரவுண்டப் சேர்த்து பிரயோகிக்கப்பட்ட சென்கூம்ஸ் தோட்டத்திலுள்ள எதிர்ப்புத் தன்மையுடைய புல்லின் சராசரி கட்புல பாதிப்பு அறிகுறி அளவுகளை விட உயர்வாகக் காணப்பட்டது. எனினும் அலவாங்குப் புல்லில் அவ்வாறான அவதானிப்புக்கள் காணப்படவில்லை. எனவே கிளைபோசேட்இற்கு தாண்டன் புல் ஒரு வகை எதிர்ப்புத்தன்மையை காட்டும் போக்கு காணப்படுகிறது. இரண்டு வகை புற்களையும் அவற்றின் இளம் நிலையில் உயர் அளவு கிளைபோசேட் (99 கிகி/ஹெ) இனை பயன்படுத்துகையில் கட்டுப்படுத்த கூடியதாக உள்ளது.



நீடித்திருக்ககூடிய பண்ணைத் தொகுதியினை விருத்தி செய்து மதிப்பிடுதல் சேதன தேயிலை பயிர்செய்கையின் கீழ் தேயிலையின் வளர்ச்சி, விளைச்சல், நோய் பீடைத்தாக்கம் முகாமைத்துவம் என்பவற்றை மதிப்பிடுதல்.

பீடைக்கட்டுப்பாட்டு முறைகளிற்கிடையிலான வேறுபாடு காரணமாக சேதன, உயிர் இயக்கவியல் பயிர் செய்கை தொகுதியினை பாரம்பரிய பயிர்செய்கை தொகுதியுடன் ஒப்பிடுகையில் பீடைகள், நோய், களைகள் தோன்றும் தன்மைகளுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. மேலும் இறுதி நுகர்வோரின் தன்மைக்காக சேதன, உயிர் இயக்கவியல், மழைக்காட்டு சான்றிதழ்கள் விஞ்ஞான ஆய்வுக்கு உட்படுத்தப்படல் அவசியம் ஆகும்.

மழைக்காட்டு சான்றிதழின் நியமங்களின் அடிப்படையில் வளர்ச்சி, விளைச்சல், மண், பீடை, நோய், களைத்தாக்கம், இயற்கை உயிரியல் கட்டுப்பாடு, இயக்கவியல் என்பன தலவாக்கலையில் உள்ள TRIORCON, மற்றும் கடுரகமுவவில் உள்ள BIDORCON பரிசோதணைகளின் தரவுகளுடன் பாரம்பரிய முறையில் மழைக்காட்டு சான்றிதழுடன் வளர்க்கப்படும் தேயிலையின் தரவுகளும் ஒப்பிடப்பட்டன.

# பயிர் பாதுகாப்பு

## பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முற்காப்பு நடவடிக்கைகள்

**பாதிப்புக்குள்ளாக்கூடிய வளர்ச்சி நிலைகளை குண்டுத் துளைப்பியிடமிருந்து பாதுகாத்தல்**

தேயிலையின் இளம் நிலைகளை குண்டுத்துளைப்பி போன்ற பல்லாண்டு பீடைகளிடமிருந்து பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஒன்றினைக்கபட்ட பீடை முகாமைத்துவத்தின் ஒரு வழிமுழற ஆகும். குவ்வாத்தின் பின்னர், பென்சில் தடிப்புடைய தண்டுகளை குண்டுத்துளைப்பியிடமிருந்தும் உக்கும் மரங்களை உயிர் மரக் கரையான்களிடமிருந்தும் பாதுகாத்தல் மிக அவசியமாகும். மேலும் பீடையின் அறிமுகம் ஆதிக்கம் மற்றும் கடுமையான தாக்கங்களை பொருளாதார பாதிப்பு ஏற்படும் முன் குறைத்தல் அவசியமாகும். மேற்கூறப்பட்ட நோக்கஸ்களுக்கான மேற்கொள்ப்பட்ட பரிசோதனைகள் மற்றும் ஆய்வுகள் பின்வருவன பின்வருவனவற்றை வெளிப்படுத்தின.

1. குண்டுத்துளைப்பியினால் ஏற்படும் பாதிப்பினை மதிப்பிடும் ஆய்வின் முடிவுகள் இளம் மற்றும் முதிர் தேயிலைகளினால் குண்டுத்துளைப்பியைக் கட்டுப்படுத்துவதற்கும் மேலதிகமாக நாற்று மேடைகளின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இன்றியமையாதவை என்பதினை உறுதி செய்தன.
2. பிப்ரலின் இன் வினைத்திறன், நீடிப்பு தன் மற்றும் உள்ளூர் பசைகளான நாக்கியாதெனிய எண்ணெய்ப் பணை தொழிற்சாலையின் கழிவு இயற்கை இறப்பரை அடிப்படையாகக் கொண்ட சொட் கார்ட், சுண்ணாம்பு கந்தகக் கலவை ஆகியவற்றின் மதிப்பீட்டினை உறுதிப்படுத்தும் ஆய்வுகள் குண்டுளைப்பி உயிர்ப்பாகக் காணப்படும் பல்வேறு விவசாய காலநிலை பிரதேசங்களில் நிறைவடைந்தன. பீடையின் அளவுகளும் தாவரத்தின் பிரதிபலிப்புகளும் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக அவதானிக்கப் பட்டன.

தேயிலை வர்க்கங்கள் மற்றும் இரசாயன பொருட் தேர்வு செயவதற்கான உயிர் பகுப்பாய்வு செயன்முறைகளை இலகுவாக்குவவதற்காக குண்டுத் துளைப்பியை செயற்கை ஊடகங்களில் வளர்க்கும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.







**தேயிலையில் புற்று நோயை ஏற்படுத்தும் பங்கசுகளின் மூலக்கூற்று அறுதியீடு**

தாழ் நில தேயிலையை பயிரிடப்படும் பிரதேசங்களில் மக்ரோபோமா தீகோலாவினால் ஏற்படும் தண்டுப் புற்றுநோய் ஒரு பாரிய பிரச்சினையாகும். பியூசாரியம் இனங்களும் இந்நோயுடன் தொடர்புற்று இருப்பதனை அன்மைய பரிசோதனைகள் வெளிப்படுத்தின. பியுசாரியம் பிரித்தெடுப்புகளில் இருந்து பெறப்பட்ட மரபுரிமைப் பொருள் நிரலொழுங்கினை BLAST இன் தேடலுக்கு உட்படுத்திய போது புயுசாரியம் கொலனை உடன் 98% இயல்பு ஒப்பு காணப்பட்டது. உருவவியல் இயல்புகளின் அடிப்படையில் மக்ரோபோமா என இனங்காணப்பட்ட சில பங்கசுகளின் ITS நிரலொழுங்கினை BLSAST இன் தேடலுக்கு உட்படுத்திய போது அவை லெசியோடிப்லோடியா தியோபுரோமை உடன் அதிகளவிலான இயல்பு ஒப்பினைக் காட்டின.

**குண்டுத் துளைப்பிக்கு எதிரான மண் சிகிச்சைகளின் வினைத்திறன்**

நூற்று மேடைகளிலும் இளம் செடிகளை கொண்ட பயிர் நிலங்களிலும் அடிக்கடி ஏற்படும் குறிப்பிடத்தக்க அளவிலான குண்டுத்துளைப்பியின் பாதிப்புக்கள் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் தேவையை உறுதி செய்தன. குண்டுத்துளைப்பிக்கு எதிரான கவ்வாத்து வெட்டுதலின் பின்னரான சிகிச்சையாக, பிப்ரலின் பகாபோபியுரன், இம்டாகுளோபிரிட் ஆகியவற்றின் துணிக்கை தயாரிப்புக்கள் மற்றும் வெப்பெண்ணைக் கட்டி ஆகியவற்றின் மண் சிகிச்சையின் வினைத்திறனை வெளிக்களத்தில் மதிப்பீடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தோடரப்படுகின்றன.

**வெள்ளைப் புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்படுத்தப்படுவதற்கான முற்காப்பு நடவடிக்கைகள்**

வெள்ளைப் புழுத்தாக்கம் பருவக்காலத்திற்குறியது பாரதூரமான வெள்ளைப் புழுத்தாக்கம் நாற்று மேடைகளிலும் இளம் தேயிலைச் செடிகளிலும் ஏற்பட்டது. இந்நிலை காபோபியுரனுக்கு மாற்று பூச்சி நாசினியை உடனடியாக தெரிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியது. இதற்கேற்ப மண் சிகிச்சைக்குறிய பதிலீட்டு பூச்சி நாசினிகளை தெரிவு செய்வதற்குறிய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. குருணை வடிவில் தயாரிககப்பட்ட இமிடகுளோபிரிட், பிப்ரனில், காபோசல்பான ஆகியன ஆய்வுகூட உயிர் பகுப்பாய்வுகளுக்குப் பின் சட்டிப் பரிசோதனைகள் வெளிக்கள பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**வழமையற்ற பிரடிலென்கஸ் லூசி, ரெடபிலஸ் சிமிலிஸ் ஆகியவற்றின் தாக்கம்**

தேயிலை நெமற்றோடுகளில், பிரடிலென்கஸ் லூசி, ரெடபிலஸ் சிமிலிஸ் ஆகியன முறையே மண்வெப்பநிலை குறைந்த, கூடிய பிரதேசங்களிலேயே காணப்பட்டன. ஆயினும் வழமைக்கு மாறாக காலி, தெனியாய, மற்றும் கென்னிய பிரதேசங்களில் இவ்விரு நெமற்றோடுகளும் நாற்று மேடை, இளம் மற்றும் முதிர் தேயிலைகளில் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தின. இப்பிரதேசங்களில் உள்ள பயிர் வளர்ப்போருக்கு இவ்வூடுறுவும் பீடைகளின் தாக்கம் ஒன்றினைக்கப்பட்ட நெமற்றோட்டு முகாமைத்துவ முறைகள் சிறந்த விவசாய நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வெளிக்கள செயல்முறை விளக்கங்கள் / மாதிரி இடங்கள் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. பெறப்பட்ட புதிய நெமற்றோடு தனிப்பாடுகளை ஆய்வுகூடத்தில் வளர்க்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த பீடை கட்டுப்பாட்டு முறைகளின் வடிவமைப்பிற்காக பாதுகாப்பான பூச்சிநாசினிகளை இனங்காணல்**

**பூச்சி நாசினிகளினால் தேனீக்கள் மற்றும் மண் புழுக்கழுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்**

பல்வேறு தேயிலைப் பீடைகளுக்கு எதிராக சிபாரிசு செய்யப்படவிருக்கும் பீடைநாசினிகளினால் நன்மைப்பயக்கும் அங்கங்களுக்கு ஏற்படும் தீங்கு பற்றிய மேலதிக தகவல்கள் அவசியம் ஆகும்.

நியம ஆய்வுக்கூட உயிர்புகுப்பு செயன்முறைகளின் உதவியுடன் பிப்ரனினான் தேனீகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள மற்றும் காபோசல்பான், இமிடகுளோபிரிட், பிப்ரனினில் ஆகியவற்றினால் மண் புழுக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மதிப்பிடப்பட்டன. இப்பீடைநாசினிகள் ஆகியவற்றின் இலக்கு தவறிய தாக்கங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டன.
பிப்ரனிலினால் 87.5% தேனீக்களின் மரண வீதம் ஏற்பட்டது. அதேவேளை, காபோசல்பான் 57.7% மரண வீதத்தைக் காட்டியது. இமிடகுளோபிரிட், பென்தியோன் ஆகியவற்றினால் ஏற்படும் மரண வீதம் ஒப்பிட்டளவில் குறைவானது ஆகும். முடிவுகளின் படி இமிடகுளோபிரிட் காபோசல்பான, பிப்ரனில் ஆகியன முறையே 2 (தாங்கிக் கொள்ளக் கூடியது), 3 (நஞ்சு மற்றும் 4 (அதிக நஞ்த்தன்மையை உடையது) என வரிசைப்படுத்தப்பட்டன.

இமிடகுளோபிரிட், காபோபியுரன், காபோசல்பான், திரவ பிபரனின் (ரியோஜன்ட்) குருணை பிபரனின் (3GR) ஆகியன முறையே 100, 98, 82, 4 மற்றும் 0% மண்புழு மரண வீதத்தை ஏற்படுத்தின ஆகவே, இமிடகுளோபிரிட், காபோசல்பான் மற்றும் காபேரியுரன் ஆகியன மண் அங்கிகளக்கு எதிராக 4 ( அதிக நச்சுத்தன்மை உடையன) என வரிசைப்படுத்தப்பட்டன. இப்ரனின் தயாரிப்புகள் 1 (பாதிப்பு அற்றவை) என வரிசைப்படுத்தப்பட்டன.

**தாழ்நாட்டு உயிர் மரக்கறையான்களைக் கட்டுப்படுத்துவதற்கான செமியே இரசாயன கற்கைகள்**

அன்மை காலங்களில் முதிர் தேயிலைகளில் தாழ்நாட்டு உயிர் மரக்கரையான்களினால் பாதிப்புக்குள்ளாகும் தன்மை அதிகரித்துக் காணப்படுவதுடன் விளைச்சல் வீழ்ச்சியும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தாழ் நில தேயிலைகளில் அறுவடை, நில உற்பத்தி நிலைத்திருக்கும் தன்மை ஆகியன குறைந்து வருகின்றன. தற்போதைய முகாமைத்துவ முறை தேயிலையின் ஆரோக்கியத்தை பேணுதல் பாதிக்கப்பட்ட வாதுகளை முழுமையாக கவ்வாத்து வெட்டுதல், வெட்டுக் காயங்களுக்கு மருந்திடல் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறந்த விவசாய நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுதல் மட்டுமேயாகும். தாழ்நாட்டு உயிர் மறைக் கரையான்களுடன் தொடர்புடைய செமியோ - இரசாயன பொருட்களை பயன்படுத்தல் ஒரு நவீன முறையாகும் இது ஒருங்கிணைந்த பீடை முனாமைத்துவத்தில் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

தாழ்நாட்டு உயிர்மரக் கரையான் தாக்கத்திற்கு உள்ளாகக்கூடிய மற்றும் தாங்கும் திறனுடைய வர்க்கங்களின் உக்கும் மரங்களில் இருந்தும் கரையான்களில் இருந்தும் பெறப்பட்ட பங்கசு பிரித்தெடுப்புக்களைப் பயன்படுத்தி நடைபெறும் பல்வேறு உயிர்ப்பகுப்பாய்வுகள் தொடரப்படுகின்றன உக்கும் மர செலுலோசு, பெக்டின் மற்றும் லிக்னின் அடிப்படைகளின் பாவனை பற்றிய ஆரம்ப கற்கைகளுக்கான 9 பங்கசு பிரித்தெடுப்புக்களின் நிகழ்வுகள் பயன்படுத்தப்படும். இது வர்க்கங்களை வரிசைப்படுத்தக்கூடிய அடிப்படை காரணிகளாக பயன்படுத்தக் கூடிய தகமையினை கொண்டுள்ளது.

**கொப்புள வெளிறல் நோயின் தீவிரத்தன்மையை அளக்கும் ஒரு வழி காட்டி**

எக்சோபசிடியம் வெக்சன்ஸ் இனால் ஏற்படும் கொப்புள வெளிறல் நோயின் தீவிரத் தன்மையை மிகச் சரியாகவும் வினைத்திறனுடனும் மறு ஆக்கத்திறனுடனும் அளவிடுவதற்காக ஒரு வழிகாட்டி விருத்தி செய்யப்பட்டடு உறுதி செய்யப்பட்டது. முதிப்பீடுகளின் செம்மை மற்றும் மதிப்பீடு செய்வோரின் திறன் ஆகியவற்றினை மேம்படுத்துவதற்காக ஒரு பயிற்சி மென் பொருள் உருவாக்கப்பட்டது. இவ் வழிகாட்டியானது கொப்புள வெளிறல் பற்றிய கற்கைகள், இனவிருத்தி நிகழ்ச்சிகளில் நோய்க்கு எதிர்ப்புத் திறனுள்ள தேயிலை வர்க்கங்களைத் தெரிதல், நோயினால் ஏற்படும் பொருளாதார பாதிப்பினை மதிப்பிடல், நோய்க் கட்டுப்பாட்டு முறைகளின் சாதகத் தன்மையைத் தீர்மானித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு பயனுள்ளதாக அமையும்.

**கொப்புள வெளிறல் நோயின் முகாமைத்துவத்தில் தாவர நோய் எதிர்ப்பு தூண்டிகளின் (elicitors) பயன்பாடு**

தாவரங்களின் நோய் எதிர்ப்புத் தன்மையினை தாவர பாதுகாப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்துவது ஒரு நீடித்திருக்கக் கூடிய அணுகுமுறையாகும். தற்போது தாவர நோய் எதிர்ப்புத் தூண்டிகள் பிரபலமடைந்து வருகின்றன. தேயிலையின் கொப்புள வெளிறல் நோய்க்கு எதிரான இயற்கையான ஏற்ப்புத் தன்மையை அறிந்து கொள்ள உதவும் கற்கைகள் ஆரம்பிக்கபட்டடுள்ளன மேலும் பங்கசு நாசினிகளின் பாவனையை குறைக்கும் நோக்கில் நோய் எதிர்ப்புத் தூண்டிகள் மற்றும் உயிர் கட்டுப்பாட்டு அங்கிகள் ஆகியவற்றை ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவத்தில் இணைந்துக் கொள்ளும் சாத்திய தன்மையும் ஆராயப்படுகின்றது.

**கொப்புள வெளிறல் நோய்க்கான அபாய கணிப்பீட்டு மாதிரி**

ஒன்று/ இரண்டு வாரங்களுக்கு முன்னதாக கொப்புள வெளிறல் நோய் தோன்றும் அபாயத்தினை எதிர்வுக் கூறக்கூடிய அபாயக் கணீப்பீட்டு மாதிரி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தானியங்கி வானிலை நிலையத்திற்காக தேசிய விஞ்ஞான நிறுவனத்தினால் ரூபா 1 மில்லியன் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. இம்மாதிரியை உறுதி செய்யும் பரிசோதனைகள் தொடரப்படுகின்றன.

# காலநிலை மாற்றத்தின் தாக்க மதிப்பீடு

**தேயிலை தொழிற்துறையின் உற்பத்திதிறன் இலாபத்தன்மை ஆகியவற்றில் உலக காலநிலை மாற்றத்தின் தாக்க மதிப்பீடு**

**உலகலாவிய காலநிலை மாற்றத்துக்கு தேயிலையின் தொழிற்பாட்டு ரீதியான பிரதிபலிப்பு மற்றும் காபன் சேமிப்பு பற்றிய கற்கைகள்**

செபீல்ட் டைனமிக் குளோபல் வெஜிடேசன் மொடல் இல் சிறிது மாற்றங்களை ஏற்படுத்தி ஒரு புதிய மாதிரி உருவாக்கப்படடது. இலங்கையில் பல்வேறு நிலமட்டங்களில் தேயிலைப் பயிரிடப்படும் பிரதேசங்களில் காலநிலை மாற்றத்தனால் தேயிலை உற்பத்தியில் ஏற்படும் தாக்கங்களை எதிர்வுக்கூறல் இம்மாதிரியின் நோக்கமாகும். இம்மாதிரியானது உயர், மத்திய மற்றும் தாழ் நிலப்பிரதேசங்களில் சேகரிக்கப்பட்ட 20 வருடங்களுக்கான விளைச்சல் தரவுகளைப் பயன்படுத்தி உறுதி செய்யப்பட்டது. மூன்று நில மட்டங்களிலும் உண்மையான விளைச்சலுடன் ஒப்பிடுகையழல் எதிர்வு கூறப்பட்ட விளைச்சல் ஏற்றுக்கொள்ளக்கூடிய துல்லியத்தை காட்டியது.

இம்மாதிரி உருவாக்கப்படுதலுக்கு உட்படுத்தப்ட்டது. கணிசமான விளைச்சல் உயர்வு மூன்று உயர் வலயங்களிலும் காணப்பட்டது. இவ்விளைச்சல் உயர்வு அதிகரிக்கும் காபனீரொட்சைட்டு காரணமாக சாதகமான பிரதிபலிப்பாகும். அதிகரிக்கும் காபனீரொட்சைடின் சாதக தன்டை கருத்திற் கொள்ளப்படாதவிடத்து உயர் நில தேயிலைமட்டுமே அதிகரிக்கும் வெப்பநிலைக்கு கணிசமான பிரதிபலிப்பு காணப்பட்டது. அதே வேளை தாழ் நிலங்களில் புறக்கணிக்கத்தக்க அளவிலும் மத்திய நிலங்களில் குறைந்தளவு பிரதிபலிப்பும் காட்டப்பட்டது. இம் மாதிரியின் துல்லியத்தை அதிகரிப்பதற்காக செம்மைப்படுத்தப்படுகின்றது.

**தேயிலையின் வளர்ச்சியிலும் உற்பத்தித் திறனிலும் காலநிலை மாற்றத்தின் தாக்கததினை கணிப்பிடுதல்**

தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களின் நீண்டகால போக்கு, தோறணை மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்து கொளவதற்கான மேற்கொள்ளப்பட்ட 30 வருடங்களுக்குறிய மாதாந்த தரவுகளின் பகுப்பாய்வு நிறைவு பெற்றது.

இரத்தினபுரி, தலவாக்கலை மற்றும் பசறை விவசாய வானிலை அவதான நிலையங்களில் நாளாந்த மழைவீழ்ச்சி ஆவியாதல் ஆகியவற்றுக்கான தகவல் திரட்டினை விருத்தி செய்யும் நடவடிக்கைகள் முற்றுப் பெற்றன.



1.விவசாயத்தைப் பாதிக்கும் வறட்சியின் தோற்றப்பாணி 2. தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பல்வேறு விவசாய வானிலை அவதான நிலையங்களில் சேகரிக்கப்பட்ட நாளாந்த மழைவீழ்ச்சி தரவுகளைப் பணன்படுத்தி தேயிலையில் விவசாய நடவடிக்கைகளுககான மிகச் சரியான நேரத்தினை கண்டறியும் நோக்கில் கடந்த 40 ஆண்டு காலங்களில் மழை நாட்களின் நிச்சயத்தன்மையை ஆராய்வதற்கான ஒரு புதிய ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேயிலை ஆராய்ச்சி நிலைய வானிலை அவதான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் மண்ணின் வகை, நீர் பற்று திறன் ஆகிய பின்புல தகவல்களைத் திரட்டும் நடவடிக்கை முடிவடைந்துள்ளது. இத்தகவல்களின் பகுப்பாய்வு தொடர்கின்றது. தலவாக்கலை, இரத்தினபுரி மற்றும் பசறையில் சேகரிக்கப்பட்ட நாளாந்த மழைவீழ்ச்சி தரவுகளைப் பயன்படுத்தி போயா தினங்களிலும் அதற்கு முன்னர் பின்னர் மழை பெற்றக் கூடிய நிகழ்தகவு கணிக்கப்பட்டுள்ளது.

**தேயிலைப் பீடைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள்**

பல்வேறு விவசாய காலநிலை வலயங்களில் பல பூச்சி, சிற்றுண்ணி மற்றும் நெமற்றோடு பீடைகளின் தாக்கத்தில் இயல்பு மாறிய தன்மை அண்மைக்காலங்களில் அவதானிக்கப்பட்டது. சில பீடைகள் தேயிலைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய தீவிர பீடைகளாக மாற்றமடையும் அதேவேளை ஒரு சில பீடைகள் சில இடங்களில் அவற்றின் தீவிரத்ததன்மையை இழந்து காணப்படுகின்றன. காலநிலைக் காரணிகள் மற்றும் பயிர் முகாமை நடவடிக்கைகள் ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கான விஞ்ஞான ரீதியிலான விளக்கங்களும் பொருத்தமான பீடைக்கட்டுப்பாட்டு முறைகளும் அவசியமாகும்.

முதல் நடவடிக்கையாக குண்டுத் துளைப்பு, தாழ்நாட்டு உயிர் மரக் கறையான், பிரடிலென்கஸ், லூசி, ரெடபெலஸ் சிமிலஸ் மெலொடொகைன் பிரெவிகோடா ஆகியவற்றின் உயிரியல் மற்றும் வாழ்க்கை வட்ட தகவல்கள், நீண்ட கால வானிலைத் தரவுகளுடன் தொடர்புபடுத்தப்பட்டன. பீடை வெளிப்படுத்தலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தீவிர தன்மையின் இழப்பு மற்றும் இயற்கை எதிரிகளின் இருக்கை மற்றும் அவற்றின் இடைத் தொடர்புகள் ஆகியவற்றில் தாக்கம் செலுத்தும் வானிலை சார்ந்த காரணிகளைத் கண்டறிவது இந்நடவடிக்கையின் நோக்கமாகும்.

**தேயிலை நெமற்றோடுகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம்**

புல்வேறு தேயிலை நெமற்றோடுகளின் நோய் உண்டாக்கும் திறன் நோயக்குறியியல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக பிரடிலென்கஸ் லூசி ரெடபிலஸ் சிமிலஸ் மற்றும் மெலொடொகைன் பிரவிகோடா ஆகியவற்றின் நடத்தை அதிகரித்த வெப்பநிலைகளில் அவதானிக்கப்பட்டது. பி. லூசி, ரெசிமிலஸ் ஆகியவற்றின் தொழிற்பாடு முறையே 20 24 C ஆகிய வெப்ப நிலைகளில் அதிகரித்துக் காணப்பட்டது. அதே வேளை மெ பிரவிகோடா செயலாற்றுக் காணப்பட்டது. இதன் போது வெளிக்கள அநுபவங்களான தேயிலை வளர்க்கப்படும்அனைத்து பிரதேசங்களிலும் பி லூசியின் ஊடுறுவல் ரெ சிமிலஸட மற்றும் மெ பிரவி கோடா வின் மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பாடு ஆகியன விஞ்ஞான ரீதியில் உறுதி செய்யப்பட்டன பலதரப்பட்ட நெமற்றோடு பிரித்தெடுப்புகனைப் பயன்படுத்தி மேலதிக பரிசோதனைகள் தொரடப்படுகின்றன.

# வெளிக்கள செயற்பாடுகளை இயந்திரமயமாக்கல்

**வெளிக்கள செயற்பாடுகளை இயந்திரமயமாக்கல் தொழிலாளர் பற்றாக்குறை பிரச்சனையை சமாளிப்பதற்காக பொருத்தமான இயந்திரங்களையும், பயிராக்கவியற் செயற்பாடுகளையும் விருத்தி செய்தல்**

**a. மிலாகந்தை தோட்டம், ஹொரண (2008)**

இரண்டு வேறுபட்ட கொழுந்தெடுத்தல் தொகுதிகளில் இந்தியா,சீனாவிலிருந்து பெறப்பட்ட ஒரே மாதிரியான தொழிநுட்ப அமைப்பைக் கொண்ட இரண்டு கொழுந்தெடுக்கும் இயந்திரங்கள் பரிசோதிக்கப்பட்டன. இரண்டு பெற்றோல், 2T ஐ பயன்படுத்தி 2- ஸ்குரோக் பொறியினால் இயக்கப்படுகின்றன. தேயிலை தண்டுகள் இரண்டு சவர அலகுகளினால் வேறுப்பட்டு, காற்றினால் அவை ஒரு பையினுள் அனுப்பப்டுகின்றன.

அரைச்செடி கொழுந்தெடுத்தலின் கீழ் ஒரு வாரத்தில் தேயிலை செடியின் ஒரு அரைப்பகுதியிலும் அடுத்த வாரத்தில் செடியின் மற்றைய அரைப்பகுதியிலும் கொழுந்தெடுத்தல் மேற்கொள்ளப்பட்டன. முழுச்செடியிலும் கொழுந்தெடுத்தலின் கீழ் இரண்டு வார கால இடைவெளிகளில் முழுச்செடியிலும் கொழுந்தெடுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

கையினால் கொழுந்தெடுக்கும் முறையுடன் ஒப்பிடுகையில் முழுச்செடி மற்றும் அரைச்செடியினை பொறியின் மூலம் அறுவடை செய்தலானது விளைச்சலில் அண்ணளவாக 60% வீழ்ச்சியை ஏற்படுத்தியது. அறுவடை வட்டத்தின் இறுதியில் பொறியினால் அறுவடை செய்யப்பட்ட தேயிலை செடிகளில் கையினால் கொழுந்தெடுக்கப்பட்ட செடிகளை விட பெரிய இலைகளின் அளவு 50 மடங்கு அதிகமாகக் காணப்பட்டது. முழு, அரைச்செடி அறுவடைகளுக்கு இடையில் கவ்வாத்து வாதுகளின் ஈர, உலர் நிறைகள், தண்டுகளில் உள்ள இலைகளின் எண்ணிக்கை என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்படவில்லை.
ஒரு இலையினையும் அரும்பினையும் (1L), இரண்டு இலைகளையும் அரும்பினையும் (2L) கொண்ட தண்டுகளின் எண்ணிக்கை கையினால் கொழுந்தெடுக்கப்பட்ட தண்டுகளை விட பொறியினால் அறுவடை செய்யப்பட்ட தண்டுகளில் உயர்வாகக் காணப்பட்ட போதிலும் மூன்று இலைகளையும்



அரும்பினையும் கொண்டவற்றில் (3L) அவ்வாறு காணப்படவில்லை எனினும் கையினால் அறுவடை செய்யப்பட்ட தண்டுகளில் பொறியினால் அறுவடை செய்யப்பட்ட தண்டுகளை விட நான்கு (4L) இலைகளையும் அரும்பினையும் கொண்ட தண்டுகளின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்பட்டது. சீனா, இந்தோனேஷிய தயாரிப்பு இயந்திரங்களின் சராசரி உற்பத்தி முறையே 173, 189 கிகி/ நாள் ஆகக் காணப்பட்டது. இரண்டு பொறிகளினதும் சராசரி எரிபொருள் பாவனை 5 லீ/நாள் ஆகக் காணப்பட்டது.

**பலாங்கொடை தோட்டம்**

கையினால் கொழுந்தெடுத்தலுடன் ஒப்பிடுகையில் பொறியினால் பயன்படுத்தி முழுச்செடி மற்றும் அரைச்செடிகளை அறுவடை செய்கையில் அண்ணளவாக விளைச்சலில் 30 - 40% வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

கையினால் கொழுந்தெடுத்தலுடன் ஒப்பிடுகையில் பொறியினை பயன்படுத்தி முழு மற்றும் அரைச்செடிகளை அறுவடை செய்தலானது பெரிய இலைகளின் அளவினை 30-40% இனால் அதிகரித்தது. DG 39 ஆனது TRI 2026 இனைக்கொட்டிலும் உயர் விளைச்சலைக் கொடுத்தது.

**தேயிலை செடிகளை இளைப்பாரவிடப்பட்ட, மற்றும் இளைப்பாரவிடப்பட்டாத நிலைகளில் பொறிமுறை கவ்வாத்தினை மதிப்பிடல்**

வாது வைத்த, வாது வைக்காத கவ்வாத்து முறைகளை மேற்கொள்வதற்கு முன்னராக செடிகள் இளைப்பாரவிடப்பட்ட, செடிகள் இளைப்பாரவிடப்படாத நிலைகளில் தலவாக்கலை வெளிக்களத்தில் கையினால், பொறியினால் அறுவடை செய்யும் முறைகள் பரிசோதிக்கப்பட்டன. துண்டத்தின் அரைப்பகுதி கவ்வாத்து செய்வதற்கு முன்னராக ஓய்வடைய விடப்படுவதுடன் இரண்டு துண்டங்களும் வாது வைக்கப்பட்ட மற்றும் வைக்கப்படாத முறைகளில் கவ்வாத்து மேற்கொள்ளப்பட்டன. இதன் போது கையினால், மற்றும் பொறியினால் கவ்வாத்து செய்யப்படுகையில் தேவைப்படும் வேலையாட்கள் முறையே 50 LPH , 10 LPH ஆகக் காணப்பட்டது. இது தொழிலாளர் உற்பத்தி திறனில் 5 மடங்கு அதிகரிப்பை காட்டியது. கையினால், மற்றும் பொறியினால் அறுவடை செய்தனாலோ, இரு வேறுபட்ட கவ்வாத்து முறைகளினாலோ விளைச்சலில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்படவில்லை.

ஓய்வடையப்பட்ட மற்றம் ஓய்வடையவிடப்படாத செடிகளில் முறையே 2453 கிகி மெ.தெ/ ஹெ , 2411 மெ.தொ/ஹெ விளைச்சல் பெறப்பட்டன. பொறிமுறை மற்றும் கையினால் அறுவடையில் முறையே 2442 கிகி மெ.தொ/ஹெ , 2411 கிகி மெ.தொ/ஹெ விளைச்சல் பெறப்பட்டன. வாது வைத்த , வாது வைக்காத கவ்வாத்து முறைகளில் முறையே 2440 , 2441 கிகி மெ.தொ/ஹெ விளைச்சல் பெறப்பட்டன. ஓய்வடையவிடப்பட்ட பின்னர் பொறியினால் மேற்கொள்ளப்பட்ட வாது வைத்த கவ்வாத்து முறையில் உயர் விளைச்சல் (2590 கிகி. மெ.தொ/ஹெ) பதிவு செய்யப்பட்டது.

**அறுவடை பொறியின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக செடி முகாமைத்துவத்தினை மாற்றியமைத்தல்**

வேறுபட்ட கவ்வாத்து முறைகளின் கீழ் கையினால், மற்றும் பொறியினால் அறுவடை செய்யும் போது விளைச்சல் வேறுபாடுகளை மதிப்பிடும் பொருட்டு கலபொட தோட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அறுவடை முறைகளுடன் 3 வேறுபட்ட கவ்வாத்து தொகுதிகள் இணைக்கப்பட்டன. அவையாவன (1) 20ல் வாது வைத்த கவ்வாத்து முறை மற்றும் முனையகற்றலுடன் பொறிமுறை அறுவடை (2) 20ல் வாது வைத்த கவ்வாத்து முறை மற்றும் முனையகற்றலுடன் பொறிமுறை அறுவடை (3) 26ல் குறுக்காக வெட்டுதல் மற்றும் முனையகற்றலுடன் பொறிமுறை அறுவடை

கையினால் கொழுந்தெடுத்தலுடன் ஒப்பிடுகையில் பொறியினால் அறுவடை செய்தல் ஆனது விளைச்சலை 20-30% இனால் வீழ்ச்சியடைய செய்வதை அவதானிக்க முடிந்தது. கவ்வாத்து வட்டத்தின் இறுதியில் குறுக்காக வெட்டும் கவ்வாத்து முறையில் பொறியினால் அறுவடை செய்கையில் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியானது 20ல் வாது வைத்த கவ்வாத்து முறையில் பொறியினால் அறுவடை செய்கையில் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியை விட குறைவாகக் காணப்பட்டது. பெரிய இலைகளின் அளவானது பொறிமுறை அறுவடையில் 23% ஆகவும், கையினால் கொழுந்தெடுக்கையில் 2% ஆகவும் காணப்பட்டது.

# தேயிலையை உலர்த்துவதற்கான மாற்று சக்தி மூலங்கள்

**விறகாகப் பயன்படுத்தும் மர இனங்களை சக்தி மூலமாகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளை மதிப்பிடுதல்**

**பசறை TRI , ஹந்தானை TRI , இரத்னபுரி TRI, ரைகம் தோட்டம் மற்றும் சென்ற் ஜோக்கியம் தோட்டங்களில் கிளிரிசிடியா பயிர்செய்கையை மேற்கொள்ளல்**

**ரைகம் தோட்டம்** :- கிளிரிசிடியா 4 வருடங்களை அடைந்த போது ஏப்ரலிலும், டிசெம்பரிலும் கிளைகள் வெட்டப்பட்டன. மரங்களுக்கு இடையிலான இடைவெளி 1மீx1மீ, 1மீx2மீ, 2மீx2மீ ஆக இருக்கையில் முதலாவது கிளையகற்றலில் 17.0, 9.5, 4.2 தொன்/ஹெ தண்டு உலர் நிறையையும் இரண்டாம் கிளையகற்றலில் 17.2, 7.9, 4.0 தொன்/ஹெ தண்டு உலர் நிறையையும் பெறப்பட்டதை முடிவுகள் காட்டின. இது ஒரு கிளையகற்றலின் மூலம் பெறப்படும் 21, 10.8, 5.1 தொன்/ஹெ/வ விறகிற்கு சமமானதாகும். முதலாவது கிளையகற்றலில் பெறப்பட்ட இலைகளின் உலர்நிறை 3.77, 1.87, 0.93 தொன்/ஹெ ஆகவும் இரண்டாவது கிளையகற்றலில் 4.17, 2.79, 1.25 தொன்/ஹெ ஆகவும் காணப்பட்டன. பச்சை இலைகளின் சேர்க்கை காரணமாக கிளிரிசிடியா துண்டங்களின் சேதன காபன் அளவானது அருகிலுள்ள ஏனைய தேயிலைத் துண்டங்களினதை விட அளவு உயர்வாகக் காணப்பட்டது.

**சென்ற் ஜோக்கியம் தோட்டம்**

கிளிரிசிடியா செடிகள் 4 வருடங்களை அடைந்ததும் 8 மாதகால இடைவெளிகளில் கிளைகள் வெட்டப்பட்டன. ஒவ்வொரு கிளையகற்றலின் போதும் 1மீx1மீ, 1மீx2மீ, 2மீx2மீ இடைவெளிகளில் இருந்த மரங்களின் தண்டு உலர் நிறைகள் முறையே 23.3, 9.8, 2.2 தொன்/ஹெ ஆக காணப்பட்டதை முடிவுகள் காட்டின. இலைப்பகுதிகளின் உலர் நிறைகள் அதே இடைவெளிகளுக்கு முறையே 4.51, 1.26, 0.30 தொன்/ஹெ ஆகக் காணப்பட்டன. தண்டு இலைப்பகுதிகளிற்கான உலர் நிறை விகிதங்கள் முறையே 42%, 72% ஆக காணப்பட்டன.

**TRI ஹந்தானை பிராந்திய மையம்**

கிளிரிசிடியா மரங்கள் இரண்டு வருடங்களை அடைந்ததும் 8 மாதகால இடைவெளியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கிளையகற்றலின்

தண்டுகளின் நிறையானது 1மீx1மீ, 1மீx2மீ, 2மீx2மீ இடைவெளிகளுக்கு முறையே 2.94, 1.57, 0.49 ஆகவும் இலைப்பகுதிகளின் உலர் நிறைகள் மேற்படி இடைவெளிகளில் முறையே 1.89, 1.59, 2.97 ஆகவும் காணப்பட்டது. ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் இப் பிராந்தியத்தில் கிளிரிசிடியாவின் வளர்ச்சி ஒப்பிட்டளவில் குறைவாகவே காணப்பட்டது.



**கிளென் அல்பென் தோட்டம் பசறை**

கிளிரிசிடியா மரங்கள் 2 வருடங்களை அடைந்ததும் 8 மாதகால இடைவெளியில் மூன்றாவது கிளையகற்றல் மேற்கொள்ளப்பட்டன. 1மீx1மீ, 1மீx2மீ, 2மீx2மீ இடைவெளிகளில் நடப்பட்டிருந்த மரங்களிலிருந்து பெறப்பட்ட தண்டுகளின் நிறைகள் முறையே 17.5, 17.6, 10.8 தொன்/ஹெ ஆக காணப்பட்டன. மேற்படி இடைவெளிகளுக்கான இலைப்பகுதிகளின் உலர் நிறைகள் முறையே 10.9, 7.9, 6.6 தொன்/ஹெ ஆக காணப்பட்டது.

**சென் கூம்ஸ் தோட்டத்தில் காலியாந்திரா கலோதிரைஸஸ் பயிர்செய்கை**

செடிகள் 2 வருட வயதாக இருக்கையில் 8 மாதகால இடைவெளியில் மூன்றாவது கிளையகற்றல் மேற்கொள்ளப்பட்ட போது 1மீx1மீ, 1மீx2மீ, 2மீx2மீ இடைவெளிகளில் நடப்பட்டிருந்த மரங்களிலிருந்து பெறப்பட்ட தண்டுகளின் நிறைகள் முறையே 7.0, 6.0, 5.0 தொன்/ஹெ ஆக காணப்பட்டன. இலைப்பகுதிகளின் உலர் நிறைகள் முறையே 10.6, 9.7, 6.3 தொன்/ஹெ ஆக காணப்பட்டன. தண்டு, இலைகளின் உலர் நிறைகள், 1மீx1மீ இடைவெளிகளில் நடப்பட்ட 10,000 செடிகள் /ஹெ அடர்த்தியில் உயர்வானதாகக் காணப்பட்டது.

# தேயிலை பதனிடும் தொழில்நுட்ப பிரிவு

**றோல் பிரேக்கரில் பாவிக்கப்படும் சல்லடையின் அளவுகளை மாற்றுவதன் மூலம் தாழ் பிரேதச தேயிலையின் விலையையும் பிரதான தரம்பிரிக்கப்பட்ட வகைகளின் அளவையும் கூட்டுதல்.**

தாழ் பிரேதசத்தில் இலைத் தரத்திலான உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் பெறப்படும் கொழுந்தின் தரம் 80% ஆன தொழிற்சாலைகளில 50% கும் குறைவான நல்ல கொழுந்தையே கொண்டுள்ளன. எனவே பல தொழிற்சாலைகளில் 4ம் நம்பர் சல்லடைக்கும் பதில் 3ம் நம்பர் சல்லடையையே றோல் பிரேக்கரில் பாவிக்கின்றனர். இதன் மூலம் பிரதான தரம், பிரிக்கப்பட்ட வகைகளின் அளவை கூட்ட முனைகின்றனர்.

No 3, No 4 சல்லடைகளை எவ்விதம் என்ன நிலையில் பாவிப்பது விலையையும், பிரதான வகைகளின் அளவையும் கூட்டும் என்பதை கண்டறிய ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. முடிவுகளின்படி 4ம் சல்லடையை 1ம் அரைத்தலின் பின்பும் அதன் பின்பு வரும் அரைத்தல்களின் போது 3ம் 4ம சல்லடைகளின் சேர்வையையும் பாவிப்பது விலையையும் பிரதானதரங்களின் அளவையும் கூட்டும் இம்முறை தொழிற்சாலைகளில் பெறும் கொழுந்தின் தரம் 50% இலும் குறைவாக இருப்பினும் கூட பொருந்தும்.

**பிரதேசத்தில் பயிரடப்பட்ட புதிய இனங்களில் இருந்து நல்ல தர தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய இனங்களை தெரிவுசெய்தல்.**

மேற்குறிப்பிட்ட இனங்களில் இருந்து உற்பத்திசெய்யப்பட்ட தேயிலை, தெரிந்த தரமான தேயிலையை தரும் இனமான DN உடனும், தரம் குறைந்த தேயிலையை தரும் இனமான TRI 2025 உடனும் ஒப்பிடப்பட்டது.

புதிய இனங்களியிருந்து 6 இனங்கள் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு நடதப்பட்டது. இவற்றில் 2 இனங்கள் (U 5,U208) DN உடன் ஒப்பிடும் படியான தரமான தேயிலையை தந்தன.





**ஓதொடக்ஸ் ரொடோவேன் உற்பத்தியில் உலஉதும் முறையை முன்னேற்றுதல்**

அண்மைக் காலங்களில ஓதொடக்ஸ் ரொடோக்வேன் முறை உற்பத்தியில் சிறிய துகள்களை கொண்ட தேயிலை வகைகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் FBD உலர்த்தியில் இவ்வகையான சிறிய துகள்களை உலர்த்துவதில் சிரமங்கள் எதிர் கொள்ளப்பட்டன. சீரற்ற முறையில் உலர்த்துதல் நடைபெறுவது அவதானிக்கப்பட்டது. எனவே சிறிய துகள்கள் உலர்த்தியினுள் இயங்கும் விதத்தை கண்டறிவதன் மூலம் உலர்த்தும் முறையை முன்னேற்ற உத்தேசிக்கப்பட்டது முடிவுகளின்படி. உலத்தியின் படுக்கை தட்டில் உள்ள இடைவெளியின் அளவையும், எண்ணிக்கையையும் தன்மயப்படுத்துதல் மூலம் துகள்கள் இயங்கும் முறை சீராக்கப்பட்டது. இதன்மூலம் சிறிய துகள்கள் இயங்கும் முறை முன்னேற்றப்பட முடியும். இதன் மூலம் உலர்த்துதலில் உள்ள பிரச்சனை தீர்க்கப்பட முடியும்.

# தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை மேம்படுத்தல்

## இலங்கை தேயிலையின் பிளேவனோல் அளவு கேம்ப்பரோல், குரெக்டின், மிரெசிடின் அளவுகளை அறிதல்

தேயிலைச் சாயத்தின் செறிவிற்கு பிளேவனோல் கிளைகோசிடேஸ் (FOGS) பங்களிப்பு செய்கின்றதென அண்மையில் அறியப்பட்டுள்ளது. எனினும் இலங்கை தேயிலைக்குரிய (FOGS) அளவுகள் பற்றிய தரவுகள் இதுவரை பெறப்படவில்லை. எனவே இலங்கை தேயிலைக்கான FOGS தரவுகளை பெறுவதற்காக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேயிலையில் 26 ற்கு மேற்பட்ட பிளேவனோல் கிளைக்கோசிடேஸ்கள் காணப்படுவதால் நம்பத்தக்க தரங்கள் இல்லாதவிடத்து அவற்றை கிளைக்கோசைட்டுகள் என தீர்மானிக்க முடியாது. பிளேவனோல் கிளைக்கோசைட்டுகள் பிளேவனோல் அக்கிகோன்களான மெரிசெடின், குவர்செட்டின், கெம்ப்பரோல் என வகைப்படுத்தப்பட்டன. இலங்கையில் தேயிலை வளர்க்கப்படும் சகல பிராந்தியங்களையும் உள்ளடங்களாக 58 கறுப்புத் தேயிலை மாதிரிகளில் மேற்படி ஒவ்வொரு பிளேவனோல் பற்றிய தரவுகளை பெறுவதற்காக சேகரிக்கப்பட்டன.

## ஆய்வுகூடங்களிற்கு இடையிலான பரிசோதனை நிகழ்ச்சிகள்

பகுப்பாய்வு வழியலகுகளின் நம்பகத்தன்மையினை பேணுவதற்கு பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான பரிசோதனை நிகழ்ச்சிகள் முக்கியமானவையாகும். எனவே TRI தொடர்ந்தும் தேசிய, சர்வதேச ஸ்தாபனங்களினால் நடாத்தப்படும் இவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகின்றது. அவை பின்வருமாறு சர்வதேச தர நிறுவனம் (ISO) ISO வழிக்காட்டல்களுக்கு அமைய HPLS இனைப் பயன்படுத்தி L-தியனின் இனது இரண்டாவது வட்ட அளவீடுகள் பெறப்பட்டன தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆய்வுகூடங்களை பரிசோதிப்பதற்கான இலங்கை சம்மேளனம் (SLATL) SLATL இனால் நடாத்தப்பட்ட ISO 3720 வழியலகுகளிற்கான ஆய்வுகூடங்களிற்கு இடையிலான பரிசோதனை நிகழ்ச்சியில் TRI பங்குபற்றி திருப்திகரமான முடிவுகள் பெறப்பட்டன.







**பீடைக்கொல்லி மிகுதிகள் பகுப்பாய்வு நிகழ்ச்சி**

நுகர்வு நாடுகளினால் கடுமையான தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்படுவதனால் இலங்கை தேயிலையை சந்தைப்படுத்துகையில் தயாரிக்கப்பட்ட தேயிலையில் உயர் மிகுதிகளின் அளவை (MRL) விட குறைந்த பீடைக்கொல்லி மிகுதிகளின் அளவை பேணுதல் முக்கியமானதாகும். எனவே தயாரிக்கப்பட்ட தேயிலையில் பீடைக்கொல்லி மிகுதிகளின் அளவினை துணியும் திருத்தமான முறையினை விருத்தி செய்தல் முக்கியமானதாகும். தயாரிக்கப்பட்ட தேயிலையில் தயசினோன், பிட்டர்டனோல் ஹெக்சகனசோல், புரேப்பிகனசோல்,டெபியுகனசோல் மிகுதிகளை ஒரே நேரத்தில் அளக்ககூடிய பல் - மிகுதி முறை ஒன்று விருத்தி செய்யப்பட்டது. இம் முறையில் ஒக்சிபுளோரோபென், பைபிரினோல், பைரக்லோஸ்ட்ரோபின் மிகுதிகளின் அளவினை அறிவதற்கான பரிசோதனைகள் நடைபெறுகின்றன. அளவறி மட்டங்கள் (LOD) 5 தடவைகள் MRL ஐ விட குறைவாகக் காணப்பட்டன.

**தேயிலையில் காமா–அமைனோபுயூட்ரிக் அமிலத்தின் (GABA) அளவினை அறிதல்**

L- தியனினைப் போலவே GABA வும் மன அழுத்தத்தினை நீக்கும் தன்மை கொண்டதென அறியப்பட்டுள்ளது. இத்தாலியுடன் இணைந்து LC-MS/MS வசதியினைக் கொண்டு GABA அளவுகளை அறிவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பரிசோதனை முடிவுகள் இலங்கையின் கறுப்புத்தேயிலை, பச்சைத்தேயிலை, சில்வர் டிப்ஸ், வெள்ளைத்தேயிலையில் GABA ன் அளவுகள் முறையே 81-129, 13-48, 63-442, 83-803 மிகி/கிகி ஆக இருப்பதனைக் காட்டின.

# பெறுமதிசேர் தேயிலை உற்பத்திகள்

**உடனடி கறுப்புத்தேயிலை உற்பத்தி படிமுறையினை மேம்படுத்தல்**

பாரம்பரிய முறை உடனடி தேயிலை உற்பத்தியில் தெளிப்பு உலர்த்தலுக்கு முன்னராக தேயிலை பிரித்தெடுப்பினை செறிவாக்குவதற்காக வெப்ப நீராவியாக்கும் தொழிநுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. இது இறுதி உற்பத்தி பொருளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.மென்சவ்வை பயன்படுத்தி செறிவாக்கும் தொழிநுட்பமானது அவ்வாறு பாதிப்படையாது பெறப்படக்கூடிய முறையாகும். எனவே உடனடி தேயிலை உற்பத்தியில் மென்சவ்வு செறிவாக்கல் தொழிநுட்பத்தினை பிரயோகிக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்பட்டது. மென்சவ்வு செறிவாக்கல் தொழிநுட்பத்தினை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உடனடி தேயிலையின் மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட இரசாயன மதிப்பீடுகள், இவை சிறந்த இரசாயன அமைப்பை கொண்டிருப்பதை காட்டின.

**மனிதனின் ஆரோக்கியத்தில் தேயிலையின் உயிரியல் தாக்கம்**

சுகாதார காரணங்களுக்காக பதப்படுத்தப்பட்ட இறைச்சியிலுள்ள செயற்கை அன்ரி-ஒக்சிடன்ட்களை மாற்றீடு செய்தல் முக்கியமானதாகும். எனவே பன்றி இறைச்சி சோசேஜஸ்களில் பயன்படுத்தப்படும் செயற்கை அன்ரி-ஒக்சிடன்ட்களுக்கு பதிலாக கறுப்பு, பச்சைத்தேயிலையில் காணப்படும் இயற்கையான அன்ரி-ஒக்சிடன்களை உபயோகிக்கும் சாத்தியகூறுகள் பற்றி ஆராயும் கற்கை ஆரம்பிக்கப்பட்டது. பச்சை, கறுப்புத்தேயிலை இரண்டும் பன்றி இறைச்சி சோசேஜசில் அனுகூலமான அன்ரி-ஒக்சிடன்ட் தொழிற்பாட்டைக் கொண்டிருப்பது அறியப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு சோசேஜஸ் மாதிரிகளுடன் ஒப்பிடுகையில் கறுப்பு, பச்சை ஆகிய தேயிலைச் சாயங்கள் சேர்க்கப்பட்ட சோசேஜஸ் மாதிரிகள் இரண்டினதும் TBARS, 5 நாள் களஞ்சியப்படுத்தலின் போது தொடர்ந்தும் குறைவாக ($P<0.5$) காணப்பட்டது. கறுப்புத்தேயிலை சாயம் சேர்க்கப்பட்ட சோசேஜஸ்களின் சுவை, இயல்பு, ஏற்றுக்கொள்ளப்படும் தன்னை என்பன உயர்வாகக் காணப்பட்டன.




இலங்கையின் பிராந்திய தேயிலை வகைகளின் சுவை, தரத்தினை எதிர்வுகூற, வகைப்படுத்துவதற்கான செயற்கை வலையமைப்பு

கேட்சின்களைத் தவிர ஏனைய இரசாயன பதார்த்தங்களிற்கு பிராந்திய தேயிலை மாதிரிகளின் பகுப்பாய்வு HPLC இனைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு பிராந்தியங்களில் இருந்து பெறப்பட்ட 149, 129 தேயிலை மாதிரிகள் முறையே சுவை, TF/TR ற்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன. பிராந்திய தேயிலைகளின் சுவை, ஒகனோலெப்டிக் இயல்புகள் அட்டவணைப்படுத்தப்பட்டன.

### இலங்கை (இரத்தினபுரி மாவட்டம்) தாழ் பிரதேச ஈரவலய சிறு தேயிலை தோட்டங்களின் உற்பத்திச் செலவினை (COP) தீர்மானித்தல்

உற்பத்திச்செலவினை துணிவதற்காகவும், உற்பத்திச்செலவில் பங்களிப்பு செலுத்தும் காரணிகளை இனம் காண்பதற்காகவும், சிறு தேயிலை தோட்ட பயிர்செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை அறிவதற்குமாக இரத்தினபுரி மாவட்டத்தில் 150 சிறு தேயிலை தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. வேறுபட்ட பிரிவுகளுக்கான உற்பத்திச்செலவுகள் வேறுபடுவதை ANOVA முடிவுகள் காட்டின. 0.75 - 1.5 ஏக்கர் நிலப்பரப்பு வகையில் குறைந்த உற்பத்திச்செலவு பெறப்பட்டது. இது ஏனைய நிலப்பரப்பு வகையை விட குறிப்பிடத்தக்க வேறுபாட்டை கொண்டிந்தது. உற்பத்திச்செலவின் பெரும்பகுதி (72%) தொழிலாளர் வேதன செலவாகக் காணப்பட்டது. ஒவ்வொரு நிலப்பரப்பு வகையிலும் பெறப்பட்ட உற்பத்தி மதிப்பீடுகளில் 2.25 - 5 ஏக்கர் நிலப்பரப்பின் உற்பத்தியின் அளவு உயர்வாகவும் ஏனையவற்றினது ஒரே அளவானதாகவும் காணப்பட்டது. இதற்கு பயிரில் அதிகளவு முதலிடக்கூடிய தன்மை, நல்ல முகாமைத்துவ முறைகள் பின்பற்றுதல், உள்ளீடுகளை பெருமளவில் கையில் வாங்குவதால் கிடைக்கும் அனுகூலங்கள் காரணமாக இருக்கலாம். முகாமைத்துவ அளவுகளிற்கும் உற்பத்திக்கும் இடையில் குறிப்பிடத்தக்க தொடர்பு காணப்பட்டது. தாழ் பிரதேச சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளாக, பயிர்செய்கை பற்றிய புதிய தொழிநுட்ப முறைகளில் போதிய அறிவின்மை, நிதி, பயிற்சி நிலையங்கள் பற்றி அறிந்திராமை, உயர் விலைத் தளம்பல்கள், பச்சை இலைகளுக்கான குறைந்த விலை என்பன இனங்கானப்பட்டன.

### தேயிலை தோட்டங்களிற்கான வெளிப்பயிர்ச்செய்கையாளர் தொகுதி, மாதிரி அமைப்பினை விருத்தி செய்தல்

செலகம தோட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்பயிர்ச் செய்கையாளர்கள் பற்றிய எண்ணக்கரு எல்கந்துவ பெருந்தோட்டத்திற்கு சொந்தமானது. இதன் மூலம் 29 பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் கம்பனிகளில் தொழிலாளர் பற்றாக்குறையினை தீர்ப்பதற்காகவும், விளைச்சல் குறைந்த தேயிலை



நிலங்களை தொழிலாளர்களின் வினைத்திறனான பங்களிப்புடன் மேம்படுத்துவதற்காகவும் ஒரு மாதிரி விருத்தி செய்யப்படும். நிலையத்தின் கொள்ளளவினை விருத்தி செய்தல், தொழிலாளர்களின் தன்னம்பிக்கையினை விருத்தி செய்தல் என்பன பொருளாதார ரீதியில் இலாபத்தை பெறுவதை விட திட்டத்தின் பிறநோக்கங்களாகும். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 8 மாதங்களின் பின்னர் பெறப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் வெளிப்பயிர்ச்செய்கையாளர்களின் வெளிக்களங்களின் விளைச்சல் 2010 இனை விட 2011 இல் அதிகரித்திருப்பதைக் காட்டின. எனினும் 2008 ற்கும் 2011 ற்கும் இடையிலான உற்பத்திகளின் வித்தியாசம் குறிப்பிடத்தக்களவு உயர்வாகக் கணப்பட்டது. இதன் மூலம் 2011 இன் கறுப்புத்தேயிலை உற்பத்தி 165 கிகி இனால் உயர்வடைந்தது. 2008 இன் விளைச்சலுடன் ஒப்பிடுகையில் இவ் வெளிக்களங்களின் விளைச்சலில் 25% அதிகரிப்பு காணப்பட்டது. வெளிப்பயிர்ச்செய்கையாளர்களின் துண்டங்களினால் ஒரு குடும்பத்திற்கு மேலதிக மாதாந்த வருமானமாக ரூபா 2600 கிடைக்கப்பெற்றது. தோட்ட தொழிலாளியினால் பெறப்படும் சராசரி மொத்த வருமானம் ரூபா 5300 தொழிலாளி ஆகும். இத்திட்டத்தின் செயற்பாடுகள் பொருத்தமற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டன.

### தேயிலை பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் GIS தொகுதிகளை நடைமுறைப்படுத்தல்

தேயிலை பெருந்தோட்டங்களின் முகாமைத்துவத்தில் GIS , RS தொழிநுட்பங்களின் பிரயோகம் பற்றி சென் கூம்ஸ் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கற்கை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

ஆர்க்மப் 9.3 மென்பொருளை பயன்படுத்தி GEOEVE1 ஜியோ 0.5மி, PANSHARPEND COLOUR ARCHIEVE 4 BANDS செய்மதிப் படங்கள் டிஜிடல் வடிவமைப்பில் பெறப்பட்டன. வெளிக்கள வரைபடம், நிலப்பாவனை வரைபடம், குலவகை வரைபடம், கட்டிட வரைபடம், என்பன இதில் காணப்படுகின்றன. சென் கூம்ஸ் தோட்டத்தின் DEM இனைப் பெறுவதற்காக 3D பகுப்பாய்வு தொழிநுட்பம் பயன்படுத்தப்பட்டது. இதனை பயன்படுத்தி சாய்வு நோக்கு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வரைபடங்கள் ஆர்க் பிரசுரிப்பினை பயன்படுத்தி பிரசுரிக்கப்படுவதுடன் இதனை பாவனையாளர்கள் இலவசமானதும் பிரயோகிப்பதற்கு இலகுவானதுமான ஆர்க்டி ரீடர் மென்பொருளை பயன்படுத்தி பார்வையிடலாம். தோட்ட முகாமைத்துவம் இதனை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தலாம். உ+ம் பிரதான விவசாய செயற்பாடுகளான பசளைப்பிரயோகம், கவ்வாத்து செய்தல், களையகற்றல், மீள் நடுகை போன்ற செயற்பாடுகளை கால அட்டவணைப்படுத்தல், தொழிலாளர் உற்பத்தி திறனை மேம்படுத்தும் சமூக பொருளாதார நோக்குகள் இவ்வாறு மேற்கொள்வது ஒவ்வொரு தேயிலைச்செடி பற்றிய தகவலையும், வெளிக்களத்தின் ஒவ்வொறு மூலையினையும் டிஜிடல் முறையில் பதிவு செய்யும் DSS க்கு இட்டுச் செல்வதுடன் முகாமைத்துவமாக கணனி சுட்டியினைத் தட்டுவதன் மூலம் இக் கணனி வடிவமைப்பினை பயன்படுத்தி பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முடிவுகளை எடுக்ககூடியதாக இருக்கும்

### உற்பத்தி செலவில் (COP) தொழிலாளர் சம்பள உயர்வும், உரமானியமும் ஏற்படுத்தும் தாக்கம்.

கூட்டுறவு மற்றும் சிறு தேயிலை தோட்ட துறைகளில் தொழிலாளர் சம்பள உயர்வு மற்றும் உரமானியம் ஆகியன தேயிலையின் COP இல் ஏற்படுத்தும் தாக்கம் ஆராயப்பட்டது. கூட்டுறவுத்துறையில் வேதன அதிகரிப்பிற்கு முன்னர் உயர், மத்திய, தாழ், ஊவா பிராந்தியங்களுக்கான மதிப்பிட்ட COP பெறுமதிகள் முறையே 334.66, 342.85, 355.06, 399.85/கிகி தயாரிக்கப்பட்ட தேயிலையாகக் காணப்பட்டன. உரமானியத்தினால் COP இல் ஏற்பட்ட விலைக்குறைவு 1 கிகி தயாரிக்கப்பட்ட தேயிலைக்கு ரூபா 10.37-16-57 வரை வேறுபட்டது. மொத்த COP ஆனது 1 கிகி தேயிலைக்கு ரூபா 42-47 வரை அதிகரித்தது. சிறு தேயிலை தோட்டங்களில் தற்போது COP இல் நேரடி தாக்கம் எதுவும் காணப்படவில்லை. ஆயினும் பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் பயிற்றுவிக்கப்படாத தொழிலாளர்களின் நாள் வேதனம் முறையே ரூபா 650, 450 க்கு அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 3954 கிகி/ஏக்கர்/வருட உற்பத்தியினைத் தரும் தேயிலை வெளிக்களத்தின் 1 கிகி பச்சைத்தேயிலைக்கான COP ரூபா 37.80 ஆகும். எனினும் வேதன திருத்தங்களின் பின்னர் (ரூபா 572/நாள்) 1 கிகி பச்சை இலையின் COP ரூபா 43.19 ஆக அதிகரித்ததுடன் இது மொத்த COP ன் 14% அதிகரிப்பு ஆகும். ஊதிய திருத்தத்தின் பாதகமான விளைவுகளை குறைப்பதற்கு நில மற்றும் தொழிலாளர் வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம் COP இனை கட்டுப்படுத்தல் அவசியம் ஆகும். சிறந்த பயிர் முகாமைத்துவ உற்பத்தி

செயற்பாடுகளை மேற்கொள்ளல், உற்பத்திகளை பல்வகைமைப்படுத்தல், பெறுமதிசேர் பொருட்களை உற்பத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகள் மூலம் உயர் உற்பத்தியினையும் NAS னையும் பெறலாம். COP ன் பெரும்பகுதிக்கு தொழிலாளர் தொடர்புடைய செலவுகள் பங்களிப்பு செய்வதனால் பொருத்தமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதும், தொழிலாளர்களுக்கு ஒப்பந்த வேலைகளை வழங்குவதும் COP இனை கட்டுப்படுத்த உதவும்.

**கடந்த தசாப்தத்தில் தேயிலைக் கைத்தொழிலின் செயற்பாடுகள்**

தேயிலைக் கைத்தொழிலின் செயற்பாடு பற்றிய பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டு முடிவுகள் ஆராயப்பட்டதில் கடந்த தசாப்தத்தில் சிறு தேயிலை தோட்டங்களின் பரப்பளவில் அதிகரிப்பு காணப்பட்டதுடன் உற்பத்தியும் நேரான வளர்ச்சி வீதத்தை கொண்டிருப்பது அறியப்பட்டது. இக்காலப்பகுதியில் ஏனைய துறைகளில் (JEDB, SLSPC), கம்பனிகள் சிறு தேயிலை தோட்டங்கள்) மொத்த உற்பத்தியின் வளர்ச்சி வீதம் மறைப்பெறுமானத்தை கொண்டிருந்தமையையும் கவனிக்க கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் கடந்த 3 தசாப்தங்களில் முகாமைத்துவ கம்பனிகளின் உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வீதம் நேரான பெறுமானத்தை கொண்டிருந்தது. அத்துடன் கூட்டுறவுத்துறையை விட சிறு தேயிலை தோட்டத்துறையின் நிதி வினைத்திறன் ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

# பங்குதாரர்களுக்கான வழங்கப்படும் சேவைகள்

## 1. ஆலோசனை விரிவாக்கல் நிகழ்ச்சிகள்

தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க பயிர்ச்செய்கை தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதற்காக கூட்டுறவு மற்றும் சிறு தேயிலை தோட்ட வெளிக்களங்களுக்கு ஆலோசனை விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பெரும்பாலான ஆலோசனை கூட்டுறவுத்தோட்டங்களிற்கு மேற்கொள்ளப்பட்டதுடன் சிறு தேயிலை தோட்டங்களில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆலோசனை விரிவாக்கற் பிரிவு உத்தியோகத்தர்களினால் மொத்தம் 792 ஆலோசனை விரிவாக்கல் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வருடத்தின் முதல் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட 27% ஆன விஜயங்கள் தென்மேல் பகுதியில் நிலத்தினை தெரிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டன. 10% மான விஜயங்கள் இசைவாக்கற் பரிசோதனைகளை கண்காணிப்பதற்கான விரிவாக்கல் விஜயங்களாக அமைந்தன.

தெனியாய விரிவாக்கல் மையத்தினை சேர்ந்த விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் கூட்டுறவு மற்றும் சிறு தேயிலை தோட்டங்களிற்கு 248 விஜயங்களை மேற்கொண்டனர். இது மொத்த ஆலோசனை விரிவாக்கல் விஜயங்களின் 31% ஆகும். உயர் பிரதேச ஆலோசனை விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் இவ்வருட 232 விஜயங்களை மேற்கொண்டனர். தாழ் பிரதேச பிராந்திய மைய, மத்திய, காலி, பசறை, களுத்துறை மையங்களைச் சேர்ந்த விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் முறையே 130, 58, 54, 48, 22 விஜயங்களை மேற்கொண்டனர். மீள்நடுகைக்காக நிலத்தின் பொருத்தப்பாட்டினை ஆராய்வதற்காக பெரும்பாலான ஆலோசனை விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய ஆலோசனை விஜயங்கள் பெரும்பாலும் விளைச்சல் வீழ்ச்சி, செடிகளின்





நலிவடைதல், நாற்றுமேடை தோல்வி, நோய்பீடைத்தாக்கம் என்பவற்றை ஆராய்வதற்காக விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டன.

## 2. கல்வி, பயிற்சி நடவடிக்கைகள், குழுப்பயிற்சி நிகழ்ச்சிகள்

ஆலோசனை விரிவாக்கற் பிரிவு உத்தியோகத்தர்கள் நிலையத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுடன் இணைந்து மொத்தமாக 516 பயிற்சி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், வெளிக்கள நாட்களை நடாத்தினர்.
பெரும்பாலான பயிற்சி நிகழ்ச்சிகள் (39%) தெனியாய பிராந்தியத்தில் வளமாக்கி பாவனை, மண்வளம், பீடைக்கொல்லிகளின் பாதுகாப்பான பாவனை, நோய் பீடைத்தாக்கம் என்பவற்றை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டன.

### பயிற்சி நிகழ்ச்சிகள்

பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும், பெருந்தோட்டத்துறையில் விரிவாக்கல் செயற்பாட்டுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கும் NIPM இனால் பல பயிற்சி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. RPC ன் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்ட 3 நாட்கள் பயிற்சி நிகழ்ச்சியில் விளைச்சலை அதிகரிக்கும், அறுவடைக்கு பின்னரான இழப்பினை குறைக்கும் வெளிக்கள செயற்பாடுகளை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டன. தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் ஏனைய விவசாய துறைகளைச் சேர்ந்த 25 விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய 10 நாட்கள் பெருந்தோட்ட

முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சியில் தேயிலை பயிர்செய்கை தொடர்பான செயன்முறை பிரயோகங்கள் பற்றிய பயிற்சியும், விரிவாக்கல், தொலைதொடர்பு IT தொடர்பான அடிப்படை அறிவும் வழங்கப்பட்டன. NIPM இனால் ஒழுங்கு செய்யப்பட்ட அறிமுக பயிற்சி நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பெருந்தோட்டத்துறையை சேர விருப்பமுள்ள பாடசாலை கற்கையை நிறைவு செய்தவர்களுக்கு தேயிலை பயிர்செய்கை, பதனிடுதல் தொடர்பாக 12 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் TSHDA ல் புதிதாக நியமிக்கப்பட்ட தேயிலை மேற்பார்வையாளர்களுக்காக TSHDA இனால் ஒழுங்கு செய்யப்பட்ட 6 நாட்கள் அறிமுக பயிற்சி நிகழ்ச்சியில் ஆலோசணை விரிவாக்கற் பிரிவு உத்தியோகத்தர்கள் தேயிலையின் பயிர்செய்கை

**தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கல் நிகழ்ச்சி**

தொழிற்சாலையினை அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கல் உத்தியோகத்தர்களை, தயாரிக்கப்பட்ட தேயிலையில் MRL ன் முக்கியத்துவம், விவசாய இரசாயன பொருள் பாவனை பற்றிய வெளிக்கள தரவுகளைப் பேணுதல், தொடர்பாக அறிவூட்டுவதற்காக காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தேயிலை சபையுடன் இணைந்து TSHDA பல பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியது. இதன்போது தொழிற்சாலையுடன் நேரடியாகத் தொடர்புடைய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் பொருத்தமான வெளிக்கள தரவுகளை பேணுவதன் முக்கியத்துவம் பற்றி அறிந்திருந்தமை தெரியவந்தது.

## 3. பங்குபற்றல் தொழிநுட்பத்தை பரப்பும் செயற்பாடுகள் பிராந்திய தொழிநுட்ப விரிவாக்கல் கூட்டம் (RTEF)

TSHDA ன் சகல 8 பிராந்திய முகாமைத்துவ பிரதேசங்களை உள்ளடக்கி 12 RTEF கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டன. பொருத்தமான மண் முகாமைத்துவத்தின் மூலம் வளமாக்கி பாவனை வினைத்திறனை அதிகரித்தல், நிழல் முகாமைத்துவம், TRI 3000, 4000 தொடர் குலவகைச் செடிகளின் வளர்ச்சி என்பன ஆராயப்பட்ட முக்கிய விடயங்களாகும். அத்துடன் தெனியாயவில் மேற்கொள்ளப்பட்ட செடிகள் நலிவடைதல் பற்றிய ஆய்வு முடிவுகள் கலந்துரையாடப்பட்டதுடன், நடுகைப்பதார்த்தம் சட்டம் மூலம் வர்த்தக நாற்றுமேடைகளை மேற்பார்வை செய்யும் நிதி சட்டங்கள் வலுவாக்குவதன் முக்கியத்துவம், மற்றும் எல்லாப் பிராந்தியங்களிலும் தரமான வர்த்தக நாற்றுமேடைகளை ஸ்தாபிப்பதன் முக்கியத்துவமும் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது. ஊவா பிராந்தியத்தில் நடைபெற்ற RTEF ல் கவ்வாத்து செய்தல், தேயிலை மீள்நடுகையும் அதன் விஞ்ஞான பின்புலமும், பீடைமுகாமைத்துவமும் தேயிலைக்கு சிபாரிசு செய்யப்பட்ட பீடைநாசினிகளும் ஆகிய தலைப்புகள் கலந்துரையாடப்பட்டன.

**சிறு தேயிலை தோட்டத்துறைக்கான பரிசோதனை விரிவாக்கல் கூட்டம்**

TRI, TSHDA, SLTP, SLPTOA உத்தியோகத்தர்கள், தேயிலை சமூக உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் வருடத்திற்கு இரு தடவை நடாத்தப்படும் பரிசோதனை விரிவாக்கல் கூட்டம் இவ்வாண்டு ஜூலையிலும், டிசெம்பரிலும் நடாத்தப்பட்டது. ''சிறு தேயிலை தோட்ட நிலப்பரப்பின் தற்போதைய செலவுக் கணிப்புகளும் இலாபத்தினை அதிகரிக்கும் வழிமுறைகளும்'', ''தேயிலை பயிர்செய்கையில் இயந்திரங்களை பயன்படுத்தல்'', ''தெனியாய பிரதேச செடிகள் நலிவடைவதற்கான காரணத்தை ஆராயும் கற்கை முடிவுகள்'' , ''SHB முகாமைத்துவம்'', மண் pH தாங்கற்தன்மையும் அதன் பிரயோகங்களும்'', ''சிறு தேயிலை தோட்டங்களில் ஊடுபயிர்செய்கைக்கான தெரிவுகள்'', ''நிழல் முகாமைத்துவம்'' என்பன கூட்டத்தில் ஆராயப்பட்ட தலைப்புகள் ஆகும். திறந்த கூட்டத்தின் போது தேயிலை பயிர்செய்கையில் இயந்திரங்களை பயன்படுத்தும் சாத்தியக்கூறுகள் பற்றி சுட்டிக்காட்டப்பட்டது.

**கூட்டுறவுத்துறைக்கான பரிசோதனை விரிவாக்கல் கூட்டம்**

கூட்டுறவுத்துறை முகாமையாளர்கள் CEO க்கள் கூட்டுறவுத்துறையின் சிரேஷ்ட்ட நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோருக்கு TRI தலவாக்கலையில் இரண்டு E&E கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**222வது E&E கூட்டம் – 28.01.2011 ''பொருத்தமான நிலப்பாவனை மூலம் உற்பத்தி வீழ்ச்சியினை''**

ஆராய்ச்சி கட்டுரை 1 :- கூட்டுறவுத் தேயிலைத்துறையில் உற்பத்தி வீழ்ச்சியை ஏற்படுத்தும் காரணிகள் - Dr.V.S சிதாகரன்.

ஆராய்ச்சி கட்டுரை 2 :- நில உற்பத்தியில் சில அடிப்படை கவ்வாத்து செயற்பாடுகளின் தாக்கம் - Dr.M.A விஜேரத்ன.

ஆராய்ச்சி கட்டுரை 3 :- தேயிலைக்கு பொருத்தமான ஒட்டுக்கட்டை, ஒட்டுக்கிளை சேர்மானங்கள் - Mrs. LASP ஜயசிங்க.

**223வது E&E கூட்டம் – 29.01.2011 ''தற்போதைய உலகச்சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இலங்கை தேயிலையின் சவால்கள்''**

ஆராய்ச்சி கட்டுரை 1 :- வாட்டுதலின் அளவினை நியமப்படுத்துவதன் மூலம் ஒதடொக்ஸ் ரொடார்வான் வகைத் தேயிலையின் தரத்தினை மேம்படுத்தல்.

ஆராய்ச்சி கட்டுரை 2 :- தேயிலையின் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒதடொக்ஸ் தேயிலை பதனிடுதலின் சுழற்தொகுதியில் வெவ்வேறு துவாரப்பருமனுடைய வகைகளைப் பயன்படுத்தல் - Mr. G.L.C கலஹிட்டியாவ.

ஆராய்ச்சி கட்டுரை 3 :- சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதற்கான தேயிலையின் தரங்கள்

**பிராந்திய விஞ்ஞான குழுக்கூட்டம் (RSC)**

சகல 7 RSC பிராந்தியங்களையும் உள்ளடக்ககூடிய வகையில் RSC இனால் 8 கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இக்கூட்டங்களில் ''விவசாய

செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் வளமாக்கி பாவனை வினைத்திறனை மேம்படுத்தல்'', ''நோய் பீடைகள், களைகளை கட்டுப்படுத்தவதற்கான இரசாயன பொருட் பாவனையும் ஏனைய மாற்றீட்டு முறைகளும்'', ''பெருந்தோட்டத்துறையில் மனிதவள முகாமைத்துவம்'', ''கவ்வாத்து முறைகளினதும் அதனை மேற்கொள்ளும் காலத்தினதும் முக்கியத்துவம்'', ''உயர் பிரதேசத்தில் உற்பத்தினை விலையினையும் அதிகரிப்பதற்கான GAP யும் GMP யும்'', ஆகியன ஆராயப்பட்ட முக்கிய தலைப்புகள் ஆகும். 2011.04.01 அன்று ஊவாவில் நடைபெற்ற RSC கூட்டத்தில் ''நிழல் மரங்களின் முகாமைத்துவம் அவற்றின் முக்கியத்துவமும்'', ''மீள்நடுகைக்காக தரமான நடுகை பதார்த்தங்களின் முகாமைத்துவம்'', ''தேயிலை உற்பத்தியில் சக்தி சேமிப்பு'' ஆகிய தலைப்புகள் ஆராயப்பட்டன.

**பங்காளிகளின் கூட்ட கருத்தரங்குகள்**

TRI விஞ்ஞானிகளிற்கும் இடையிலான இடைத்தொடர்பினை வலுப்படுத்தும் நோக்குடன் CEO மற்றும் RPC ன் சிரேஷ்ட்ட முகாமைத்துவமும் ஏனைய தேயிலையுடன் தொடர்புடைய ஸ்தாபனங்களும் பங்குபற்றிய இரண்டு கருத்தரங்குகள் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் நடாத்தப்பட்டன. ஏப்ரலில் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டுறவுத்துறை தேயிலைத் தோட்டங்களின் பயிராக்கவியல் மற்றும் ''RPC தேயிலைத் தோட்டங்களின் பயிராக்கவியல் ஆகிய ஆவணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. TRI ஐச் சேர்ந்த 3 சிரேஷ்ட்ட விஞ்ஞானிகள் / விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் கூட்டுறவுத்துறை தேயிலை பெருந்தோட்டங்களின் தற்போதைய நிலையும் TRI சிபாரிசுகள் பயன்படுத்தப்படும் அளவும், நீடித்த உயர் விளைச்சலுக்கான சிறந்த விவசாய செயற்பாடுகளை பின்பற்றுதல், ஆகிய தலைப்புகளில் கருத்துகளை முன்வைத்தனர். 4 சிரேஷ்ட்ட தோட்ட அதிகாரிகள் மண் முகாமைத்துவ செலவுகள் கவ்வாத்துகளை புதைப்பதனால் ஏற்பட்ட நன்மைகள், தேயிலை வேர்களின் இரசாயன திருப்ப விளைவுகள், தேயிலை வெளிக்களங்களில் ரொக்பொஸ்பேட்டினைப் பயன்படுத்தும் மாற்று முறைகள் ஆகிய தலைப்புகளில் கருத்துக்களை முன்வைத்தனர்.

## 4. தகவல் பரப்புதல்

**ஆலோசணை கடிதத் தொடர்புகள்**

பெருந்தோட்டங்களிற்கும் சிறு தேயிலை தோட்டங்களிற்கும் மேற்கொள்ளப்பட்ட ஆலோசணை விஜயங்களை அடுத்து மொத்தம் 2,961 ஆலோசணை கடிதத்தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலானவை வருடத்தின் 2ம், 4ம் காலாண்டு பகுதியில் இடம்பெற்றன. இவ்விரு காலாண்டுப் பகுதியில் இரண்டு மழைப்பருவகாலங்களும் பொருந்துவதால் இக்காலப்பகுதியில் தேயிலை வளர்ப்போர் களை முகாமைத்துவம், நோய் பீடை பிரச்சனைகள், ஏனைய பயிர்செய்கை செயற்பாடுகள் தொடர்பான ஆலோசணைகளையும் பெற்றும் கொண்டனர்.

**ஒளிப்பட, தகவல் சாதனங்கள்**

விரிவாக்கல் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காகவும், தகவல்களை பரப்புவதற்காகவும் பல கல்வி விரிவாக்கல் தகவல் சாதனங்கள் ஆலோசணை விரிவாக்கல் உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டன.

24 டிஜிடல் சுவரொட்டிகளும், 12 பதாகைகளும், 8 நாற்றுமேடை முகாமைத்துவம் பற்றிய ஒரு சுவரொட்டியும் இவற்றுள் அடங்கும். DVD களை கவனமாகக் கொண்டு செல்வதற்காக DVD பைகள் தயாரிக்கப்பட்டன. விடய விற்பனர்களின் அனுசரணையுடன் 15 ஆலோசணை சுற்றறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

**விநியோகிக்கப்பட்ட பிரசுரங்கள்**

- ஆலோசணை சுற்றறிக்கைகள் இல PA 2 - தேயிலை பெருந்தோட்டங்களில் வரட்சியை சமாளித்தல்.

- வழிகாட்டி இல 01/11 - வரட்சியை தொடர்ந்து தேயிலை நிலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் (சிங்களம்/ஆங்கிலம்).

- வழிகாட்டி இல 01/11 - தேயிலை நிலங்களின் மண் வளத்தினையும், உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக கவ்வாத்துகளை புதைத்தல் பற்றிய வழிகாட்டி.

- TRI அப்டேட் :- இதழ் 13 இல 02
- தே தது :- இதழ் 7, பாகம் 01
- தே தது :- இதழ் 8, பாகம் 01

**பிரசுர விற்பனை**

பிரசுர விற்பனை மூலம் பெற்ற வருமானம் ரூபா 454520.50

அச்சிடல் /பிரதி எடுத்தல் செயற்பாடுகள்

வேண்டுகோளின் பேரில் ஏனைய பிரிவுகளிற்கான அச்சிடல் சேவைகளை இவ் அலகு வழங்கியுள்ளது. இவற்றுள் ஆலோசணை சுற்றறிக்கைகள், E&E அமர்வு பிரசுரங்கள் என்பன அடங்கும்.

**இணையத்தளம்**

11.07.2011 அன்று தரமுயர்த்தப்பட்ட TRI ன் இணையத்தளம் மாண்புமிகு அமைச்சர் மஹிந்த சமரசிங்க அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

**புகைப்படவியல் அலகு**

நிலையத்தில் நடைபெற்ற சகல வைபவங்களையும் உள்ளடக்கியதாக மொத்தம் 6254 டிஜிடல் புகைப்படங்கள் எடுக்கப்பட்டதுடன், 568 உத்தியோகபூர்வ புகைப்படங்களும், 705 தனிப்பட்ட புகைப்படங்களும் தனிப்பட்ட புகைப்பட விற்பனை மூலம் ரூபா 17,625 வருமானம் பெறப்பட்டது.

## 5. TRI க்கான விருந்தினர்கள்

மொத்தம் 8490 பங்காளிகள், மாணவர்கள், வெளிநாட்டு விருந்தினர்கள் TRI க்கு தேயிலை பயிர்செய்கை தொர்பான அறிவினையும் விழிப்புணர்வையும் பெறுவதற்காக வருகை தந்தனர். சிரேஷ்ட்ட அரச உத்தியோகத்தர்கள், TSHDA உத்தியோகத்தர்கள், கூட்டுறவுத்துறை தேயிலை பெருந்தோட்ட முகாமையாளர்கள், வர்த்தக நாற்றுமேடை உரிமையாளர்கள், இப் பிராந்தியத்தில் உள்ள சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்புடன் களுத்துறை விரிவாக்கல் மையத்தில் நாற்றுமேடை முகாமைத்துவம் பற்றிய விரிவாக்கல் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

பொருத்தமான குலவகைகளை இனம் காணல், பொருத்தமான வளர்ப்பு ஊடகங்களை இனம் காணல், ஒட்டுதலில் கையாளப்படும் நுட்பங்கள், உள்ளடங்களாக நாற்றுமேடை முகாமைத்துவம் பற்றிய பல TRI ன் ஆலோசணை பயிராக்கவியல், தாவர இனவிருத்தி, பூச்சியியல்/புழுவியற் பிரிவு உத்தியோகத்தர்களினால் செயன்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

பதுளையில் நடைபெற்ற தயற்றகிருல தேசிய கண்காட்சி உட்பட 7 பொது, கல்வியற் கண்காட்சிகளில் ஆலோசணை பிரிவு உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். ஊவா விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரி தயற்றகிருல கண்காட்சி நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தார்.

**மண் பகுப்பாய்வு**

காலி, பசறை, இரத்தினபுரி, கண்டி, தெனியாயவில் உள்ள விரிவாக்கல் மைய உத்தியோகத்தர்களினால் மண் பகுப்பாய்வு சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக குறிப்பிட்டளவு நடுகைப் பதார்த்தங்களும் விநியோகிக்கப்பட்டன. ஆலோசணை உத்தியோகத்தர்களினால் $P^{H}$ க்காக 2,621 மாதிரிகளும், சேதன காபன் அளவிற்காக 386 மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன. தரவுகளின்படி முதிர் தேயிலை வெளிக்களங்கள் கவ்வாத்து செய்வதற்கு முன்னரான 2ம், 3ம் காலாண்டு பகுதியில் $P^{H}$ பரிசோதனைக்காக பெரும்பாலான மாதிரிகள் பெறப்பட்டன.

### புதிய குலவகை வெட்டுத் துண்டங்கள்

6 TRI, 12 TSHA, 2 தனியார், 12 தென்மாகாண சிறு தேயிலை தோட்ட வெளிக்களங்களில் இருந்து 2011 ஜனவரி முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் சிறு தேயிலை தோட்டங்களிற்கும் கூட்டுறவுத்துறை தோட்டங்களிற்கும் TRI 3000 , TRI 4000 தொடர் குலவகையைச் சேர்ந்த 7.8 மில்லியன் வெட்டுத் துண்டங்கள் விநியோகிக்கப்பட்டன. பெரும்பாலான வெட்டுத் துண்டங்கள் 1ம் (37%), 4ம் (38.3%) காலாண்டு பகுதிகளில் ஊவா பிரதேசத்தில் TRI 4053, 4052, 4042, 3019 குலவகைகளுக்கான கேள்வி ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. எனினும் தாழ் பிரதேசத்தில் TRI 4049 உம் மத்திய பிரதேசத்தில TRI 4006, 4046 ற்கும் அதிகளவு கேள்வி காணப்பட்டது. உயர் பிரதேசத்தில் TRI 4017, 4052, 3019 ற்கான கேள்வி அதிகமாகக் காணப்பட்டது. 2011 ம் ஆண்டில் 15 மில்லியன் வெட்டுத் துண்டங்கள் விநியோகிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த போதும் பொருத்தமற்ற காலநிலை, TRI 3000 , TRI 4000 தொடர் குலவகைகளிற்கான கேள்வி குறைவாகக் காணப்பட்டமை போன்ற காரணங்களினால் இலக்கினை அடைய முடியவில்லை.

### வர்த்தக நாற்றுமேடை கண்காணிப்பு

TSHA ன் வேண்டுகோளிற்கு அமைய மீள் நடுகைக்கு பொருத்தமான செடிகளை அங்கீகரிக்கும் பொருட்டு 137 வர்த்தக தேயிலை நாற்றுமேடைகள் மேற்பார்வை செய்யப்பட்டன. மேற்பார்வை செய்யப்பட்ட செடிகளின் இலைகளின் எண்ணிக்கை, செடிகளின் உயரம், பைகளின் அளவுகளின் அடிப்படையில் 55-60% ஆன செடிகளே அங்கீகரிக்கப்படக்கூடியதாக இருந்தன.

## 6. விரிவாக்கல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள்
### விரிவாக்கல் மையங்களை தரமுயர்த்துதல்

களுத்துறை மாவட்டத்தில் தேயிலை வளப்போரிற்கு விரிவாக்கல், பயிற்சி வசதிகளை வழங்கும் பொருட்டு இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தின் நிவித்திகல்கல்கலே பயிற்சி மையத்தில் ஒரு விரிவாக்கல் மையம் ஸ்தாபிக்கப்பட்டது. தேயிலை வளர்ப்போரிற்கான நடுகைப் பதார்த்தங்களை வழங்கும் கொள்ளளவினை அதிகரிக்கும் நோக்குடன் காலி விரிவாக்கல் நிலையத்தில் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேயிலை தொடர்பான தகவல்களை பரப்புவதற்கும், விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு தேவையான ஒலி-ஒளி சாதனங்களை தயாரிப்பதற்குமாக பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்துடன் இணைந்து மத்திய பிரதேச பிராந்திய மையத்தில் தகவல் மையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. தகவல்

நிலையத்திற்கான உட்கட்டமைப்புகள், கணனிகள், கணனி வலையமைப்பு வசதிகள் பெறப்பட்டன. தகவல் மையத்திற்கான டிஜிடல், அச்சிடப்பட்ட ஒலி-ஒளி சாதனங்களை தயாரிக்கப்படுகின்றன.

## 7. விரிவாக்கல் ஆராய்ச்சிகள்

### தேயிலை பெருந்தோட்டங்களில் விவசாய செயற்பாடுகளை கண்காணித்தல்

கூட்டுறவுத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் இரண்டு ஆவணங்களில் முன்வைக்கப்பட்டன. 2011.04.04 ல் கொழும்பில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் முன்வைக்கப்பட்ட இவ் ஆவணங்களாவன ‘‘கூட்டுறவுத்துறை தேயிலை பெருந்தோட்டங்களின் பயிராக்கவியல்’’, ‘‘RPC தேயிலை பெருந்தோட்டங்களின் மேலும் இவ் ஆய்வின் முடிவுகள் பெருந்தோட்ட அமைச்சில் மாண்புமிகு அமைச்சர், அமைச்சின் சிரேஷ்ட்ட உத்தியோகத்தர்கள், சகல RPC ன் CEO களுக்கும் முன்வைக்கப்பட்டது.

கூட்டுறவுத்துறையினால் TRI சிபாரிசுகள் பின்பற்றப்படும் அளவையும் அவற்றை பின்பற்றுவதால் ஏற்படும் பிரச்சனைகளையும் அறிவதற்காக ஆலோசனை உத்தியோகத்தர்கள் கண்காணிக்கின்றனர்.

### தேயிலை பயிர்செய்கையாளர்களினால் பெரிதும் பின்பற்றப்படும் விவசாய செயற்பாடுகளை இனங்கண்டு மதிப்பிடுதல்

தேயிலை பயிர்செய்கையாளர்களினால் பெரும்பாலும் பின்பற்றப்படும் விவசாய செயற்பாடுகளை இனம் கண்டு அவற்றை மதிப்பிடுவதற்காக ஆலோசனை உத்தியோகத்தர்களினால் பயிற்சி பட்டறைகள், வெளிக்கள நாட்கள், கூட்டுறவுத்துறை சிறு தேயிலை தோட்டங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட விஜயங்களின் போதும் சேகரிக்கப்பட்ட தரவுகளில் பல கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இனங்காணப்பட்ட விவசாய செயற்பாடுகளில் சில ஆவண:- தேயிலை வெளிக்களங்களில் பெட் செடிகளை பயன்படுத்துதல், தேயிலை நாற்றுமேடைகளில் வெவ்வேறு அளவிலான பைகளை பயன்படுத்துதல், நாற்றுமேடை பைகளில் வெவ்வேறு மண் வகைகளைப் பயன்படுத்துதல், தேயிலை நாற்றுமேடைகளில் வெவ்வேறு நிழற் சாதனங்களைப் பயன்படுத்துதல், ஒரே பையில் வளர்க்கப்படும் வெட்டுத் துண்டம் மற்றும் விதைத்தேயிலை செடிகளை ஒட்டுதல், வெளிக்களங்களில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வளமாக்கி கரைசலை உயர் செறிவில் பயன்படுத்துதல். இனம்காணப்பட்ட செயற்பாடுகள் பிரிவுக்கூட்டத்தில் ஆலோசனை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றுள் சில தேயிலை வளர்ப்போரின் பின்னூட்டலை பெறுவதற்காக ‘‘தேயிலை செய்தி’’ யில் பிரசுரிக்கப்பட்டன.

பெட் செடிகளை உபயோகித்தல் வெவ்வேறு அளவுடைய நாற்றுமேடை பைகளை பயன்படுத்துதல், ஒரே பையில் வளர்க்கப்படும் வெட்டுத் துண்ட விதைத்தேயிலை செடிகளை ஒட்டும் சாத்தியகூறுகள். பற்றிய ஆரம்ப கணிப்பீடுகளை மேற்கொள்வதற்காக தலவாக்கலையில் நாற்றுமேடை பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.2012 பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெளிக்களங்களில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வளமாக்கி கலவைகளை உயர் செறிவில் பயன்படுத்தும் செயற்பாட்டை ஆராய்வதற்கான களை செறிவு கற்கை ஒன்று சென் கூம்ஸில் மேற்கொள்ளப்பட்டது.

**பொது தனியார் விரிவாக்கல் அணுகுமுறை**

பொதுத்துறைக்கும் தனியார்துறைக்கும் இடையிலான தகவல் தொடர்பாடலில் உள்ள இடைவெளிகளை நீக்குவதற்காகவும், விரிவாக்கல் சாதனங்களை தயாரிக்கும் போது இணைந்து செயற்படுவதற்குமாக பொது தனியார் விரிவாக்கல் அணுகுமுறையின் தன்மைகளை மதிப்பிடுவதற்கான கற்கைகள் பல ஆரம்பிக்கப்பட்டன. பெருந்தோட்டத்துறையில் உள்ள தனியார் விரிவாக்கல் தொகுதி, விவசாய இரசாயன பொருள் விநியோகிப்பாளர்கள், பல்கலைக்கழகங்கள், மற்றும் தேயிலை துறையில் தொடர்பான தகவல் பரப்புதலில் ஈடுபடும் ஏனைய ஸ்தாபனங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதை ஆராய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

**கூட்டுறவுத்துறை தேயிலை தோட்டங்களிற்கான விரிவாக்கல் அணுகுமுறை**

கூட்டுறவுத்துறை தேயிலை தோட்டங்களில் மேற்பார்வை, தொழிலாளர் மட்டங்களிடையே காணப்படும் விவசாய அறிவு தொடர்பான இசைவாக்க இடைவெளிகளை சுட்டிக்காட்டுவதற்காக வட்டவல பெருந்தோட்ட லிமிட்டட்டுடன் மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கல் அணுகுமுறை 6 தோட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் TRI யினால் வெளிக்கள உத்தியோகத்தர்கள்/உதவியாளர்கள்/சேமநல உத்தியோகத்தர்கள்/தோட்ட வைத்திய உதவியாளர்கள் போன்றோர் தேயிலை அறுவடை செய்தல், கவ்வாத்து செய்தல் போன்ற செயற்பாடுகளில் பயிலுனர்களாக பயிற்றுவிக்கப்பட்டனர். இப் பயிற்சியில் தேயிலை தொடர்பான தொழிநுட்ப விடயங்கள் மட்டுமன்றி தொலைத்தொடர்பு, சுகாதாரம், போசணை போன்ற தொழிலாளர் உற்பத்தித்திறனுடன் தொடர்புடைய விடயங்களும் உள்ளடக்கப்பட்டன. இவ்வருடம் நடாத்தப்பட்ட 6 நிகழ்ச்சிகளில் 30 பயிலுனர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். TRI யின் உதவியுடன் இப்பயிலுனர்கள் கனிஷ்ட்ட உத்தியோகத்தர்களையும், கொழுந்தெடுக்கும் குழு, கவ்வாத்து செய்யும் குழு போன்ற தொழிலாளர் குழுக்களையும் பயிற்றுவிக்க தொடங்கினர். பெருந்தோட்ட முகாமைத்துவத்தினால் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

1. நல்ல விவசாய செயற்பாடுகள் தொடர்பான விவசாய அறிவினை பெற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளை மேம்படுத்துவதுடன் மேற்பார்வை, தொழிலாளர் மட்ட பெருந்தோட்ட உத்தியோகத்தர்களுக்குள் சிறந்த விவசாய செயற்பாடுகளை பின்பற்றுதல்.

2. பெருந்தோட்ட தொழிலாளர்களை பயிற்றுவிக்கும் வினைதிறனை மேம்படுத்தல்.

3. வெளிக்கள தொழிலாளர்களுக்கும், உத்தியோகத்தர் களுக்கும் தமது வேலை தொடர்பாக நேரான உளப் பாங்கினை ஏற்படுத்தலும் GAP யினை நடைமுறைப் படுத்தலும்.

4. சராசரி கொழுந்தெடுத்தல் அளவு, கொழுந்தெடுத்தல் தரம், தொழிலாளர் வருகை போன்றவற்றை அதிகரிப்பதன் மூலம் தொழிலாளர் உற்பத்தி திறனையும் வேலையின் தரத்தினையும் மேம்படுத்தல்.

**சைபர் விரிவாக்கல் செயற்பாடுகள்**

கூட்டுறவு, சிறு தேயிலை தோட்ட பயிர்செய்கையாளருக்கு காலத்திற்கு ஏற்ற பொருத்தமான தொழிநுட்பக் கடத்துகை செயற்பாடாக பிரயோகிக்ககூடிய சகல தகவல் தொலைத்தொடர்பு தொழிநுட்பங்களையும் பயன்படுத்தி, சைபர் விரிவாக்கல் செயற்பாடானது ஆரம்பிக்கப்பட்டது. தொழிநுட்ப பிறப்பாக்கற் தொகுதிக்கும், தொழிநுட்ப பயன்பாட்டுத் தொகுதிக்கும், இடையிலான தவவல் கடத்துகை காலத்தை குறைப்பதன் மூலம் தேயிலை வளப்போரிற்கு இடையிலான தொழிநுட்ப இசைவாக்க இடைவெளியினை குறைப்பதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். சைபர் விரிவாக்கல் செயற்பாடுகளுக்குத் தேவையான டிஜிடல் மற்றும் செவிப்புல சாதனங்களை தயாரிக்கும் வசதிகளையும், ICT வசதிகளையும், உள்ளடக்கியதான பிரதான தகவல் நிலையம் ஹந்தானையில் உள்ள TRI மத்திய பிரதேச பிராந்திய மையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறையின் தேயிலை பயிர்செய்கையாளர்கள் சைபர் விரிவாக்கல் வசதிகளை பயன்படுத்தும் தன்மை அதனை பயன்படுத்தி தமது இலாபத்தினை அதிகரிக்க எதிர்பார்க்கும் முறைகள் பற்றி அறிவதற்காக மாதிரி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

### தெனியாய பிராந்தியத்தில் செடிகள் நலிவடைதல் தொடர்பான ஆய்வு

தெனியாய பிராந்தியத்தில் தேயிலை செடிகளின் விளைச்சல் குறைவடைதல், செடிகள் நலிவடைதல் என்பவற்றுக்கான காரணிகளை இனங்கண்டு ஆராய்வதற்காக TSHDA உடன் இணைந்து ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கட்டபெல, பஸ்கொட, அகுரஸ்ஸ சிரேஷ்ட்ட தேயிலை மேற்பார்வையாளர் பிரிவுகளில் உள்ள சிறு தேயிலை தோட்டங்களிலிருந்து 60 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆராயப்பட்டதுடன், TSHDA வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் ஆலோசனை உத்தியோகத்தர்கள் இணைந்து தயாரித்த கேள்வி கொத்து மூலம் பயிர்செய்கையாளர்கள் செவ்வி காணப்பட்டன. SHB தாக்கம், தாழ்பிரதேச ஈரத்தண்டுக்கரையானின் தாக்கம், நெமற்றோடு தொற்றுகை, பொருத்தமற்ற நடுகைப்பதார்த்தங்களை பயன்படுத்துதல், மண் வளம் குறைதல், தண்டுப்புற்றுநோய், பொருத்தமற்ற பயிர்செய்கை செயற்பாடுகளை பின்பற்றுதல் போன்றன தேயிலை செடிகள் நலிவடைவதற்கான காரணங்கள் என முடிவுகள் காட்டின. இம்முடிவுகள் RTEF, E&E, RSC கூட்டங்களில் முன்வைக்கப்பட்டன.

### பயிர்செய்கைக்கு உட்படுத்தப்படாத நில ஆய்வு

RPS ல் பயிர்செய்கைக்கு உட்படுத்தப்படாத தேயிலை நிலங்களை இனம்காண்பதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேயிலை வளர்க்கப்படும் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கிய ஆய்வில் ஆலோசனைப்பிரிவு, சில ஆராய்ச்சி பிரிவு உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

## 8 இசைவாக்கற் பரிசோதனைகள்

### வளமாக்கி இசைவாக்கற் பரிசோதனைகள்

TRI யினால் சிபாரிசு செய்யப்படும் வளமாக்கி கலவைக்கும் சிறு தேயிலை தோட்டபயிர்செய்கையாளர்களினால் பயன்படுத்தப்படும் வளமாக்கிக்கும் இடையிலான தெரிவினை ஆராய்வதற்கு TRI மண் தாவரப்போசணை பிரிவு TSHDA உடன் இணைந்து 26 சிரேஷ்ட்ட தேயிலை மேற்பார்வையாளர் பிரிவுகளில் இசைவாக்கற் பரிசோதனைகள் ஸ்தாபிக்கப்பட்டன. TSHDA ஆலோசனை பிரிவு உத்தியோகத்தர்களினால் இவை நாளாந்தம் கண்காணிக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவற்றின் செயற்பாடு பற்றி கலந்துரையாடுவதற்கும், எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதற்காகவும் இவ்வருடம் 10 கண்காணிப்பு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### சிறு தேயிலைத் தோட்டங்களில் TRI 3000 , TRI 4000 தொடர் குலவகைகளின் வளர்ச்சியை ஆராய்வதற்கான ஆய்வு

TRI யினால் வெளியிடப்பட்ட TRI 3000 , TRI 4000 தொடர் குலவகைகளின் மீதான தேயிலை பயிர்செய்கையாளர்களின் நிலைப்பாட்டினை அறிவதற்காக தேயிலை வளர்க்கப்படும் சகல பிராந்தியங்களிலும், தாவர இனவிருத்தி பிரிவு, TSHDA உடன் இணைந்த ஆய்வினை மேற்கொண்டது. தெனியாய, பசறை பிராந்தியங்களில் தரவு சேகரிக்கும் பணிகள் நிறைவடைந்ததுடன் கண்டி, இரத்தினபுரி பிராந்தியங்களில் தொடர்கின்றன. தெனியாய பிராந்திய ஆய்வு முடிவுகள் பரிசோதிக்கப்பட்ட 50 மாதிரிகளில் 90% க்கும் அதிகமான பயிர்செய்கையாளர்கள் TRI 4042 இனை மட்டும் வளர்ப்பதையும் இது அனேக அனுகூலமான தன்மைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படுவதனையும் காட்டியது. எனினும் சில பயிர்செய்கையாளர்கள் TRI 2026, 2025 என்பன சிறந்ததெனக் கருதினர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளில் 5% மானவை புதிய குலவகைகள் தொடர்பான பிரச்சனைகள் உள்ளதென தெரிவித்தனர். அத்தகைய வெளிக்களங்கள் மேலதிக கற்கைக்காக தெரிவு செய்யப்பட்டன. பூக்கள் அரும்புகளை தோற்றுவிக்கும் தன்மை, குறைந்த விளைச்சல்

போன்ற காரணங்களினால் பயிர்செய்கையாளர்கள் TRI 3025, 4053, 4052 தொடர்பான மறையான கருத்துக்களை தெரிவித்தனர்.

### தேயிலை நாற்றுமேடைகளில் உயிர்ப்படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கிகளின் (BFBF) பாவனை பற்றிய இசைவாக்கற் பரிசோதனை

விவசாயிகளின் தேயிலை நாற்றுமேடைகளில் செலவு குறைந்த, வீரியமான தேயிலை செடிகளை உற்பத்தி செய்வதில் BFBF தொழிநுட்பத்தினை பயன்பாட்டினை மதிப்பிடுவதற்காக காலி, பசறை, இரத்தினபுரி, கம்பளை, தெனியாய ஆகிய இடங்களில் உள்ள நாற்றுமேடைகளில் 7 இசைவாக்கற் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. பசறையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நிறைவு செய்யப்பட்டதுடன் ஏனையவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

### சாம்ப் DP மீதான இசைவாக்கற் பரிசோதனை

செப்பு ஐதரொட்சைட்டைக் கொண்ட பங்கசுக்கொல்லியான சாம்ப் DP ன் தொழிற்பாடு தாவர நோயியற் பிரிவினால் பரிசோதனை மட்டத்தில் கொப்பள வெளிறல் நோயினை வினைத்திறனான முறையில் கட்டுப்படுத்துவது உறுதி செய்யப்பட்டது. எனவே இதனை வர்த்தக ரீதியில் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கான இசைவாக்கற் கற்கை ஆரம்பிக்கப்பட்டது.

நுவரெலியா தோட்டத்தில் 0.1% சாம்ப் 10 நாட்கள் இடைவெளியில் 0.08% சாம்ப் 7 நாட்கள் இடைவெளியில் ஆகிய இரு பரிகரிப்புகள் வர்த்தக ரீதியில் மதிப்பிடப்பட்டன. அத்துடன் தோட்டத்தினால் தற்போது கொப்பள வெளிறலை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தும் ஹெல்மொக்சைல், ஹெல்மொக்சைல் + ஹெல்சகனொசோல் என்பவற்றின் தொழிற்பாடுகள் சாம்ப் உடன் ஒப்பிடப்பட்டன. எளிதில் கொப்பள வெளிறல் இனது தாக்கத்திற்கு உட்படும் குலவகைகளில் இப்பரிசோதனை கொப்பள வெளிறல் பருவங்களை உள்ளடக்கி வெவ்வேறு வளர்ச்சி பருவங்களில் உள்ள தேயிலைச் செடிகளில் மேற்கொள்ளப்பட்டது. முடிவுகளின் படி சாம்ப் DP 0.1% 10 நாட்கள் இடைவெளிகளில் உபயோகிக்கப்பட்ட போது சாதாரண செப்பு சல்பேற்றை விட சிறப்பாக கொப்பள வெளிறலை கட்டுப்படுத்தியதுடன் 0.08% சாம்ப் DP செலவு குறைந்ததாகவும் காணப்பட்டது. சாம்ப் DP 0.07% 7 நாட்களுக்கு பிரயோகிக்கப்பட்ட போது சாதாரண செப்பு சல்பேற்றை விட அதிகமாக கொப்பள வெளிறலை கட்டுப்படுத்தியது.

சிபாரிசு செய்யப்பட்ட சாதாரண செப்பு சல்பேற்று + ஹெல்சனோல் கலவை 7-10 நாட்கள் பிரயோகமானது. சாம்ப் ஐ விட சிறப்பாக கொப்பள வெளிறளைக் கட்டுப்படுத்தியது.

## 9. விசேட செயற்பாடுகள்

மேன்மை தாங்கிய நிரிசியா கஸ்திரோ டிகுவேரா. (இலங்கைக்கான கியூப உயர்ஸ்தானிகர்) இம் மையத்திற்கு விஜயம் செய்தார்.

பதுளையில் நடைபெற்ற ''தயற்ற கிருளை'' கண்காட்சியில் TRI யின் கூட்டத்தினை EO/IOC இணைப்பாளராக செயற்பட்டார்.

ஊவா பிராந்தியத்தில் உள்ள செயற்கைப் பண்ணப்படாத நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட MPI இன் ஆய்வின் இணைப்பாளராக EO/IOC செயற்பட்டார்.

## 10. பிரச்சினைகள்

ஊவா பிராந்தியத்தில் உள்ள பெரும்பாலான RPC பெருந்தோட்டங்கள் வருடத்தின் இரண்டாம் அரையாண்டின் போது உயர் உற்பத்தி செலவு, NSA ன் வீழ்ச்சி, சாதகமற்ற காநிலை காரணமாக விளைச்சிலில் ஏற்பட்ட வீழ்ச்சி போன்ற காரணங்களினால் நிதி இழப்புக்கள் ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டது. இதற்கு தோட்ட தொழிலாளர் வேலைக்கு வராமை, நிலத்தின் உற்பத்தி குறைவடைதல் போன்றனவும் காரணங்கள் ஆகும். இந்நிலைமை காரணமாக பெரும்பாலான பெருந்தோட்டங்கள் தமது விவசாய அபிவிருத்தி செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளன.

## IT அலகு

தகவல் தொழில்நுட்ப அலகானது தனது ICT யுடன் தொடர்புடைய சேவையினை ஏனைய பிரிவுகளுக்கும், அலகுகளிற்கும், பிராந்திய விரிவாக்கல் மையங்களிற்கும், TRI தோட்டங்களிற்கும் வழங்கியது. அவையாவன

- இணையத்தள, மின்னஞ்சல் நிர்வகித்து பேணுதல்
- கணனி, கணனி வலையமைப்பு, உள்ளக வலையமைப்பு என்பவற்றை பிழைகளை சரி செய்தல்.
- மென்பொருள்
- கைரேகைப் பதிவு, மென்பொருளை
- கணனி, கணனி உதிரிபாகங்களை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப ஆவணங்களைத் தயாரித்தல்.

### பிரதான முன்னேற்றங்கள்

- நிலையத்தின் மின்னஞ்சல் வழங்கியாக இயங்குவதற்கு புதிய கணனி வழங்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
- 15 மேசைக்கணனிகளும், 8 குறிப்பு புத்தக கணனிகளும் கொள்வனவு செய்யப்பட்டு தேவைக்கேற்ப அவை தலைமையகத்திற்கும் ஏனைய பிராந்திய/விரிவாக்கல் மையங்களிற்கும் விநியோகிக்கப்பட்டன.
- அன்ரி வைரஸ் மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டு 111 மேசைக்கணனிகளிற்கும், குறிப்பு புத்தக கணனிகளுக்கும் சேர்க்கப்பட்டன.
- ICTA ன் வழிகாட்டலுக்கு அமைய உதிரிபாகங்களும் மென்பொருள்களும் பொருத்தப்பட்டு பேணப்பட்டது.

### பொது

- தாவர நோயியற் பிரிவின் ஆலோசணைக்கு அமைய தேயிலையில் கொப்பள வெளிறல் நோயை மதிப்பிடுவதற்கான மென்பொருள் விருத்தி செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.
- TRI இணையத்தளம் புதிய தகவல்களை கொண்டு தரமுயர்த்தப்பட்டது.
- பிரசுரிப்பு உத்தியோகத்தர்களுக்கு TRI இணையத்தளத்தினை வடிவமைப்பது தொடர்பில் உதவி வழங்கப்பட்டது.

- கணனி மற்றும் உதிரிபாகங்களை கொள்வனவு தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களின் உறுப்பினராக பணியாற்றினார்.
- நிலையத்தின் பங்காளிகள் கூட்டங்களிங்கு தேவையான கணனி சேவைகளை

**நூலகம்**

TRI விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி தேவைகளுக்கான தகவல்களை சேகரித்து வழங்குவதே நூலகத்தின் பிரதான செயற்பாடாகும். நூலகமானது தனது சேவையினை TRI உத்தியோகத்தர்கள், பட்டப்படிப்பு, டிப்ளோமா, மாணவர்கள், ஏனைய நூலகங்களின்/தனிப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கு அமைய வழங்கியது. இவ்வாண்டு நூலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளாவன

1. நூலக சாதனங்களை சேகரித்தல், வழங்குதல், பேணுதல்.
2. நூலக சாதனங்களை விநியோகித்தல்.
3. செய்தித்தாள் கத்தரிப்புகளை பேணுதல்.
4. போட்டோ பிரதி சேவை
5. நூலகங்களுக்கு இடையிலான கடன் வசதி.

ஏற்கனவே காணப்பட்ட 4677 புத்தகங்களுடன் 4 புத்தகங்கள் புதிதாக சேர்க்கப்பட்டன. நூலகமானது 52 சஞ்சிகைகளை பெற்றுக் கொண்டது. இவ்வருடம் நூலகத்திற்கு TRI உத்தியோகத்தர்களின் மூன்று M.Sc. ஆராய்ச்சி கட்டுரைகள் கிடைத்தன.

**சேவைகள்**

இவ்வருடம் 512 செய்தித்தாள் கத்தரிப்புகள் பணிப்பாளரிற்கு அனுப்பப்பட்டன. TRI உத்தியோகத்தர்களுக்காக 3506 தாள்கள் போட்டோ பிரதி எடுக்கப்பட்டன. நூலக வசதிகளை பல்கலைக்கழகங்கள்/ தொழில்நுட்ப கல்லூரிகளைச் சேர்ந்த 40 மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

# பிராந்திய மையங்கள்






තේ පර්යේෂණායතනයේ ඌව මධ්‍යස්ථානය
ඔබ සැම සාදරයෙන් පිළිගනී
தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஊவாபிரிவு
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
TEA RESEARCH INSTITUTE UVA CENTRE
CORDIALLY WELCOMES YOU







# தாழ் பிரதேச பிராந்திய மையம்

M.A **விஜேரத்ன**
B.Sc. விவசாயம் (றுகுனு) Ph.D (லண்டன்)
பொறுப்பதிகாரி.

**பொது**

இரத்தினபுரியில் உள்ள TRI தாழ் பிரதேச மையத்தில் பயிராக்கவியல், பூச்சியியல், புழுவியல், தாவர இனவிருத்தி, உற்பத்தி தொழிநுட்ப பிரிவுகளைச் சேர்ந்த 4 ஆய்வுகூடங்களும் ஆலோசணை விரிவாக்கற் பிரிவும் காணப்படுகின்றன. ஆராய்ச்சி அலகுகள் பிரிவுத்தலைவரின் ஆலோசனைக்கமைய இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள தாழ் பிரதேச பெருந்தோட்டங்களில் பல வெளிக்கள, தொழிற்சாலை, பச்சை வீட்டு, ஆய்வுகூட ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர்.

ஆலோசணை விரிவாக்கற் பிரிவானது கூட்டுறவு, சிறு தேயிலைத்தோட்ட பயிர்செய்கையாளர்களுக்கு ஆலோசணை விஜயங்கள், பயிற்சி நிகழ்ச்சிகள், வெளிக்கள நாட்கள் கருத்தரங்குகளை நடாத்துவதன் மூலம் அதன் சேவையை வழங்கியது. பதனிடல் தொழிநுட்ப அலகானது TRI சென் ஜோக்கியம் தோட்டம் உட்பட தாழ் பிராந்திய தேயிலை தொழிற்சாலைகளுக்கு தொழிற்சாலை இயந்திரங்களின் பதனிடுதல் தொடர்பான பிரச்சினைகளை இனங்காணல் மூலமும் ஆலோசணை விஜயங்களை மேற்கொள்வதன் மூலமும் சேவையை வழங்கியது.

தாழ் பிரதேச சிறு தேயிலைத்தோட்டங்களிற்கான திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளான பரிசோதனை விரிவாக்கல் கூட்டம், பிராந்திய தொழில்நுட்ப விரிவாக்கல் கூட்டம் (RTEF) போன்றன TRI, TSHDA, SLTB உத்தியோகத்தர்களின், தேயிலை அபிவிருத்தி சமூக அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்ற அதேவேளை இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மாவட்ட கூட்டுறவுத்துறை பங்காளிகளுக்காக பிராந்திய விஞ்ஞானக்குழுக்கூட்டமும் (RSC) ஒழுங்கு செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சிகளின் போது நில, தொழிலாளர் உற்பத்தி திறனை அதிகரித்தல், உற்பத்திச்செலவினை குறைத்தல், நல்ல உற்பத்தி செயற்பாடுகளை பின்பற்றல், சக்தி சேமிப்பு வழிமுறைகள், நில வளம் குறைவடைதல், காலநிலை மாற்றங்கள் என்பன கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் ஆகும். இதற்கு மேலதிகமாக ஒரு திட்ட முன்னறிக்கையினை சமர்பிக்கும் நோக்குடன் கண்டுபிடிப்பாளர்கள், உள்நாட்டு பல்கலைக்கழக பொறியியலாளர்கள் இயந்திர வடிவமைப்புடன் தொடர்புடைய பொறியியல்

நிறுவனங்களுக்கு TRI யின் அறுவடைக் கருவி தொடர்பான செயன்முறை விளக்கத்துடனான இரண்டு பயிற்சி பட்டறைகள் நடாத்தப்பட்டன. வலிமண்டலவியற் திணைக்களம், விவசாயத் திணைக்களம், நில அளவையாளர் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கையின் தேயிலை நிலங்களை வரைபடமாக்கல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான தேச முக்கியத்துவம் வாய்ந்த திட்ட மும்மொழிவைத் தயாரிப்பதற்கு ஆலோசணை பிரிவு உத்தியோகத்தர்களினால் உதவி வழங்கப்பட்டது.

### உத்தியோகத்தர்கள்

ஆலோசணை உத்தியோகத்தர் Mr.K.G.J.P. மகிந்தபால மத்திய பிரதேச பிராந்திய மையத்தில் இருந்து ஜனவரி 3ம் திகதி தாழ் பிரதேச ஆலோசணை விரிவாக்கல் மையத்திற்கு இடமாற்றப்பட்டு பின்னர் செப்டெம்பர் 26ம் திகதி காலி மையத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார். மத்துகம விரிவாக்கல் மையத்தினைச் சேர்ந்த Mr.K.B.G. சிரிபாலிகா பதனிடுதல் தொழிநுட்ப பிரிவு, பரிசோதனை உத்தியோகத்தர் நவம்பர் 1ம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்தார்.

Mr.N.P.S. பண்டார அவுஸ்திரேலிய அடிலேட் பல்கலைக்கழகத்தில் தனது பட்டமேற்படிப்பு கற்கைக்கான ஆய்வுக்கட்டுரையினை பூர்த்தி செய்து TRI க்கு திரும்பினார்.

### மனிதவள அபிவிருத்தி

பயிராக்கவியற் பிரிவைச் சேர்ந்த ஆராய்ச்சி உதவியாளரான Mr.S.R.W. பத்திரனகேயும் பதனிடுதல் தொழில்நுட்ப பிரிவின் பரிசோதனை உத்தியோகத்தரான Mr.M.A.U.B. மாரப்பனவும் சீனாவில் பயிற்சி நிகழ்ச்சி ஒன்றை பின்பற்றினர். பயிராக்கவியல் பிரிவு பொறுப்பதிகாரியும், சிரேஷ்ட்ட ஆராய்ச்சி உத்தியோகஸ்தருமான Dr.M.A விஜேரத்ன டொக்லாய் தேயிலை மகாநாட்டில் பங்குபற்றிய தூதுக்குழுவில் UPASI கற்கை விஜயக்குழுவிலும் அங்கம் வகித்தார்.

### பயிற்சிகள்

பங்கள தேச தேயிலை ஆராய்ச்சி நிலைய பயிராக்கவியல் பிரிவு விஞ்ஞான உத்தியோகத்தரான Mr. டொபிக் அகமட் உம், கொழும்பு பல்கலைகழக தாவர விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த விரிவுரையாளர் Mrs.H.I.U கல்தேராவும் பேராதணை பல்கலைகழக விவசாய பட்டப்படிப்பு நிலையத்துடன் இணைந்து இரத்தினபுரி, TRI தாழ் பிரதேச மையத்தில் தேயிலை பற்றிய தமது பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொண்டனர். 83 பல்கலைக்கழக மாணவர்களும், அரச நிறுவனங்களைச் சேர்ந்த 8 பயிலுனர்களும் தேயிலை தொடர்பான விடயங்களிலும் தாழ் பிரதேச மையத்தில் பயிற்சியைப் பெற்றனர்.

### உட்கட்டமைப்பு அபிவிருத்தியும்

நீர், மின்சார, உத்தியோகத்தர் விடுதிகள், அலுவலகங்கள், ஆய்வு கூடங்கள், மற்றும் ஏனைய கட்டிடங்களின் திருத்த வேலைகளும் நிலைய வாகனங்களின் திருத்த வேலைகளும் திருப்திகரமான மேற்கொள்ளப்பட்டன. இவ்வருடம் தாவர இனவிருத்திப்பிரிவின் வெளிக்கள அலுவலகத்திற்கும் இரண்டு உத்தியோகத்தர் விடுதிகளுக்கும் வர்ணம் பூசப்பட்டன. தாழ் பிரதேச மையத்தினை சூழ உள்ள வேலையின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

# மத்திய பிரதேச பிராந்திய மையம்

J.C.K **இராஜசிங்க**
B.Sc விவசாயம் (பேராதனை), M.Sc (பேராதனை)
பதில் பொறுப்பதிகாரி.

**பொது**

கண்டி, ஹந்தானையில் அமைந்துள்ள TRI மத்திய பிரதேச மையமானது பயிராக்கவியல், பூச்சியியல், புழுவியல், தாவர இனவிருத்தி, மண், தாவர போசணை ஆகிய ஆராய்ச்சி பிரிவுகளைச் சேர்ந்த 4 ஆய்வுகூடங்களும், ஆலோசணை விரிவாக்கல் நிலையத்தினையும் உள்ளடக்கி உள்ளது.

| | |
|---|---|
| விதைத் தேயிலை | 2.00 |
| வெட்டுத்துண்ட தேயிலை (முதிர்) | 5.5 |
| வெட்டுத்துண்ட தேயிலை (இளம்) | 3.5 |
| தாய்த் தாவர செடிகள் | 2.75 |
| தேயிலை நாற்றுமேடை | 0.2 |
| மானா புல் வளர்ப்பு | 0.5 |
| பழ மரங்கள் | 0.4 |
| தென்னை | 0.81 |
| காடுகள் | 1.2 |
| சதுப்பு நிலம் | 0.62 |
| கட்டிடங்கள், தோட்டங்கள், பாதைகள் | 5.77 |

பிரிவுத் தலைவர்களின் ஆலோசனைக்கு அமைய ஆராய்ச்சி அலகுகள் பெருமளவிலான ஆய்வுகூட, பச்சை வீட்டு, வெளிக்கள, தொழிற்சாலை, ஆராய்ச்சிகளை கண்டி, மாத்தளை மாவட்டங்களில் உள்ள மத்திய பிரதேச தேயிலை பெருந்தோட்டங்களில் மேற்கொண்டதுடன் ஆலோசணை விரிவாக்கற் பிரிவானது கூட்டுறவு, சிறு தேயிலைத்தோட்ட துறையினைச் சேர்ந்த பங்காளிகளுக்கு ஆலோசணை விஜயங்கள், பயிற்சி நிகழ்ச்சிகள், வெளிக்கள நாட்கள் கருத்தரங்குகளை நடாத்தியதன் மூலம் தனது சேவையை வழங்கியது.

TRI, TSHDA, SLTB உத்தியோகத்தர்களிதும், தேயிலை அபிவிருத்தி சமூக உறுப்பினர்களிதும் பங்களிப்புடன் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களுக்கான பிராந்திய தொழிநுட்ப விரிவாக்கற் கூட்டமும் (RTEF) கண்டி, மாத்தளை மாவட்ட கூட்டுறவுத்துறை பங்காளிகளுக்கான பிராந்திய விஞ்ஞான குழுக் கூட்டமும் (RSC) நடாத்தப்பட்டது.

வரட்சி, நோய்த்தாக்கத்திற்கு எதிர்ப்புத்திறனுள்ள குலவகைகளை உற்பத்தி செய்வதற்கு பொருத்தமான ஒட்டுக்கட்டை, ஒட்டுக்கிளை சேர்மானங்களை தெரிவு செய்தல், குண்டுதுளைப்பி வண்டின் முகாமைத்துவத்தில் புதிய அபிவிருத்திகள், மத்திய பிராந்தியத்தில் தேயிலையை கவ்வாத்து செய்தல், தேயிலையில் விவசாய

இரசாயன பொருட்களின் பாவனையை குறைப்பதன் முக்கியத்துவம், தேயிலையில் பொருத்தமான நிழல் முக்கியத்துவம் என்பன இந் நிகழ்ச்சிகளின் போது ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் ஆகும். RSC கூட்டத்தின் முன்வைப்புகள் மத்திய பிரதேசத்தில் தேயிலையை கவ்வாத்து செய்தல் தொடர்பானவையாகவும், கலந்துரையாடல்கள் கவ்வாத்தினை மேற்கொள்கையில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியதாகவும் அமைந்தன. கேள்விகள் பெரும்பாலும் கவ்வாத்து செய்யும் காலம், கவ்வாத்து உயரம், வகை, கொழுந்தெடுத்தல், வளமாக்கி பாவனை, உற்பத்தியினை அதிகரித்தல், களை, நோய், பீடைமுகாமைத்துவம் பற்றியதாக இருந்தன. திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக தொழிலாளர் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக கத்தரிப்பு கருவிகளின் உபயோகத்தினை பிரபல்யப்படுத்தும் முகமாக கத்தரிப்பு கருவி மூலம் அறுவடை என்னும் தலைப்பிலான ToT நிகழ்ச்சி ஒன்று கண்டி, மாத்தளை பிராந்திய மைய TSHDA ன் தேயிலை மேற்பார்வையாளர்களின் நன்மை கருதி மத்திய பிரதேச மையத்தில் நடாத்தப்பட்டது. பேராதனை பல்கலைக்கழக 1ம் வருட விவசாய பீட மாணவர்களுக்காகவும், குண்டசாலை விவசாயக் கல்லூரி மாணவர்களுக்காகவும் முறையே நாற்றுமேடை நிர்மாணிப்பும் முகாமைத்துவமும், தேயிலை பயிர்செய்கை தொழிநுட்பங்கள் எனும் தலைப்பிலான இரு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

புத்தளையில் நடைபெற்ற 'தயற்ற கிருல' கண்காட்சியிலும் TRI, மத்துகம விரிவாக்கல் நிலையத்தில் நடைபெற்ற பயிர் சிகிச்சையிலும் மத்திய பிராந்திய நிலைய உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். இரத்தினபுரி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையில் செய்கை பண்ணப்படாத நிலப்பரப்பினை மதிப்பிடுவதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆலோசணை விரிவாக்கற் பிரிவு உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். அத்துடன் கண்டி, ஹந்தானை, இரத்தினபுரி விக்கிரமநாயக்க பயிற்சி நிலையத்தில் TSHDA இனால் நடாத்தப்பட்ட புதிதாக நியமிக்கப்பட்ட தேயிலை பரிசோதகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியில் தேயிலை பயிர்செய்கை தொடர்பான விரிவுரைகளையும், செயன்முறைகளையும் நடாத்தினர்.

## ADB தாய்த்தாவர திட்டம்

Mr.C.K. இராஜசிங்க (சிரேஷ்ட்ட ஆலோசணை உத்தியோகத்தர்) நடுகை பதார்த்த தேவைகளுக்கு ஏற்ப அவற்றை வழங்குவதற்காக காலி, மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் உள்ள தாய்த்தாவர திட்ட செயற்பாடுகளை கண்காணித்தார்.

### இசைவாக்கற் பரிசோதனை

மத்திய பிராந்தியத்திற்கு பொருத்தமான வளமாக்கி கலவையினை தெரிவு செய்வதற்காக மண், தாவர போசணை பிரிவு, TSHDA ன் அனுசரணையுடன் சிறு தேயிலை தோட்டங்களில் 4இல் இசைவாக்கற் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இம் மையத்திலும் நியூபீகொக் தோட்டத்திலும்

உயிர்படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கி இசைவாக்கற் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. இரசாயனமுறை பீடைகட்டுப்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடிய புதிய களைக்கொல்லி மீதான இசைவாக்கற் பரிசோதனை பயிராக்கவியற் பிரிவின் அனுசரனையுடன் மத்திய பிரதேச மையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

**செயன்முறை விளக்கத் துண்டங்கள்**

பயிராக்கவியற் பிரிவின் அனுசரனையுடன் தேயிலை குலவகைகளை ஒட்டுதல் தொடர்பான செயன்முறை விளக்கத் துண்டத்திற்கான மைய நாற்றுமேடையின் ஒருபகுதி பயன்படுத்தப்பட்டது.

**உட்கட்டமைப்ப அபிவிருத்தியும் பராமரிப்பும்**

மின் வசதி, உத்தியோகத்தர் விடுதி, அலுவலகம், ஆய்வுகூடம், ஏனைய கட்டிடங்களின் பராமரிப்பு திருத்த வேலைகள், நிலைய வாகனங்களின் திருத்த வேலைகள், என்பன மேற்கொள்ளப்பட்டன. வாகனங்களை திருத்துவதற்காகவும், கழுவுவதற்காகவும் வாகன தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டது. TRI தலைமையகத்துடனும், இப் பிரதேசத்தில் உள்ள பங்காளிகளுடனும் சிறந்த தொலைத்தொடர்பினைப் பேணுவதற்காக பல இணைப்புகளையும் தொலைநகல் இயந்திரத்தினையும் கொண்ட ஒரு புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டது. மையம் வரையிலான பிரதான வீதி முழுவதும் தார் இடப்பட்டது.

**நிலையத்திற்கு வருகைத்தந்த விருந்தினர்கள்**

| | |
|---|---|
| தேயிலை வளர்போர் | 350 |
| மாணவர்கள்/பாடசாலை பிள்ளைகள் | 40 |
| பொது விருந்தினர்கள் | 176 |
| வெளிநாட்டு விருந்தினர்கள் | 10 |
| **மொத்தம்** | **576** |

**வருமானம்**

| | |
|---|---|
| விற்கப்பட்ட VP வெட்டுத்துண்டங்கள் | - 436,440.00 |
| வெட்டுத்துண்ட விற்பனை வருமானம் | - 320,715.00 |
| விற்கப்பட்ட வெட்டுத்துண்ட செடிகள் | - 35,222.00 |
| VP செடி விற்பனையினால் பெற்ற வருமானம் | - 633,966.00 |
| அறுவடை செய்த மொத்த பயிர் | - 16,517.00 |
| பச்சை இலை விற்பனை வருமானம் | - 794.588.71 |
| வாடி வீடு பாவனை வருமானம் | - 62,950.00 |
| மண் ($P^H$) பரிசோதனை வருமானம் | - 36,955.00 |
| TRI வெளியீடுகள் விற்பனை வருமானம் | - 83,125.00 |
| ஏனையவை | - 28,200.00 |

**பயிர்**

2011இல் அறுவடை செய்யப்பட்ட பச்சை இலை விபரம் பின்வருமாறு.

| **மாதம்** | **அறுவடை செய்யப்பட்ட பயிர்/விற்பனை** | **விலை ரூபா/கிகி** | **வருமானம் (ரூபா)** |
|---|---|---|---|
| ஜனவரி | 752 | 51.20 | 38,477.40 |
| பெப்ரவரி | 910 | 55.13 | 50,143.30 |
| மார்ச் | 2879 | 55.34 | 159,3.9.89 |
| ஏப்ரல் | 1991 | 49.17 | 97,872.47 |
| மே | 2307 | 46.31 | 106,812.17 |
| ஜூன் | 1792 | 45.83 | 82,112.33 |
| ஜூலை | 1139 | 46.85 | 53,337.15 |
| ஆகஸ்ட் | 913 | 43.76 | 39,927.88 |
| செப்டெம்பர் | 628 | 42.20 | 26,476.60 |
| ஒக்டோபர் | 1087 | 43.92 | 47,741.04 |
| நவம்பர் | 1229 | 42.04 | 50,413.16 |
| டிசெம்பர் | 890 | 48.48 | 41,965.32 |
| மொத்தம் | **16517** | | **794,588.71** |

# ஊவா விரிவாக்கல் மையம்

K.R.W.B. கஹந்தாவ
B.Sc விவசாயம் (பேராதனை), M.Sc (பேராதனை)
பொறுப்பதிகாரி.

## பொது

பசறை பல்கறதன்னையில் தற்போதுள்ள TRI ஊவா விரிவாக்கல் மையமானது மண் காபன், $P^H$ பகுப்பாய்விற்கான சிறிய ஆய்வுக்கூடத்தினை கொண்டுள்ளது. இம் மையத்தின் பரப்பளவு 14.30 ஹெட்டயர்கள் ஆகும். இதன் நிலப் பாவனை விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| கொழுந்தெடுக்கப்படும் முதிர் தேயிலை | 4.00 |
| இளந்தேயிலை (பரிசோதனை துண்டம்) | 0.30 |
| ADB தாய்த்தாவரம் | 2.06 |
| கட்டிடங்கள், தெருக்கல் | 0.79 |
| புணரமைப்பின் கீழ் உள்ள நிலம் | 0.04 |
| காடுகள், புல்வெளிகள் | 6.75 |

பிரிவுத் தலைவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய விரிவாக்கல் மையமானது மொனராகலை, பதுளை, மாவட்டங்களில் உள்ள ஊவா பெருந்தோட்டங்களில் பல தொழிற்சாலை, வெளிக்கள ஆய்லுகளை மேற்கொண்டது. விரிவாக்கல் மையமானது கூட்டுறவுத்துறை, சிறு தேயிலைத் தோட்டத்துறை பங்காளிகளுக்கு ஆலோசணை விஜயங்கள், பயிற்சி நிகழ்ச்சிகள், வெளிக்கள நாட்கள் கருத்தரங்குகளை நடாத்தியது. TRI, TSHDA, SLTB உத்தியோகத்தர்களின், தேயிலை அபிவிருத்தி சமூக உறுப்பினர்களின் பங்களிப்புடன் சிறு தேயிலைத்தோட்ட உறுப்பினர்களுக்கான பிராந்திய தொழிநுட்ப விரிவாக்கல் கூட்டம் ஊவா பிராந்திய மையத்தில் நடைபெற்றதுடன் பதுளை மாவட்ட கூட்டுறவுத்துறை பங்காளிகளுக்கு பிராந்திய விஞ்ஞான குழுக்கூட்டமும் (RSC) நடாத்தப்பட்டன. இக் கூட்டங்களில் ஊவாவில் தேயிலையை கவ்வாத்து செய்தல், தேயிலை பதனிடுதலில் சக்தியை சேமிக்கும் வழிமுறைகள், தேயிலையில் பொருத்தமான நிழல் முகாமைத்துவம், மீள்நடுகைக்கு பொருத்தமான நடுகைப் பதார்த்தங்களை பயன்படுத்துதல், சிபாரிசு செய்யப்பட்ட பீடை நாசினிகளும் அவற்றின் பொருத்தமான பாவனை முறையும் ஆகிய தலைப்புகள் ஆராயப்பட்டன. நாளாந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக ஆலோசணை விரிவாக்கற் பிரிவு தலைவரின் ஆலோசணைக்கு அமைய புத்தளவில் நடைபெற்ற தயற்ற கிருல கண்காட்சியின் தேயிலை ஆராய்ச்சி, விரிவாக்கல் தொடர்பான செயற்பாடுகளை ஊவா விரிவாக்கல் மைய உத்தியோகத்தர்கள் ஒழுங்கு செய்தனர். புத்தள மாவட்டத்தில் செய்கைபண்ணப்படாத கூட்டுறவுத்துறை தேயிலை நிலங்களின் அளவினை மதிப்பிடுவதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்விற்கு ஆலோசணை விரிவாக்கற் பிரிவு உத்தியோகத்தர்கள் தமது சேவையை வழங்கினர். மேலும் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட TRI 3000 , 4000 தொடர் குலவகைகளை பற்றிய அவர்களின் அபிப்பிராயங்களை

அறிவதற்காக பிராந்திய ஆலோசணை விரிவாக்கல் மையங்களினாலும் தாவர இன விருத்தி பிரிவினாலும் நடாத்தப்பட்ட நாடளாவிய ஆய்வில் ஊவா பிராந்திய ஆலோசணை விரிவாக்கல் மையம் தனது பணியை பூர்த்தி செய்தது. சிறு தேயிலைத்தோட்ட பயிர்செய்கையாளர்களின் தன்னம்பிக்கை வளர்ப்பதற்காகவும், தேயிலை கைத்தொழில் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய குலவகைகளின் வளர்ப்பினையும் முகாமைத்துவத்தினையும் உறுதிப்படுத்துவதற்காகவும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பசறையில் கியூபா நட்புறவு மன்றத்தினை நிறுவுவதற்காக இலங்கைக்கான கியூபா உயர்ஸ்தானிகர் மேன்மை தங்கிய நிரிசா கஸ்ட்ரோ டிகுவேரா விரிவாக்கல் நிலையத்திற்கு வருகை தந்தார்.

**உத்தியோகஸ்தர் இடமாற்றம்**

Mr.D.K.W. திசாநாயக்க, தொழிநுட்ப உத்தியோகத்தர் 2011 நவம்பர் 1 முதல் ஆலோசணை விரிவாக்கல் நிகழ்ச்சியை ஒழுங்கமைப்பதற்காக தலைமையகத்தில் இருந்து ஊவா விரிவாக்கல் நிலையத்திற்கு இடமாற்றப்பட்டார்.

**உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் பரிபாலனமும்**

உத்தியோகத்தர் விடுதிகள், அலுவலகம், ஏனைய கட்டிடங்களின் திருத்த வேலைகளும், நிலைய வாகனங்களின் திருத்த வேலைகளும் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டன. விடுதியில் உள்ள சாரதிகள் இளைப்பாறும் அறையின் மீள்கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. புதிதாக தயார்படுத்தப்பட்ட துண்டத்தில் (0.1 ஹெ) பொருத்தமான தேயிலை குலவகைகளை நடுகைசெய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**இசைவாக்கற் பரிசோதனை**

பிராந்தியத்திற்கு பொருத்தமான வளமாக்கி கலவையினை தெரிவு செய்யும் நோக்குடன் மண் தாவரப்போசணை, TSHDA ன் அனுசரனையுடன் ஊவா பிராந்தியத்தில் உள்ள 3 சிறு தேயிலைத்தோட்டங்களில் இசைவாக்கற் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஹாலி எலவில் பயிராக்கவியற் பிரிவின் அனுசரனையுடன் வர்த்தக தவறனையில் உயிர்படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கி பற்றிய இசைவாக்கற் பரிசோதனையும் ஆரம்பிக்கப்பட்டது. தாவர இனவிருத்தி பிரிவுடன் இணைந்து ஹப்புத்தளை, மடுல்சீமாவில் முறையே ஹப்புத்தளை, வெரலப்பதன தோட்டங்களில் TRI 5000 தொடர் குலவகைகளின் வர்த்தக ரீதியாக இசைவாக்கற் தன்மையை ஆராய்வதற்காக மேலும் இரு இசைவாக்கற் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**ஆராய்ச்சி பரிசோதனைகள்**

ஆராய்ச்சி பிரிவுகளினால் பின்வரும் பரிசோதனைகள் ஊவா மையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

1. TRI 5000 தொடர் குலவகைகளின வெட்டுத் துண்டங்களை விநியோகிப்பதற்காக தாவர இனவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட UVP 9, UVP 10 பரிசோதனைகள் வெளிக்கள இல 04ல் தொடர்ந்து பேணப்படுகின்றன.

2. TRI 5000 தொடர் குலவகைகளை மதிப்பிடுவதற்காக தாவர இனவிருத்திப் பிரிவினால் வெளிக்கள இல 02 ல் அவதானிப்பு பரிசோதனை
3. பெறுமதிமிக்க சேர்மானங்களை பேணுவதற்காக வெளிக்கள இல 03 ல் வளரும் முதலுருப் பிரதேசம் பேணப்படுகின்றது.
4. மாற்று நடுகை பதார்த்தங்களாக பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்காக மேம்படுத்தப்பட்ட விதைத்தேயிலை குலவகைகள் பரிசோதனைகள் UST 01 , UST 02 முறையே வெளிக்கள இல 03, 04ல் தொடர்ந்து மதிப்பிடப்படுகின்றன.
5. வரட்சி, நோய்த் தாக்கத்திற்கு எதிர்ப்புத் திறனுள்ள செடிகளை பெறுவதற்காக ஒட்டுதல் செடிகளில் பயிராக்கவியற் பிரிவினால் வெளிக்கள இல 02 ல் ஸ்தாபிக்கப்பட்ட பரிசோதனை தொடர்கிறது.
6. நியம குலவகைகளுடன் TRI 5000 தொடர் குலவகைகளின் நெமற்றோடுகளுக்கு எதிர்ப்பு திறனுள்ள குலவகைகளை மதிப்பிடுவதற்காக வெளிக்கள இல ல் நெமற்றோடு தொற்றுகைக்கு உள்ளடக்கப்பட்ட தொட்டிகளைக் கொண்ட பரிசோதனை தொடர்கின்றது.
7. மழை நீரை சேகரிக்கும் திட்டத்தினை மதிப்பிடல், தந்ரோ சக்தியை உற்பத்தி செய்வதற்காக கசியா கிளிரிசிடியா மரங்களை வெவ்வேறு செறிவுகளில் வளர்த்தல், தவறணை மற்றும் வெளிக்கள நிபந்தனைகளின் கீழ் உயிர்படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கி பரிசோதனை ஆகிய பயிராக்கவியற் பிரிவினால் ஸ்தாபிக்கப்பட்ட பரிசோதனைகளும் வெளிக்கள இல 02, 03 ல் தொடர்கின்றன.

**விருந்தினர்கள்**

பின்வரும் 787 விருந்தினர்கள் விரிவாக்கல் மையத்திற்கு வருகை தந்தனர்.

| | |
|---|---|
| வெளிநாட்டு விருந்தினர்கள் | 02 |
| தோட்ட அதிகாரிகள் | 89 |
| சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் | 187 |
| பல்கலைக்கழக மாணவர்கள் | 92 |
| மாணவர்கள் | 38 |
| ஏனையவை | 186 |
| TRI உத்தியோகத்தர்கள் | 193 |
| மொத்தம் | 787 |

**பயிர்**

மாதாந்தம் அறுவடை செய்யப்பட்ட தேயிலையின் அளவு, அவற்றிற்கான விலை, மாதாந்த வருமானம் பின்வருமாறு

| | **பச்சை இலை (கிகி)** | **விலை ரூபா (கிகி)** | **தொகை** |
|---|---|---|---|
| ஜனவரி | 1308 | 47.48 | 62,103.84 |
| பெப்ரவரி | 1335 | 44.38 | 59,247.30 |
| மார்ச் | 5133 | 50.21 | 257,727.93 |
| ஏப்ரல் | 3220 | 46.39 | 149,375.80 |
| மே | 4876 | 39.61 | 193,138.36 |
| ஜூன் | 4483 | 40.39 | 181,068.37 |
| ஜூலை | 3070 | 41.46 | 127,282.20 |
| ஆகஸ்ட் | 2138 | 41.83 | 89,432.54 |
| செப்டெம்பர் | 5022 | 38.53 | 193,497.66 |
| ஒக்டோபர் | 3065 | 43.02 | 131,856.30 |
| நவம்பர் | 4407 | 44.62 | 196,640.34 |
| டிசெம்பர் | 2294 | 42.01 | 96,370.94 |
| **மொத்தம்** | **40351** | **-** | **1,737,741.58** |

**வருமானம்**

மையத்தினால் பல்வேறு செயற்பாடுகள் மூலம் பெறப்பட்ட வருமானங்கள் பற்றிய விபரம் பின்வருமாறு.

| **செயற்பாடு** | **வருமானம்** |
|---|---|
| பச்சை இலை விற்பனை (40351 கிகி) | ரூபா 1,737,741.58 |
| வெட்டுத்துண்ட விற்பனை | ரூபா 295,790.00 |
| வெட்டுத்துண்ட செடிகளின் விற்பனை | ரூபா 49,680.00 |
| மண் $P^H$, காபன் பகுப்பாய்வு கட்டணம் | ரூபா 186,845.00 |
| பிரசுர விற்பனை | ரூபா 55,945.00 |
| விடுதி உபயோகக் கட்டணம் | ரூபா 22,250.00 |
| விறகு விற்பனை | ரூபா 23,420.00 |
| ஏனையவை | ரூபா 3,474.00 |
| **மொத்த வருமானம்** | **ரூபா 2,375,145.58** |

# காலி விரிவாக்கல் மையம்

K.D. **தகநாயக்க**
விவசாய இயந்திரவியல் டிப்ளோமா
பொறுப்பதிகாரி (23.09.2011 வரை)

K.G.J.P. **மகிந்தபால**
B.Sc விவசாயம் (பேராதனை), M.Sc (பேராதனை)
பட்டபின்படிப்பு டிப்ளோமா (பிரயோக புள்ளிவிபரவியல்)
பதில் பொறுப்பதிகாரி (26.09.2100 முதல்)

**பொது**
தம்கம்பொலவில் உள்ள TRI காலி விரிவாக்கல் நிலையமானது மண் $P^H$ பகுப்பாய்விற்கான சிறிய ஆய்வுகூடம் ஒன்றையும் உள்ளடக்கி 35.6 ஹெக்டயர் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள இதன் நிலப்பாவனை விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| கொழுந்தெடுக்கப்படும் முதிர் தேயிலை | 5.0 |
| இளந்தேயிலை | 2.4 |
| ADB தாய்த்தாவர பிரதேசம் | 2.5 |
| துவறனை (தேயிலை) | 1.0 |
| மீள் நடுகை/ நடுகைக்காக கைவிடப்பட்ட நிலம் | 3.5 |
| மீள் நடுகை (மானா, கௌட்டமாலா) | 1.6 |
| பரிசோதனை துண்டங்கள் | 1.0 |
| தென்னை, பழங்கள் | 1.5 |
| காடுகள் | 7.3 |
| கட்டிடங்கள், தோட்டங்கள், தெருக்கல் | 9.8 |

ஏனைய பிராந்திய நிலையங்களைப் போன்றே TRI கொட்டாவ நிலையமும் தொழிநுட்ப பரப்புகை, நடுகை பதார்த்தங்களை விநியோகித்தல், இசைவாக்கற் பரிசோதனைகளை கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கிறது. இந் நிலையமானது காலி, அகுரஸ்ச மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு, சிறு தேயிலைத்தோட்டங்களில் பெருமளவிலான வெளிக்கள ஆய்வுகளை மேற்கொண்டதுடன் சிபாரிசுகளின் அடிப்படையில் அறிக்கைகளையும் தயாரித்தது. பெரும்பாலான வெளிக்கள பிரச்சனைகள் அடிப்படை விவசாய செயற்பாடுகளை பின்பற்ற தவறியமையால் செடிகளில் ஏற்பட்ட பாதிப்பு பற்றியதாகக் காணப்பட்டன. TSHDA , தேயிலை அபிவிருத்தி சமூக நிறைவேற்றுக்குழு அதிகாரிகளின் பங்குபற்றலுடன் தென் பிராந்திய சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களுக்கான பிராந்திய தொழிநுட்ப விரிவாக்கல் (RTEF) கூட்டமும், தெனியாய விரிவாக்கல் நிலையத்தின் தென் பிராந்திய கூட்டுறவுத்துறை பங்காளிகளுக்கான பிராந்திய விஞ்ஞானக் குழுக் கூட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டன. இக் கூட்டங்களில் தேயிலை கைத்தொழில் எதிர்நோக்கும்

பிரச்சனைகள் கலந்துரையாடப்பட்டன. இதற்கு மேலதிகமாக காலி விரிவாக்கல் நிலையத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் வர்த்தக தவறணைகள் தரமான செடிகளை விநியோகிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக தவறணை செடிகளை செயற்பாட்டையும் மேற்கொண்டனர். தொழிநுட்ப கடத்துகை செயற்பாட்டில் பங்காளிகளை பயிற்றுவிப்பது முக்கியமான ஒரு தேவையாகும். இந் நிலையமானது தற்போது பயன்படுத்தப்படும் புதிய தொழிநுட்பங்கள் பற்றிய அறிவினையும், திறன்களையும் மேம்படுத்துவதற்காக தேயிலை வளர்போரிற்கும் தொழிலாளர்களுக்கும் பல வெளிகள நாட்கள், செயன்முறை விளக்கப் பயிற்சிபட்டறைகள், கருத்தரங்குகளை நடாத்தியது.

மேம்படுத்தப்பட்ட புதிய நடுகை பதார்த்தங்களை விநியோகிப்பது இப் பிராந்தியத்தில் உள்ள தேயிலை வளர்போரிற்கு மேற்கொள்ளப்படும் மற்றுமொரு சேவையாகும். ஏறத்தாழ 2.5 ஹெ தாய்த்தாவர பிரதேசத்தில் இருந்து TRI 3025, TRI 3055 , TRI 4042 , TRI 4049 குலவகைகளின் அண்ணளவாக 366, 750 வெட்டுத்துண்டங்கள் விநியோகிக்கப்பட்டன.

**உத்தியோகத்தர் இடமாற்றம்**

Mr.K.D. தகநாயக்க பொறுப்பதிகாரி 23.09.2011 சேவையிலிருந்து இளைப்பாறியதுடன் Mr.K.G.J.P. மகிந்தபால கடமையேற்றார். Mr.S.P. இரத்நாயக்க தெனியாய விரிவாக்கல் நிலையத்திற்கு இடமாற்றப்பட்டார்.
உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் பரிபாலனமும்

**உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் பரிபாலனமும்**

**சுற்றுலா விடுதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. TRI 4006 இனைக் கொண்ட வெளிக்கள இல 06 ல் 0.15 ஹெ நிலப்பரப்பு மீள்நடுகை செய்யப்பட்டது.**

**இசைவாக்கற் பரிசோதனைகள்**

பயிர்செய்கையாளர்களின் பார்வையில் சிபாரிசு செய்யப்பட்ட தொழிநுட்பங்களின் செயற்பாட்டினை மதிப்பிடுவதற்காக விவசாயிகளின் வெளிக்களங்களில் நிறுவப்பட்ட இசைவாக்கற் பரிசோதனைகளை மையமானது கண்காணித்தது. காலி மாவட்டத்தின் மாகெதர, வந்துரம்ப, அம்பேகம, ஹிந்தும ஆகிய இடங்களில் உள்ள 4 சிறு தேயிலைத்தோட்டங்களில் மண்தாவரபோசணை பிரிவு, TSHDA ன் அனுசரனையுடன் பிராந்தியத்திற்கு மிகப் பொருத்தமான வளமாக்கி கலவையினை தெரிவு செய்யும் இசைவாக்கற் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வந்துரம்பவில் உள்ள வர்த்தக தவறணையில் உயிர் படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கி இசைவாக்கற் பரிசோதனையும் ஆரம்பிக்கப்பட்டது.

### ஆராய்ச்சி பரிசோதனைகள்

காலி விரிவாக்கல் நிலையத்தின் அனுசரனையுடன் அந்தந்த ஆராய்ச்சி பிரிவுகளினால் பின்வரும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. TRI 5000 தொடர் LVP அவத்தை 111, வெளிக்கள இல 03.

2. தாழ்நாட்டு ஈரத்தண்டு கரையானுக்கு எதிர்ப்பு திறனுள்ள குலவகைகளை இனம் காணல் LVP அவத்தை 11, வெளிக்கள இல 03.

   மண், தாவர பேசணை பிரிவு சேதன வளமாக்கி பரிசோதனை, வெளிக்கள இல 07.

   புழுவியற் பிரிவு நெமற்றோடு குடித்தொகையை கண்காணிக்கும் பரிசோதனை, வெளிக்கள இல 04.

   பயிராக்கவியற் பிரிவு - உயிர் படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கி வெளிக்கள இல 02.

### விருந்தினர்கள்

பின்வரும் 493 நபர்கள் விரிவாக்கல் நிலையத்திற்கு விஜயம் செய்தனர்.

| | |
|---|---|
| வெளிநாட்டு விருந்தினர்கள் | 04 |
| தேயிலை வளர்போர் | 431 |
| சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் | 187 |
| பல்கலைக்கழக மாணவர்கள் | 07 |
| மாணவர்கள் | 51 |
| **மொத்தம்** | **493** |

### பயிர்

மாதாந்தம் அறுவடை செய்யப்பட்ட தேயிலையின் அளவு, தொழிற்சாலையினால் வாங்கப்பட்ட விலைகள், மாதாந்த வருமானம் என்பன பின்வருமாறு

| | பச்சை இலை (கிகி) | விலை ரூபா (கிகி) | வருமானம் ரூபா |
|---|---|---|---|
| ஜனவரி | 2192 | 62.875 | 137,822.00 |
| பெப்ரவரி | 2099 | 63.315 | 130,799.19 |
| மார்ச் | 2179 | 60.003 | 130,746.54 |
| ஏப்ரல் | 2300 | 59.519 | 136,893.70 |
| மே | 2850 | 55.008 | 156,772.80 |
| ஜூன் | 2573 | 57.006 | 146,676.44 |
| ஜூலை | 1716 | 57.768 | 99,129.89 |
| ஆகஸ்ட் | 2449 | 57.649 | 141,182.40 |
| செப்டெம்பர் | 2176 | 56.758 | 123,505.41 |
| ஒக்டோபர் | 1694 | 56.296 | 95,365.42 |
| நவம்பர் | 2221 | 55.219 | 122,641.40 |
| டிசெம்பர் | 2254 | 59.009 | 133,006.29 |
| **மொத்தம்** | **26703** | **-** | **1,554,541.48** |

**வருமானம்**

நிலையத்தின் செயற்பாடுகளினால் ஈட்டப்பட்ட வருமானங்கள் பின்வருமாறு

| **செயற்பாடு** | | **வருமானம்** |
|---|---|---|
| பச்சை இலை விற்பனை | ரூபா | 1,554,541.48 |
| வெட்டுத்துண்ட விற்பனை | ரூபா | 258,540.00 |
| வெட்டுத்துண்ட செடிகளின் விற்பனை | ரூபா | 107,502.00 |
| மண் $p^H$, காபன் பகுப்பாய்வு கட்டணம் | ரூபா | 13,585.00 |
| பிரசுர விற்பனை | ரூபா | 27,240.00 |
| விடுதி உபயோகக் கட்டணம் | ரூபா | 13,250.00 |
| ஏனையவை | ரூபா | 8,529.00 |
| **மொத்த வருமானம்** | ரூபா | **1,974,976.58** |

# தெனியாய விரிவாக்கல் நிலையம்

S.P. **இரத்நாயக்க**
B.Sc. விவசாயம் (றுகுனு) MBA(சீனா)
பொறுப்பதிகாரி.

**பொது**

தெனியாய இரத்தினபுரி வீதியில் அமைந்துள்ள TRI தெனியாய விரிவாக்கல் மையம் ஆனது சிறிய மண் pH , நெமற்றோடு பகுப்பாய்வு ஆய்வுகூடத்தை கொண்டு 5.00 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதன் நிலப்பாவனை விபரம் பின்வருமாறு.

புதிதாக துப்பரவு செய்யப்பட்ட நிலம் 0.5
புணரமைப்பின் கீழ் (மானா) 2.2
கட்டிடங்கள், தோட்டங்கள், தெருக்கள் 2.3

விரிவாக்கல் மையம் ஆனது தலைமையகத்தில் உள்ள பிரிவுத் தலைவர்களின் ஆலோசணைகளுக்கமைய மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் அமைந்துள்ள தேயிலை பெருந்தோட்டங்களில் பெருமளவிலான வெளிக்கள, தொழிற்சாலை ஆய்வுகளை மேற்கொண்டது. TRI , TSHDA தேயிலை அபிவிருத்தி சமூக உறுப்பினர்களின் பங்களிப்புடன் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களுக்கான பிராந்திய தொழிநுட்ப விரிவாக்கற் கூட்டமும், மாத்தளை மாவட்ட கூட்டுறவுத்துறை பங்காளிகளுக்கான விஞ்ஞான குழுக் கருத்தரங்கும் ஒழுங்கு செய்யப்பட்டன. இக் கூட்டங்களில் நிழல் முகாமைத்துவம் தாழ் பிரதேச தேயிலை நிலங்களில் மண்ணின் கனிப்பொருள் கிடைக்கப்பெறும் தன்மையினை பாதிக்கும் விவசாய செயன்முறைகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் வளமாக்கி பாவனை வினைத்திறனை அதிகரித்தல், தெனியாய பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தேயிலை செடிகள் நலிவடைதல் தொடர்பான ஆய்வு முடிவுகள் என்பன ஆராயப்பட்ட முக்கிய விடயங்களாகும். இதற்கு மேலதிகமாக தெனியாய விரிவாக்கல் நிலைய உத்தியோகத்தர்கள் ஆலோசணை விரிவாக்கல் பிரிவுத் தலைவரின் ஆலோசணைக்கமைய தெனியாய பிரதேசத்தில் தேயிலை செடிகளை நலிவடைய செய்யும் காரணிகளை இனங்காண்பதற்காக ஆய்வினை TSHDA உடன் இணைந்து மேற்கொண்டனர். கொட்டபொல, பஸ்கொட, அக்குரஸ்ச சிரேஷ்ட்ட தேயிலை பரிசோதகர் பிரிவுகளில் இருந்து 60 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் RTEF , E&E (சிங்களம்), RSC கூட்டங்களில் முன்வைக்கப்பட்டன. இந் நிலைக்கு நோய் பீடைத்தாக்கமும் (குண்டு துளைப்பி, புழுக்கள், புற்றுநோய்) தவறான விவசாய செயற்பாடுகளும் துனை புரிந்தன. ஆலோசணை விரிவாக்கற் பிரிவு உத்தியோகத்தர்கள் MP1 இனால் மேற்கொள்ளப்பட்ட இரத்தினபுரி, பதுளை மாவட்டங்களில் காணப்படும் கூட்டுறவுத்துறைக்குரிய செய்கை பண்ணப்படாத நிலங்களின் விபரம் பற்றிய மதிப்பீட்டிலும் தமது பங்களிப்பினை வழங்கினர். அத்துடன் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட TRI 4000 , 3000 தொடர் குலவகைகள் பற்றிய அவர்களது அபிப்பிராயங்களை

அறிவதற்காக பிராந்திய ஆலோசணை விரிவாக்கல் மையங்களினாலும், தாவர இனவிருத்தி பிரிவினாலும் நடாத்தப்பட்ட நாடளாவிய ஆய்வின் பகுதி பூர்த்தி செய்யப்பட்டது. சிறு தேயிலைத்தோட்ட பயிர்செய்கையாளர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்காகவும், தேயிலை கைத்தொழில் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய குலவகைகளின் வளர்ப்பினையும், முகாமைத்துவத்தினையும் உறுதிப்படுத்துவதற்காகவும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. TRI இனால் மாத்தறை மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலைத்தோட்டங்களிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட தரவுப்பதிவு புத்தகத்தில் பதிவதன் மூலம் வளமாக்கி, இரசாயன பொருள் பிரயோகம் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான புதிய முயற்சி எழுத்தமாக தெரிவு செய்யப்பட்ட சில தொழிற்சாலைகளில் TSHDA ன் அனுசரனையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் முடிவுகள் தரவுகள் பேணப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தின.

**உத்தியோகஸ்தர் இடமாற்றுகை**

01.09.2011 முதல் Mr.P.K.R.C.E. முனசிங்கத(விரிவாக்கல் உத்தியோகத்தர்) மத்திய பிராந்திய மையத்திற்கு இடமாற்றப்பட்டார்.

**பரிசோதனை விரிவாக்கல் கூட்டம்**

ஆலோசணை விரிவாக்கல் பிரிவைச் சேர்ந்த ஆலோசணை உத்தியோகத்தர் S.P. இரத்நாயக்க TRI , TSHDA , SLTB , SLPTOA , தேயிலை சமூக உறுப்பினர்களின் பங்களிப்புடன் வருடத்திற்கு இரண்டு கூட்டங்களை ஒழுங்கு செய்தார். இக் கூட்டங்களில் சிறு தேயிலைத்தோட்டங்களில் தற்போதைய செலவு கணிப்பீடுகளும் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளும், தேயிலையில் பொறிகளைப் பயன்படுத்துதல், தெனியாய பிராந்தியத்தில் செடிகள் நலிவடைதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள், குண்டு துளைப்பி வண்டின் தாக்கம், மண் $P^H$ தாங்கற்தன்மையும் அதன் பிரயோகங்களும், சிறு தேயிலைத் தோட்டங்களில் கலப்புப் பயிர்செய்கை, ஊடுபயிர்செய்கை, நிழல் முகாமைத்துவம் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர் ஒருவரும் முன்வைப்பை நிகழ்த்தினார் கலந்துரையாடலின் போது தேயிலை பயிர்செய்கையில் இயந்திரங்களை அறிமுகப்படுத்தும் சாத்தியக்கூறுகள், தொலை தொடர்பு சாதனங்கள் மூலம் பொருத்தமான முக்கியமான செய்திகளை அறிவிக்கப்படுவதன் முக்கியத்துவமும், தேயிலை பயிர்செய்கையாளர்களுக்கு தாரமான நடுகைப் பதார்த்தங்கள் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றின் முக்கியத்துவங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

**பயிற்சி வாய்ப்புகள்**

Mr.S.P. இரத்நாயக்கவின் மேற்பார்வையின் கீழ் றுகுனு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவன் தனது ஆராய்ச்சி திட்டத்தினையும், NITA ஐச் சேர்ந்த டிப்ளோமா மாணவன் தனது உள்ளக பயிற்சியையும் பூர்த்தி செய்தனர்.

**உட்கட்டமைப்ப அபிவிருத்தியும் பராமரிப்பும்**

மையத்திற்கான நிலம் அளவிடப்பட்டு வேலி அமைக்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. D வகை விடுதிகளையும் நிர்மாணிக்கும் பணிகளும், உள்வீதிகளுக்கு கொன்கிறீட் போடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. உத்தியோகத்தர் விடுதிகள், அலுவலகம், ஏனைய கட்டிடங்களின் திருத்த வேலைகளும், நிலைய வாகனங்களின் பராமரிப்பு வேலைகளும் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**இசைவாக்கற் பரிசோதனை**

மண், தாவர போசணை பிரிவு, TSHDA ன் அனுசரணையுடன் பிராந்தியத்திற்கு பொருத்தமான வளமாக்கி கலவையை தெரிவு செய்யும் இசைவாக்கற் பரிசோதனைகள் மாத்தறை மாவட்டத்தில் உள்ள 3 சிறு தேயிலைத்தோட்ட நிலங்களில் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் பயிராக்கவியற் பிரிவு, TSHDA ன் அனுசரனையுடன் உயிர் படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கி தொடர்பான இசைவாக்கற் பரிசோதனை TRI தெனியாய மையம் முன்னர் காணப்பட்ட இடத்தில் உள்ள வர்த்தக தவறணையில் ஆரம்பிக்கப்பட்டது.

**ஆராய்ச்சி பரிசோதனைகள்**

ஆராய்ச்சி பிரிவுகளின் அனுசரனையுடன் பின்வரும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**தாவர இனவிருத்தி பிரிவின் அனுசரனையுடன்**

(1) TRI 5000 தொடர் : LVP அவத்தை 111 கிருவுக்கங்கை, தெனியாய தோட்டம்

(2) மேம்படுத்தப்பட்ட விதைத்தேயிலை செடி பரிசோதனை வரப்பிடிய சிறு தேயிலைத்தோட்ட நிலத்தில்

மண், தாவர போசணை பிரிவு அனுசரனையுடன்

- வளமாக்கி பரிசோதனை குறுருவத்தை தோட்டம் , கொட்டபொல

**பூச்சியல், புழுவியற் பிரிவின் அனுசரனையுடன்**

(1) TRI 5000 தொடர் கண்காணிப்பு - தெனியாய TRI தவறணை.

(2) SGB பரிசோதனை - தெனியாய தோட்டம்

**பயிராக்கவியற் பிரிவின் அனுசரனையுடன்**

(1) உயிர் படலமிடப்பட்ட உயிரியல் வளமாக்கி ரிச்லண்ட், நில்கிரி தோட்டம்.

**விருந்தினர்கள்**

பின்வரும் 1038 விருந்தினர்கள் நிலையத்திற்கு விஜயம் செய்தனர்.

| | |
|---|---|
| தோட்ட நிர்வாகம்/சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் | 769 |
| பல்கலைக்கழக/மாணவர்கள் | 269 |

**வருமானம்**

மையத்தினால் பெறப்பட்ட மொத்த வருமானம் பின்வருமாறு.

| செயற்பாடு | வருமானம் |
|---|---|
| பிரசுர விற்பனை | 43315.00 |
| 357 மண் மாதிரி பரிசோதனை | 33915.00 |
| 1300 தவரணை செடிகளின் விற்பனை | 23400.00 |
| ஏனையவை | 37652.90 |
| மொத்தம் | 138282.90 |

# களுத்துறை விரிவாக்கல் மையம்

**ஹரன் ஜெயவீர**
பதில் பொறுப்பதிகாரி

**பொது**
மத்துகம, நிவித்திகலகெலவில் உள்ள TRI களுத்துறை விரிவாக்கல் மையமானது இறப்பர் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், சிறிய $P^H$ மண் பகுப்பாய்வினை மேற்கொள்ளும் ஆய்வுக்கூடத்தை கொண்ட அமைப்பாகும்.

தலைமையகத்தில் உள்ள ஆலோசனை விரிவாக்கற் பிரிவு தலைவரின் ஆலோசனைக்கு அமைய விரிவாக்கல் மையமானது களுத்துறை, கம்பஹா, கொழும்பு மாவட்டங்களில் உள்ள தேயிலை பெருந்தோட்டங்களில் பல வெளிக்கள, தொழிற்சாலை ஆய்வுகளையும், வெளிக்கள நாட்களையும், கருத்தரங்குகளையும் நடாத்தியது.

TRI, TSHDA, SLTB உத்தியோகத்தர்கள் தேயிலை அபிவிருத்தி சமூக உறுப்பினர்களின் அனுசரனையுடன் சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களுக்கான பிராந்திய தொழிநுட்ப விரிவாக்கல் கூட்டமும், TRI இரத்தினபுரி மையத்தின் அனுசரனையுடன் களுத்துறை மாவட்ட கூட்டுறவுத்துறைக்கான பிராந்திய விஞ்ஞான குழுக்கூட்டமும் களுத்துறை விரிவாக்கல் மையத்தில் நாடத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் களுத்துறை மாவட்டத்தில் தரமான நாற்றுமேடை செடிகளை பெறுவதில் உள்ள சிக்கல்கள் கலந்துரையாடப்பட்டன.

இவற்றிற்கு மேலாக களுத்துறை விரிவாக்கல் நிலைய உத்தியோகத்தர்கள் ஆலோசனை விரிவாக்கற் பிரிவு தலைவரின் ஆலோசனைக்கு இணங்க மத்துகம சென் மேரிஸ் கல்லூரியில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சியில் பங்குபற்றினர்.

இக் கண்காட்சிக்கு 15000 க்கு மேற்பட்ட பொது மக்கள் வருகை தந்தனர் களுத்துறை, கம்பஹா, கொழும்பு மாவட்டத்தில் உள்ள தேயிலை பயிர்செய்கையாளர்களின் நன்மை கருதி பயிர் சிகிச்சை நிகழ்ச்சியினை ஒழுங்கு செய்வதற்கு ஆலோசணை விரிவாக்கற் பிரிவு உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர், பிரிவுச் செயலாளர் உட்பட 500 பயனீட்டாளர்கள் பங்குபற்றினர். உதவி தேயிலை ஆணையாளர், TSHDA ன் பங்களிப்புடன் பலவத்தை, கடுகெல, ஹடிகல ஆகிய இடங்களில் தொழிற்சாலை உத்தியோகத்தர்களுக்கும் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்ட 3 விரிவாக்கல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

TRI இனை பிரதிநிதித்துவப்படுத்தி பொறுப்பதிகாரி களுத்துறை DS அலுவலகத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

### உத்தியோகஸ்தர் இடமாற்றுகை

01.09.2011 முதல் TRI தலவாக்கலை ஆலோசணை விரிவாக்கற் பிரிவைச் சேர்ந்த விரிவாக்கல் உத்தியோகத்தர் Mr. ஹரன் ஜெயவீர, களுத்துறை ஆலோசணை விரிவாக்கல் மையத்திற்கு பதில் பொறுப்பதிகாரியாக இடமாற்றப்பட்டதுடன், பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய Mr.T.H மகிந்தபால ஆலோசணை உத்தியோகத்தராக இரத்தினபுரி ஆலோசணை விரிவாக்கல் மையத்திற்கு இடமாற்றப்பட்டார்.

### உட்கட்டமைப்ப அபிவிருத்தியும் பராமரிப்பும்

ஆய்வுகூட, அலுவலக, விரிவுரை மண்டப பராமரிப்பு, திருத்த வேலைகளும், நிலைய வாகனங்களின் திருத்த வேலைகளும் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டன. மையத்தில் இரத்தினபுரி தாவர இனவிருத்தி பிரிவின் உதவியுடன் பொருத்தமான புதிய குலவகைகளைக் கொண்ட செயன்முறை விளக்கத்துண்டம் ஸ்தாபிக்கப்பட்டது.

**இசைவாக்கற் பரிசோதனை**

TSHDA, மண் தாவர போசணை பிரிவு அனுசரனையுடன் பிராந்தியத்திற்கு பொருத்தமான வளமாக்கி சேர்வைகளை தெரிவு செய்வதற்கான இரு இசைவாக்கற் பரிசோதனைகள் களுத்துறை மாவட்டத்தில் மீகஹத்தென்ன, கிரன்சிகந்த ஆகிய இரு இடங்களில் உள்ள சிறு தேயிலை தோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

# விருதுகள், பிரசுரங்கள், விசேட கற்கை நிகழ்ச்சிகள்

**ஆலோசனை விரிவாக்கற் பிரிவு பிரசுரங்கள்**

- அமரதுங்க M.K.S.L.D, வனிகசுந்தர W.A.D.P (2010) பொது - தனியார் பங்களிப்பு விரிவாக்கல் அணுகுமுறையின் பிரதான பங்காளிகளின் இணைப்பினை வலுப்படுத்தல். இலங்கை சிறு தேயிலைத் தோட்ட துறையில் கற்றுக் கொண்ட பாடங்கள், இலங்கை தேயிலை விஞ்ஞானச் சஞ்சிகை, இதழ் 75, (1) 1-16

- சிதாகரன் V.S. (2010)இ இலங்கை கூட்டுறவுத்துறை தேயிலை பயிர்செய்கையில் விவசாய தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வும், அவற்றை பின்பற்றுதலும். இலங்கை தேயிலை விஞ்ஞானச் சஞ்சிகை, இதழ் 75, (1) 54-65.

**விசேட முன்வைப்புகள்**

- Mr. B.A.D சமன்சிறி, ஏப்ரல் 4ம் திகதி கொழும்பில் நடைபெற்ற பங்காளிகளின் கூட்டத்தில், இலங்கை கூட்டுறவுத்துறை தேயிலைத் தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் வெளிப்பாடுகள் எனும் தலைப்பில் கருத்துக்களை முன்வைத்தார்.

- Mr J.C.K இராஜசிங்க, ஏப்ரல் 4ம் திகதி கொழும்பில் நடைபெற்ற பங்காளிகளின் கூட்டத்தில், இலங்கை கூட்டுறவுத்துறை தேயிலைத் தோட்டங்களில் TRI சிபாரிசுகள் பின்பற்றப்படும் அளவுகள் எனும் தலைப்பிலான கருத்துக்களை முன்வைத்தார்.

- Mr C.J லியனாராய்ச்சி, விரிவாக்கல் உத்தியோகத்தர் ‘‘மீள் நடுகை’’ பற்றிய பயிற்சிப்பட்டறையினை அகலவத்தை பெருந்தோட்ட கம்பனி, உயர் பிரதேச தோட்ட நிறைவேற்று அதிகாரிகளுக்கு நிகழ்த்தினார்.

**கற்கை நிகழ்ச்சிகள்**

- Mr B.A.D. சமன்சிரி, பேராதனைப் பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பிற்கான விவசாய நிலையத்தில், தேயிலை கைத்தொழிற்துறையின் பங்காளிகளுக்கிடையே ICT

பாவணையும் தகவல்களை எனும் தலைப்பிலான தனது கலாநிதி கற்கைக்கான 18 மாதகால கற்கை விடுமுறையை நிறைவுசெய்து மார்ச் 18ம் திகதி கடமைகளை பொறுப்பேற்றார்.

- Mr K.G.J.P மகிந்தபால, PGIA , பிரயோக புள்ளிவிபரவியல் உயர்தர டிப்ளோமாவை பூர்த்தி செய்தார்.

- Ms ஹிரோமி நிஷாந்தி, பேராதனைப் பல்கலைக்கழக PGIA ல் விவாசய விரிவாக்கலில் M.Sc கற்கையை தொடர்ந்தார். ஆராய்ச்சி கற்கைக்கான தரவு சேகரிப்பினை பூர்த்தி செய்தார்.

- Mr ரோஹித் குமார, Mr. C முனசிங்க, விரிவாக்கல் உத்தியோகத்தர்கள், கொழும்பு 'நிபுணதா பியச' வில் ஒக்டோபர் 17-21 வரை நடைபெற்ற இளைஞர் விவகார, தொழிற்துறை அமைச்சின் திறன் அபிவிருத்தி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'பயிலுநர்களை பயிற்றுவித்தல்' எனும் 5 நாள் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர்.

**விவசாய பொருளியல் பிரிவு**

**பிரசுரங்கள்**

B.M.M.S மன்சநாயக்க, N.R அபேநாயக்க, H.W சியாமளி (2001) உற்பத்தி செலவினை மதிப்பிடுதல் : இரத்தினபுரி மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்டங்களில் அவற்றின் பங்கினை தீர்மானித்தலும், சிக்கல்களும் 11வது விவசாய ஆராய்ச்சி மகாநாட்டு அமர்வுகள், வயம்ப பல்கலைக்கழகம்* 188-192.

விசேட முன்வைப்புகள் : TRI தாழ் பிரதேச கேட்போர்கூடத்தில் Ms. H.W சியாமளி நடைபெற்ற E&E கூட்டத்தில் (சிங்களம்) 24.06.2011. எனும் ஆராய்ச்சி கட்டுரையை சமர்ப்பித்தார்.

- Ms. H.W சியாமளி 2011.08.25 அன்று நடைபெற்ற தேயிலை ஆராய்ச்சி சபைக் குழுக் கூட்டத்தில் தொழிலாளர் சம்பள உயர்வும், வளமாக்கி உரமானியமும் தேயிலை தொழிற்துறையின் உற்பத்தி செலவில் ஏற்படுத்தும் தாக்கம் எனும் தலைப்பில் கருத்துக்களை முன்வைத்தார்.

**கற்கை நிகழ்ச்சிகள்**

Ms. H.W சியாமளி : நவம்பர் 7, 8 ல் தேசிய விஞ்ஞான சம்மேளனத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞான ஆராய்ச்சியும், சுருக்கமான ஆராய்ச்சி.

Ms. H.W சியாமளி, பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தில் CAPSA வினால் நடாத்தப்பட்ட "வறுமையை குறைப்பதற்கும், உணவுப் பாதுகாப்பிற்குமான நீடித்திருக்கும் விவசாயம்" எனும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டார்.

Ms. H.W சியாமளி டிசெம்பர் 1ம், 2ம் திகதிகளில் கொழும்பில் நிதிக் கற்கைகள் அக்கடமியில் நடைபெற்ற கூட்டுறவு திட்டமிடல், வரவு- செலவுத்திட்டம் தயாரித்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

**பயிராக்கவியற் பிரிவு**

**பிரசுரங்கள்**

ஜெயசிங்க S பிரேமதிலக K.G (2011) விளைச்சலை அதிகரிப்பதற்காகவும், நோய் பீடைத்தாக்கத்திற்கான எதிர்ப்புத்தன்மையை பெறுவதற்காகவும் தேயிலை செடிகளை ஒட்டுதல், 22[வது] E&E கூட்டம் தேயிலை ஆராய்ச்சி நிலையம், தலவாக்கலை.

பிரேமதிலக K.G, (2010) கிரோமோசோனுக்கான மாற்றீடு 'TRI அப்டேட்', செய்திப் பத்திரிகை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம். இதழ் 13, இல 2.

பிரேமதிலக K.G (2011), 'விவசாய- வனவியல் தொகுதி மூலம் உற்பத்தியினை அதிகரித்தல் : லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் 15.03.2011 நடைபெற்ற விவசாய- வனவியல் அணுகுமுறை மூலம் தென்னை நிலங்களின் உற்பத்தியினை அதிகரித்தல். அமர்வில் இலங்கை CRI இன் வெளியீடு, உலக விவசாய வனவியற் நிலையம், தெற்காசிய காரியாலயம், புது டெல்லி, இந்தியா, பல்நோக்கி மர இன வலையமைப்பு, இலங்கை.

செனவீரத்ன G ஜயசேகர A.P.D.A டி சில்வா M.S.D.L, அபேசேகர UP (2011) விருத்தி செய்யப்பட்ட நுண்ணங்கி உயிர்படலம் தரம் இழந்த விவசாய நிலங்களின் மண்ணை புணரமைக்க உதவும். மண் உயிரியலும், உயிர் இரசாயனவியலும். xxx 1.

பிரேமதிலக K.G, லியனகே M.G.S. (2011) கினிசப்பு விதைகளை இயற்கை களை கொல்லிகளாகப் பயன்படுத்தப்படும் அளவு 6[வது] உலக அலேலோபதி மகாநாடு, கொகன்சு, சீனா 15-19 டிசெம்பர் 2011.

ஜயசிங்க L.R.S.P பிரேமதிலக K.G (2011) விளைச்சலை அதிகரிப்பதற்காகவும் நோய் பீடைத் தாக்கத்திற்கான எதிர்ப்புத் தன்மையினை பெறுவதற்காகவும் தேயிலை செடிகளை ஒட்டுதல், காலநிலை மாற்றம் விவசாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய மகாநாடு, விவசாய பீடம், றுகுணு பல்கலைக்கழகம் டிசெம்பர் 20-21, 2011.

விஜேரத்ன T.L , கொஸ்தா W.A.J.M.D. வுட்வார்ட் S.I, லோமஸ் M, விஜேரத்ன M.A (2001) 21ம் நூற்றாண்டில் இலங்கையின் வெவ்வெறு உயர் மட்டங்களில் காலநிலை மாற்றம் தேயிலையின் விளைச்சலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை எதிர்க்கூறல், காலநிலை மாற்றம் விவசாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய மகாநாடு, விவசாய பீடம், றுகுணு பல்கலைக்கழகம் டிசெம்பர் 20-21, 2011.

**விசேட முன்னிலைப்படுத்தல் அறிக்கைகள்**

Dr. K.G பிரேமதிலக. ''விவசாய- வனவியல் தொகுதி மூலம் தேயிலை நிலங்களின் உற்பத்தியினை அதிகரித்தல் எனும் தலைப்பிலான கருத்துக்களை லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் மார்ச் 15ம் திகதி நடைபெற்ற விவசாய வனவியல் கூட்டத்தில் முன்வைத்தார்.

Dr. M.A விஜேயரத்ன பின்வரும் கவ்வாத்துகளை புதைத்தல், ஒரு சிறந்த விவசாய செயற்பாடு ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி பயிற்சி நிலையம், - ஏப்ரல் 5 பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் செயலாளர் உடனான சந்திப்பின் போது ''காலநிலை மாற்றத்தின் விளைவு'' மே 4. Dr. K.G பிரேமதிலகவும், Dr. M.A விஜேரத்னவும் கொழும்பில் ஒக்டோபர் 17ம் திகதி CARP சேதன விவசாய, வனவியற் தொடர்பான தேசிய குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட சேதன விவசாய, வனவியற் பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டனர்.

N.S. சமந்திஜெயசிங்க, Ms.T. L விஜேரத்ன ஆகியோர் றுகுணு பல்கலைக்கழகத்தில் டிசெம்பர் 20-21 நடைபெற்ற 'காலநிலை மாற்றம் விவசாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம்' பற்றிய சர்வதேச மகாநாட்டில் இரண்டு ஆராய்ச்சி கட்டுரைகளை முன்வைத்தனர்.

**கற்கை நிகழ்ச்சிகள்**

- Ms T L விஜேரத்ன, UK. செபீல்ட் பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றத்திற்கு தேயிலையின் காபன் உடற் தொழிலியல் மாற்றங்களையும் எதிர்வு கூறுதல் எனும் தலைப்பிலான ஒரு வருட பயிற்சியை நிறைவு செய்து நாடு திரும்பினார். இது அவரது கலாநிதி கற்கைக்கான ஆராய்ச்சி பகுதி ஆகும்.
- N.P.S.N பண்டார அடிலேட் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதி கற்கை அறிக்கையை சமர்பித்த பின் நாடு திரும்பினார்.
- Dr. K.G பிரேமதிலக சீனா குறொங்சூவில் டிசெம்பா 15-19 வரை நடைபெற்ற 6வது அலேலோபதி உலக மகாநாட்டில் கலந்து கொண்டார்.
- Dr. M.A விஜேரத்ன, டொக்லய் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்கும், UPASI தேயிலை ஆராய்ச்சி சம்மேளனத்திற்கும் நவம்பர் 15-24 விஜயம் செய்தார்.

**உயிர் இரசாயனவியற் பிரிவு**

**விருதுகளும் நிதி உதவிகளும்**

Dr I.S.B. அபேசிங்க, Dr நிமால் புண்ணியசிரி ஆகியோருக்கு BMICH ல் 2011.08.25 ல் நடைபெற்ற விவசாய ஆராய்ச்சி தேசிய விருது வழங்கும் வைபவத்தில் முதலாம் பரிசு வழங்கப்பட்டது.

Dr K.M மெவனிற்கு 2007-2009 ஆண்டில் இயற்கை விஞ்ஞான துறையில் சிறந்த பட்டப்பிற்படிப்பு ஆராய்ச்சியை மேற்கொண்டமைக்கான 'ஹிசான் திலகரட்ண ஆராய்ச்சி விருது' 2011.02.21 திகதி கொழும்பு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

Dr P.A.N புண்ணியசிரிக்கு இலங்கைத் தேயிலையின் அனுசேப பொருட்களின் மட்டங்களை ஆராய்வதற்காக தேசிய ஆராய்ச்சி சபையினால் ரூபா 9.3 மில்லியன் தொகைக்கான நிதி அனுமதி வழங்கப்பட்டது.

**பிரசுரங்கள்**

புண்ணியசிரி P.A.N , சோமசிரி H.P.P.S, தொட்டவட்டகே G, அபேசிங்க, I.S.B, அமரகோன் A.M.T (2001) 0- தலடிகைட் பரிதிகளை உபயோகித்து இலங்கை திரவ நிறப்படவியலில் L- தியானைன் இன் அளவு- 12வது அரச உணவு பகுப்பாய்வாளர் மகாநாட்டு அமர்வுகள்- பெப்ரவரி 21-25, பிரிஸ்பேன், அவுஸ்திரேலியா

ஜெகநாதன் B, புண்ணியசிரி P.A.N, மடுஜித், T (2011) இலங்கை கறுப்புத் தேயிலையின் பொலீப்பினோல், பிளேவனோல் கிளைக்கோசைட், பிளேவனோல்களின் அளவறிப் பகுப்பாய்வு, 16வது பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி அமர்வுகள் (PURSE) நவம்பர் 2011,

தர்மசேன I, ஜெயவர்தன B.C, மகிபால M.B.P, தொட்டவட்டகே G (2011) பரிகரிக்கப்படாத பன்றி இறைச்சி சொசேஜஸ் இல் பச்சை, கறுப்புத் தேயிலைச் சாயங்களின் அன்ரி ஒக்சிடன்ட் தொழிற்பாடு 21வது வருடாந்த மாணவர் ஆராய்ச்சி அமர்வுகள் விலங்கு விஞ்ஞான பிரிவு, பேராதனைப் பல்கலைக்கழகம்

நஸ்ரியா M, மெவன் K.M, பிரேமதிலக K.B.A.G, கிம்கானி D.R (2011) இலங்கையின் பழைய விதைத் தேயிலைகளின் SSRP இனால் வெளிக்கொண்டு வரப்பட்ட பிறப்புரிமை பல்வகைமை 11வது விவாசய மகாநாட்டு அமர்வுகள், வயம்ப பல்கலைக்கழக, மாகந்துர செப்டெம்பர் 2011, 11-15

**கற்கை நிகழ்ச்சிகள்**

K.M மெவன் 'மூலக்கூற்று உயிரியலும், பிறப்புரிமையியல் தொழில்நுட்பமும்' எனும் தலைப்பில் பட்டமேற்படிப்பு கற்கையை பூர்த்தி செய்தார்.

**விசேட முன்வைப்புகள்**

Dr P.A.N புண்ணியசிரி, Mr G.A.A பெரேரா இரசாயவியல் நிலையத்தினால் கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்ட "தேயிலையின் நீடித்திருக்கும் தரங்களை விருத்தி செய்தலும், பாதுகாப்பு, சுகாதார" எனும் தலைப்பிலான கருத்தரங்கில் விரிவுரைகளை வழங்கினார்.

**பூச்சியியற் புழுவியற் பிரிவு**

**விருதுகளும் நிதி உதவிகளும்**

'தேயிலை பெருந்தோட்டங்களில் காலநிலை மாற்றத்துடன் நெமற்றோடு குடித்தொகையில் ஏற்படும் மாற்றங்களின் உருவவியல், மூலக்கூற்று வகைப்படுத்துகை' எனும் ஆராய்ச்சி, CARP இனால் நிதி வழங்களுக்காக தெரிவு செய்யப்பட்டது.

**வெளிநாட்டு மகாநாடுகள்**

Dr K.M மொஹட்டி தலைவர், பூச்சியியற் புழுவியற் பிரிவு இலங்கைப் பிரதிநிதியாக ஜீலை 2011 இல் கென்யாவில் நடைபெற்ற 1வது ஆபிரிக்க தேயிலை மகாநாட்டிலும், FAO/IGG தொழிற்பாட்டு குழுக் கூட்டத்திலும் கலந்து கொண்டார். அவர் கென்யாவின் தேயிலை ஆராய்ச்சி மன்றத்திற்கும், கென்யாவில் தேயிலை அபிவிருத்தி நிறுவனத்தின் கூட்டுறவுத்துறை, சிறு தேயிலைத் தோட்ட தேயிலை நிலங்களிற்கும் விஜயம் செய்தார்.

Dr மொஹட்டி ஓசோன்படையினை நலிவடையச் செய்யும் பதார்த்தங்கள் தொடர்பான மொன்றியல் உடன்படிக்கையின் 23வது கூட்டத்திலும் ஓசோன்படையினை பாதுகாக்கும் வியன்னா உடன்படிக்கையின் குழுக் கூட்டத்திலும், பாலி, இந்தோனேஷியாவில் நவம்பர் 2011 ல் பங்குபற்றினார். மொன்றியல் உடன்படிக்கையின் நோக்கங்கள் முன்னராகவே தேயிலைத் தோட்டங்களில் இரசாயன பொருட்களை உபயோகிக்காது மெதைல் புறொமைட் பாவணையினை இல்லாது செய்த வெற்றிகரமான கதையினை பற்றிய தொழில்நுட்பம்

**தாவர இன விருத்திப் பிரிவு**

**விருதுகளும் நிதி**

J.D கொட்டாவ ஆராய்ச்சியினால் 23வது வருடாந்த PGIA மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட 'இலங்கைத் தேயிலை வளரும் முதலுருக்களின் தரங்களை எதிர்வு கூறுவதில் கறுப்புத் தேயிலையில் தெரிவு செய்யப்பட்ட உயிர் இரசாயனவியல் கூறுகளின் பகுப்பாய்வு' எனும் தலைப்பிலான ஆராய்ச்சி கட்டுரை, உயிர் இரசாயனவியல், உணவு விஞ்ஞான அமர்வின் சிறந்த முன்வைப்பாகவும், அவ் அமர்வின் சிறந்த PGIA மாணவர் முன்வைப்பாகவும் தெரிவு செய்யப்பட்டது.

உயிர் இரசாயனவியற் பிரிவுடன் இணைந்து விருத்தி செய்யப்பட்ட 'இலங்கைத் தேயிலை வளரும் முதலுருக்களின் அனுசேபப் பொருட்களின் நிரற்படுத்துகை' எனும் தலைப்பிலான ஆராய்ச்சி கட்டுரை தேசிய ஆராய்ச்சி மன்றம் ரூபா 9.3 மில்லியன் நிதி வழங்கியதுடன் அவ் ஆராய்ச்சி வேலைகள் தொடர்கின்றன.

தொழில்நுட்பவியற் பிரிவுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட "உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று குறிகளைப் பயன்படுத்தி உயர் தரமுடைய கறுப்புத் தேயிலைக்காக தேயிலை வளரும் முதலுருக்களை இனம்காண செய்யும் இளம் நிலையில் தெரிவு செய்யும் விருத்தி செய்தல்" எனும் தலைப்பிலான ஆராய்ச்சி CARP க்கு சமர்ப்பிக்கப்பட்டு தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் நிதி வழங்கலிற்காக தெரிவு செய்யப்பட்டன.

### பிரசுரங்கள்

ஆரியரத்ன H.A.C.K குணசேகர M.T.K, கொட்டாவ ஆராய்ச்சி J.D, பாஸ்கரதேவன் R இரணவீர K.K, இரத்நாயக்க M, குமார J.B.A.D.P 2011, இலங்கை தேயிலையின் இனப்பெருக்க உயிரியலில், உருவ- உடற்றொழிலியல், யுபைடிக்கா 181, 203-215.

கொட்டாவ ஆராய்ச்சி J.D, குணசேகர M.T.K, இரணதுங்க M.A.B ஜயசிங்க L, கருணகொட R.P 2011. இலங்கைத் தேயிலை வளரும் முதலுருக்களின் தரத்தினை எதிர்வு கூறுவதற்கு கறுப்புத் தேயிலையில் தெரிவு செய்யப்பட்ட உயிர் இரசாயனவியற் கூறுகளின் பகுப்பாய்வு ட்ரோபிகல் விவாசய ஆராய்ச்சி 23 (1) : 30-41

அபேபால K.M.R.D, குணசேகர M.T.K, இரணவீர K.K, இரணதுங்க M.A.B, வீரசிங்க P.A, 2011, கமிலியா சைனென்சிஸ் ஓ கமிலிய சசன்குவா வின் தெரிவு செய்யப்பட்ட உள்ளக கலப்புப் பிறப்பாக்கல்களை தொழில்நுட்பம். இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் 67வது வருடாந்த மகாநாட்டு அமர்வுகள் (SLAAS), பகுதி 1, 13ீ.

பின்னகொட D.M, விக்ரமசிங்க I.P, இரணதுங்க M.A.P குணசேகர M.T.K, 2011 உருவவியல், மூலக்கூற்று குறிகளை பயன்படுத்தி தேயிலை வழித்தோன்றல்களை மதிப்பிடுதல், பட்டப்படிப்பு ஆராய்ச்சி அமர்வுகள், விவாசய உயிரியல் பிரிவு, இல 02, 35-38

இரணதுங்க M.A.B, குணசேகர M.T.K, பின்னகொட D.M, விக்ரமசிங்க I.P 2011 பாரம்பரிய தேயிலை இனவிருத்தி நிகழ்ச்சியிற்கு உதவுவதற்காக RAPD இனை அடிப்படையாகக் கொண்ட வழித்தோன்றல் பகுப்பாய்வு முறையினை விருத்தி செய்தல். தேசிய விவசாய உயிர் இரசாயனவியல் மகாநாட்டு அமர்வுகள் (பதிப்பில்)

### புத்தக அலகுகள்

குணசேகர M.T.K, இலங்கையில் தேயிலை செடிகளை இனவிருத்தி செய்வதில் அடைவுகள், சவால்கள், எதிர்பார்ப்புகள் உலக தேயிலை இனவிருத்தி, அடைவுகள், சவால்கள், தேயிலை இனவிருத்தியின் எதிர்பார்ப்புகள் (பதிப்புக்கள்).

### கற்கை நிகழ்ச்சிகள்

K.K இரணவிர தனது பட்டமேற்படிப்பு கற்றையினை பூர்த்தி செய்து, பேராதனைப் பல்கலைக்கழக PGIA இனால் பயிர் விஞ்ஞான கற்கையில் முதுமானி பட்டம் வழங்கப்பட்டது.

M.A.B இரணதுங்க பேராதனைப் பல்கலைக்கழக, விஞ்ஞானத்திற்கான பட்டமேற்படிப்பு நிலையத்தில் தனது கலாநிதி கற்கையினை ஆரம்பித்தார்.

**பதனிடல் தொழில்நுட்ப பிரிவு**

**பிரசுரங்கள்**

தெல்கமுவ D.P.K.R, பொத்தேஜீ W.S, அபேசிங்க D.C (2011) ஓர்தடொகஸ் ரெட்டோவன் தேயிலையில் தூள் வெப்பநிலையின் தாக்கமும், இரு வேறுபட்ட வாட்டும் அளவுகளில் இரு முனை இணைப்புகளை கொண்டு தயாரிக்கப்பட்ட வெளியீட்டின் தர நூற்றுவீதமும் 11வது விவாசய ஆராய்ச்சி மகாநாட்டின் அமர்வுகள் செப்டெம்பர் 20-21.

**மண் தாவர போசணைப் பிரிவு**

**பிரசுரங்களும் முன்வைப்புகளும்**

பேராசிரியர் A.N ஜெயக்கொடி, சிரேஷ்ட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், ''தேயிலைக்கான மண்ணை பாதிப்படைய செய்தல் தொடர்பாக இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி கற்கைகள் தொடர்பான அறிக்கையினை தயாரித்து அதனை TRI தேயிலை ஆராய்ச்சி சபைக்கு முன்வைத்தார்.

பேராசிரியர் A.N ஜெயக்கொடி, சிரேஷ்ட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், மண்வகைகளிற்கும், ஆராய்ச்சி திட்டங்களிற்கும் முன்னுரிமை கொடுப்பதன் மூலம் தேயிலைத் தொழிற்துறையினை முன்னேற்றும் வாய்ப்புகள் பற்றிய அறிக்கையை தயாரித்து TRI, தேயிலை ஆராய்ச்சி சபைக்கு முன்வைத்தார்.

லியனகே L.R.M.C, தனயம்வத்த D.M.G.S, விஜேதுங்க W.M.S, குணரத்ன G.ீ, ஜெயகொடி AN, ஆகியோர் ''pH இனை தாங்கும் தன்மையின் அடிப்படையில் தேயிலை வளரும் மண்வகைகளை வகைப்படுத்தல்'' எனும் தலைப்பிலான ஆராய்ச்சி கட்டுரையினை 10-13 ஒக்டோபர் 2011, கொழும்பு சினமன் கிராண்ட் இல் நடைபெற்ற 10வது சர்வதேச கிழக்கு, தெற்காசிய மண் விஞ்ஞான சமூகங்களின் மகாநாட்டில் வெளியிடப்பட்டது.

G.P குணரத்ன, L.R.M.C லியனகே, A.N ஜெயகொடி, W.M.S விஜேதுங்க, S.M திசாநாயக்க, ''இலங்கை தேயிலை பெருந்தோட்டங்களில் பொட்டாசியம் கிடைக்கும் தன்மையில் இட வேறுபாடு ஏற்படுத்தும் தாக்கம்''. எனும் தலைப்பிலான ஆராய்ச்சி கட்டுரையினை 27-28 ஒக்டோபரில், கண்டி, டொப்பாஸ் ஹோட்டலில் சர்வதேச பொட்டாசு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நீடித்திருக்கும் விளைச்சலையும், தரத்தினையும் பெறுவதற்கு பொட்டாசியத்தின் பங்கு, பற்றிய சர்வதேச மகாநாட்டில் வெளியிடப்பட்டது.

H.A.C.R பெரேரா, G.P குணரத்ன, M.N பெர்ணான்டோ புள்ளே, L.R.M.C லியனகே (2011) இலங்கையில் தேயிலை வளரும் மண்வகைகளை வகைப்படுத்தல்.

# TRI தோட்டங்கள்

## சென் கூம்ப்ஸ் தோட்டம் – தலவாக்கலை

### தோட்ட அதிகாரி

திரு U C ஒலிவர் (14th ஆகஸ்ற் வரை)
திரு T M S K தென்னக்கோன் (15th ஆகஸ்ற் இலிருந்து)

### பொதுவானவை

- கௌரவ பெருந்தோட்டத்துறை அமைச்சர் திரு மகிந்த சமரசிங்க இன் பிரதிநிதிகள் சென் கூம்ப்ஸ் தொழிற்சாலைக்கு 22nd ஏப்ரல் அன்று தேயிலை உற்பத்தியின் படிமுறைகளை அறிவதற்கு விஜயம் செய்தனர்.
- வருகைப் பிரதிநிதி (VA) திரு M மடுகல்ல 15th மார்ச் அன்று தனது கைதேர்ந்த பரிந்துரைகளை வழங்கும் நோக்கில் விஜயம் செய்தார்.
- சென் கூம்ப்ஸ்ற்கு உரிய ஏலமிடும் நிறுவனமாக போப்ஸ் & வோக்கர்ஸ் நிறுவனம் தொடர்ந்தும் பணியாற்றியது.
- தோட்ட அதிகாரி திரு U C ஒலிவர் 2011.05.18 முதல் தனது பதவியை இராஜினாமா செய்தார். எனினும் மே 18 இலிருந்து ஆகஸ்ற் 14 வரை தோட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தார்.
- திரு T M S K தென்னக்கோன் 15th ஆகஸ்ற் இலிருந்து தோட்ட அதிகாரியாக பொறுப்பேற்றர்.
- நாளாந்த அடிப்படையில் வேலையில் இருந்த பின்வரும் தொழிலாளர்கள் ஜனவரி 1ம் திகதிமுதல் நிரந்தரம் ஆக்கப்பட்டனர்.

| பெயர் | பதவி |
|---|---|
| திரு K ராஜ்குமார் | கனிஸ்ட உதவி எழுது விளைஞர் |
| திரு P செல்வேந்திரன் | கனிஸ்ட உதவி எழுது விளைஞர் |
| திரு S சிவன் | தொழிற்சாலை இயந்திர வல்லுநர் |
| திருமதி K ஜோதி | பகல் காப்பக உதவியாளர் |
| திருமதி T பொன்மணி | பகல் காப்பக உதவியாளர் |




**அட்டவணை 1:**

2010ம், 2011ம் ஆண்டிற்குரிய பயிர் மற்றும் மகசூல் விபரம்

| **வகை** | **2011** | | **2010** | |
|---|---|---|---|---|
| | **பயிர் (kg தேயிலை)** | **மகசூல் (kg தேயிலை $ha^{-1} yr^{-1}$)** | **பயிர் (kg தேயிலை)** | **மகசூல் (kg தேயிலை $ha^{-1} yr^{-1}$)** |
| சென் கூம்ப்ஸ் | 205,155 | 2,573 | 165,668 | 2,052 |
| லமிலியர் | 103,350 | 2,221 | 92,250 | 1,940 |
| மொத்தம் | 308,505 | 2,444 | 257,918 | 2,011 |
| வாங்கிய கொழுந்து | 35,626 | - | 7,007 | - |
| **ஆகமொத்தம்** | **344,131** | **2,444** | **264,925** | **2,011** |

மேற் கூறிய அட்டவணையிலிருந்து 2011ம் ஆண்டிற்கான மகசூல் 2,444 kg தேயிலை $ha^{-1} yr^{-1}$ ஆகும்.

## அபிவிருத்தி நடவடிக்கைகள்

### மீள்நடுகை

சென் கூம்ப்ஸ், லமிலியர் தோட்டங்களில் உள்ள 2ha அளவிலான பழைய தேயிலை செடிகள் வேருடன் அகற்றப்பட்டு நிலம் மீள் வளப்படுத்தப்பட்டது. மேலும 2ha நிலம் மீள் வளப்படுத்தப்பட்டு TRI ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய இனகன்றுகள் நடப்பட்டன.

## ADB தாய்தாவரதிட்டம்

TRI 3000,4000 வகை தாய் தாவரங்களில்ருந்து புதிய முறையில் இனப்பெருக்கப்பட்ட 798,278 தேயிலை கன்றுகள் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ரூ 901,852.63 இலாபமாக பெறப்பட்டது.
தொழிற்சாலை உற்பத்தி

- உற்பத்தித் திறன் இலாபம் என்பன அதிகரித்ததால் வாங்கும் கொழுந்தின் அளவு குறிப்பிடுப்படி அதிகரித்தது 2011ம் ஆண்டில் வாங்கும் கொழுந்தின் மூலம் 35,626 kg தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இது சென் கூம்ப்ஸ் தோட்டசரித்திரத்தில் அதிகூடிய வாங்கும் கொழுந்து ஆகும் 2011ம் ஆண்டிற்கான இலாபமாக ரூ 2,924,538.34 பெறப்பட்டது.

- சென் கூம்ப்ஸ் தொழிற்சாலை தனது பிரதேசத்தில் 3 வது இடத்தை 2011ம் ஆண்டு பெற்றது.

- TRI விஞ்ஞானிகளின் உதவியுடன் சென் கூம்ப்ஸ் 3 வகையான விசேட தேயிலை ரகங்களை கொழும்பு ஏலத்தில் அறிமுகப்படுத்தியது. அவற்றிற்கு கிடைத்த விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வகை | ரூ / கிகி |
|---|---|
| சில்வர் ரிப் | 13,000.00 |
| வைற் ரிப் | 15,000.00 |
| கோல்டின் ரிப் | 18,000.00 |

- வழக்கமான தேயிலைக்கு ஏலத்தில் கிடைத்த சராசரி விலை ரூ 419.92 இது பிரதேசத்திற்குரிய சராசரியிலும் பார்க்க ரூ 79.65 கூடுதலானது.

## வர்த்தக முடிவுகள்

- சென் கூம்ப்ஸ் தோட்டத்தின் 2011ம் ஆண்டிற்கான இலாபம் ரூ 2,189,186.62 ஆகும்.

## சென் ஜோக்கிம் தோட்டம் – இரத்தினபுரி

P S **கபரகொட**
தோட்ட அதிகாரி

**பொதுவானவை**

- சென் ஜோக்கிம் தோட்டத்திற்குரிய ஏலமிடும் நிறுவனங்களாக போப்ஸ் & வோக்கஸ், பாட்லிட் & கோ நிறுவனம் என்பன தொடர்ந்து இவ்வருடமும் செயற்பட்டன.

- பின்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

    i. 3 அரைக்கும் இயந்திரங்களின் அரைக்கும் மேசைகள் புதுப்பிக்கப்பட்டன. 2அரைக்கும் இயந்திரங்களின் கூம்புகள் மாற்றப்பட்டன.
    ii. றோல் பிரேக்கருக்கு புதிய சல்லடை பொருத்தப்பட்டது.
    iii. கியுமிடிவயர்ற்குரிய மோட்டர் திருத்தப்பட்டது.
    iv. நார் வேறாக்கிகள் திருத்தப்பட்டன.
    v. மிடில்ரன், சோட்டா, மிச்சி என்னவும் திருத்தப்பட்டன.
    vi. ஸ்பிரிங்லர் சேவிஸ் பண்ணப்பட்டது பழுதடைந்திருந்த மின்சார இணைப்புகளும் திருத்தப்பட்டன.
    vii. நிறம் மூலம் வகைப்படுத்தும் இயந்திரம் சோதனை செய்யப்பட்டு திருத்தப்பட்டது.
    viii. தீயணைக்கும் கருவி சோதனையிடப்பட்டு புதிய கருவி பொருத்தப்பட்டது.
    ix. புதிய லொறி வாங்கப்பட்டது.
    x. வருகைப் பிரதிநிதி (VA) திரு N M அமரசேகர ஒக்டோபர் 31ம் திகதி தனது கைதேர்ந்த பரிந்துரைகளை வழங்கும் நோக்கில் விஜயம் செய்தார்.



**சிறப்புகூறுகள்**

- SLSI - SLTB ஆல் வழங்கப்பட்டும் உற்பத்தி சான்றிதழை 27 டிசம்பர் 2011 இலிருந்து 3 வருடங்களுக்கு பெற்றது.

பாவனையிலுள்ள நிலப்பரப்பு விபரம் - 31ம் டிசம்பர் 2011 ல்

| நிலப்பரப்பு விபரம் | அளவு (ha) |
|---|---|
| கொழுந்து எடுக்கப்படும் VP தேயிலை | 46.34 |
| பீல்ட் No 2f | 1.18 |
| பீல்ட் No 8A | 0.50 |
| TRI தென்னந்தோட்டம் | 3.89 |
| தவறணை | 1.58 |
| தோட்ட ரபர் | 7.12 |
| முதிர்ந்த ரபர் | 5.68 |
| நெல் வயல் | 8.74 |
| ADB பீல்ட் | 30.00 |
| TRI கட்டிடம் - No 9 | 11.02 |
| கட்டிடங்கள், தெருக்கள், காடு, பத்தனா | 25.93 |
| **மொத்தம்** | **141.98** |

**பயிர் (தேயிலை kg)**

2010ம், 2011ம் ஆண்டிற்கான பயிர் மற்றும் மகசூல் விபரம்

| வகை | | 2011 | 2010 | வித்தியாசம் | |
|---|---|---|---|---|---|
| **தேயிலை** | | | | | |
| சென் ஜோக்கிம் | | 46,427 | 46,991 | -561 | |
| வாங்கிய கொழுந்து | | 349,861 | 449,766 | -99,905 | |
| மொத்தம் | | 396,288 | 496,757 | | |
| **ரப்பர்** | பயிர் kg | மகசூல் kg $ha^{-1}$ $yr^{-1}$ | பயிர் kg | மகசூல் kg $ha^{-1}$ $yr^{-1}$ | **வித்தியாசம்** |
| சென் ஜோக்கிம் | 12960 | 1138 | 9047 | 388 | +3913 +300 |

**விவசாய நடவடிக்கைகள்**

பொதுவாக நல்ல விவசாய நடவடிக்கைகள் கையாளப்பட்டன. கவ்வாத்து செய்யப்பட்ட பகுதிகள் நிலத்தில் கீழ் புதைக்கப்பட்டன. இது நிலத்தின் வளத்தை அதிகரித்தது.

பீல்ட் No 4 ல் இடைவெளிகளை நிரப்ப 15,350 புதிய கன்றுகள் நடப்பட்டன. பீல்ட் No 3ல் புதிதாக 8000 கன்றுகள் நடப்பட்டன.

**ADB தாய்தாவரதிட்டம்**

புதிய கன்றுகளை இனப்பெருக்குவதற்காக 287,445 தண்டுகள் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கும், கொம்பனிகளுக்கும் வழங்கப்பட்டன.

**தொழிற்சாலை உற்பத்தி**

சராசரி விலையாக ரூ 371.62 பெறப்பட்டது. 2010ம் ஆண்டிற்கான சராசரி விலை ரூ 378.14 ஆக இருந்தது.

**வாங்கிய கொழுந்து**

வாங்கிய கொழுந்தின் அளவு 99,905 kg ஆல் குறைந்தது. இக்குறைவிற்கு கெமிதிரிய திட்டம் கைவிடப்பட்டதே பிரதான காரணம்.

**காலநிலை, மழைவீழ்ச்சி**

வருடாந்த மழை வீழ்ச்சியாக 3583mm பதிவு செய்யப்பட்டது ஈர நாட்களாக 148 நாட்கள் பதிவு செய்யப்பட்டன. 2010ம் ஆண்டில் இவைமுறையே 4968mm 184 நாட்கள் ஆக இருந்தன.

**வேலை, உத்தக முடிவுகள்**

2011ம் ஆண்டிற்குரிய நட்டம் ரூ 16,024,259.80, 2010ம் ஆண்டிற்குரிய இலாபம் 1,137,766 ஆகும். தொழிலாளர்களின் வேலை அதிகரிப்பும், கெமிதிரிய திட்டம் கைவிடப்பட்டதே நட்டத்திற்குரிய காரணங்கள்.

# நிர்வாகம், நிதி

## முக்கிய செயற்பாடுகள்

11.07.2011 அன்று தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் தரமுயர்த்தப்பட்ட இணையத்தளம் மாண்புமிகு பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க அவர்களினால், பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சு கேட்போர் கூடத்தில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேயிலை கைத்தொழிற்துறையில் உள்ள பிரச்சினைகளை வினைத்திறனான முறையில் வெளிக் கொண்டு வரும் அதே சமயம் மனித வள அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய பொது திறைசேரியில் முகாமைத்துவ சேவை பிரிவு (MSD) சுற்றறிக்கை இல 30, 30(1) இன் வழிகாட்டலுக்கு அமைய உத்தியோகத்தர் நியமனத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதனை 16.09.2011 முதல் நடைமுறைப் படுத்துவதற்கான MSD அனுமதி பெறப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் 65வது பிறந்த நாளை கொண்டாடும் முகமாக சுற்றாடல் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட 1.1 மில்லியன் மரங்களை நடும் தயட்ட செவன தேசிய மரநடுகை நிகழ்ச்சியினையொட்டி, நவம்பர் 15ம் திகதி தலவாக்கலையில் உள்ள தலைமையகத்தில் மர நடுகை நிகழ்ச்சி நிகழ்த்தப்பட்டது.

## மனித வள அபிவிருத்தி

### வெளிநாட்டு பயிற்சிகள் , கருத்தரங்குகள், மகாநாடுகள்

Dr S S B D G ஜெயவர்தன (தலைவர், T R B) ஜனவரி 02-04 வரை இலங்கையில் பாம் எண்ணைய் துறையினை அபிவிருத்தி செய்யும் முகமாக இந்தோனேசிய விவசாய அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இந்தோனேசிய சென்ற பெருந்தோட்ட அமைச்சர் தலைமையிலான தேசிய தூதுக்குழுவில் அங்கம் வகித்தார்.

Dr S S B D G ஜெயவர்தன (தலைவர் T R B) பெப்வரி 11-21 வரை ஜப்பானிய அரச வர்த்தக சம்மேளனங்களின் தேயிலை விற்பனையில்

ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கும் அவை தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய கலந்துரையாடுவதற்குமாக ஜப்பான் சென்ற மாண்புமிகு பெருந்தோட்ட கைத்தொழிற்துறை அமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவின் உறுப்பினராக அங்கம் வகித்ததார்.

Dr.I.S.B அபேசிங் (பணிப்பாளர், TRI) சில்குறு, இந்தியாவில் நடைபெற்ற தேயிலை பற்றிய தேசிய மகாநாட்டில் அழைப்பு பேச்சாளராக மார்ச் 9-15 வரை பங்கேற்றார்.

Mr.M.M.A.U.B மாரப்பன (பரிசோதனை உத்தியோகத்தர்) பதனிடல் தொழில்நுட்ப பிரிவு. சீனாவில் மே 11 ஜீலை 5 வரை நடைபெற்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான மாசுக்களற்ற தேயிலை உற்பத்தி தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டார்.

Dr. S S B D G ஜெயவர்தன (தலைவர், T R B) ஜீன் 21-27 வலை மாண்புமிகு பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சர் தலைமையில் ஜேர்மனி சென்ற தேயிலை ஊக்குவிப்பு தொடர்பான செயற்பாடுகளை உயர் பீடைகொல்லி மிகுதிகள் தொடர்பாக கலந்துரையாடி அபிவிருத்தி திட்டங்களை இனம் காண்பதற்கான தூதுக்குழுவில் அங்கம் வகித்தார்.

Dr. S S B D G ஜெயவர்தன (தலைவர் T R B) Dr. K.M. மொஹட்டி (தலைவர், பூச்சியியற் பிரிவு) தேயிலையும் முதலாவது ஆபிரிக்க தேயிலை மகாநாடும் எனும் தலைப்பிலான 19வது FAO IGG கூட்டத்தில் பங்கு கொள்ள கென்யா சென்றார் ஜீலை 18-22.

Mr. K.K. இரனவீர (பரிசோதனை உத்தியோகத்தர்) தாவர இனவிருத்தி பிரிவு இந்தியாவில் கோத்தாரி விவசாய முகாமைத்துவ நிலையத்தின் தேயிலை முகாமைத்துவம் தொடர்பான உயர் சான்றிதழ் நிகழ்ச்சி பயிற்சியை பின்பற்ற செப்டெம்பர் 1 ஒக்டோபர் 31 வரை இந்தியா சென்றார்.

Mr. S R W பத்திரனகே (ஆராய்ச்சி உதவியாளார்) பயிராக்கவியற் பிரிவு சீனாலில் ஒக்டோபர் 17- நவம்பர் 7 வரை நடைபெற்ற விவசாய

இயந்திரங்களின் பிரயோக தொழில்நுட்பங்கள் எனும் தலைப்பிலான பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

Dr. (Mrs) M T K குணசேகர (தலைவர்) தாவர இனவிருத்திப் பிரிவு, Dr G P குணரத்ன (தலைவர்) மண் தாவர போசணைப் பரிவு, Mr. B A D சமன்சிரி (தலைவர்) ஆலோசனை விரிவாக்கற் பிரிவு, Dr M A விஜேரட்ன (சிரேஷ்ட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்) பயிராக்கவியற பிரிவு ஆகியோர் அசாம் டொக்லாய் பரிசோதனை மையத்தினால் நடாத்தப்பட்ட உலக தேயிலை மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன் UPASI இணையும் இந்தியாவின் தென் பிராந்தியத்தில் உள்ள சில தேயிலைத் தோட்டங்களுக்கு சென்றார். நவம்பர் 16-25 வரை.

Dr. I S B அபேசிங்க (பணிப்பாளர், T R I) இந்தியா அசாம் டொக்லாய் பரிசோதனை மையத்தில் நடைபெற்ற உலகத் தேயிலை மகாநாட்டில் கலந்து கொண்டார். நவம்பர் 21-25 வரை.

Dr. K. M மொஹட்டி (தலைவர்) பூச்சியற் பிரிவு இந்தோனேசியாவில் நவம்பர் 21-25 வரை நடைபெற்ற மொன்ரியல் போர்ட்டகோல் கட்சிகளின் மகாநாட்டிலும் பாலியில் நடைபெற்ற தேயிலை வைபவத்திலும் கலந்து கொண்டார்.

Dr. K G பிரேமதிலக (தலைவர்) பயிராக்கவியற் பிரிவு சீனாவில் டிசம்பர் 14- 21 வரை நடைபெற்ற அலேலோபதி பற்றிய 6வது உலக மகாநாட்டிலும் பங்குபற்றினார்.

## அ. உத்தியோகத்தர் நியமனங்கள்

| பெயர் | பதவி | நியமனத்திகதி |
|---|---|---|
| 1. KJCJ ரொட்ரிகோ | உதவிப் பணிப்பாளர் | 01.02.2011 |
| 2. RMRRL ரணராஜா | பொறியியலாளர் | 02.05.2012 |
| 3. TS குமார | கணக்கியல் எழுதுவினைஞர் | 16.05.2011 |
| 4. VE குமார | கணக்கியல் எழுதுவினைஞர் | 16.05.2011 |
| 5. AAH சின்தக | எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் | 16.05.2011 |
| 6. RAC லசன்த | எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் | 16.05.2011 |
| 7. SAC சமரவீர | சாரதி | 16.05.2011 |
| 8. MD சந்தன | சாரதி | 16.05.2011 |
| 9. TKA குமாரசிங்க | சாரதி | 16.05.2011 |
| 10. HAD நிரன்ஜன் | சாரதி | 16.05.2011 |
| 11. KMTT பண்டார | சாரதி | 16.05.2011 |
| 12. JSN ஜெயமோகன் | சாரதி (சென் ஜோக்கிம்) | 16.05.2011 |
| 13. WAHH சாமக்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 14. EPA விஜேவர்தன | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 15. KASA ரூபசிங்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 16. CD ஜயசிங்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 17. BMNJ பஸ்நாயக்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 18. RAIWK ரணதுங்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 19. Ms.DVRI தெனியபால | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 20. MGNJ குமார | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 21. Ms. RMEMK ரண்தெனிய | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 22. Ms. AVKS பெரேரா | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 23. Ms. SMDD சமரகோன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 24. BMNJ பசநாயக்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 25. MDKS திலகசிறி | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 26. DKD திசாநாயக்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 27. GWMSN குணசேகர | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 28. ENU எதிரிசிங்க | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 29. DLALA தசநாயக்க | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 30. Ms. HRMP அபேரத்ன | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 01.08.2011 |
| 31. Dr WS பெத்தேஜு | தலைவர் பதனிடல் தொழில்நுட்பம் | 01.08.2011 |
| 32. Dr.GP குணரத்ன | தலைவர் மண் தாவர போசணை பிரிவு | 01.08.2011 |
| 33. TMSK தென்னகோன் | தோட்ட அதிகாரி, சென் கூம்ஸ் | 15.08.2012 |
| 34. S. பரமேஸ்வரி | பொதுதொழிலாளர் | 01.10.2012 |

| | | |
|---|---|---|
| 35. K.இராஜரட்ணம் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 36. G.S ராஜு | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 37. V. சபாரட்ணம் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 38. V. சந்திரசேகரன் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 39. V. இராதகிருஸ்ணன் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 40. A கிருஸ்ணமேனன் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 41. KMSK கொடிதுவக்கு | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 42. G பெரியசாமி | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 43. K ஜெயரட்னம் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 44. D சில்வஸ்டர் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 45. A லோகநாதன் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 46. LR இராஜலிங்கம் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 47. N புஸ்பராஜ் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 48. WC போல் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 49. J அன்தனி | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 50. P செல்வராஜ் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 51. WMSJ வீரசிங்க | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 52. HM விஜேசேகர | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 53. P செல்லதுரை | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 54. P வைத்திலிங்கம்பிள்ளை | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 55. R.இளங்கோவன் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 56. N சிவசுப்பிரமணியம் | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 57. Ms. S ஹெட்டியாராச்சி | பொதுதொழிலாளர் | 01.10.2012 |
| 58. Ms. IPSD விக்கிரமசூரிய | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01.11.2011 |

**பதவி உயர்வு**

| | | |
|---|---|---|
| WMS விஜேதுங்க | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 01.08.2011 |
| Ms. RDP செனாநாயக்க | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 01.08.2011 |

**இ. இராஜினாமா**

| | | |
|---|---|---|
| 1. Ms. RP டி சில்வா விஜேரத்ன | தட்டெழுத்தாளர் | 01.01.2011 |
| 2. Ms. RMDT பலேமுல்ல | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 07.01.2011 |
| 3. Ms. HACK ஆரியரட்ன | ஆராய்ச்சி உதவியாளர் | 07.03.2011 |
| 4. Mr.UC ஒலிவர் | தோட்ட அதிகாரி | 18.05.2011 |
| 5. PGC பிரியந்த | பரிசோதனை உத்தியோகத்தர் | 01.07.2012 |
| 6. PMM ஜயதிலக | பரிசோதனை உத்தியோகத்தர் | 30.06.2011 |

ஈ. இளைப்பாறல்

| | | |
|---|---|---|
| KG பியசேன | மக்கள் தொடர்பு பொது நல உத்தியோகத்தர் | 16.01.2011 |
| S. கருப்பையா | தொலைபேசி கம்பி இணைப்பாளர் | 18.02.2011 |
| JM ஜோதிபால | மேசன் | 05.05.2011 |
| Ms. J ஜயசுந்தர | சிரேஸ்ட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 05.06.2011 |
| Ms. DM திசாநாயக்க | கணக்காளர் | 02.07.2011 |
| KD தகநாயக்க | சிரேஷ்ட்ட ஆலோசனை உத்தியோகத்தர் | 23.09.2011 |
| RMK டயஸ் | விடுதி காப்பாளர் | 06.10.2011 |
| Ms. V பகலகே | கணக்கியல் எழுதுவினைஞர் | 01.11.2011 |
| GGEH கமகே | பிரதான மோட்டார் வாகன திருத்துனர் | 05.11.2011 |
| MG வீரதில | காசாளர் | 23.12.2011 |

**இடமாற்றங்கள்**

TGN மகிந்த (ஆலோசனை உத்தியோகத்தர்) மத்துகம விரிவாக்கல் மையத்திலிருந்து தாழ் பிரதேச பிராந்திய மையத்திற்கு 01.09.2011.

Ms. PVAR அபேசேகர (பரிசோதனை உத்தியோகத்தர்) மத்திய பிரதேச பிராந்திய மையத்திலிருந்து தலைமையகத்திற்கு 01.09.2011

P K R C E முனசிங்க (விரிவாக்கல் உத்தியோகத்தர்) தெனியாய விரிவாக்கல் நிலையத்திலிருந்து மத்திய பிரதேச பிரதேச பிராந்திய நிலையம் 01.09.2011

K M T T பண்டார (சாரதி) தலைமையத்தில் இருந்து மத்துகம விரிவக்கல் மையத்திற்கு 01.09.2011

H I மெத்தானந்த (சாரதி) காலி விரிவாக்கல் மையத்திலிருந்து தலைமையகத்திற்கு 01.09.2011

G G M இரணசிங்க (சாரதி) மத்துகம விரிவாகக்கல் மையத்திலிருந்து மையத்திலிருந்து மத்திய பிரதேச பிராந்திய மையத்திற்கு 01.09.2011

SAC சுரவீர (சாரதி) தலைமையகத்தில் இருந்து காலி விரிவாக்கல் மையத்திற்கு 01.09.2011

T K A குமாரசிங்க (சாரதி) தலைமையகத்திலிருந்து காலி விரிவாக்கல் மையத்திற்கு 01.09.2011

KGJP மகிந்தபால (ஆலோசனை உத்தியோகத்தர்) தாழ் பிரதேச பிராந்திய மையத்திலிருந்து காலி விரிவாக்கல் மையத்திற்கு 26.09.2011

SPD தரங்க தெனியாய விரிவாக்கல் மையத்திலிருந்து தலைமையகத்திற்கு 03.10.2011

K திசாநாயக்க ( தொழில்நுட்ப உத்தியோகத்தர்) தலைமையகத்தில் இருந்து ஊவா விரிவாக்கல் மையத்திற்கு 01.11.2011

U K A B உடுவெல (சாரதி) தலைமையகத்திலிருந்து இருந்து தெனியாய விரிவாக்கல் மையத்திற்கு 08.11.2011

**பணி நீக்கம்**

JWKK ஜெயசுந்தர (ஆராய்ச்சி உத்தியோகதத்தர்) 23.02.2011

**இறப்பு**

Ms. CNK எதிரிசிங்க நிலைய உதவியாளர் 22.02.2011

**உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் பராமரிப்பும்**
**உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

- காலி தல்கம்பொலவில் உள்ள விருந்தினர் விடுதி ரூபா 1,800,000.00 செலவில் புனரமைப்பு செய்யப்பட்டது.
- தெனியாயவில் புதிதாக நியமிக்கப்பட்ட விரிவாக்கல் மையத்தின் சுற்று வேலி ரூபா 1,000,000 க்கு அமைக்கப்படடது.
- தலவாக்கலையில் உயிர் இரசாயனவியற் பிரிவின் புகை அறையானது ரூபா 554,400 செலவில் திருத்தப்பட்டது.
- ஹந்தானையில் மத்திய பிராந்திய மையத்தில் ஆலோசனை விரிவாக்கற் பிரிவிற்கான தகவல் மையம் அமைக்கப்பட்டது.
- தெனியாய விரிவாக்கல் நிலையத்தில் குலவகைகளை தெரிவு செய்வதற்காக புழுவியற் பிரிவிற்கான தொட்டி ரூபா 62,000 செலவில் அமைக்கப்பட்டது
- தலவாக்கலையில் உள்ள தலைமையகத்தில் பிரதான நுழைவாயில் பாதையில் வாய்கால்களை ரூபா 3,000,000.00 செலவில் திருத்தம் வேலைகள் ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுகின்றன.
- மத்திய பிரதேச பிராந்திய மையத்தில் ரூபா 200,000 செலவில் வாகனத் தரிப்பிடம் அமைக்கும் வேலைகள் நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டன.
- இரத்தினபுரி, சென் ஜோக்கிம் தோட்ட தொழில்நுட்ப அலகிற்கான விறகுக் கொட்டகையை ரூபா 100,000 செலவில் அமைக்கும் பணிகள் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

- இரத்தினபுரி தாழ் பிரதேச பிராந்திய மையத்தில் ரூபா 850,000 செலவில் வளமாக்கி களஞ்சியத்தினை அமைக்கும் பணிகள் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.
- 213 மீற்றர் நீளமான நீளமான உள்ளக வீதியை ரூபா 1,000,000 செலவில் அமைக்கும் வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.
- தெனியாய விரிவாக்கல் மையத்தில் ரூபா 2,700,000 செலவில் D வகை இரட்டை விடுதிகளை அமைக்கும் வேைலைகள் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.
- தலவாக்கலை தலைமையகத்தில் உள்ள கூட்டுறவுத் விற்பனை நிலைய கட்டிடத்தின் புனரமைப்பு பணிகள் ரூபா 200,000 செலவில் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

**பராமரிப்பு வேலைகள்**

- பணிப்பாளர் அலுவலகம், உயிர் இரசாயனவியற்பிரிவு, நூலகம், பொறியியளாலர் அலுவலகம், மகளிர் விடுதி ஆகியவற்றின் வருடாந்த வர்ணம் பூசும் வேலைகளும் நிர்வாக ஆய்வு கூட கட்டிடங்கள் A வகை விடுதி இல 2, 14 B வகை விடுதி இல 10,11,07,04, 18 C வகை விடுதி இல 37,16,14, 30, 42, 27, 07, 04, 28, 18 D வகை விடுதி 24, 17, 15, 47, 36, 46 E வகை விடுதி இல 11, 02, 08 அகியவற்றினை வெளிப்பக்க வர்ணம் பூசும் வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.
- ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் உள்ள மட்டக்கலை சந்தியில் இருந்து TRI வரையிலான நுழைவீதி பராமரிக்கப்பட்டன.
- தலைமையகத்திலும், தாழ், மத்திய பிரதேச பிராந்திய நிலையங்களிலும் உள்ள தீயணைப்பு கருவிகளின் தொழிற்படும் தன்மை சோதிக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- தலைமையகத்தில் உள்ள விருந்தினர் விடுதிக்கும் பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகம்) அலுவலகத்திற்கும் புதிய திரைச்சீலைகள் பொருத்தப்பட்டன.
- தலைமையத்தில் உள்ள நீர் சுத்திகரிப்புத் தொகுதி படியவிடும் தொட்டி சேமிப்புத் தொட்டி ஆகியன சுத்தம் செய்யப்பட்டன. தலைமையக விருந்தினர் விடுதி ABC வகை விடுதிகளுக்கான பிரதான நீர் விநியோகக் குழாயில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட BCD வகை விடுதிகளுக்கு 10 பிளாஸ்டிக் நீர் தொட்டிகளையும் அத்துடன் தொடர்புடைய குழாய்களையும் பொருத்தும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. BC வகை விடுதிகளுக்கு 5 நீர் கொதிகலன்கள் பொருத்தப்பட்டன.
- தலைமையகத்தில் மின்விநியோக அலகில் உள்ள மின் நிலைமாற்றியில் இருந்து கமேலியா விடுதி வரையிலான 3 வழி பிரதான மின்கம்பி திருத்தப்பட்டது.
- தலைமையக நூலகத்தில் அமைந்துள்ள செயற்குழு அறைக்கு வாயு சீராக்கி பொருத்தப்பட்டது.
- ஹந்தானை மத்திய பிரதேச பிராந்திய மையத்தில் வாகனத் தரிப்பிட

வளவில் உள்ள மின் நிலை மாற்றியில் இருந்து விடுதிகள் விடுதிக்கான 3 வழி பிரதான மின் இணைப்புக் கம்பி திருத்தப்பட்டது. இம்மையத்தின் நீர் விநியோக அறைக்கு ஒரு மின் மானி பொருத்தப்பட்டது. விருந்தினர் விடுதி, விடுதிகள் காரியாலயத் தொகுதிகளுக்கு வினைத்திறனான முறையில் மின் விநியோகத்தை மேற்கொள்வதற்காக பிரதான மின் இணைப்பு கம்பிக்கு பிரதான ஆழி ஒன்று பொருத்தப்பட்டது. இவற்றுக்கு மேலதிகமாக உத்தியோகத்தர் விடுதி அலுவலகம், ஆய்வு கூடங்கள் ஏனைய கட்டிடங்களின் மின் இணைப்பு பராமரிப்பு வேலைகளும் தொலைபேசி பரிவர்தணை நிலையம் அதன் பரிசோதனை அறையின் பராமரிப்பு வேலைகளும் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வுக்குழு

2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு TRI தோட்டத்தில் மையங்களின் பிரிவுகளில் அலகுகளில் அசையாத மீள்உபயோகிக்க முடியாத பொருட்கள் மீது ஆய்வினை மேற்கொள்வதற்கான குழு நியமிக்கப்பட்டது. 2010 டிசம்பர் 31 இல் சென் ஜோக்கிம் தோட்டத்தில் இனம் காணப்பட்ட மீள உபயோகிக்க முடியாத அசையாத கைவிடப்பட்ட பொருட்கள் பொது ஏலத்தில் விற்கப்பட்டதுடன் விற்பனை பெறுமதியற்ற பொருட்கள் 2011 இல் அகற்றப்பட்டது.

## போக்குவரத்தும் வாகனத் திருத்துமிடமும்

பழைய பஜீரோ வாகனம் ஒன்று ரூபா 1.65 மில்லியன் செலவிலும் 11 இருக்கைகளை கொண்ட வேன், 30 இருக்கைகளை கொண்ட பேருந்து, 3 வெளிக்கள வாகனங்கள் ரூபா 1.82 மில்லியன் செலவிலும் திருத்தப்பட்டன. ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகள் சேமநல வசதிகளை வழங்குவதற்கு நாளாந்த வார இறுதி போக்குவரத்து சேவைகள் திருப்திகரமாக வழங்கப்பட்டன. என்ஜின் பழுதுபார்த்தல் உட்பட 3 கியர் பெட்டிகள் 9 மோட்டார் சைக்கிகள் பழுதுபார்க்கப்பட்டன. அத்துடன் வாகனங்களின் நாளாந்த திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## கொள்வனவு

கண்ணாடிப் பொருட்கள், இயந்திரங்கள், ஆய்வுகூட பொருட்கள் தேயிலை பயிர் செய்கைக்கான விவசாய உள்ளீடுகள் புத்தகங்கள், சஞ்சிகைகள், இயந்திரங்களை வாகனங்களை மற்றும் உபகரணங்களின் உதிரிப்பாகங்களை காரியாலய உபகரணங்களை காகிதாகிகள் எரிப்பொருட்கள் கட்டிடப்பொருட்கள் நீர் மற்றும் மின்சார இணைப்பு சாதனங்கள் உள் நாடு வெளிநாட்டு கொள்வனவிற்கு 12 சிறிய கொள்வனவு குழுக்கள் (MPC) ஒழுங்கு செய்யப்பட்டன.

உயர் வினைத்திறன் கொண்ட திரவ நிழற்படவியல் தொகுதியை கொள்வனவு செய்வதற்கும் தெனியாய விரிவாக்கல் மைத்தில் இரட்டை விடுதினை நிர்மாணிப்பதற்கு தெனியாய விரிவாக்கல் மையத்தில் நிர்மாணிக்கப்படும்

விருந்தினர் விடுதி 12 வகை விடுதியை அமைக்கும் பணிகளை நிறைவு செய்வதற்கு தலைமையகத்திற்கு எனைய மையங்களிற்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காகவும் 4 திணைக்கக் கொள்வனவு கூட்டங்கள். ஒழுங்கு செய்யப்பட்ட TRB தலைவருக்காக நிதிக்குத்தகை திட்டத்தின் கீழ் அரச அமைப்புகளுக்கான வாகன கொள்வனவிற்கு அமைய ஒரு டொயோட்டா கொரொல்லா கார் (ZRE 141) கொள்வனவு செய்யப்பட்டது. TRB தலைவரினால் உபயோகிக்கப்பட்ட வாகனம் (டொயோட்ட கொரலோ EE110 இல 301-2022ரூபா 1,405,262 இற்கு ஏலம் விடப்பட்டது.

# நிதி நிறைவேற்றங்கள்

## இலங்கை தேயிலை சபை
## 2011.12.31 இல் நிதி நிலைமைக் கூற்று

| சொத்துக்கள் | 2011 ரூபா. (000) | ரூபா. (000) | 2011 ரூபா. (000) | 2010 ரூபா. (000) | |
|---|---|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** | | | | | |
| நிலம், தாவர, உபகரணங்கள் | 999,922 | | (இணைப்பு1-1) | 963,274 | |
| குறைவு :- சேர்ந்த இழப்பீடுகள் | (614,912) | | (இணைப்பு1-1) | (586,963) | |
| | 385,010 | | | 376,311 | |
| நடைமுறை முதலீட்டு வேலைகள் | 11,7060 | | (இணைப்பு1) | 8,996 | |
| ஏனைய செலவுகள் | 23 | | | 23 | |
| | | 396,739 | | | 385,330 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| இருப்புகள் | 21,354 | | (இணைப்பு1-1) | 19,261 | |
| விற்பனையும் ஏனைய வருமானங்களும் | 101,378 | | (இணைப்பு IV,V,VI) | 107,164 | |
| குறைத்து செலுத்தப்பட்ட கடன் | (62) | | (இணைப்பு X) | (90) | |
| முற்கொடுப்பணவு | 596 | | (இணைப்பு V) | 986 | |
| காசு | 59,691 | | (இணைப்பு VII,VIII) | 68,826 | |
| | | 182,958 | | | 196,147 |
| ஏனைய செலவுகள் | | | | | |
| மேலதிக மற்றும் குறைபாடு | 28 | | (இணைப்பு IX) | 28 | |
| **மொத்த சொத்துக்கள்** | | 579,725 | | | 581,478 |
| **செலவுகள்** | | | | | |
| **நடைமுறைச் செலவுகள்** | | | | | |
| கொடுப்பணவுகள் | 19,904 | | (இணைப்பு X) | 19,867 | |
| சேர்ந்த செலவுகள் | 29,362 | | (இணைப்பு X) | 26,002 | |
| | | 49,266 | | | 45,869 |
| **நடைமுறை அல்லாத செலவுகள்** | | | | | |
| ஊழியர் நிதி | 140,157 | | (இணைப்பு XII) | 110,941 | |
| பெற்ற வைப்புப் பணம் | 24 | 140,182 | | 21 | |
| மொத்த செலவுகள் | | | | | 110,963 |
| | | **189,448** | | | 156,832 |
| **மொத்த நிகர சொத்துக்கள்** | | **390,278** | | | **424,645** |
| **நிகர சொத்துக்கள்** | | | | | |
| தேயிலை ஆராய்ச்சி நிதியம் | 268,710 | | | 295,526 | 295,526 |
| நிதியங்களும் சேமிப்புகளும் | 121,567 | | (இணைப்பு XI) | 129,119 | 129,119 |
| **மொத்த நிகர சொத்து** | | **390,278** | | | **424,645** |

உள்ளக கணக்காளர்

தலைவர், **TRB** பணிப்பாளர், **TRI** கணக்காளர்

சிரேஷ்ட கணக்காளர்

**தேயிலை ஆராய்ச்சி சபை**

**2011.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதி நிலைக் கூற்று**

| | 2011<br>ரூபா(000) | 2010<br>ரூபா (000) |
|---|---|---|
| **நடைமுறை வருமானம்** | | |
| அரசாங்க வருமானம் | 316,066 | 282,974 |
| ஏனைய வருமானம் | 22,758 | 24,307 |
| ஏனைய வருமானம் / வேறுபட்ட வருமானம் | 5,121 | 5,153 |
| | 343,945 | 312,434 |
| குறைவு இரு தோட்டங்களிலும் தேறிய நட்டம் | -30,475 | |
| | 313,470 | |
| **நடைமுறைச் செலவுகள்** | | |
| தனிப்பட்ட சம்பளங்கள் | 163,354 | 153,844 |
| போக்குவரத்து | 9,587 | 6,750 |
| நுகர்ப் பொருட்கள் | 23,124 | 21,149 |
| பரிபாலனம் | 27,270 | 27,272 |
| நிர்மானிப்புப் பொருட்கள் | 13,894 | 14,906 |
| மின்சாரம், வெப்பமாக்கல் | 14,994 | 14,066 |
| தொடர்பாடல் | 2,425 | 2,587 |
| ஆராய்ச்சியும், அபிவிருத்தியும் | 34,268 | 23,140 |
| மதிப்புக் குறைவு | 25,927 | 26,656 |
| ஏனைய நடைமுறைச் செலவுகள் | 26,848 | 22,135 |
| **மொத்த நடைமுறைச் செலவுகள்** | **341,691** | **309,505** |
| நடைமுறைச் செயற்பாடுகளின் கையிருப்பு | (28,221) | 2,929 |
| **நிதிச் செலவு** | | |
| நிலம், உபகரணம் விற்பனையினால் பெற்ற வருமானம் | 1,405 | |
| மொத்த நிலையான வருமானம் | | |
| **மொத்த வருமானம்** | **(26,816)** | **2,929** |
| மேலதிக பொருள் | | |
| முன்னைய வருட செம்மையாக்கல் | ______ | (505) |
| **மொத்த வருமானம்** | **(26,816)** | **2, 424** |

# தேயிலை ஆராய்ச்சி சபை
## 2011.12.31 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நடைமுறை செயற்பாடுகளுக்கான
## மொத்த பண ஓட்டக் கூற்று

| நடைமுறைச் செயற்பாடுகளினால் பண ஓட்டம் | 2011<br>ரூபா (000) | 2010<br>ரூபா (000) |
|---|---|---|
| நாளாந்த நடவடிக்கைகளின் மூலமான கையிருப்பு | (22,830) | 897 |
| **பணமில்லாதவற்றின் அசைவு** | | |
| மதிப்புக் குறைவு | 31,576 | 32,113 |
| பிழையான கடன்களுக்கான அதிகரித்த கையிருப்பு | (28) | (146) |
| கடன் வழங்குதலின் கையிருப்பு | 3,398 | (3,125) |
| ஊழியன் செலவுக்கேற்ப கடன் வழங்குதலின் அதிகரிப்பு | 29,127 | 7,737 |
| நியையான சொத்தின் அதிகரிப்பு | (1,405) | |
| கழிக்கப்பட்ட நடைமுறை சொத்தின் அதிகரிப்பு | (5,658) | - |
| நடைமுறை சொத்தின் அதிகரிப்பு | | 899 |
| சொத்து | (2,930) | (1) |
| நிலையான சொத்தின் மீள பெறப்பட்ட தொகை | (14) | (229) |
| கிடைத்தவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு, குறைவு | (9,799) | (1,571) |
| முன்னைய வருட செம்மையாக்கல் | | (505) |
| மூலதன இருப்பில் ஏற்பட்ட கணக்கியல் மாற்றம் | (8,234) | (6,454) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் பண ஓட்டம்** | **32,891** | **29,615** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் பண ஓட்டம்** | | |
| நிலையான செயற்பாடுகளின் பண ஓட்டம் | (44,302) | (30,097) |
| முதலீடுகளின் வட்டி | 2,581 | 2,032 |
| செயற்படுத்தப்பட்ட மூலதன செயற்பாட்டின் அதிகரிப்பு/வீழ்ச்சி | (2,701) | 3963 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை | 1,405 | - |
| **முதலீட்டு செயற்பாடுகளின் பண ஓட்டம் பரிபாலனம்** | **(43,026)** | **(24,102)** |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் நிகர பண ஓட்டம்** | | |
| மூலதன நிதிக்கொடுப்பணவு –(NSF) | 1,000 | |
| **மூல நிகர பண ஓட்டம்** | **1,000** | |
| **தேறிய குறைவு , கூட** | **(9,135)** | **5,513** |
| **வருட ஆரம்பத்தில் பண இருப்பு** | **68,826** | **63,313** |
| **வருட இறுதியில் பண இருப்பு** | **59,691** | **68,826** |

## தேயிலை ஆராய்ச்சி சபை
## 31.12.2011 வரையிலான தொழிற்பாட்டுக் கணக்கு (சென் கூம்ஸ், லெமிலியர் தோட்டம்)

| 2010 ரூபா | கிகி | வரவு | கிகி | 2011 ரூபா | | |
|---|---|---|---|---|---|---|
| 86,013,381.04 | 212,658.5 | தேயிலை விற்பனை (மொத்த வருமானம்) | 307,340.0 | | | |
| 12,681,125.00 | 34,265.5 | தேயிலை விற்பனைத் தரகர் (மொத்தம்) | 36,791.0 | 127,261,739.63 | (குறிப்பு 1) | |
| 98,694,506.04 | 246,924 | தேயிலை விற்பனை உள்ளூர் | 344,131 | 14,228,109.50 | | |
| | | சேர்க்க: | | 141,489,849.13 | | 141,489,849.13 |
| 4,626,876.88 | | நானாவிதம் | | | | |
| 805,699.66 | | வேறுபட்ட வருமானம் | | 814,720.21 | | |
| 177,173.49 | | மொத்த வருமானம் | | 382,274.21 | | |
| 177,173.49 | | | | 445,725.31 | | 1,642,720.01 |
| 445,725.31 | | **செலவு** | | | | 143,132,569.14 |
| 104,749,981.38 | | | | | | |
| | | **தோட்ட செலவுகள்** | | | | |
| | | பொது | | | | |
| 37,121,848.46 | | வெளிக்கள வேலை தேயிலைச் செடி பயிரிடல் | | 50,062,345.46 | | |
| 11,503,289.07 | | உற்பத்தி | | 13,096,118.46 | | |
| 41,732,735.61 | | கொள்வனவு தேயிலை | | 13,069,118.76 | | |
| 2,210,127.26 | | (போக்குவரத்து செலவு உற்பட) | | 57,756,901.84 | | |
| 92,568,000.40 | | **நிர்வாகமும் நிதியும்** | | 11,531,695.70 | | 132,420,061.76 |
| 4,012,229.29 | | மேலதிக விடுமுறை | | | | |
| 1,733,717.51 | | மதிப்பிறக்கம் | | | | |
| 5,745,946.80 | | **விற்பனை வரியும் விநியோக செலவும்** | | 5,066,144.46 | | 6,674,797.67 |
| | | | | 1,608,653.21 | | |
| 1,195,423.21 | | தரகர், கையாளுதல் கட்டணம் | | | | |
| 99,509,370.41 | | விற்பனை செலவு | | | | |
| 5,240,610.97 | | மொத்த செலவு | | 1848523.09 | | 1848523.09 |
| 218,872.37 | | **இலாப / நட்டம்** | | | | 140943382.52 |
| 521,408.03 | | சேர்க்க: கடந்த வருடத்தில் | | 148860.50 | | 2189186.62 |
| 740,280.40 | | கூடிய பெறுமதி காணப்பட்ட | | 14963762.29 | | |
| 4,500,330.57 | | மு.வ.தி - தேயிலை | | | | 15112622.79 |
| | | **மதிப்புக்குறைவு** | | | | (12923436.17) |

**விற்க்கப்படாத 6966 கிகி தேயிலை COP இல் ரூபா 314.06 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது*

**Annex XVII**

## தேயிலை ஆராய்ச்சி சபை
## 31.12.2011 வரையிலான தொழிற்பாட்டுக் கணக்கு (சென் ஜோக்கிம் தோட்டம்)

| 2010 | | வரவு | | 2011 | |
|---|---|---|---|---|---|
| ரூபா. சதம். | கிகி | | கிகி | ரூபா. சதம். | (Note 1) |
| 186,700,139.10 | 491,679 | தேயிலை விற்பனை (மொத்த வருமானம்) | 391,715 | 143,699,321.20 | |
| 1174804.75 | 5,168 | தேயிலை விற்பனை தரகர் (மொத்தம்) | 4,572 | 998,021.05 | 144,697,342.25 |
| 187,874,943.85 | 496,847 | தேயிலை விற்பனை உள்ளூர் | 396,287 | 144,697,342.25 | |
| 146,268.25 | | | | | |
| 543,268.25 | | **சேர்க்க:** | | 93,402.50 | |
| 543,052.92 | | விற்பனை BMF, கழிவுத் தேயிலை | | 1,093,058.42 | |
| 3,207,640.00 | | நானாவிதம் | | 5,962,870.00 | 8,005,050.44 |
| 855,719.52 | | வரவு (இறப்பர்) | | 855,179.52 | 152,702,392.69 |
| 192,627,624.54 | | வேறுபட்ட வருமானம் | | | |
| | | மொத்த வரவு | | | |
| 4,190,072.14 | | **செலவு** | | | |
| 3,552,727.27 | | **தோட்ட செலவுகள்** | | 3,291,031.14 | |
| 6,118,518.28 | | பொது | | 4,341,976.19 | |
| 1,129,431.57 | | வெளிக்கள வேலை | | 5,966,243.42 | |
| 167,450,897.43 | | தேயிலைச் செடி பயிரிடல் | | 1,973,118.84 | 159,436,415.25 |
| 182,441,646.69 | | உற்பத்தி | | 143,864,045.66 | |
| | | செலவு (இறப்பர்) | | | |
| 1,600,245.41 | | கொள்வனவு தேயிலை (போக்குவரத்து உட்பட) | | 2,944,754.40 | 6,985,349.00 |
| 3,644,024.89 | | | | 4,040,594.60 | |
| 5,277,270.30 | | **நிர்வாகமும் நிதியும்** | | | 2,304,888.24 |
| | | மேலதிக விடுமுறை | | 2,304,888.24 | 168,726,652.49 |
| 3,774,941.15 | | மதிப்பிறக்கம் | | | |
| 191,493,858.14 | | **விற்பனை வரியும் விநியோக செலவும்** | | | (16,024,259.80) |
| 1,133,766.40 | | தரகர், கையாளுதல் கட்டணம் | | | |
| | | விற்பனை செலவு | | | (1,525,920.37) |
| 552,833.51 | | **மொத்த செலவு** | | | |
| | | **2007 ற்கான இலாப / நட்டம் குறைவு: கழிக்க கடந்த வருடத்தில் கூடிய பெறுமதி காணப்பட்ட முன்னைய வருட திருத்தங்கள்** | | | (17,550,180.17) |
| | | **மு.வ.தி தேயிலை மதிப்புக் குறைவு** | | | |
| 580,932.89 | | **இலாப / நட்டம் தே.ஆ.நி கணக்கிற்கு மாற்றப்பட்டது** | | | |

**விற்க்கப்படாத 25832 கிகி தேயிலை COP இல் ரூபா 359.31 ஆக மதிப்பிடப்பட்டது*

# தலைமை கணக்காய்வாளரின்
# அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனதுஇல<br>MyNo. பீவை/ஏ/ரீஆர்பீ/எவ்ஏ/2011 | ඔබේ අංකය<br>உமது இல<br>No. | දිනය<br>திகதி<br>Date 2012 செப்தெம்பர் 30 |

தலைவர்,
தேயிலை ஆராய்ச்சி சபை

**தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசோட்டக்கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சிச் சபை அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சோத்துப் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவரிற்கு 2012 மே 10 இல் வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. 0112887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை ஆராய்ச்சி சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்தரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) சபைக்கெதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்குகளிலிருந்து ஏற்படக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்கள் இ.க.நி.12 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போதும் பயன்பாட்டிலுள்ள முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 18 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

தலைவரின் கருத்துரைகளின் படி, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் இந்த விடயங்களிற்கான மீள்மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐஎஸ்ஓ சான்றிதழைப் பெறுவதற்காக 2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,381,613 தொகையான கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையற்ற சொத்தாக புறம்பாகக் காட்டப்படுவதற்குப்பதிலாக காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 34,518 பெறுமதியான இடைப்போக்கிலுள்ள பொருட்களை சம்பந்தப்பட்ட கணக்குகளிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதி, திட்டமிடல் அமைச்சிடமிருந்து கிடைந்த வாகனத்தின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டு, கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சென்ற் கூம்ஸ் தொழிற்சாலைக் கட்டிடத்திற்கான ரூபா 111,039 மொத்தத்தொகையான சிறிய திருத்தங்கள் இலாபத்திற்கெதிராக தாக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(உ) சென்ற் கூம்ஸ் தோட்டம் தொடர்பான ரூபா 5,494,090 தொகையான தொழிற்சாலை அபிவிருத்திச் செலவுகள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அர் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் நடைபெறும் வேலைகளாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கணனிகள், மின்சார உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற ஒரே வகையான நிலையான சொத்துக்களிற்காக வித்தியாசமான பெறுமானத்தேய்வு வீதங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் இணக்கம் செய்யப்படாத மீதிகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பின்வரும் நிலையான சொத்து மீதிகள் சபையால் தரப்பட்ட நிலையான சொத்துப் பட்டோலைகளுடன் அந்தச் சொத்துக்கள் பேரேட்டில் வகைப்படுத்தப்பட்டிருக்காமையால் இணக்கம் செய்யமுடியவில்லை.

| விபரம் | தொகை ரூபா. |
|---|---|
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ ரீகெலி | 89,702,632 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ இரத்தினபுரி | 11,621,908 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ கந்தான | 12,064,360 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ கொட்டாவ | 3,003,998 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ பசறை | 2,084,061 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ தெனியாய | 2,813,438 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ தெனியாய | 1,224,761 |
| நிலையான சொத்துக்கள் ரீஆர்ஜ மத்துகம | 294,624 |
| நிலையான சொத்துக்கள், சென்றகூம்ஸ் தோட்டம் | 17,321,421 |
| நிலையான சொத்துக்கள், சென்ற் யோகிம் தோட்டம் | 17,095,102 |
| | 157,226,305 |

(ஆ) மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறான தேயிலை கொள்வனவிற்காக தேயிலைச் சபை மற்றும் தேயிலை சிறுதோட்ட உடைமையாளர்களிலுள்ள கடன்கொடுத்தோருடன் ஒப்பிடுகையில் சென்ற் கூம்ஸ் தொழிற்சாலைக் கணக்குகளின் கடன்பட்டோர் பட்டோலையில் ரூபா 1,993,319 தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறான கிடைக்க வேண்டிய பகுப்பாய்வுக் கட்டணங்கள் ரூபா 152,920 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 121,070 தொகையான மீதிகள் ஐந்து ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன.

(ஆ) காலப்பகுப்பாய்வின்படி, ரூபா. 307,751 தொகையான வியாபார மற்றும் நானாவித கடன்பட்டோர் அறவிடப்படாது 4 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்தன.

(இ) சென்ற் யோகிம் தோட்டத்தில் கடன்கள், முற்பணங்கள் முதலியவாறான ரூபா 22,175 தொகையான சம்பளப்பட்டியல் கடன்கள் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டம் | நிலையான படிகள் மீது ஊ.சே.நி உதவு தொகைகள் ஊழியர்களிடமிருந்து கழிக்கப்பட்டிருக்காததுடன் அந்தப் படிகள் மீதான வேலை கொள்வோனின் ஊ.சே.நி.உதவு தொகைகள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் பந்தி 6.5.1 | 2011 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்கிடையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) திறைசேரி சுற்றுநிருபம் (i) 1978 திசெம்பர் 12 இன் இல. 842 | நிலையான சொத்துப்பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப் பட்டிருக்காததுடன் சபைக்கு சொந்தமான காணிகள் நிலையான சொத்துப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா. 26.8 மில்லியன் தேறிய பற்றாக்குறை விளைவித்திருந்ததிற்கு எதிராக முன்னயை ஆண்டில் ரூபா. 2.9 மில்லியன் தேறிய மிகையை விளைத்திருந்தது. சென்ற் கூம்ஸ் மற்றும் சென்ற் யோக்கிம் தோட்டங்களின் ரூபா 30.5 மில்லியன் தொகையான நட்டங்கள் காரணமாக நிதிசார் விளைவுகளில் ரூபா. 29.7 மில்லியன் வீழ்ச்சியைக் காட்டியது.

### 3.2 தோட்டங்களின் செயற்பாட்டு விளைவுகள்

சென்ற் கூம்ஸ் தோட்டம் மற்றும் சென்ற் யோகிம் தோட்டம் என்ற பெயர்களுடைய இரண்டு தோட்டங்களை சபை முகாமை செய்திருந்ததுடன் இந்தத் தோட்டங்களின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்படுகின்றது.

| | சென்ற் கூம்ஸ் தோட்டம் (லமிலியர் பிரிவு உட்பட) | | செனற் யோக்கிம் தோட்டம் | |
|---|---|---|---|---|
| **தேயிலை விற்பனைகள்** | 2011 | 2010 | 2011 | 2010 |
| அளவு (கிலோ கிறாம்கள்) | 344,131 | 246,924 | 396,287 | 496,847 |
| விற்பனைப் பெறுமதி (ரூபா'000) | 141,490 | 98,695 | 144,697 | 187,875 |
| ஏனைய வருமானம் (ரூபா'000) | 1,643 | 6,055 | 8,005 | 4,753 |
| மொத்த வருமானம் (ரூபா'000) | 143,133 | 104,750 | 152,702 | 192,628 |
| கழி: | | | | |
| மொத்த செலவினம் (ரூபா'000) | 140,942 | 99,509 | 168,726 | 191,494 |

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)(ரூபா'000) | 2,189 | 5,241 | (16,024) | 1,134 |
| முன்னைய ஆண்டு சீராக்கங்கள் (ரூபா'000) | (15,112) | (741) | (1,526) | (553) |
| தேறிய இலாபம் (நட்டம்) ரூபா'000 | (12,923) | 4,500 | (17,550) | 581 |
| ஒரு கிலோ கிராம் தேயிலைக்கான உற்பத்திக் கிரயம் (ரூபா) | 413.43 | 371.92 | 394.24 | 365.11 |
| ஒரு கெக்டெயருக்கான விளைச்சல் (கிலோ கிராம்) | 2,444 | 2,011 | 1,002 | 1,016 |
| தேறிய விற்பனைச் சராசரி (ரூபா ஒரு கிலோ கிராமிற்கு) | 405.78 | 394.85 | 359.31 | 372.72 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சென்ற் கூம்ஸ் தோட்டத்தின் விற்பனை அளவு 97,207 கிலோகிராம்களால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு இலாபம் ரூபா 3,051,424 ஆல் குறைந்திருந்தது. இது பிரதானமாக வாங்கிய தேயிலை செலவின் அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். எனினும், தேறிய இலாபம் முன்னைய ஆண்டுகளிற்கான குறைந்த பணிக்கொடை ஏற்பாட்டு சீராக்கங்கள் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 17,423,767 ஆல் குறைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் சென்ற் யோக்கிம், தோட்டத்தின் விற்பனை அளவு 100,560 கிலோகிராம்களால் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் ரூபா 580,933 தேறிய இலாபத்திற்கெதிராக இலாபம் ரூபா 17,550,180 ஆன நட்டமாக மாற்றமடைந்திருந்தது. அதிக உற்பத்தி மற்றும் தொழிற்சாலையை இலாபகரமாக்குதல் என்பவற்றிக்காக சென்ற யோக்கிம் தோட்டம் ரூவான்புர எக்காபத்த கமிடிரிய சங்கத்துடன் (கமிடிரியக) ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை (எம்ஓயூ) செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 17,550,000 ஆன தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது.

4. செயலாற்றல் மீளாய்வு

4.1 சபையின் செயற்பணிகள்

(அ) தேயிலை ஆராய்ச்சி சபையின் பிரதான செயற் பணிகளாவன, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை நடாத்துதல், உதவுதல் மற்றும் ஊக்குவித்தல் தேயிலை பயிர்ச் செய்கை மற்றும் உற்பத்தி தொடர்புபட்ட பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பான புலனாய்வு செய்தல், தேயிலையிருந்தான உற்பத்தியை திருப்புதல் அது போல் பரவலாக்கல் மற்றும் தேயிலைப் பயிர்ச்செய்கையை சேதமாக்கும் பூச்சிகளைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் உட்பட்ட சபையின் பணிப்புரையில் ஆராய்ச்சி வேலைகளின் பெறுபேறுகளை பிரசுரித்தல் மற்றும் தேயிலையின் தரத்தை முன்னேற்றுதல் என்பனவாகும்.

தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறான சபையின் நிதிசார் செயலாற்றல் கீழே தரப்படுகின்றது.

| | நிகழ்ச்சித்திட்டம் | ஆண்டிற்கான ஒதுக்கீடு | | | பயன்பாடு | | | சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | மீண்டுவரும் | மூலதனம் | மொத்தம் | % |
| | | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | |
| i. | பயிர் முன்னேற்றம் | 13.65 | 13.89 | 27.54 | 13.42 | 7.54 | 20.96 | 76.10 |
| ii. | காணி உற்பத்தி திறன் விருத்தி | 13.82 | 16.07 | 29.89 | 14.50 | 10.15 | 24.65 | 82.46 |
| iii. | பயிர் முகாமைத்துவம் | 29.61 | 12.64 | 42.25 | 26.38 | 5.88 | 23.26 | 76.35 |
| iv. | அறுவடைக்கு பின்னரான தொழில் நுட்பம் | 14.17 | 14.11 | 28.28 | 15.03 | 11.07 | 26.10 | 92.29 |
| v. | வள திட்டமிடல் | 5.40 | 1.25 | 6.65 | 3.11 | 0.54 | 3.65 | 54.88 |
| vi. | உடைமையாளர்களிற்கான சேவைகள் | 38.25 | 38.54 | 76.79 | 38.13 | 12.24 | 50.37 | 65.59 |
| vii. | ஆராய்ச்சி முகாமைத்துவம் | 113.63 | 27.56 | 141.19 | 113.76 | 15.80 | 129.56 | 91.76 |
| viii. | உள்ளக சேவைகள் மற்றும் பராமரிப்பு | 50.74 | 31.30 | 82.04 | 51.69 | 9.15 | 60.84 | 74.15 |
| | மொத்தம் | 279.27 | 155.36 | 434.63 | 276.02 | 72.37 | 348.39 | 91.15 |

(ஆ) தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் செயல்திட்டத்தில் உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் சபையின் தொழிற்சாலைகள் மற்றும் தோட்டங்களின் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியவில்லை.

4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

---

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன**

(அ) தரப்பட்ட தகவல்களின் படி, முழுச் சம்பளத்துடன் கற்கை விடுமுறைகளைப் பெற்றதுடன் கட்டாய சேவைக்காலத்தில் சேவையாற்றத் தவறிய 10 அலுவலர்களிடமிருந்து ரூபா 27,090,600 ஆன தொகை கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து 2012 மார்ச் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1982 இலிருந்து லோவறி தேயிலை செயன்முறை செயற்திட்டமாக நடைபெறும் வேலைகளின் கீழ் கணக்குகளில் ரூபா 4,142,173 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. தரப்பட்ட தகவல்களின்படி, இலங்கைத் தேயிலை செயன்முறைக்குப் பொருந்தக் கூடியதா என்று பரிசோதிப்பதற்காக ஆறு இயந்திரங்கள் மலைநாட்டில் ஆறு தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டிருந்ததுடன் இலங்கை தேயிலை செயல்முறைக்கு அந்த இயந்திரங்கள் பொருத்தமுடையதல்ல என்று பெறுபேற்றையளித்திருந்ததுடன் ஆகையால் செயற் திட்டம் கைவிடப்பட்டது.

எனினும், அந்த இயந்திரங்கள் எங்கே நிறுவப்பட்ட அந்தத் தொழிற்சாலைகளிலேயே இதுவரை பயன்பாடின்றி உள்ளதுடன் நீண்ட காலமாக கணக்குகளில் நடைபெறும் வேலைகளாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சென்ற யோக்கிம் தோட்டத்திலுள்ள 143.810 கெக்டெயர் பரப்பளவான மொத்த காணியில் 17.675 டெக்டெயர்கள் நீண்டகாலமாக வெளியார் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தரமான வீடுகளை நிர்மாணித்து நெல், தேயிலை, றப்பர், தென்னை மற்றும் ஏனைய பயிர்களையும் பயிர் செய்திருந்தனர். ஆகையால் அந்த பயிர் செய்கையிலிருந்தான வருமானத்தை தோட்டம் இழந்திருந்ததுடன் காணிகளை வெற்றிடமாக்குவதற்காக அந்த

மக்களிற்கெதிராக 2012 மார்ச் 31 வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை மற்றும் சென்ற் கூம்ஸ் தோட்டத்திற்கு சம்பந்தமற்ற சில வெளித் தரப்பினர் பெரிய பரப்பளவில் சபை மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாது மரக்கறிகளை பயிர் செய்திருந்ததுடன் அதிக வருமானத்தை உழைத்திருந்தனர். அங்கீகாரமற்ற காணி பயன்பாட்டு விபரங்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்கெதிராக ஒரு சிறுவர் பாடசாலை ஆசிரியையால் தொடரப்பட்ட வழக்கிற்கான சட்டக்கட்டணங்களாக சபையால் ரூபா 125,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் சிறுவர் பாடசாலை பெற்றார் சங்கம் சபையின் வனவில் இயங்கியிருந்தது. சிறுவர் பாடசாலையின் முகாமைத்துவம் சிறுவர் பாடசாலையின் நிறைவேற்றுக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதால் இந்த விடயம் சபைக்குச் சம்பந்தம் அற்றதென்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) சென்ற் யோக்கிம் தோட்டத்தில் இரண்டு ஊழியர்களின் பதவியுயர்வு தொடர்பாக சபைக்கு எதிராக இரத்தினபுரியில் தேசிய தோட்ட சேவையாளர் சங்கத்தால் 2008 இல் ஒரு நீதிமன்ற வழக்கு தொடர்பட்டிருந்தது. சபையானது இணக்கப்பாட்டிற்கு வராது வழக்கை முன்னெடுத்துச் சென்றதுடன் மீளாய்வாண்டினிறுதிவரை தனியார் சட்டத்தரணிகளிற்கு ரூபா 901,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த வழக்கு 2012 மாரச் 31 வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) பதவியணி நிலை**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 ஓகத்து 24 ஆம் திகதிய கடிதத்தின்படி அனுமதிக்கப்பட்ட சபையின் புதிய ஆளணி 443 ஆனதுடன்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் பதவியணி நிலைமை கீழே தரப்படுகின்றது. எனினும், வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபையால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| பதவி அணி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் தரங்கள் | 87 | 39 | 48 |
| நிறைவேற்றுனர் அல்லாத தரங்கள் | 206 | 121 | 85 |
| சிற்றூழியர் தரங்கள் | 150 | 80 | 70 |
| மொத்தம் | 443 | 240 | 203 |

தலைவரின் பதிலின்படி 2011 செப்தெம்பரில் ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டது இது வரை மிகவும் அத்தியாவசிய பதவிகளை மாத்திரம் நிரப்புவதற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு அங்கீகாரம் வழங்கியிருந்தது. நிறுவனமானது தற்போது புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அனுமதியைப் பின்தொடர்ந்து ஆளணியைச் சேர்க்கும் செயல்முறையிலுள்ளது.

(ஆ) **ஆளணிக் கிரயம்**

தரப்பட்ட தகவல்களின்படி தொழிற்சாலை தொழில்லாளர் தவிர்ந்த மீளாய்வாண்டிற்கான ஆளணிக் கிரயம் சென்ற ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியினர் வகுதி | ஊழியர்களின் எண்ணிக்கை | | மொத்த வேதனம் | | ஒரு ஊழியாருக்கான கிரயம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2010 | 2011 | 2010 | 2011 | 2010 |
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிறைவேற்றனர் | 51 | 48 | 25,622,590 | 24,989,897 | 516,598 | 527,662 |
| நிறைவேற்றுனர் அல்லலாதோர் | 145 | 138 | 51,148,457 | 49,360,723 | 375,473 | 380,282 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிற்றூழியர்கள் | 75 | 47 | 17,368,699 | 15,216,663 | 232,250 | 327,002 |
| | ---------- | -------- | ------------- | ------------- | ------------- | ------------- |
| | 271 | 233 | 94,139,746 | 89,567,283 | 371,604 | 415,720 |
| | ===== | ===== | ========= | ======= | ======== | ======= |

**(இ) ஆட்சேர்ப்புக்கள்**

2011 பெப்ரவரி 01 இல் மேற்கொள்ளப்பட்ட பிரதிப் பணிப்பாளரின் (நிருவாகம்) நியமனம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 நொவம்பர் 14 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின்படி ஆட்சேர்க்கப்பட்ட இந்த அலுவலர் வேண்டப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டிருக்கவில்லை.

(ii) நேர்முகப் பரீட்சைப் புள்ளித் தாள்களின்படி, ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களின்றி ஏனைய நான்கு விண்ணப்பத்தாரிகளிற்கிடையில் நேர்முகப் பரீட்சைச் சபையால் குறித்த அலுவலருக்கு உயர்ந்த புள்ளிகள் வழங்கப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iii) தரப்பட்ட தகவல்களின்படி, சபையால் மேற்படி குறித்த அலுவலருக்கு 2011 பெப்ரவரி தொடக்கம் 2012 சனவரியிலான சம்பளங்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளி தொழிற் கட்டணங்களாக முறையே ரூபா 699,592 மற்றும் ரூபா 308,097 ஆகிய தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

**4.4 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு**

50 வாகனங்கள், 09 லொறிகள், 13 ரக்ரகர்கள் மற்றும் 42 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை உள்ளடக்கிய சபையின் வாகன அணி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதினொரு மோட்டார் வாகனங்கள் நீண்ட காலமாக திருத்தங்கள் செய்யப்படாது பயன்பாடின்றி இருந்தன.

(ஆ) பட்டோலைகளுடன் ஒப்பிடுகையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சபையின் ஒரு வாகனத்திற்கு ஒரு புதிய பொடியும் இயத்திரமும் பொருத்துவதற்காக ஒரு தனியார் கராஜிற்கு ரூபா 1,650,060 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் திருத்தத்திற்கான சபையின் அனுமதி மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்தான பதிலீடு செய்வதற்கான முன் அனுமதி என்பன பெறப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. செய்யப்பட்ட திருத்தங்களின்பின் 06 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் வாகனம் மீண்டும் திருத்தத்திற்காக அனுப்பப்பட்டமையால் திருத்தங்கள் திருப்திகரமான நிலையிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 08 வாகனங்கள் விபத்துக்களை அடைந்திருந்தன. 05 வாகனங்களிற்கான திருத்தங்களிற்காக ரூபா 142,715 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 99,028 ஆன தொகை காப்புறுதி இழப்பீடாகக் கிடைத்திருந்தது. ஏனைய மூன்று வாகனங்களிற்கான ரூபா 162,075 மொத்தத் தொகைக்கான திருத்தங்களிற்காக காப்புறுதிக் கோரிக்கைகள் 2012 மார்ச் 31 வரையிற்கூட அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பணிக்கொடை ஏற்பாடுகளின் முதலீடுகள்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு எதிர்காலப் பொறுப்பைச் சந்திப்பதற்காக சபையால் ரூபா 140,157,472 தொகையான பணிக்கொடை ஏற்பாடு முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களி தகைமை மற்றும் நல்லாட்சி

### 5.1 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றுநிருபத்தின்படி கூட்டுத்திட்டம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட உண்மையான முன்னேற்ற அறிக்கையுடன் சேர்ந்த நடவடிக்கைத் திட்டத்தை 2008-2012 வரையான கூட்டுத்திட்டத்துடன் ஒப்பீடு செய்ய முடியவில்லை.

5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக்கிளை சபையின் பணிப்பாளரிடமிருந்து சுதந்திரமானதாக இருக்கவேண்டும். சபையின் அமைப்பு வரைபடத்தின்படி, உள்ளகக் கணக்காய்வாளர் சபையின் பணிப்பாளரிற்குக் கீழ் பணிசெய்வதுடன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் கீழிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வில் பாதீட்டிற்கும் உண்மையானவற்றிற்குமிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால் அது பாதீடானது முகாமைத்துவக கட்டுப்பாட்டின் தாக்கமான கருவியாக பயன்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டுகின்றது.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் தலைவரின் கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) புலமைப்பரிசில்கள் வழங்குதல்
(இ) முற்பணங்களின் தீர்ப்பனவு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கிடைக்க வேண்டியவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளும்
(ஊ) நிதி முகாமைத்துவம்
(எ) பாதீடு
(ஏ) தோட்டங்கள் முகாமைத்துவம்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி